# மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்



க. பரணீதரன்
ஆசிரியர் "ஜீவநதி"
கலையகம்
அல்வாய்.
இலங்கை

க. பரணீதரன்
ஆசிரியர் "ஜீவநதி"
கலைஅகம்
அல்வாய்.
இலங்கை.




# மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

# மனிதர்கள்

## ஆதிலட்சுமி சிவகுமார்

### கப்டன் வானதி வெளியீடு – 08


| | | |
|---|---|---|
| விலை | – | ரூபா. 250/- |
| முதற்பதிப்பு | – | தை 2006 |
| அட்டை ஓவியம் | – | ஓவியர் புகழேந்தி |
| ஓவியங்கள் | – | ஓவியர் பயஸ்<br>போராளி நீதன்<br>போராளி செல்வம் |
| பதிப்புரிமை | – | ஆசிரியருக்கு |
| வெளியீடு | – | கப்டன் வானதி வெளியீட்டகம்,<br>இல. 61, கனகபுரம்,<br>கிளிநொச்சி. |
| அச்சுப்பதிப்பு | – | மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்,<br>உம் குறுக்குத்தெரு,<br>வவுனியா. |

Gz. Mee Nilar Sco
# XB1 - G2
Govt. Senior Staff H / Scheme
36/54 Edmonton Road
Kirilapone, Colombo -05

விடுதலைக்காய் தமையளித்து
பெருவெற்றி எனவாகி
ஓரிருவர் மட்டும்
அறிந்தமுகமாகி
சுட்டும் இலக்கழித்த
செய்தியெனவாகி
கல்லறையில் பெயரெழுதி
கட்டியழ முடியாத
வீரர் எனவான
உலகறியா ஈகங்களின்
முன்னே மண்டியிட்டோம்
அந்த
மகத்துவங்கள் காலடிக்கே
மனிதர்கள் தனை வைத்தோம்.

மனிதர்கள்

———ஆதிலட்சுமி சிவகுமார்

# பதிப்பாளர்களின் பதிவுகள்...

1982 மே 20 அன்று தினகரனில் 'உரிமையில்லா உறவுகள்' என்ற தனது கன்னிக்கதையூடாக ஆதிலட்சுமி இராசையா என்று அறிமுகமாகி, இன்று நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள் என பலவடிவங்களுடாக ஆதிலட்சுமி சிவகுமார் என்ற பெயரோடு பேசப்படும் மூத்த பெண்படைப்பாளி ஒருவரின் சிறுகதைகளை எமது எட்டாவது வெளியீடாக நூல்வடிவில்

கொண்டுவருவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

போரையும் அதனூடான வாழ்வையும் சமூகத்துள் இருந்து பட்டுணர்ந்த இவரின் உயிர்த்துடிப்பான எண்ணங்களின் பதிவுகளாகவே 'மனிதர்கள்' என்ற மகுடத்தின் கீழ்வரும் இக்கதைகள் அமைகின்றன. நாங்கள் ஒவ்வொருவருமே இவரின் கதாபாத்திரங்கள்.

பார்வைக்கு மென்மையானவராகத்தெரியும் ஆதிலட்சுமி சிவகுமார் சிறுமையைக் கண்டு பொங்குவது அவரின் எழுத்துக்களில் மட்டுமல்ல, நிஜவாழ்விலும்தான். எழுத்து வேறு வாழ்க்கை வேறு என்று வாழாது எழுதுவதைப்போன்றே வாழ்ந்துகொண்டிருக்கும் எடுத்துக்காட்டான ஒரு பெண்மணி.

எழுதவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்களை இவரின் படைப்புக்கள் எழுதத்தூண்டும்; எழுதவைக்கும் பற்றுக்கோலாக, வழிகாட்டியாக, உசாத்துணையாக அமையும் என்ற நம்பிக்கையோடு, இவரின் படைப்புக்கள் நிச்சயம் தனது இலக்கைச் சென்றடைய நாமும் கைகொடுப்போம்.

***ஆ.உலகமங்கை***
***05.01.2006***

***கப்டன் வானதி வெளியீட்டகம்,***
***இல.61, கனகபுரம், கிளிநொச்சி.***

# முன்னுரை

எழுத்தையும் ஏனைய கலைகளையும் சமப்படுத்தி நோக்கும் ஒரு எழுந்தமானமான தவறை நாம் எப்போதுமே செய்து வருகிறோம்.

மற்றைய கலைஞர் தம் கலையாற்றலுக்கும் ஆளுமைக்கும் மட்டுமே பொறுப்பெடுக்கும் அதேவேளை, எழுத்துக் கலைஞானவன் அதற்குமப்பாற்சென்று தன் கருத்திற்கும் பொறுப்பேற்கவேண்டிய கட்டுப்பாடுடையோனாகிறான்.

குறிப்பாகச் சொல்வதெனில் அவன் கருத்தே அவன் கலையாகவும், அக்கருத்தின் பலமே அவன் கலையின் சுயமாகவும் வெற்றியாகவும் ஆகின்றன.

காண்பதையும் கண்டதையும் பதிவு செய்வதுடன் மட்டும் எழுத்தாளன் வேலை நின்றுவிடுவதில்லை. அதை எந்த ஒரு செய்தி நிருபருங்கூடச் செய்துவிட இயலும். காண்பதற்கும் கண்டதற்குமப்பால் கூர்ந்து நோக்குவதும், எதிர்காலத்தினுள் ஊடுருவி அதற்காக மக்களைத் தயார்ப்படுத்துவதும் உண்மையான எழுத்தாளன் ஒருவனுக்குரிய முன்னோடிப் பணிகளாகின்றன. ஏனையோர்க்கு இருள் விலகாப் பொழுதிலேயே அவனுக்கு விடிந்திருக்கும் தன் கட்டியக்காரனாய் வரவுரைக்கும்

கடப்பாட்டைக் காலம் அவன் தோளிற் சுமத்தியுள்ளது.

திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின் 'மனிதர்கள்' தொகுதியைப் படித்துக்கொண்டிருந்த போதும், படித்து முடித்த பின்னும் என் மனதிற்கிளர்ந்த எண்ணங்கள் இவை. இவற்றைக் கிளர்த்தும் காரணிகளாயமைந்த சிறப்பு, அக்கதைகளுக்குரியது.

இலட்சியவேட்கை, அர்ப்பணிப்பு, இவற்றின் பயனால் விளைந்த மெய்மையும் பட்டறிவும், எடுத்துக்கொண்ட விடயத்தில் தெளிவு, சூழல் பற்றிய உயிரோட்டமான தரவுகள், நறுக்கான வசனங்கள், அலம்பல் இல்லாத விபரிப்பு இந்த அத்தியாவசியப் பண்புகள் ஆசிரியைக்கு வாய்த்திருப்பதற்கு ஒவ்வொரு கதையுமே சான்றாகின்றது.

இந்தக் கதைகளில் வருகிற பாத்திரங்கள் எவ்வாறு தத்தம் ஓர்மமின்றி இருந்திருத்தல் அசாத்தியமோ, அவ்வாறே அனுபவ வெங்சூடின்றி இக் கதைகளை எழுதியிருத்தலும் அசாத்தியமே.

இவ்வளவும் எம்முன் நிகழ்ந்தனவா, எம்முள் நிகழ்ந்தனவா என்கிற பிரமிப்பை ஊட்டுகின்ற சித்திரங்கள் எல்லாமே.

சிறப்பாக 'இலவம் பஞ்சு'கள் 'வெள்ளைத்துணி' இரண்டையும் குறிப்பிட வேண்டும்.

'இலவம் பஞ்சுகளில்' ஆசிரியர் மறைபொருளாய் விட்ட ஒருண்மை கதையின் கனதியைக் கூட்டுவதுடன் எம் கருத்திலும் கனக்கின்றது.

'வெள்ளைத்துணி' உச்சி விறைக்க வைக்கிற கதை.

எல்லாக்கதைகளும் ஒரு கதை தோற்றந்தருவதும் தவிர்க்கவொண்ணாதது. ஏனெனில் ஒரு கதையின் பல கோணங்களே இவை ; ஒரு முழுமையின் பல பின்னங்கள்.

விடுதலைக்காய் விலைகொடுக்கும் மாந்தர்களே, இந்த 'மனிதர்களின் மனிதர்கள்'. ஒட்டுமொத்தமாய்ப் படித்துவிட்டு நிமிருகையில் தேசத்தின் ஆன்மா தெரிகிறது.

ஐ. சாந்தன்
யாழ்ப்பாணம்,
06.01.2006.

# எனது படைப்புகளும் நானும்...

நான் எழுத்துலகில் காலடிகள் பதித்து இருபத்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்து விட்ட நிலையில்– எனது படைப்புகளின் மூன்றாவது தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது. சிறுவயதில் எனக்குள் ஏற்பட்ட கதையார்வம் பின்னாளில் என்னையும் பல கதைகளைப் படைக்கவைத்திருக்கிறது. ஆரம்பத்தில் கதை எழுதவேண்டும் என்கின்ற ஆர்வம் மட்டுமே இருந்தது. பின்புதான் என் கதைகளுக்கான– படைப்புகளுக்கான இலக்கை நான் தீர்மானித்துக்கொண்டேன். நான் படித்த, வாசித்த பலரது படைப்புகள் என்னுள் தாக்கத்தை ஏற்படுத்தின. மாற்றத்தை ஏற்படுத்தின. சமூகத்தில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணக்கூடிய அற்புதமான கருவியாக நான் இந்தப் படைப்புகளைக் கருதினேன். இதனால் என் படைப்புக்கள் தமது இலக்கைச் சென்றடையும் என்கின்ற நம்பிக்கையோடு நான் என் பணிதொடர்கிறேன். பல சிறுமைகளைக்கண்டு நான் சீற்றமுற்றேன். அந்தச் சீற்றத்தின் ஆழ ஊடுருவலின்

வெளிப்பாடுதான் இச்சிறுகதைகள்.

'கலை கலைக்காக அல்லாமல் மக்களுக்காகவே படைக்கப்படவேண்டும்' என்பது எமது தேசியத்தலைவர் அவர்களின் எதிர்பார்ப்பு. இதை முழுமையாக மனதில் பதியவைத்துக்கொண்டே நான் படைப்புகளை வெளிப்படுத்திக்கொண்டு வருகிறேன். எங்களுடைய இனம் விடுதலைக்காகப் போராடுகிறது. இந்தப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை, தேவைகளை 1984 ஆம் ஆண்டு வாக்கில் நான் தெளிவாகப் புரிந்துகொண்டேன். அக்காலத்திலிருந்து என் படைப்புகள் எமது விடுதலைப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவேண்டும் என்பதிலே நான் ஒருமனதாக இருக்கிறேன்.

எங்கள் தேசத்தின் அவலங்கள் வெளித்தெரியவேண்டும். சிங்களப் பேரினவாதம் எங்கள்மீது பச்சை பச்சையாகவே இனவாதத்தைத் துப்புகிறது. நடுநிலை என்கிற முகமூடிக்குள் அல்லது குறியீடு என்கிற உருமறைப்புக்குள் நின்று என்னால் படைப்புகளைப் படைக்க முடியாது. எனது தேசத்துக்கான கடமையை நான் துணிச்சலுடனும், வெளிப்படையாகவுமே செய்ய விரும்புகிறேன். செய்கிறேன்.

இந்தத் தொகுதியிலுள்ள 'மனிதர்கள்' என்ற சிறுகதை வெளிச்சம் பவள இதழில் வெளியாகி தேசியத்தலைவர் அவர்களால் பாராட்டப்பட்டது. இந்தக் கதையின் தலைப்பையே நூலின் தலைப்பாகவும் ஆக்கியுள்ளோம். நான் எழுத ஆரம்பித்த காலங்களில் என்னை ஊக்குவித்தோர் பலர். என்றும் என் மரியாதைக்குரிய செல்வி. தம்பிஜயா அவர்கள், சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்கள், இராதேயன் அவர்கள், நாட்டுப்பற்றாளரும் நாடறிந்த படைப்பாளருமான செம்பியன் செல்வன் அவர்கள், அ.யேசுராசா அவர்கள், பொன்.பூலோகசிங்கம் அவர்கள் உட்பட இன்னும்பலருளர். எல்லோரும் என் நன்றிக்கும் நேசிப்புக்கும் உரியவர்கள்.

என்றைக்குமே நான் படைத்த படைப்புக்களைப் புறக்கணிக்காது வெளியிட்ட ஈழமுரசு, ஈழநாதம், ஈழநாடு, சுதந்திரப்பறவைகள் பத்திரிகைகள், வெளிச்சம், சிரித்திரன், நாற்று, எரிமலை போன்ற சஞ்சிகைகள், புலிகளின் குரல் வானொலி என்பவற்றிற்கும் எனது நன்றிகள்.

ஓவியக் கண்காட்சியொன்றில் என்னை அறிமுகம் செய்துவிட்டு, எனது நூலுக்கு ஓவியம் வரைந்து தரும்படி கேட்டபோது மறுக்காது ஒப்புக்கொண்டதோடு, பெருமனதோடு அதை வரைந்து என்னிடமே சேர்ப்பித்த

ஓவியர் புகழேந்தி அவர்களும் என்றும் என் நன்றிக்குரியவர். உள்ளே கதைகளுக்கான ஓவியங்களை ஓவியர்களான பயஸ், போராளி செல்வம், போராளி நந்தன் ஆகியோர் வரைந்து உணர்வூட்டியிருக்கிறார்கள். இவர்களுக்கும் நன்றிகள்.

தமிழிலக்கியப் படைப்புலகில் தனக்கென்றொரு இடத்தைப் பதிவுசெய்து தக்கவைத்திருப்பவர் என்றும் என் மதிப்பிற்குரிய ஐ.சாந்தன் அவர்கள். சாந்தன் அவர்கள் எனது நூலுக்கான முன்னுரையைத் தந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இவருக்கும் எனது நன்றிகள்.

கடந்த வருடம் யூலை 11 ஆம் நாள் கப்டன் வானதியின் நினைவு நாளன்று கப்டன் வானதி வெளியீட்டகத்தினர் "மூத்தபெண் படைப்பாளி" என்ற விருதினை வழங்கி எனக்கு மதிப்பளித்தனர். என்னுடைய இந்தச் சிறுகதைத் தொகுதியினை வெளிக்கொண்டு வருவதில் இவர்களே மிகுந்த சிரத்தையுமெடுத்தனர். என் படைப்புகளைத் தேடி எடுப்பதில் தொடங்கி, வெளியீடு செய்வது வரை இவர்களின் சிரமங்கள் ஏராளம். இந்த நூலினை ஒப்புநோக்கித் தவறுகளைத் திருத்தம் செய்வதில் ஒத்துழைப்பு நல்கி எனது தந்தையார் பண்டிதர். நா.இராசையா அவர்களும், சகோதரி நந்தினி அவர்களும் உதவினர்.

எல்லோருடைய உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் இணைத்து இந்நூல் வெளிவருகிறது. எனக்கு நல்லூக்கம் தருகின்ற என் வாசகர்கள் எல்லோருடைய கரங்களையும் இறுகப்பற்றிக்கொள்கிறேன். உங்களுக்கென் நன்றிகள்.

ஆதிலட்சுமி சிவகுமார்
04.01.2006

செல்வபுரம்,
கிளிநொச்சி.

## ஆதிலட்சுமி சிவகுமாரின் முப்பத்தியொரு சிறுகதைகளும்....

01. புதிய முளைகள் ........ 02
02. மனிதம் ........ 09
03. நியதிகள் மாறும் ........ 16
04. அவளின் பிள்ளைகள் ........ 23
05. மண் ........ 29
06. வெற்றுக்குரல் ........ 36
07. இப்படியும் ........ 44
08. எழுகை ........ 51
09. இப்போது அது வெறும் சடம் ........ 57
10. இலவம் பஞ்சுகள் ........ 64
11. நிலா ........ 75
12. தணலில் விழுகின்ற தளிர் ........ 82
13. வெள்ளைத்துணி ........ 88
14. மனிதர்கள் ........ 95
15. அவள் வகுத்த வழி ........ 105
16. முரண்கள் ........ 111
17. இயல்புநிலை திரும்பாதவர்கள் ........ 118
18. வடுகள் ........ 124
19. சமாதானத்தின் வலி ........ 132
10. வேரின் கரம் ........ 140
21. துடுப்பில்லாத ஓடங்கள் ........ 148
22. புதிய ஊரின் பழைய மனிதன் ........ 158
23. வெகுமதி ........ 164
24. அகதி ........ 172
25. ஒரு புரிதலின் பின் ........ 179
26. பிரச்சினை இல்லாதவர்களின் பிரச்சினைகள் ........ 187
27. புதிய மனுசி ........ 194
28. உயிருள்ள சாட்சியங்கள் ........ 203
29. உதிராத சருகுகள் ........ 210
30. அப்பா ........ 218
31. அகதியின் பயணம் ........ 229

# மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்



# புதிய முளைகள்

**கோ**யில் கிணற்றில் தண்ணீர் அள்ளிச் செப்புக்குடத்தை நிரப்பிவிட்டு, கோபுரத்தை அண்ணார்ந்து பார்த்து நெடுமூச்செறிந்தாள் தங்கேசு.

"முருகா... நீயெண்டாலும் ஒருக்கா கண்ணைத் திறக்க மாட்டியே...?"

ஆத்திரமும் ஆதங்கமுமாய் வாய் முணுமுணுத்தது! கோயில் மடத்திலும், வடக்குப்புற வீதியில் கிளை எறிந்து பரந்து நிற்கும் மருத மரத்தின் கீழும் மூட்டை முடிச்சுக்களோடு கூட்டம் கூட்டமாய்ச் சனங்கள்.

எல்லோர் முகங்களிலும்... பயம்... பசி... தாகம்... துன்பம்... இவர்கள் நேற்றிரவு அச்சுவேலியில் இருந்து ஓடிவந்தவர்கள். ஆண்களிற் சிலர் தேர் முட்டியின் நிழலில் நின்று சுவாரசியமாய் கதை பரப்பிக்கொண்டிருந்தார்கள். இவர்களைப் போலத்தான் தங்கேசும்... உடுத்த உடுப்போடு... ஊரைவிட்டு ஓடி வந்திருக்கிறாள்...

## மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

பலமாதங்களாகி விட்டன. கூடிப்பிறந்த அண்ணன் வீட்டுக் 'கார்க்கராஜ்'சில் தான் இப்போது தங்கேசுவின் வசிப்பிடம்.

"உள்ளே கரிப்புகை படியக்கூடாது..."

இது அண்ணன் மனைவியின் கட்டளை.

வெளித் தாழ்வாரத்தில் மூன்று கற்கள் வைத்து... ஒரே தடவையில் சமையலை முடித்து விடுவாள் தங்கேசு. சாப்பிடுவது – படுப்பது – பிள்ளைகள் படிப்பது – நாகராசாவின் சைக்கிள் நிறுத்துவது எல்லாம் இந்தக் 'கராஜ்'சுக்குள் தான்! அண்ணன் சவுதியில் சேவையர்.

வீட்டில் நிறைய வசதிகள். 'வோட்டர் பம்' பூட்டி, 'ராங்' குக்கு தண்ணீர் நிரப்புவார்கள். அண்ணனின் மூத்தமகள் கிரிஜா ஒவ்வொருநாளும் பின்னேரங்களில் குறோட்டன் செடிகளுக்குத் தண்ணீர் இறைப்பாள்.

ஆனால்...

தங்கேசு தண்ணீர் அள்ளுவதும், குளிப்பதும் கோயில் கிணற்றில் தான். தங்கேசு செப்புக் குடத்தை உன்னித்தூக்கி இடுப்பில் வைத்தாள்... தண்ணீர்பட்டதும் இடுப்பு சில்லிட்டது. நடக்க நடக்க தண்ணீர் குலுங்கி இடுப்பை நனைத்தது. மூச்சு வாங்கியது. ஒழுங்கை ஓரமாக் குடத்தை இறக்கி வைத்துவிட்டு நின்றாள்.

"கடவுளே... கட்டேலை போறவரைக்கும் என்ர கையையும் காலையும் இயங்க விட்டிடு..."

மனதுக்குள் வேண்டிக்கொண்டாள்.

எண்பத்தொன்பதாம் ஆண்டுக் கடைசி...

இந்திய இராணுவம் அவள் கணவனைப் பிடித்தது... ஏன் பிடித்தார்கள் என்று இன்னமும்தான் தெரியாது. அடித்து நொருக்கியதில் அவன் நிரந்தர நெஞ்சு வருத்தக்காரனாகிப்போனான். சைக்கிள் ஓட முடியாது; பாரம் தூக்க முடியாது; பெலத்து இருமமுடியாது... உடனே வாய்க்குள்ளிருந்து இரத்தம் வரும்.

"உழைச்சுத் தராட்டியும் பறவாயில்லை... ஒரு மூலைக்குள்ளை உயிரோடை இருந்தால் காணும்..."

மனதுக்குள் வரிந்து கட்டிக்கொண்டாள். எங்கிருந்தோவொரு

வைராக்கியம் வந்து மனதுள் புகுந்தது.

அயல்ச் சனங்களுக்கு மா இடித்துக்கொடுத்தாள்; தினந்திகதிகளுக்குச் சமைத்துக் கொடுத்தாள் – தன்னாலான எல்லாம் செய்தாள்.

ஆறுவயது நகுலனும்... நான்கு வயது ஜனனியும் அவள் சொத்துக்கள்...

"என்ரை குஞ்சுகளை வளர்த்து ஒரு நிலைக்கு கொண்டு வந்திடவேணும்"

மூச்சுக்கு மூச்சு இதைத்தான் நெஞ்சில் பதித்துக் கொள்வாள்.

மூன்றாவது குழந்தையாய்... நாற்பத்திரெண்டு வயதான நாகராசா. அக்கினிக்கும் அருந்ததிக்கும் முன்னால் 'உன்னை என்றும் கைவிடேன்' என்று சத்தியம் செய்து கைப்பிடித்தவன், இன்று கையாலாகாதவனாக – நடமாடுகின்ற எலும்புக்கோர்வையாக – ஒருநாள் கூட தங்கேசு முகஞ்சுழித்தது கிடையாது. ஐந்தோ... பத்தோ... கிடைக்கும் பணத்தில் சீவியம் நடத்தினாள். ஆனால்... அவனுக்குத்தான் தன் மனைவி உலர்ந்து சருகாகிப்போவது நெஞ்சில் வலியைஉண்டாக்கியது.

மெல்ல மெல்ல சுருட்டுக் கொட்டிலுக்குப் போனான். வறுமைதான்– வசதியீனம் தான் – ஆனால் இனிமையாகக் குடும்பம் நகர்ந்தது!

0 0 0

ஒருநாள் விடிகின்ற நேரம். காகம் குருவிகள் கூட இன்னமும் கண்விழிக்காத பொழுது. பலாலிக்காரனுக்கு என்ன வந்ததோ? மளமளவென்று 'ஷெல்'கள் தாறுமாறாக விழுந்து அதிர்ந்தன... எங்கே விழுகின்றதென்று ஊகிக்கமுடியாமல்... பைத்தியம் பிடித்தவன்போல ஷெல்கள் கூவின... துவக்குச் சூடுகள் தவில் கச்சேரியாய் ஒலித்தன...

"உவங்கள் உப்பிடித்தான் கொஞ்ச நேரம் அமளிப்பட்டுப்போட்டு சுருண்டு போவாங்கள்... பயந்தாங்கொள்ளிகள்..."

போராளிகள் மீதான உறுதியான நம்பிக்கையோடு அவள் எண்ணம் சொல்லிற்று.

அடுப்பில் கிடந்த பானைத் தண்ணீர் மேல்... நீத்துப்பெட்டியில் மாவை அள்ளி வைத்து மூடினாள். சுவாமிநாதன் வீட்டிற்கு நூற்றைம்பது இடியப்பம்

கொடுக்கவேண்டும். அடிவளவுக்குப்போன நாகராசா வேர்க்க விறுவிறுக்க வந்தான்.

"இஞ்ச... தங்கேசு... ஆமிக்காறன் வாசிகசாலையடிக்கு வந்திட்டானாம்..."

அவன் அவளிடம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே – ஒழுங்கையால் சனங்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்கள்.

"இந்தச் சனம் சும்மா வெருளுது... ஆமி என்னெண்டு இஞ்ச வரும்...?"

அவள் மனம் நம்ப மறுத்தது.

"டும்... டும்..."

மண்டைக்குள் நரம்புகள் சிதறுவதுபோன்ற உணர்வு... இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் உலுக்கிவிடும் சத்தம். கரும்புகை... வெடிமருந்து நாற்றம்... தலை கிறுகிறுத்தது! ஓடினார்கள்... நகுலனும் ஜனனியும் அழ அழ ஓடினார்கள்... ஓடிவந்து அண்ணன் வீட்டில் அடைக்கலம் தேடினார்கள். ஒருமாதம் ஓடியது.

ஒன்றிரண்டுபேர் துணிந்து ஊருக்குபோய்ச் சாமான்கள் எடுத்துவந்தார்கள். அடுத்ததடவை போனவர்களோடு அவள் தடுக்கத்தடுக்க நாகராசா போனான். போய் அவன் கொண்டுவந்த செய்தி, 'வீட்டை குண்டுவைத்துத் தகர்த்து விட்டார்கள்' என்பதுதான்.

தங்கேசு அழுதாள்... நெஞ்சு வெடித்து உள்ளேயிருந்த துன்பமெல்லாம் உருகும்படி அழுதாள்.

அவளுடைய அழுகை, வீடு தகர்ந்து போய்விட்டதே என்பதற்காகவல்ல: இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் சுவாமிநாதனிடம் இரண்டாயிரம் ரூபா கடன்பட்டு அடுப்படிக்குத் தகரமடித்து பூட்டுப் போட்டிருந்தாள்.

"அம்மா... அம்மா..."

நகுலன் மூச்சிரைக்க முன்னால் வந்து நின்றான்.

"என்ன குஞ்சு... என்ன...?"

"உங்களிட்டை சுவாமி மாமா வந்திருக்கு"

நெஞ்சுக்குள் ஒரு தடவை பகீரென்றது.

"இரண்டாயிரம் ரூபா காசு குடுக்கவேணும்..."

வாய் முணுமுணுத்தது. கால்கள் பின்னிப் பின்னி நடக்க மறுத்தன.

வாசலில் சுவாமிநாதன் நின்றார். தங்கேசு குடத்தை இறக்கி வைத்தாள். ஈரச்சீலையை முறுக்கிப் பிழிந்து உதறினாள்.

"நீ இஞ்சை இருக்கிறாய் எண்டு கேள்விப்பட்டு வந்தனான் தங்கேசு... நாங்கள் அகதியா வெளிக்கிட்டு வந்து கிட்டடியிலதான் இருக்கிறம். உனக்குத்தந்த ரெண்டாயிரத்தையும் தந்திடு. எனக்கு கஷ்ரமாக்கிடக்கு..."

"எங்கடை வீட்டையும் உடைச்சுப்போட்டாங்களாமண்ணை... ஒரு சாமானும் எடுத்துக்கொண்டு வரேல்லை..."

"அதுக்கு நானென்ன செய்ய தங்கேசு... ஏமாத்திப்போடாதை, நாளைக்குவாறன். பார்த்து மாறிவை"

சுவாமிநாதன் எழும்பினார்.

"நாளைக்கு என்னெண்டண்ணை... திடீரெண்டு..."

குரல் கெஞ்சிற்று.

"ஏன் உன்ரை அண்ணன் பெஞ்சாதியிட்டை வாங்கித்தாவன்..."

வெடுக்கென்று வந்தது பதில்

இதயம் சுக்குநூறாய் வெடித்துச் சிதறியது... தங்கேசுவுக்குத் தொண்டை வரண்டது.

"நாளைக்கு வருவன், கட்டாயம் வை"

சுவாமிநாதனையே பார்த்துக்கொண்டு நின்றாள் தங்கேசு. கட்டளை காயப்படுத்தியது!

"தங்கேசு நாளைக்கு என்ன செய்யப்போகிறாய்?"

நாகராசாவின் ஏக்கம் கலந்த குரல்...

## மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

தங்கேசுவுக்கு தாங்க முடியவில்லை. எத்தனையோ நாட்களாகத் திரண்டிருந்த துன்பமேகம் கண்ணீராய் கொட்டியது.

"அப்ப என்னைப் பிடிச்ச ஆமிக்காரன் சுட்டிருக்கலாம். ஏன் இப்படி உசிரோடை விட்டானோ தெரியேல்லை..."

நாகராசாவின் குரலில் விரக்தி... சோகம்...

"டேய் நகுலன்... கொம்மா எங்கையடா?"

முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த நகுலனை அண்ணன் மனைவி அதட்டுவது கேட்டது.

"ஓம், இஞ்சை இருக்கிறன்"

"இஞ்சை தங்கேசு... அவற்றை கூடப்பிறந்த சகோதரம் எண்டுபோட்டு உதிலை இருக்கவிட்டனான். நாங்கள் இந்த ஊரிலை கௌரவமாய் இருக்கிறம். எங்கட கௌரவத்தைக் கெடுத்துப்போடாதேங்கோ"

ருத்திரகாளியாய் தன்முன் நிற்கும் அண்ணன் மனைவியை மிரட்சியோடு பார்த்தாள் தங்கேசு!

"ஏன் மச்சாள் நாங்கள் என்ன செய்தனாங்கள்"

"பிள்ளையளைத்தேடி நாலு படிச்ச மனிசர், நாகரீகமான மனிசர் வாற இடம் இது. உங்களிட்டை இப்பிடி கடன்காரர் வந்துபோறது எங்களுக்கத்தான் அவமானம் தெரிஞ்சுதே"

எதிர்பார்க்காத இந்தச் சொல் அம்புகள், இராணுவம் ஏவுகின்ற 'ஷெல்'களைப் போல மிகக் கொடியனவாய்...

"எங்களுக்கேன் இப்படியொரு அவலவாழ்க்கை..."

சகிப்புத் தன்மையின் எல்லையைத் தாண்டி, மனது கோழைத்தனமாக குமுறியது.

"அம்மா... அம்மா..."

புழுதியும் அழுக்குமாய் தன்முன் நின்ற மகனைப் பார்த்தாள்.

"ஆமிக்காரனை நான் இந்தத் துவக்காலை தானம்மா சுடுவன்"

அவன் கையில் பப்பாசிக்குழல் – கண்களில் உறுதி – தீயில் பொசுங்கிய இதயத்தின் மீது தேன் தடவியது அந்த வார்த்தைகள்...

"ஓ! எங்கடை இந்தத் துன்பம் எல்லாத்துக்கும், அவங்கள் எங்கடை நிலத்திலை இருக்கிறதுதான் காரணம். அவங்களைச் சுட்டுக் கலைக்கவேணும்"

அவனுடைய அழுக்கு மேனியை இறுக்க அணைத்து புழுதி படிந்த உச்சியில் முத்தமிட்டாள். அனைத்துத் துன்பங்களையும் விரட்டிவிட்டு இதயம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது.

வெளிச்சம்
ஆவணி–1993

# மனிதம்

பிறையும் நட்சத்திரங்களுமாய்... நீலவானம் கண்கொள்ளாக் காட்சி தந்தது. குளிர்ந்த காற்று காதுமடல்களை உரசிக்கொண்டிருந்தது. ஆனால், இவற்றையெல்லாம் ரசித்து அனுபவிக்கும் மனநிலை பரஞ்சோதிக்கு இல்லை.

நடையை எட்டிப்போட்டான்!

ஒவ்வொரு துண்டுப் பாணோடும் தேநீரோடும் காலையில் பள்ளிக்குச் சென்ற பிள்ளைகளின் நினைப்பு, வெறும் எலும்பும் தோலுமான அவன் கால்களுக்கு உறுதியைக் கொடுத்தன!

வழமையாக அவன் வரும் வேளைகளில், பூட்டிக்கிடக்கும் செல்லத்துரை கடையில் இப்போது பெற்றோல்மாக்ஸ் ஒளிர்ந்துகொண்டிருந்தது.

மடியிலிருந்த இரண்டு நூறுரூபாய்த் தாள்களில் ஒன்றை மிகவும் கவனத்தோடு எடுத்தான்!

“பிள்ளையளுக்கு ஒரு வடையோ… இல்லாட்டி பிஸ்கற்ரோ வாங்கவேணும்… மிச்சத்தைச் சில்லறையாய் வாங்கினால் பத்துரூபாயை பிள்ளையாற்றை உண்டியல்லை போடலாம்…”

கடை வாசலில் ஏறியபோது, கதவுக்குப் பக்கத்தில் நின்ற நாலுபேர் ‘அரசியல்’ கதைத்துக் கொண்டிருந்தார்கள்!

செல்லத்துரை வெறும் ‘பார்வையாளராய்’ காசுப்பட்டறையில் அமர்ந்திருந்தார்.

“அண்ணை நாலு வடை தாங்கோ…”

நூறு ரூபாவை விரித்துச் செல்லத்துரையிடம் நீட்டினான் பரஞ்சோதி!

அவன் நீட்டிய பணத்தை வாங்கி பெற்றோல்மாக்ஸ் வெளிச்சத்தில் உயர்த்திப் பார்த்துவிட்டு, லாச்சிக்குள் போட்டார் செல்லத்துரை.

“வேறை என்ன?”

பரஞ்சோதி தலையை ஆட்டினான்.

உள்ளே பார்த்து “நாலு வடை குடு” என்றார்.

அவர் சொல்லி வாய் மூடுவதற்குள், பெனியனும் காற்சட்டையும் அணிந்த சிறுவன் – பரங்சோதியின் இளைய மகனுடைய வயது இருக்கும் – பொட்டலத்தை நீட்டினான்!

மேசையில் சில்லறைகளை அள்ளிப்போட்டு சுட்டுவிரலால் எண்ணி பரஞ்சோதியின் கைநிறையத் தந்தார்.

எண்ணிப்பார்க்க நேரமின்றி, அப்படியே சில்லறையை மடியில் கட்டினான்!

காமினி ஐக்கியதேசியக் கட்சியில் இணைந்ததையும் இலங்கை இந்திய ஒப்பந்தம் உயிரூட்டப்பட வேண்டும் என்று அறிக்கை விட்டதையும் கடை வாசலில் நின்றவர்கள் சிலாகிப்பது அவன் காதில் விழுந்தது!

இந்த ‘புத்திஜீவிகள்’ காரசாரமான ‘அரசியல் விமர்சனத்தை’ காதில் போட்டுக்கொள்ளாது படியிறங்கினான் பரஞ்சோதி!

## மனிதர்கள்

— ஆதிலட்சுமி சிவகுமார்

பிள்ளையார் கோயில் இருளில் கிடந்தது. உள்ளே கர்ப்பக் கிரகத்துக்குள் மட்டும் சிறிய ஒளிப்பொட்டு தெரிந்தது. மண்டபத்துக் கதவோடு பிணைக்கப்பட்ட உண்டியல் பெட்டியில் இரண்டு ஐந்து ரூபாய் குற்றிகளைப் போட்டு விட்டு வெளியே வந்தான்! மனது மிதந்தது!

வெளிச்சமில்லாத ‘லாண்ட் மாஸ்ரர்’ ஒன்று இரைந்தபடி பின்னால் வந்தது.

இருட்டான ஒழுங்கையில் – கால்கள் நிதானத்தோடு பதிந்தன.

கறையான் அரித்த வேலிக்கு ‘பாதுகாப்பாக’ இருக்கும் தகரப்படலையை தள்ளிக்கொண்டு உள்ளே போனான்!

நீண்ட நாட்களுக்குப் பிறகு மடியில் நூற்றி அறுபது ரூபா! சந்தோஷமாயிருந்தது!

“ராசு... ராசு...”

மனைவியை அழைத்தபடி உள்ளே போனான்! பதிலில்லை.

இவனைக் கண்டதும் மனைவி விக்கலெடுத்து அழுதாள்!

“பொழுதுபடப்போலை பிள்ளைக்குப் போத்திலோடு வெட்டிப்போட்டுது... ரத்தம் வந்துகொண்டே இருக்குது...”

விம்மலூடாக வார்த்தைகள் சிதறின!

பிள்ளை துணிச்சுருளில் சுருண்டபடி கிடந்தது!

“நல்ல காலத்துக்கு மடியிலை காசுகிடக்கு...”

குழந்தையைக் குனிந்து தூக்கிக் கொண்டான்!

“நானும் வாறனப்பா...”

ராசுவும் பின்னால் நடந்தாள்.

ஆளை ஆள் தெரியாத இருள். சிக்கன விளக்குக்கூட இருளில் மூலையில் கிடந்தது!

செல்லத்துரை கடைக்குப் பக்கத்தில் டிஸ்பென்சறி. கதவில் பூட்டுத் தொங்கியது!

“டொக்டர் ஐயா... டொக்டர் ஐயா...”

“......”

“டொக்டர் ஐயா... டொக்டர் ஐயா...”

“எட்டுமணிக்குப் பிறகு ஐயா ஒருத்தரையும் பார்க்கமாட்டார்... நாளைக்கு விடிய வாங்கோ...”

“காயத்தாலை ரத்தம் வடியுது...”

“அவர் இப்ப பார்க்கமாட்டார்...”

மறுவார்த்தைக்கு இடமின்றி ஜன்னல் முகத்தில் அறைந்தது.

தெருவில் இறங்கினார்கள்.

“உதிலை ஒரு பொம்பிளை டாக்குத்தர் இருக்கிறா... கேட்டுப்பாப்பமே...”

சற்றுத்தள்ளி, சந்தி கடந்து, ஒழுங்கையில் இறங்கினார்கள்.

பெரிய நாய் கேற்றுக்குள் ஓடி ஓடிக் குரைத்தது.

“அம்மா... டொக்டர் அம்மா... அம்மா...”

சடாரென்று வெளிக்கதவு திறந்தது! இருளில் ஒரு உருவம் கேற்றை நோக்கி வந்தது!

“என்ன...?”

“ஐயா... பிள்ளைக்குக் காயம்... அம்மாவிட்டை ஒருக்கா...”

“அவ இனிப்பார்க்கமாட்டா...”

“ஐயா... பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வாகனமில்லையய்யா... ரத்தம் வடியுது... ஒருக்கா அம்மாவை...”

"காலமை வாங்கோ..."

கதவு சடாரென்று பூட்டப்பட்டது!

"நடந்தென்றாலும் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுபோவம்... பிறகு தையல் போட ஏலாமல் போயிடும்..."

"இந்த குளிருக்கை நடந்துகொண்டுபோக வேற வருத்தம் வந்திடும்..."

வீடு நோக்கி நடந்தார்கள்.

"இஞ்சையப்பா உந்த ஒழுங்கைக்குள்ளை எங்கட பிள்ளையளின்ரை காம்ப் கிடக்கு... ஒருக்கால் பெரியாஸ்பத்திரியிலே விடச்சொல்லிக் கேட்டுப்பாப்பமே... பிள்ளையள் மறுக்காதுகள்..."

அவன் கால்கள் சடாரென நின்றன.

ஒழுங்கை அந்த வீட்டின் முன்னால் முடிந்தது.

"தம்பி...தம்பி..."

கேற்றில் தட்டினார்கள்.

"ஆர்...?"

"அது நாங்கள் தம்பி... உங்காலை இருக்கிறனாங்கள்..."

ரோச் லைற் ஒன்று விரைந்து வந்தது.

"என்னய்யா... ஆரிட்டை வந்தனீங்கள்...?"

"தம்பி... என்ரபிள்ளை... என்ரபிள்ளை... என்ர..."

"அம்மா அழாதேங்கோ... விசயத்தைச் சொல்லுங்கோ..."

ராசு இன்னும் கூடுதலாக அழுதாள்.

"தம்பி... பிள்ளைக்கு போத்திலோடு வெட்டிப்போட்டுது... ரத்தம் நிக்குதில்லை... பிள்ளை சோருது... ஊரில இருக்கிற ரெண்டு டாக்குத்தர்மாரும்

பாக்கமாட்டம் எண்டுட்டினம்... நீங்கள் ஒருக்கா பெரியாஸ்பத்திரியிலை உங்கடை வாகனத்திலை விட்டுவிடுறியளே...’

இளைஞன் உள்ளே ஓடினான்.

இந்த இருளிலும் முதுகில் துப்பாக்கி தெரிந்தது

“எங்கட பிள்ளையள் உதவும்...”

உள்ளே பேச்சுக்குரல்கள் கேட்டன.

இளைஞன் திரும்பவும் வந்தான்.

“ஐயா... உள்ளுக்கு வாங்கோ...”

உள்ளே போனார்கள்...

“உள்ளுக்கு வாங்கோ ஐயா...”

தயங்கித் தயங்கி உள்ளே – அறைக்குள் போனார்கள்!

அறையில் அரிக்கன்லாம்பு எரிந்தது. சுவரில் தலைவரின் நெஞ்சளவிலானபடம்.

தூக்கத்திலிருந்து எழுந்தவன்போல ஒரு இளைஞன் வந்தான்.

“காயத்தைக் காட்டுங்கோ பாப்பம்...”

காயத்தைச் சுற்றியிருந்த துணியை அவிழ்த்துக் காட்டினார்கள்.

இரத்தம் வடிந்தது.

“எங்களிட்டை முதலுதவி மருந்து இருக்கு... இரத்தம் போகாம இருக்கிறதுக்கு கட்டிவிடலாம்... விடிய ஆஸ்பத்திரியிலை ஊசி போடுங்கோ...”

காத்திருக்காமல், காயத்தைச் சுத்தப்படுத்தினான்.

மருந்து கட்டினான்...

“பெரியகாயமில்லை... பயப்பிடாதேங்கோ...”

நன்றிசொல்ல வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருந்தபோது – முதுகில் துப்பாக்கி சுமந்து கொண்டிருந்த இளைஞன் தேநீரோடு வந்தான்.

பிரமித்துப் போனார்கள்...

"ஐயா... குடியுங்கோ..."

குழந்தைக்கும் பருக்கினார்கள்.

மனதில் உற்சாகம் பிறந்தது... நம்பிக்கையும் தான்!

"தம்பி போட்டுவாறம்..."

வெளியே வந்தார்கள். ரோச்லைற்றைப் பிடித்து இளைஞன் அவர்களை றோட்டில் ஏற உதவினான்!

அந்த வெளிச்சத்தில் அவர்கள் நடந்தார்கள்.

சிரித்திரன்

# நியதிகள் மாறும்

பனிக்குளிர் கதகதவென்று கக்கிக் கொண்டிருந்தது. மதிலுக்கு மேலாக உயர்ந்து வட்டமாய் பரந்திருந்த நித்தியகல்யாணிச் செடி இலை தெரியாமல் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. கம்பளிப் போர்வைக்குள் உடல் புதைய, முகம் மட்டும் ரோசாப்பூ போலத் தெரிய அக்காவின் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பனிக்குளிரிலும் முழுகிவிட்டு, தலைக்கு துணி கட்டிக்கொண்டு மதில் ஓரத்தில் அமர்ந்து அக்கா சமையல் பாத்திரங்களை மினுக்கிக் கொண்டிருந்தாள். இரவு முழுவதும் குழந்தை அழுதுகொண்டே இருந்தது. அழுத குழந்தையை அமைதிப் படுத்துவதற்குள் விடிந்துவிட்டது. குழந்தை அமைதியாக உறங்கத் தொடங்கியதும் அக்கா வீட்டு வேலைகளில் மூழ்கிவிட்டாள்.

அக்காவுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகின்றன... அக்காவின் கணவர் – அத்தான் ஒருவரோடும் "சோலி சுரட்டில்லாத" பேர்வழி.

காலை ஐந்து மணிக்கு எழுந்து

உடற்பயிற்சி செய்வார்!

உடற்பயிற்சியை முடித்துக்கொண்டு கால் முகம் கழுவிக்கொண்டு பக்கத்திலுள்ள பேப்பர்க்கடைக்குப் போவார்.

பத்திரிகையோடு ஒன்றிப்போய் அமர்ந்தால் ஏழு முப்பது ஆகும்வரை பத்திரிகையில் ஒரு எழுத்தும் விடாது படிப்பார்!

ஏழு முப்பது என்றவுடன்—ஒரு விநாடிகூடத் தாமதியாது கிணற்றடிக்குப் போவார். ஏழு நாற்பத்தைந்துக்கு சாப்பாட்டு மேசைக்கு வருவார். எட்டு மணிக்கு நிச்சயமாக அத்தானின் சைக்கிள் "கேற்"றைத் தாண்டிவிடும்!

அக்கா மிகவும் சுறுசுறுப்பு! எட்டு மணிக்குள் பம்பரம் போல என்ன வேகத்தில் சுழன்று சுழன்று வேலை செய்கிறாள்?

அக்காவை நினைத்துப்பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது!

"கைக்குழந்தையோடை கொக்கா கஷ்ரப்படுறாள்... கொஞ்சநாள் உன்ர லீவு முடியும் வரையும் அவளோடை இருந்தியெண்டால் அவளுக்கு எப்பன் ஆறுதலாக இருக்கும்"

அம்மாவின் இரப்பால் அக்காவுடன் தங்கவந்து ஒருவாரம் எனக்குக் கழிந்துவிட்டது.

இத்தனை நாளில் அக்காமீது எனக்கு ஏராளமாய் பரிதாபம்!

'மூத்த பொம்பிளப்பிள்ளை வீட்டு வேலையெல்லாம் பழகியிருக்கவேணும்'

அம்மா சொல்லிச்சொல்லி வீட்டு வேலைகளை முழுமையாய் அக்கா மீது திணித்ததில் அக்காவின் படிப்பு இடைநடுவில் நின்றுபோனது.

அக்கா விளையாட்டில் வலு கெட்டிக்காரி. 'பொம்பிளப்பிள்ளையள் அடக்க ஒடுக்கமாய் இருக்கவேணும்' அக்காவின் இயல்பான திறமைக்கு முட்டுக்கட்டை விழுந்தது.

'காலாகாலத்தில நடக்கவேண்டியது நடக்கவேணும்'— அப்பாவிடம் இருந்த பணத்துக்கு அளவாய் அத்தான் அம்பிட்டார். அக்காவுக்குக் கணவனானார்!

“எங்களுக்கு கஷ்ரம் எண்டாப்போலை சும்மா விட ஏலுமே... மூத்த பிள்ளை... ஊருக்குச் சாப்பாடு போடவேணும்” – அக்காவின் திருமணம் சிறப்பாய் நடந்தது!

அத்தானின் கரம் பற்றி தலைகுனிந்தபடி நடந்த அக்காவை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

அத்தான் ஒரு அரசாங்க உத்தியோகத்தர்.

காலை எட்டு மணிக்குப் புறப்பட்டால் ஆறு மணிக்கு வருவார். இந்தப் பத்துமணி நேரத்துக்குள் அக்காவின் கடமைகளோ ஏராளம்!

வீட்டில் எந்த வேலைக்குமே உதவிக்கு ஆள் வைத்திருக்கக் குடும்பப் பொருளாதாரத்தில் இடமில்லை. எனவே எல்லாமே அக்காதான்!

குழந்தையின் உடுப்புகள் தோய்ப்பதில் ஆரம்பித்து – மூன்று நேரமும் சமைப்பது, சமையல் பாத்திரங்கள் கழுவுவது, அத்தானின் உடுப்புகள் தோய்ப்பது, எல்லாமே இந்த வீட்டில் அக்காதான்!

ஒருநாளைக்கு அக்கா அள்ளி ஊற்றுகின்ற தண்ணீரின் அளவு?...

சமயத்தில் விறகுகூட அக்கா கொத்துவாள்!

அனேகமாக காலை வேளைகளில் பரபரப்பு அதிகமாக இருக்கும்!

குழந்தை அழும் அறைக்குள் ஓடுவாள்!

அடுப்பில் கறி எரிந்து மணக்கும். அங்கும் ஓடுவாள்!

வாசலில் பால்காரனின் சைக்கிள் மணி கேட்கும். அங்கும் ஓடுவாள்! இவ்வளவுக்கும் அத்தான் முன் ஹோலில் பேப்பர் படித்துக்கொண்டே இருப்பார்! அவர் “சோலி சுரட்டில்லாத மனிதன்”!

சம்பளக் காசைக்கூட அப்படியே கவருடன் கொண்டுவந்து அக்காவிடம் கொடுத்துவிடுவாராம். அக்கா ஒரு முறை சொல்லிப் பெருமைப்பட்டிருக்கிறாள்.

அக்காவின் மீது ஏற்படும் பரிதாபம் எனக்குச் சிலவேளை கோபமாகவும் வருவதுண்டு.

"நீ அழுபிள்ளையோட இவ்வளவு கஷ்ரப்படுறாய்... அத்தான் உதில சும்மாதானே இருக்கிறார்... ஒரு வாளி தண்ணி அள்ளித்தந்தா... இல்லாட்டி ஒரு துண்டு விறகு கொத்தித்தந்தா என்ன?..."

என்னுடைய கேள்வி அக்காவைப் பதற வைத்துவிட்டது... ஏதோ கேட்கக்கூடாத கேள்வியை நான் கேட்டுவிட்டது போலப் பார்த்தாள்...

"அவர் ஆம்பிள்ளையெல்லே... அவரைப்போய் வீட்டு வேலை செய்யச் சொல்லி... ச்சீ... ஆரன்கண்டால் என்ன நினைப்பினம்...?"

அக்கா சில வினாடி இடைவெளிக்குப்பிறகு சொன்னாள். சடாரென்று இதயத்தின் மூலைக்குள் வலித்தது.

"அவன் ஆம்பிளப்பிள்ளை... அப்படித்தான் நடப்பான... நீ பொம்பிளப்பிள்ளை... அவனமாதிரி திரியஏலாது..." அம்மா அடிக்கடி சொல்வது நினைப்பு வந்தது.

"அந்த நேரம் பெரியண்ணை படலேக்கை வரேக்கை தான் வாறன் எண்டு காட்டுறதுக்கு செருமுவார்... நாங்கள் பெட்டையள் எல்லாம் எழும்பி உள்ளுக்குப் போயிடுவம்... அவருக்கு பெட்டையள் கூடிக் கதைக்கிறது பிடிக்காது..."

அம்மாவின் அம்மா – அம்மா – அக்கா என்று இன்றுவரை தொடரும் கை விலங்கு. இதை யார் உடைக்கப்போகிறார்கள்?

என்னுடைய மௌனம் அக்காவைப் பாதித்திருக்க வேணும்...

"அவர் காலமை எட்டு மணிக்குப் போனா... பின்னேரம் ஆறு மணி வரையும் அங்கை வேலை செய்யிறவர்... வீட்டிலையும் கேட்கிறது நல்லதில்லை... நான் வீட்டிலை சும்மா தானே இருக்கிறனான்... செய்வன்..."

என்னைச் சமாளிப்பதுபோல அக்கா சொன்னாள்...

"நீ வீட்டிலை சும்மாவோ இருக்கிறாய்?... காலமை எழும்பினா இரவு படுக்கப்போகும் வரையும் எவ்வளவு வேலை செய்கிறாய்?..."

"செய்யிறன்தான்... அதுக்குக் காசே... இல்லைத்தானே... அதோட வீட்டிலை வேலை செய்யிறது பொம்பிளையளின்ரை கடமையெல்லோ?..."

அக்காவுக்காக அழுவதோ? சிரிப்பதோ?

"நீ யோசிச்சுப்பார்... இந்த வீட்டில செய்யிற ஒவ்வொரு வேலைக்கும் சம்பளம் கணக்குப்போட்டுப் பார்த்தா அத்தானைவிட உனக்குத்தானே காசு கூட..."

அக்கா பெரிய பகிடியைக் கேட்டுவிட்டதைப்போல குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்!

"வீட்டில பொம்பிளையள் செய்யிற, செய்யவேண்டிய வேலையளுக்கும் ஆரன் கணக்குப் போட்டுப் பார்க்கிறதோ?"

"சரி கணக்குப்போட்டுப் பார்க்க வேண்டாம்... நீ வீட்டிலை சும்மா இருக்கேல்லை... அத்தானுக்கு ஈடாக நீயும் உன்ரை சக்தியை சிலவழிச்சு உழைக்கிறாய் எண்டதை விளங்கிக் கொள்ளுறியோ?"

அக்கா இப்போது அமைதியாகச் சிரித்தாள்.

"நீ கண்டகண்ட புத்தகங்களையெல்லாம் படிக்கிறியாம்... உனக்கிப்ப சினேகிதங்களும் சரியில்லையாம்... அம்மா கவலைப்பட்டவா... எங்கடை குடும்பம் அடக்கமாகவும் அமைதியாகவும் வாழ்ந்த குடும்பம்... நீயும் நாலுபேற்றை கண்ணில படுறமாதிரி நடவாதை..."

அக்கா என்ன சொல்லுகிறாள் என்பது சடாரென்று புரிந்தது!

"உனக்குக் கீழை விஜயாவும்... கவிதாவும் இருக்கிறாளவை... நீ நடக்கிறதைப் பார்த்துத்தான் அவளவையும் நடப்பாளவை... அதுக்கேத்த மாதிரி நீ அடக்கமா இரு..."

"நான் இப்ப நடக்கிறதில என்னபிழை கண்டு பிடிச்சிருக்கிறியள்...?" என் கேள்வியில் கொஞ்சம் சினம் எட்டிப்பார்த்தது.

"நீ எங்களை விட கூடப் படிச்சனி... கைநிறையச் சம்பளம் எடுக்கிறாய் எண்டு உனக்கு நினைப்பிருக்காலம்... பொம்பிளையள் என்னதான் படிச்சாலும் என்னதான் உழைச்சாலும் கலியாணம் கட்டினா புருசனுக்கு அடிமைதானே..."

எனக்கு கோபம் குப்பென்று மூண்டது... ஆனால் நான் வாயே திறக்கவில்லை!

"எல்லாம் உன்ரை நன்மைக்காகத்தான் சொல்லுறன்... நாளைக்கு உனக்கெண்டு ஒரு வாழ்க்கை அமைஞ்சா நீ கஷ்ரப்படக்கூடாதெல்லோ..."

அக்கா இன்னும் ஏதோ எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாள்! அக்காவின் வார்த்தைகள் புரியவில்லை.


அடக்கம் என்ற பெயரில் தங்களைச் சுற்றி ஒரு அடிமைச் சிறையைப் போட்டிருக்கும் அக்கா, அக்கா போன்றவர்களுக்கு எப்போது விடியப்போகிறது? அக்கா போன்றவர்கள் இருக்கும்வரை அத்தான் போன்றவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்! இந்த நியதிகள் மாறும்வரை... இப்படித்தான் இவர்களின் வாழ்க்கை கழியப்போகிறது!

ஆனால்... நிச்சயமாக என் போன்றவர்களின் வாழ்க்கை அப்படியல்ல!

அம்மாவின் வாழ்க்கை போல... அக்காவின் வாழ்க்கை போல அல்ல... எங்களின் வாழ்க்கை, நியதிகளை மாற்றிய நிரந்தர வாழ்க்கையாகவே இருக்கும்!

நம்பிக்கையோடு ஜன்னலைக் கடந்து என் பார்வை விரிகிறது... வானத்தில் குருவிக்கூட்டமொன்று அலை அலையாய் பறக்கிறது!

சுதந்திரப்பறவைகள்
*1994 மாசி*



ஆதிலட்சுமி சிவகுமார்

# அவளின் பிள்ளைகள்

வட்டு வாசலில் இருந்து பார்க்க எல்லாம் தெரிந்தது. சண்முகத்தாற்ரை சிவலை மண்டப வாசலில் 'ஸ்பீக்கர்' கட்டிக்கொண்டிருந்தான். பொங்கல்ப் பானைகள், சருவங்கள், பாளைகள், சிராய் விறகுகள், வாழைஇலைகள், இளநீர்க்குலைகள் எல்லாமே வீதிகளில் அங்கங்கு வைக்கப்பட்டிருந்தன.

சின்னஞ்சிறுசுகள் பூக்களாய் ஓடி விளையாடிக்கொண்டிருந்தன.

அம்மன் கோயில் விசாகப் பொங்கல்!

ஊரில் ஒரு வீடும் மிச்சமின்றி எல்லோருமே கோயிலில்!

யாரோ ஒரு பெடியன் மணலில் 'பிறதட்டை' உருண்டுகொண்டிருந்தான்.

வாசலில் குந்தி இருந்து பார்வதி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அம்மாளாச்சி! உனக்குக்கூட கருணை இல்லாமல் போட்டுதே"

அவள் கண்களில் கண்ணீர் திரண்டது.

இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக்கொண்டு பெரிதாக அழுதாள்.

படலைக்குள் யாரோ கூப்பிடுவது போலிருந்தது.

நிமிர்ந்துபார்த்தாள்.

"திருவலையை ஒருக்காத் தருவியளே! தேங்காய் திருவிப்போட்டுத்தாறம்..."

எழும்பிப்போய் திருவலையை எடுத்துவந்து கொடுத்தாள்.

அந்தப் பெண் பார்வதியை அனுதாபத்தோடு பார்த்துச் சென்றாள்!

"மோதகம் அவிக்கப்போயினம் போலை..."

நெஞ்சுக்குள் சுரீரென்றது. எவராலும்... எதனாலும் ஆற்றமுடியாத வலி...

"ஐயோ... என்ரராசா... என்ரதேவு... என்னாலை தாங்க முடியேல்லையடா..."

அவள் மாறிமாறித் தன் நெஞ்சிலும் தலையிலும் அடித்துக்கொண்டாள். அவளை 'அழாதே' என்று சொல்லக்கூட ஒரு சீவன் வீட்டிலில்லை. பார்வதியின் மூத்தவள் புருஷனோடு முத்தையன்கட்டில். அடுத்தவன் ஜேர்மனியில் அகதியாக. மூன்றாமவன் தேவு...

"என்ர ஐயா... இன்பத்திலையும் துன்பத்திலையும் பங்கெடுப்பன் எண்டு சொல்லிப்போட்டு என்னை தனியா விட்டுட்டு போட்டியளே..."

எட்டு வருஷங்களுக்கு முன் இறந்துபோன புருஷனிடம் முறையிட்டுக் கதறினாள். வேலிக்குள் நாலைந்து தலைகள் முளைத்தன!

"பார்வதியக்கா... என்னஉது...?"

"என்னாலை தாங்கமுடியேல்லை.... என்ரபிள்ளை உயிரோடை இருந்தா பொங்கலுக்கு வந்திருப்பான்..."

"அக்கா பிள்ளை செத்தது துன்பம்தான்... ஆனா அழாதையுங்கோ... அங்காலை சனம் பொங்குது... அழுறது சரியில்லை..."

பார்வதி பெருமூச்சோடு தன் அழுகையை அடக்கிக்கொண்டாள். நினைவுகள் உள்ளே கொப்பளித்தன! போனமுறை கூட விசாகப் பொங்கல் பெரிதாக நடந்தது. பார்வதியும் பொங்கி, மோதகம் அவித்தாள்! விளக்கு வைக்கிற நேரமளவில் தேவுவந்தான். அவனுடன்கூட இரண்டுபேர்!

"தம்பிமார்... கொஞ்சநேரம் இருந்துகொள்ளுங்கோ... பூசையாகப்போகுது... புக்கை திண்டிட்டுப்போகலாம்..."

சருவச்சட்டிக்குள் பூசைச் சாமான்களை வைத்துக்கொண்டு கோயிலடிக்கு ஓடினாள். பூசையில் மனம் லயிக்கவில்லை. வீட்டில் காத்திருக்கும் பிள்ளைகளுக்காக மனம் துடித்தது. பதைபதைத்தது.

"சொல்லாமல் போய்விடுவார்களோ..."

'கெதியாய்... கெதியாய்... என்று மனம் அவசரங்கொண்டது.

ஒன்றுக்கு மூன்று தேவாரம் படித்த சிவலிங்கம் மீது எரிச்சல் பிறந்தது. பூசை முடிந்தவுடன், எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள்! தேவு றேடியோவைக் கழற்றி ஏதோ செய்துகொண்டிருந்தான். ஒருவன் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தான். மற்றவன் – துவக்கை மடியில் வைத்துக்கொண்டு படலையையே பார்த்துக்கொண்டிருந்தான்!

'தேவுக்கு மோதகங்கள் எண்டால் நல்ல பிடிப்பு...' நினைத்துக்கொண்டு மோதகங்களைப் பொறுக்கி ஒரு தட்டில் வைத்தாள்! புக்கையை அள்ளித் தட்டுக்களில் பரப்பி ஆற விட்டாள்! படைத்த மாம்பழங்கள் இரண்டையும் அவசரமாய் தோல் சீவினாள்! கைகால்கள் பரபரத்தன! மூவருக்கும் பார்வதி புக்கையும் மோதகமும் போட்டுக்கொடுத்தாள்!

"தம்பியவை வெக்கப்படப்பிடாது... இது உங்கடை வீடு... முழுத்திலும் திண்டுபோட்டு வெறும் தட்டு விடவேணும்...!"

ஒல்லியாய் நீக்குரோ மாதிரித் தலைமயிருடன் இருந்தவன் முகத்தில் சிறிய புன்னகை மலர்ந்தது. தொட்டால் ஒட்டிவிடுமோ என்று அச்சமூட்டும் கறுப்பு நிறம்! உள்ளே போய் இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வந்தாள்.

"ஐயோ... அம்மா... எனக்குக் காணுமனை... வயிறு

வெடிக்கப்போகுது..."

அவன் துள்ளி எழுந்து தலைக்குமேலே தட்டை உயர்த்தினான்! நல்ல உயரம்!

"... ஒவ்வொரு வரியமும் விசாகப் பொங்கலுக்கு இஞ்சை வரவேணும்..."

"அடுத்த வரிசப் பொங்கலுக்கு எங்களிலை ஆர் இருக்கிறமோ...? ஆர் இல்லையோ...?"

தேவு சொல்லி வாய் மூடுவதற்குள் பார்வதி அவனின் மண்டையில் டொக்கென்று குட்டினாள்...

"ஒருநாளும் உப்பிடி சகுனம் பிழைச்ச கதை கதையாதை... அம்மாளாச்சி ஒருதருக்கும் ஒண்டும் வரவிடமாட்டா..."

கூறியபடியே பிரசாதத்தை மூவருக்கும் பூசிவிட்டாள். செம்புத் தண்ணீரை வயிறுமுட்டக் குடித்துவிட்டு எழும்பினார்கள். ஒல்லியானவன் எழும்பி தன் நெஞ்சில் கொழுவியிருந்த கோல்சரைத் தளர்த்திக்கொண்டான். துவக்கையும் தோளில் கொழுவினான்.

"உனக்கு என்ன பேரப்பு...?"

"முகுந்தன்..."

"அப்ப சரி... போட்டுவாங்கோ... நேரங்கிடைக்கேக்கை வாங்கோ தம்பியவை..."

"அம்மா... வேறை மோதகம் கிடக்கேயணை..."

தேவு இரகசியமாய்க் கேட்டான்.

"ஓம் கிடக்கு ஏன்?"

"அங்கை பேசில ஆறேழு பெடியள் இருக்கிறாங்கள்... கொண்டுபோவம்..."

பார்வதி உள்ளே ஓடினாள். பெட்டியில் சருவச்சட்டியில் – கிடந்த எல்லா மோதகங்களையும் பையில் போட்டாள். ரண்டு சீப்பு வாழைப்பழங்களும்

போட்டாள். தேவு பையை வாங்கிக்கொண்டு சயிக்கிளில் ஏறினான்.

"அம்மா... போட்டுவாறம்..."

"ஓம் குஞ்சுகள்... போட்டுவாங்கோ..."

படலைவரை போய் வழியனுப்பினாள். ஒழுங்கையில் அவர்கள் மறையும்வரை நின்றுவிட்டு வந்தாள்!

முன்னால் நிழலாடுவது போலிருந்தது! பார்த்தாள்... பெரியதம்பி வாத்தியார்.

"வாத்தியார்... நீங்களே..."

உன்னி எழும்பினாள்...

"கொஞ்சம் வெள்ளைப்பூ வேணும்..."

வாத்தியார் பூமரங்களைப் பார்த்தபடி சொன்னார்!

"தாராளமாய் பிடுங்குங்கோ வாத்தியார்..."

பெரியதம்பி வாத்தியார் கிணத்தடிக்குப் பூப்பிடுங்கப் போனார்...! பெரியதம்பி வாத்தியாரிடம்தான் தேவு படித்தவன்... முரட்டுத்தனம் கொண்ட தேவுவை நெறிப்படுத்தியவர்! வயதுக்கு மீறின துடிதுடிப்புக் கொண்டவனை அவனுடைய திறமைகள் வெளிப்படும்படி ஆக்கியவர்... அவருடைய மகளும் ஒருத்தி களத்தில்!

பூக்களைப் பறித்துக்கொண்டு வாத்தியார் வந்தார்...

"பார்வதி... ஆறுதலாய் இருக்கிறாய்... அம்மாளாச்சிக்குப் பொங்கேல்லையோ...?"

"நான் எல்லாமா நம்பியிருந்த என்ர பிள்ளை செத்துப்போச்சுதாம்... எனக்கு என்ன பொங்கலும் திருவிழாவும்...?"

சலிப்புடன் வார்த்தைகள் விழுந்தன.

"உப்பிடிச் சொல்லாதை பார்வதி... தேவுவைப் போன்ற பிள்ளையளின்ர ஆத்மாக்கள் சாகிறேல்லை... இன்னொரு போராளியா பிறந்துகொண்டிருக்கும்...

அதாலை தான் இண்டைக்கு இத்தினை பெடியள் செத்தும் போராடுற பெடியளின்ர எண்ணிக்கை குறையேல்லை..."

வாத்தியார் சொல்வது உண்மைபோலத்தான்பட்டது அவளுக்கு. திருப்பிச் சுவரில் இருந்த தேவுவின் படத்தைப் பார்த்தாள். அவன் சிரிப்பதுபோலிருந்தது! 'நான் சாகேல்லை' என்பது போலிருந்தது அந்தச் சிரிப்பு!

"புத்திரசோகம் பொல்லாததுதான் பார்வதி... ம்... ஆனா... மனதை ஆத்திக்கொள்ளவேணும்... எல்லாப் பிள்ளையளும் எங்கடை பிள்ளைகள் தான் எண்டு நினைச்சு வாழவேணும்..."

வாத்தியார் பூக்களுடன் புறப்பட்டார்.

"எல்லாப்பிள்ளையளும் எங்கடை பிள்ளையள் எண்டு நினைச்சு வாழவேணும்..."

காதுக்குள் திரும்பத்திரும்பக் கேட்டது!

"போட்டு வாறம் அம்மா..."

போனவருஷப் பொங்கலுக்கு தேவுடன் வந்த போராளிகள் கூறியது அவளது காதுகளுக்குள் இனித்தது.

"எல்லாப் போராளிப் பிள்ளையளும் என்ர பிள்ளையள் தான்..."

கண்களைத் துடைத்துவிட்டு எழும்பினாள். கெதியில் அம்மாளாச்சியின் வீதியில் பொங்கிவிட்டு புக்கை பிள்ளைகளுக்கு கொண்டுபோய்க் கொடுக்கவேணும் என்று மனம் உந்தியது.

கிணத்தடிக்கு ஓடிப்போய்... குளிர்ந்த நீரை அள்ளித் தலையில் ஊற்றினாள். கோயிலை நோக்கி தூக்குக்காவடி ஒன்று சென்றுகொண்டிருந்தது! 'ஸ்பீக்கரில்' பொங்குவோருக்கு அறிவுறுத்தல்கள் விடப்பட்டுக்கொண்டிருந்தன. குளித்து முடித்துவிட்டு வழமையாக அம்மாளாச்சிக்குப் பொங்குகின்ற பெரிய சருவப்பானையை வெளியே கொண்டுவந்து துலக்கினாள். மனதுக்குள் ஒரு அவசரம், துடிதுடிப்பு அவளையறியாமலே ஏற்பட்டது!

வெளிச்சம்
ஆடி – 1994

# மண்

ஆச்சி திண்ணைக்குந்தில் குந்திக கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு பாய்ச்சுருள், பாக்கு உரல், உணவருந்தும் தட்டு, தண்ணீர்க் கோப்பை எல்லாம் கிடந்தன. இவைதான் இப்போது ஆச்சியின் சொத்துக்கள்!

வாடைக்காற்று ஆச்சியின் முகத்தில் வந்து மோதியது!

"இந்தக்காத்துக் காலத்திலை எத்திணை பெடியள் உந்தத்தோட்ட வெளியெல்லாம் பட்டம் ஏத்தித்திரியுங்கள்... எல்லாம் எங்கை போச்சுதுகளோ..." ஆச்சிக்கு வேதனையாக இருந்தது.

"சூய்... சூய்... ஆடுமாடுகளையும் விட்டுவிட்டு சனமெல்லாம் ஓடிட்டுது... ஒரு மரஞ்செடியளையும் விடாமல் அதுகள் தின்னுதுகள்...

கிணற்றடி வேலிப்பொட்டுக்குள்ளால் நுழைந்த ஆட்டுக்குட்டியைத் துரத்தியபடி

ஆச்சியின் மகள் கமலம் வந்தாள்.

"உதார் மோனை வந்தது...?" ஆச்சி கேட்டாள்.

"இஞ்சை ஆர் இருக்கிறது வாறதுக்கு... ஆடொண்டு வந்துது... கீரைகளைத் திண்டிடும் எண்டு கலைச்சனான்..."

நொந்தபடி சொன்னாள் கமலம்.

"நாசமாப்போற ஆமியள் வந்து எங்கடை சனமெல்லாத்தையும் குடி எழுப்பிப்போட்டான்கள். விசாலாச்சியும் பிள்ளையளும் எங்கைபோய்... ஆற்றை கோடிக்கை கிடந்து கஷ்ரப்படுதுகளோ..." ஆச்சி புலம்பினாள்.

ஆச்சியின் திண்ணையில் இருந்து இராணுவமுகாம் ஒரு முக்கால்மைல் தூரத்தில் தான். இரவில் இராணுவ முகாமுக்குள் வாகனங்கள் இரைவது துல்லியமாய்க்கேட்கும்!

உள்ளே எரியும் மின் வெளிச்சம் வானத்தில் ஒளிரும்!

உலங்குவானூர்தி சுற்றிச் சுற்றி முகாம் சுற்றாடலில் பறக்கும்!

விமானங்கள் இராட்சத உருவங்களாய் தாழப்பறந்து உள்ளே இறங்கும்!

இடையிடை ஆட்லறி ஷெல்கள் வந்து இலக்கின்றி விழும்!

ஆச்சிக்கு எல்லாமே பழகிவிட்டது!

நிலமதிர வந்துவிழும் குண்டுகளுக்குப் பயந்து பெரும்பாலானவர்கள் இடம் பெயர்ந்து விட்டார்கள்!

சிலர் பகலில் வந்து வந்து, குழையும் விறகும் வெட்டிச்செல்வார்கள்!

சென்றகிழமை வீடுபார்க்க வந்த சோமுவுக்கு வெடிவிழுந்த பிறகு யாருமே வருவதில்லை!

அன்றே, ஆச்சியின் மகள் கமலம் தன் இரு குமர்ப்பிள்ளைகளையும் சின்னமணி வீட்டுக்கு அனுப்பிவிட்டாள்.

இப்போது... ஆச்சியும், கமலமும், அவள் புருஷன் தருமுவும் தான்!

மனிதர்கள்

______ஆதிலட்சுமி சிவகுமார்

ஆச்சிக்கு எண்பது வயதுக்கு மேலாகிவிட்டது. கண்பார்வை தெளிவில்லை. குரலை வைத்துத்தான் ஆட்களை அடையாளம் கண்டுகொள்வாள்!

கமலம் கிணற்றடியில் ஊறப்போட்ட இரண்டு ஓலைகளை இழுத்து வந்து பின்னத்தொடங்கினாள்.

"மோனை... உவன் சின்னமணி வந்தவனே மோனை..."

ஆச்சி கமலத்தோடு இருந்தாலும்... மூத்தவன் சின்னமணியில் தான் பற்றுக்கூட...

"சொல்லிவிட்டுக்கிடக்கனை வருவன் தானே... ஏன் கத்திறாய்?'

"அவனெண்டால் நல்ல வெத்திலையைக் கொண்டந்து தருவான்"

கமலத்துக்கு எரிச்சல் வந்தது.

"ஏனணை... நேற்று வாங்கித் தந்தது எங்கை...?"

"அது பெங்கார் கிடக்குது... வெறும் பிஞ்சு இலை... அவனெண்டால் முத்தல் இலையாய் வாங்கித் தருவன்..."

"சரி, நாளைக்கு வேண்டித்தரலாம்... உப்ப... உதப்போடு..."

ஆச்சி மௌனமானாள்.

முன்பெல்லாம் விசாலாச்சியும், வடிவும் வந்திருந்து ஆச்சிக்கு ஊர்ப் புதினமெல்லாம் சொல்லுவார்கள்!

முன்வளவு வெளிக்குள் பெரிசு சிறிசு வேறுபாடில்லாமல் தாச்சி விளையாடுவார்கள். ஆச்சி இந்தத் திண்ணைக் குந்திலிருந்தே விளையாட்டை ரசிப்பாள்.

இப்போது அந்த விளையாட்டு நிலத்தில் புற்கள் மண்டிவிட்டன. சிறுசிறு பற்றைகள்கூட உருவாகிவிட்டன!

தூரத்தூர ஒவ்வொரு வீட்டில் ஒன்றிரண்டு பேர். அவர்களும் பொழுதோடு தூங்கிவிடுவார்கள்! இரவு நீண்டு பயங்கரமாய்த் தோன்றும். மௌனத்தின் ஆட்சி மனதைக் கலக்கும்!

சயிக்கிளை உருட்டிக்கொண்டு வந்து தருமு விறாந்தையில் ஏற்றினான்.

"ஆருது..." ஆச்சியின் வாய் அசைந்தது!

"அது நான்..." விறைப்பாய் சொல்லிவிட்டு...

"இஞ்சை கமலம்... உங்காலை ராவைக்கு அடிபாடு தொடங்குமெண்டு துரையர் கடையடியிலை கதைக்கினம்... சாமத்திலை அடிச்சானெண்டால் ஒண்டும் செய்ய ஏலாமற்போயிடும்... நாங்களும் எங்கையாலும் போவமே..."

தருமு பரபரத்தார்.

"எங்கை போறது...? போய் ஆற்ர வீட்டிலை இருக்கிறது...?"

"முதலிலை போவம்... போய்... சின்னமணியைப்பிடிச்சு... எங்கையாலும் இருப்பம்"

தருமு அவளை அவசரப்படுத்தினான்.

"அண்ணை வீட்டில பிள்ளையள் ரெண்டையும் விட்டிருக்கிறம்... அங்கை நாங்களும் போய் என்ன செய்யிறது...? அதுகள் பாவம்..."

"வேறை எங்கை போவம்..."

கமலத்துக்கு இந்த இடத்தை விட்டுப்போக துளிகூட விருப்பமில்லை.

"இப்ப என்ன அவசரமப்பா...? ஏதும் சத்தம் கேட்டால் பாப்பம்..."

கமலம் எழும்பி குசினிக்குள் போனாள்.

தளர்ந்த நடையோடு தருமு கிணற்றடிக்குப்போனான்!

இவ்வளவு நேரமும் மௌனமாய் இருந்த ஆச்சி

"என்னவாமடி மோனை... ஆமிக்காரன் ஊருக்குள்ளை வரப்போறானாமோ...?" என்று கேட்டாள்.

"இல்லையெணை... நீ பயப்பிடாதை..."

என்ற கமலம் "எண்பது வயதாகியும் கிழவிக்கு சாகப்பயமாக்கிடக்கு..." என்று முணுமுணுத்தாள்.

ஆச்சிக்குக் கண்பார்வைதான் தெரியவில்லையே தவிர... காது வலு கூர்மை. கமலம் சொன்னதை உள்ளெடுத்தது.

"எனக்குச் சாகிறதுக்குப் பயமில்லை மோனை... வந்தாங்களெண்டால் சனங்களின்ரை வீடு வாசல்களை உடைச்சுப் போடுவாங்களெல்லே... அதுதான் கேட்டனான்..." என்றாள்.

தருமு உடம்பில் கிடந்த புழுதியைக் கழுவிட்டு வந்தான்!

"நாங்கள் எங்கையன் போறதெண்டால் சும்மாவே... ஆச்சியையும் கொண்டெல்லே போகவேணும்... பிறத்தி வீடுகளிலை ஆச்சியை வைச்சிருக்கேலாது... ஏதன் சண்டை தொடங்கினா பாத்துப்போவம் என்ன...?"

தருமுவுக்கு தேநீரைக்கொடுத்துவிட்டு... கமலம் சொன்னாள். தருமு தலையாட்டியபடியே... தேநீரைக் குடித்தான்.

கமலம் ஆச்சிக்கும் கோப்பைக்குள் தேநீர் ஊற்றிவிட்டாள்.

வழமைபோல நேரத்துடன் எல்லோரும் தூங்கிவிட்டார்கள். ஆச்சி பாக்கு இடிக்கத்தொடங்கினாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை! கமலம் புட்டோடு சாப்பிடத்தந்த வாழைப்பழங்களை 'சின்னமணி வந்தாலும்' என்று ஆச்சி மூடிவைத்திருந்தாள்.

அதை இப்போது எடுத்துச் சாப்பிட்டாள். தன்னருகே காவல்போல் படுத்துறங்கும் நாய்க்கும் ஒருதுண்டு கிள்ளிப்போட்டாள்!

ஆச்சி கண்ணயரத் தொடங்கியபோது,

முகாம் பக்கமிருந்து துவக்கு வெடிச்சத்தங்கள் ஒலித்தன!

"நாசமாய் போவார் துவங்கி விட்டாங்கள்..." ஆச்சி எழும்பினாள்.

கமலமும் முழித்துவிட்டாள்.

"பாத்தியே... நான் சொல்ல நீ கேக்கேல்லை... பெடியள் ஆமிக்கு அடிக்கிறாங்கள்"

தருமு நடுங்கினான்.

“உது பெடியள் அடிக்கிற சத்தமில்லையப்பா... ஆமிக்காரன்தான் பயத்திலை சுடுறான்...”

என்றபடி கமலம் முத்தத்துக்கு வந்தாள்.

மீண்டும் அதே துவக்கு வெடிச்சத்தங்கள்... ஹெலி ஒன்று தூரத்தில் சடசடத்தது.

“சண்டை துவங்கிட்டுது போலை... வண்டிலைப் பூட்டுவம்...” தருமு அவசரப்பட்டான்.

“பொறுங்கோ... எப்பன்நேரம் பாப்பம்...”

கமலம் சொல்லும்போதே... சனங்கள் உரைப்பை மூட்டைகளுடன் விரைந்து கொண்டிருந்தார்கள்...

“எல்லாச்சனமும் போகுதுகள்... நாங்களும் போவமே...” தருமு பதறினான்.

கமலம் பதில் சொல்ல வாயுன்னும்முன் ஆட்லறி ஷெல் ஒன்று கூவிக்கொண்டு வீட்டைக் கடந்து போனது!

அது விழுந்து வெடிக்குமுன்... மீண்டும் அடுத்தடுத்து ஷெல்கள்!

“நான் வண்டியைப் பூட்டுறன்... சாமான்களை வண்டிலடிக்குக் கொண்டா...”

தருமு பின் வளவுக்குப் போனான்.

ஏற்கனவே கட்டித் தயாராக வைத்திருக்கும் உரைப்பை மூட்டைகளில் ஒன்றைக் கமலம் தூக்கிக்கொண்டுபோய் வண்டிலடியில் வைத்துவிட்டு, கமலம் திரும்பிவந்தாள்.

துவக்கு வெடிச்சத்தங்கள் அமளியாய்க் கேட்டுக்கொண்டிருந்தன.

“ஆச்சி... ஆச்சி... எழும்பணை... வண்டில் பூட்டியாச்சு...”

கமலம் முற்றத்து இருளில் நின்று கூப்பிட்டாள்.

மனிதர்கள்
ஆதிலட்சுமி சிவகுமார்

"நான் வரேல்லை மோனை..."

"அடம்பிடிச்சு... சும்மா கிடந்து சாகப்போறியே.... எழும்பணை..."

கமலம் ஆச்சியின் கையில் பிடித்துத் தூக்கினாள்.

ஆச்சி கையை வெடுக்கெண்டு இழுத்துக்கொண்டாள்.

"நாற்பது ஐம்பது வரியமா... நான் இருந்த வீடு இது... இதை விட்டுட்டு ஒரு இடமும் வரமாட்டன்"

எறிகணை ஒன்று பெரிய சத்தத்துடன் வந்தது. "ஐயோ..." கமலம் காதுகளைப் பொத்திக்கொண்டாள். வெடிமருந்து மணத்தது.

"அவன் கண்மண் தெரியாமல் அடிக்கிறான்... அடம்பிடிக்காமல் வாணை... சனமெல்லாம் ஓடுது..."

"நான் வரேல்லை மோனை... நீங்கள் போங்கோ..."

இறுதியாய்ச் சொல்லிவிட்டு ஆச்சி பாக்குரலிலிருந்த பாக்கத்தூளை கையில் கொட்டிக்கொண்டாள்.

"இனி நிண்டால் சாகிறதுதான்..."

கமலம் வண்டிலுக்கு ஓடினாள்.

ஆச்சி சுவரில் சாய்ந்து பாக்குத்தூளை உமிந்துகொண்டிருந்தாள்.

வெளிச்சம்
ஆவணி 1994

# வெற்றுக்குரல்

ஆலமரச் சந்தியில் இருந்த காகங்கள் 'ஹா... ஹா...' என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தன. கீழே வெள்ள வாய்க்காலுக்கு மேலாக போடப்பட்டிருந்த பாலத்துக்கருகில் நின்ற மரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு நின்றான் ஒரு இளைஞன்.

சுகந்தனின் சைக்கிள் பாரில் அமர்ந்திருந்த சஜீவன் கேட்டான்,

"மச்சான்... மூண்டுநாள் போட்டம்... ஆளில்லை; இண்டைக்கும் நிக்குதோ என்னவோ..."

"இண்டைக்கு அம்பிடுவார் எண்டுதான் நினைக்கிறன்..."

"எத்தினை அலைச்சல் அலையிறம்..."

சஜீவன் பெருமூச்சு விட்டான்.

சிறிது நேரம் சைக்கிள் மௌனமாக

ஓடியது.

"டேய் சஜீ... அங்கேற்றா வாசலுக்கை மோட்டச்சயிக்கிள் நிக்குது... ஆள் உள்ளதான்..."

சுகந்தன் அசரமாய் சைக்கிளை நிப்பாட்டி பெல் அடித்தான்.

முதல் மூன்று தரமும் கதவைத் திறந்த அதே பெண் இப்போதும் திறந்தாள்.

"சேர் நிக்கிறாரோ..."

"அவர் கூட்டம் ஒண்டுக்குப் போட்டார்..."

சஜீவன் சந்தேகத்தோடு மோட்டார் சைக்கிளைப் பார்த்தான்.

"மழைஎண்டு சயிக்கிள்ளை போனவர்..."

"எப்ப வருவார்...."

"கூட்டம் எத்தினை மணிக்கு முடியுதோ தெரியா..."

"விடியவெள்ளன வந்தா நிப்பாரோ..."

"அவருக்கு கிளாஸ் இருக்கு... சிக்ஸ் தேட்டிக்குப் போயிடுவார்..."

சஜீவன் உதடுகளைக் கடித்து யோசித்தான்...

"கொஞ்ச நேரம் நிண்டு பாப்பம்..."

அந்தப் பெண் எதுவும் சொல்லாமல் கதவைச் சாத்திவிட்டுப் போனாள்.

சற்றுத் தள்ளி எதிர்ப்பக்கமாய் நின்ற பூவரசுக்குக் கீழ் சைக்கிளை நிறுத்தி அதில் சாய்ந்தான் சஜீவன்.

சுகந்தன் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றான்.

"எனக்கெண்டால் பேசாமல் இந்த ஐடியாவை விடலாம்போலை கிடக்கு... ஒவ்வொருத்தரிட்டையும் நாயலைச்சல் அலையிறம்..."

“ஆரம்பத்திலை எல்லாம் இப்பிடித்தான்… அதுக்காண்டி நாங்கள் மனந்தளரக்கூடாது…”

முழங்கையில குத்திய நுளம்பை அடித்தபடி சுகந்தன் சொன்னான்.. இருவரும் தமக்குள் ஏதேதோ சிந்தனைவசப்பட்டு மௌனமாகினர். இருள் மெல்ல மெல்ல மூடிக்கொண்டு வந்தது.

“இப்பிடி எல்லா இடமும் அலைஞ்சுபோட்டு வீட்ட போக அம்மா மனுசி விளக்கமில்லாமல் திட்டும்…”

சுகந்தன் ஆமோதிப்பதாய் முறுவலித்தான்.

வருகிற போகிற எல்லாச் சைக்கிளையும் உற்றுப் பார்த்தார்கள். அந்த வீட்டினுள் இப்போது விளக்கு எரிந்தது.

இவர்கள் பார்த்துக்கொண்டு நின்ற திசைக்கு எதிர்த்திசையில் வந்த சைக்கிள் ஒன்று அந்த வீட்டினுள் நுழைந்தது.

“ஆள் வந்திட்டுது…”

சஜீவன் உசாரானான்.

“மச்சான் நான் விசயத்தைச் சொல்லுறன்.. நீயும் கதை… நழுவவிடக்கூடாது… விட்டா எங்கட பக்கம் வீக்காப்போயிடும்…”

சிறிது அவகாசம் விட்டு… கேற்றடிக்குப் போய் பெல் அடித்தார்கள். முன் கதவு திறந்தது. இருட்டில் முகம் தெரியவில்லை…

“சேர் நிக்கிறாரோ…”

“ஆர் தம்பி நீங்கள்…”

குரலே அவர்தான் என்றது.

“நாங்கள் உங்களிட்டை ஒரு அலுவல் கதைக்கவேணும்…”

“என்ன அலுவல் தம்பி…”

“உள்ளயிருந்து கதைக்கலாமோ சேர்…”

"ஆ...ஓ...ஆ... வாருங்கோ..."

தடுமாற்றத்துடன் வரவேற்றார். விளக்கைத் தூண்டி முகங்களை உற்றுப்பார்த்தார்...

"சேர்... நாங்கள் ஒரு மகசீன் வெளியிடப் போறம் அதுதான்..."

இப்போது அவர் நிம்மதிப் பெருமூச்சு விடுவது தெரிந்தது சஜீவனுக்கு.

"சரி... சொல்லுங்கோ..." என்றார்.

"இளங்கலைஞர்களையும் படைப்பாளிகளையும் ஊக்குவித்து... இந்த மண்ணின்ர விடுதலைக்கு அவயளையும் ஏதோ ஒரு விதத்தில பங்களிக்கச் செய்யிறதுதான் எங்கட நோக்கம்..."

"நல்ல விசயம் தம்பி... கட்டாயம் செய்யவேணும்..."

"அதுதான் சேர்... நீங்கள் எங்களுக்கொரு நல்ல படைப்புத் தரவேணும்..."

"இளம் படைப்பாளியளுக்கெண்டு சொல்லுறியள் தம்பி... அவயளை ஊக்கப்படுத்திறதெண்டால்... அவயளின்ர படைப்புக்களையெல்லோ வெளிக்கொண்டு வரவேணும்..".

"என்னெண்டால் சேர்... முதல் வெளியீட்டில உங்களைப்போல பழுத்த அனுபவமுள்ள ஆக்களின்ரை படைப்புக்கள வெளியிட்டம் எண்டால்... பிறகு அடுத்ததில எழுதுறவை தரமா எழுதுவினம்..."

'நீயும் ஏதாவது கதையன்...' என்பதுபோல சஜீவன் சுகந்தனைப் பார்த்தான்.

"இண்டைக்கு இஞ்ச நடந்துகொண்டிருக்கிற பிரச்சினைகளிலயிருந்து நாங்கள் ஒருதரும் விலகியிருக்கேலாது எண்டு உணருறம்... ஆனபடியா எங்கட எங்கட வல்லமைக்கு ஏற்றமாதிரி ஏதாவது செய்யோணும் சேர்..."

சுகந்தனைப் பார்த்து அவர் தலையாட்டினார்.

"ஓம் தம்பி... ரஷ்சியாவை நாங்கள் எடுத்துக்கொண்டமெண்டால் அங்க போராட்டம் நடக்கேக்குள்ள மக்கள எழுச்சி கொள்ள வச்சது எழுத்தாளர்மாற்ரை பேனையள் தான்... துவக்கவிட பேனையளுக்கு வலிமை

அதிகம் கண்டியளோ... ஏன் கியூபாவிலும் அப்படித்தான்... வியட்னாமிலும் அப்படித்தான்... நீங்கள் சின்னப் பெடியள்... உதுகளை அறிஞ்சிருக்க மாட்டியள்..."

"அதுதான் சேர் உங்களைப்போல நாலு விசயம் தெரிஞ்சவியை நாங்கள் அணுகிறம்... இந்த நேரத்தில எங்களைப்போல இருக்கிறவையை வழிநடத்த வேண்டியது நீங்கள்தான்..."

"வாற முதலாம் திக்தி புத்தகம் வெளியால விடவேணும்... நீங்கள் கெதிப்பண்ணி ஒரு ஆக்கம் தந்தியளெண்டால் சேர்..."

சற்றுநேரம் அவர் தலைகுனிந்திருந்தார்.

"என்னெண்டால் தம்பியவை எங்கட நிலைமையள் உங்களுக்கு விளங்கவேணும்... பகல் முழுக்க 'ஒப்பீஸ்'வேக். பிறகு ரீயூசன் கிளாசுகள்... அதுக்குள்ள கூட்டங்கள்... கலந்துரையாடல்கள்... வெளியீட்டுவிழாக்கள்... சொன்னா நம்பமாட்டியள் தம்பி..."

குரலைத் தாழ்த்திக்கொண்டு தொடர்ந்தார்.

"மனுசி நாலஞ்சு நாளா என்னோட கதைக்கிறதில்லை... ஏனெண்டு தெரியுமே... பிரான்ஸில இருக்கிற பெடியனுக்கும், சுவிஸில இருக்கிற மகளுக்கும் லெட்டர் எழுதச் சொன்னவா... எனக்கு எங்க தம்பி நேரம்... அதுதான் கோபம்..."

சஜீவன் புன்னகைத்தான்.

"நான் இரவு பன்ரெண்டு மணிக்கெண்டாலும் எழுதுவன் தம்பி... உந்த மண்ணெண்ணை விளக்கில எழுதேலாது... பிள்ளையள் படிக்கிறதுக்கு ரெண்டு மணித்தியாலம் பெற்றோல் மாக்ஸ் கொழுத்துறது. அந்த நேரம் நான் வீட்டில நிண்டாலெல்லோ..."

"உங்கட நிலமை விளங்குது சேர்... எண்டாலும் நீங்கள் இந்த மண்ணுக்குச் செய்யிற சேவையா நினைச்சு எங்கட மகசீனுக்கு ஒரு ஆக்கம் தரவேணும்..."

சஜீவன்.

"நான் வேற ஒரு மகசீனுக்கு எழுதின சின்னக்கதை கிடக்குத் தாறன்..." என்று எழும்பி உள்ளே போனார்.

"நீ ஆள் வலும் சுழியன்தான்"

சுகந்தன் சஜீவனுக்கு சங்கேத பாஷையில் கூறினான்.

"இந்தாரும் தம்பி... இது ஒரு அற்புதமான கதை... இரண்டாயிரத்து ஐந்நூறாம் ஆண்டில எங்கட ஈழம் எப்பிடி இருக்குமெண்டு கற்பனை பண்ணிப்பார்த்து அப்பிடியே எழுதியிருக்கிறன். படிச்சுப்பாரும்... புல்லரிக்கும்..."

"சொல்லுறனெண்டு குறை நினைக்காதேங்கோ சேர்... எங்கட சனங்கள் அகதிகளா இருக்க இடமில்லாமல் அலையிறதும், தொழிலில்லாம கஷ்ரப்படுறதும் எண்டு எத்தின அவலங்கள் கண்ணுக்கு முன்னால நடக்க இப்படியான விசயத்தை என்னத்துக்குசேர்... இந்தப் பிரச்சினையில எதையாவது வைச்சு..."

"தம்பி... இப்ப எழுதுற பெடிபெட்டையள் எல்லாம் உதுகளைத்தானே எழுதுதுகள்... உதுக்ளைப் படிச்சுப் படிச்சு புளிச்சுப்போச்சுத் தம்பி..."

"எண்டாலும் எங்கட கண்ணுக்கு முன்னால இந்தப் பிரச்சினையள் தானே நடக்குது... உதுகளை ஆவணப்படுத்துறதும், வெளியுலகுக்குத் தெரியப்படுத்திறதும் எங்கட கடமைதானே சேர்..."

"வெளியுலகுக்குத் தெரியப்படுத்துறதோ? அவங்களுக்கு எத்தின சோலி உதுகளைத்தான் பாக்கப்போறாங்கள்... போம் ஐசே... அப்பிடி இல்லாட்டாலும் பிறகும் எழுதலாம் தானே..."

"அதுக்காண்டி இஞ்ச நடக்கிறதுகளைப் பார்த்துக்கொண்டு சும்மாய் இருக்கிறதே சேர்... இந்த நேரத்தில தானே செய்யவேணும்... சனங்கள் எவ்வளவு அவலப்படுகிறது..."

"சனங்கள் மட்டுமே... நாங்களும்தான் தம்பி... அந்த ஆல மரத்தடிச் சந்தியில பீப்பாய் குண்டு விழுந்ததில எங்கட வீட்டிலையும் நாலு ஓடு சரி... இப்ப மழை காலம். பாரும் தண்ணீர் வடியுது... நாலு விசிற்ரேஸ் வாற இடத்தில இந்த மழைத்தண்ணி அசிங்கம்... ஆனா என்ன செய்யிறது. இந்தக் கஷ்ரத்தையும் அனுபவிக்கவேண்டிக்கிடக்கு..."

சஜீவனும், சுகந்தனும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டார்கள்.

"நான் இப்ப நினைச்சாலும் கொழும்புக்கு மாற்றம் வேண்டிக்கொண்டு போகலாம் தம்பி... ஆனா நான் ஏன் போகேல்லைத் தெரியுமே... இந்த மண்ணைவிட்டு எனக்கு போக மனம் வராது தம்பி..."

"அப்ப சேர் இந்தக் கதையை என்ன செய்வம்..."

"நீங்கள் அனுபவம் இல்லாத பிள்ளையள்... சனங்களின்ர ரசனை உங்களுக்குத்தெரியாது... பேசாமல் உத முதல் வெளியீட்டில விடுங்கோ... அதுக்கு வாற வரவேற்பைப் பாருங்கோவன்..."

"சரி அப்ப வாறம் சேர்..."

சஜீவன் எழ சுகந்தனும் எழுந்தான். கேற் வரை அவர் கொண்டுவந்து விட்டார். சந்திவரை சஜீவனும் சுகந்தனும் பேசிக்கொள்ளவில்லை.

"மச்சான் இவயள் வெறும் கருத்துத் தியாகிகள்... செயல்களில தியாகங்களைச் செய்ய இவயலால ஏலாது... இந்தக் கதையைப் போடுறதைப் பிறகு யோசிப்பம்..."

"அப்ப என்னடா செய்யிறது கதைக்கு..."

"நான் எழுதப்போறன்... ஆர் எழுதினது எண்டதவிட என்ன எழுதுறம் எண்டதுதான் முக்கியம்..."

சஜீவன் இப்போ சைக்கிளை உன்னி மிதித்தான்.

வெளிச்சம்

தை – 1995

மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்



# இப்படியும்...

**வ**யல்களெல்லாம் எரிந்து கிடந்தன. வைரவர் கோயில்வரை தைரியமாய் நடந்துவந்த வேலவருக்கு கால்கள் மெல்ல அச்சம் காட்டின. இராணுவ முகாமின் தொலைத்தொடர்புக் கோபுரம் தெளிவாகத்தெரிந்தது.

இடுப்பில் கிடந்த துவாயை இலுப்பை மரத்தின்கீழ் விரித்துவிட்டு அதில் அமர்ந்தார். சிலுசிலுவென்று காற்று அவரை ஆனந்தத்தோடு தழுவியது!

திரும்பிப்பார்த்தார். தூரத்தே வயல் காணிக்குள் கார்த்திகேசரின் கல்வீடு கம்பீரமாய் நின்றது!

“என்னெண்டுதான் இந்தச் சனங்கள் வீடுவாசலை மறந்து போச்சுதுகளோ...?” வயிறு பற்றி எரிந்தது!

‘இரவிரவா மனிசரைக் கிடக்கவிடாமல் குண்டுபோட்டா... சனம் எழும்பி ஓடாம என்ன

செய்யிறது...' தன்னைத்தானே தேற்றிக்கொள்ள முயற்சித்தார்.

எலும்பும் தோலுமாய்... நாயொன்று ஆடி ஆடி வந்து வைரவர் கோயில் கொட்டிலில் சுருண்டு கிடந்தது!

'தைப்பூசம்... சித்திராப்பறுவம்... வைகாசி விசாகம்... எண்டு இந்தக் கோயிலிலை எத்தினை விசேஷம் நடக்கும்... இப்ப...'

நீளமான பெருமூச்சொன்றுதான் அவரிடமிருந்து வெளிப்பட்டது.

ஒவ்வொரு விசேஷத்துக்கும் கூடும் சனக்கூட்டத்தை நினைத்துப்பார்த்தது அவர் மனம். 'அந்தக்காலம் இனி எப்ப வரும்...?' என்ற ஏக்கம் நெஞ்சில் படர்ந்தது.

அண்ணார்ந்து பார்த்தார். வைரவர் கோயில் கொட்டிலின் ஓடுகள் சில நொருங்கிவிட வெறும் சிலாகைகள் தெரிந்தன!

இலுப்பைமரம் கிளைகளை அசைத்து அசைத்து அவருக்கு சாமரை வீசிற்று. ஓர் அரசகுமாரனைப்போல அவர் ஒருகணம் பெருமிதம் கொண்டார்!

சோளகம் தொடங்கிவிட்டால் வயல் வெளிக்குள் பெரிசு சிறிசு வேறுபாடின்றி பட்டமேற்றுவார்கள்.... இப்போது வயல்வெளியின் வான்பரப்பு வெறிச்சோடி அவர் மனதில் வேதனையைப் பிறப்பித்தது!

இரண்டு மாதங்களுக்கு முன்னால்... மாட்டுக்குப் புல்லுச்செருக்க வந்த கணபதி சற்றுத் தள்ளித்தான் சடலமாக எடுக்கப்பட்டான்... நண்டும் குஞ்சுமாய் இழுபடும் கணபதியின் மனைவிக்காக அவர் இரங்கினார்! கணபதிக்கு வெடி பிடித்ததைக் கேள்விப்பட்டு வேலவரின் மூத்தவள் ஓடோடி வந்தாள்.

"அப்பு... வெளிக்கிட்டு வாணை... வீடுபோனாப் போகட்டும்..."

அவர் மறுத்துவிட்டார்!

"உனக்கு ஒருநாளைக்கு கணபதிக்கு நடந்ததுதான் நடக்கும்..."

அவள் கோபத்தோடு போய்விட்டாள்.

இலுப்பை மரத்தில் இப்போது குருவிகள் கீச்சிட்டன. வெள்ளை நிறத்தில் சிறியதாய்... இலுப்பம்பூக்கள் அவர்மேல் விழுந்தன!

அவரின் மனைவி பொன்னு... முன்பெல்லாம் இந்த இலுப்பம் பூக்களைப் பொறுக்கித் துவையலாக்கித் தருவாள்!

மனைவியின் நினைப்பு அவரை ஒருகணம் மௌனமாக்கியது.

'ராசாத்தி குடுத்துவச்சவள்... பூவோடையும் பொட்டோடையும் போட்டாள்' மனது மனைவியை வாழ்த்தியது!

சூரியன் அவரின் தலைக்குப் பின்னால் தகதகத்துக்கொண்டிருந்தது! காற்று மூசிமூசி வெறித்தனமாய் வீசியது!

தூரத்தே... வயல் வரம்பில்... வரிசையாய் உருவங்கள்... அவர் சடாரென்று நிலத்தில் கிடந்த துவாயை எடுத்துக்கொண்டு கொட்டிலுக்குள் மறைந்தார்.

மறைந்துகொண்டவர் அந்த உருவங்களை உற்றப்பார்த்தார். 'எங்கட பிள்ளையள்தான்...'

எல்லோரும் முதுகில் பொதிகளுடன்... விதம் விதமான துப்பாக்கிகளுடன்... ஒன்று இரண்டு பேர் மட்டும் நீளமான குழாய்களை தோளில் சுமந்து சென்றார்கள். 'உந்த காம்புக்கு(CAMP)சாத்துப்படி விழப்போகுது...!' தன்னளவில் ஊகித்துக்கொண்டார்.

நெஞ்சுக்கூடு லேசாய் நடுங்கியது... 'ஒருநாளைக்கு கணபதிக்கு நடந்ததுதான் உனக்கும் நடக்கும்...' மூத்தவளின் எச்சரிப்பு குமிழிட்டது. 'இனி இஞ்சை இருக்கிறது வில்லங்கம்... மண்ணைத்தட்டி விட்டு எழுந்தார்.

தெரு பரபரப்பாக இருந்தது. மூத்தவன் கடைக்குட்டியை சைக்கிளில் வைத்து உருட்டியபடி வேலவர் தெருவைக் கடக்க எத்தனித்தார்.

"அப்பு... என்ன இஞ்ச நிக்கிறாய்...?"

சோதி கலகலத்தான்.

வளவளப்பான முகத்துடன் கொஞ்சம் சதை வைத்த உடம்புடன்... அவனை அடையாளம் கண்டுகொள்ள சில வினாடிகள் எடுத்தன வேலவருக்கு...!

"எட சோதி... ஆளை அடையாளம் தெரியேல்லை... எப்படி உன்ரை

பாடுகள்... மனுசி... பிள்ளை குட்டியள்... எங்கை...!"

"எல்லாரும் சின்னம்மா வீட்டிலை இருக்கினம்... அது சரியணை அப்பு... எப்ப இஞ்சாலை வந்தனி..."

"முந்தநாள் பொழுதுபட..."

"ஏனணை அங்காலை ஏதும் சிக்கலோ...!"

"முந்தநாள் பின்னேரம்... எங்கடை வைரவரடியிலை போய் சும்மா படுத்திருந்தன். ஒரு எழுபத்தைஞ்சு பெடியள்காணும் எல்லாரும் ஆமான துவக்குகளோட... பைப்புகள்... மம்பெட்டிகளும் கொண்டு...!"

"எங்கை போனவை...?"

"கார்த்திகேசற்றை கல்வீட்டுக்கை போறாங்கள். ஆமிக்குச் சாத்தப்போறாங்கள் போல... நடுச்சாமத்தில ஒண்டெண்டா வரேலாது... நான் நேரத்தோட வந்திட்டன்"

சோதி கீழ்த்தாடையைத் தடவிக்கொண்டு தலையாட்டினான்.

"நானும் கனநாளா ஊர்ப்பக்கம் போகேல்லை. போனா தேங்காய் கீங்காய் ஏதும் விழுந்தால் எடுத்தரலாம் தான்..."

"கணபதி புல்லுக்குப்போய் நடந்தது தெரியுமே... பேசாமல் உங்கினைசந்தையிலை பாத்து வாங்கு... அங்கை என்னத்துக்கு...!"

"வேண்டுறதுக்கு காசும் எல்லோணை வேணும்...!"

"ஏனடா... தொழில்துறை ஒண்டுக்கும் நீ போறல்லையே...!"

"கொஞ்சநாள் விறகு கட்டினன் சரிவரேல்லை... கொஞ்சநாள் கிளாலிச் சனத்தை ஏத்தி இறக்கினன்... அதுவும் சரிவரல்லை...!"

"அப்ப... இப்ப என்னடாமோனை செய்யிறாய்...?"

"உயிரைப் பார்க்காமல் வன்னியிலபோய் சாமான் கொண்டுவாறனான்... அதுவும் கையும் கணக்கும் சரியாய் போகுது..."

"எப்படி இருந்தனாங்கள்... இப்ப இப்படியெல்லாம் இழுபடுறம்...

இதுகளுக்கு ஒரு முடிவு வராமலே விடப்போகுது...!'' வேலவர் நெடுமூச்செறிந்தார்...

''நேரம் போகுது... ஆறுதலாய் வாறன் அப்பு... வரட்டே...''

சோதி விடைபெற்றுப்போக... பேரப்பிள்ளையை பாடசாலையில் இறக்கிவிட்டு வேலவர் வீடுவந்தார்.

''ஏனணை அப்பு இவ்வளவு நேரமும் சென்றது...? நான் பயந்து போனன்...''

மூத்தவள் வேலவரைக் கேட்டாள்.

''எங்கடை சோதியை தெருவிலை கண்டனான் மோனை... கதைச்சாப்போல மினக்கட்டுப்போனன்...''

''என்னவாம்...?''

''வேற என்ன... சீவியப்பாட்டை நினைச்சு மனவருத்தப்பட்டுப்போறான்... பாவம்...''

''வவுனியாவில போய் நல்லா சாமான் கட்டியந்து விக்கிறவன்... சும்மா உனக்கு முன்னாலை அழுகிறான்... நம்பிறியே...!''

மகளின் கூற்றைத்தான் அவரால் நம்பமுடியவில்லை. அவளுக்கு எதுவித பதிலும் கூறாது மௌனமாகிப்போனார்.

தெருச்சந்தியில் வாழைகளும், தோரணங்களும், கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. வீதிகளில் சன நடமாட்டமும் குறைந்திருந்தது. ஓரமாக... கூடாரமொன்றில் நான்கைந்து போராளிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. மலர்கள் தூவப்பட்டிருந்தன.

சில பாடசாலைச் சிறுவர்கள் அந்தப் போராளிகளின் படங்களைப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

சைக்கிளை வேலியோரமாக வெயில் பிடிக்காது விட்டுப் பூட்டிவிட்டு அந்தக் கூடாரத்தின் அருகே போனார் வேலவர்!

"பிள்ளையள் எந்தச் சண்டையில இவையள் செத்தவையாம்"

அந்தச் இரு சிறுவர்களையும் பார்த்து துயரம் பொங்கக் கேட்டார் அவர்.

"சண்டையிலை சாகேல்லை அப்பு செல் அடிச்சுத்தான் செத்தவையள்..."

துடிதுடிப்பான சிறுவன் சொன்னான்.

"பிளேனுகள் ஒண்டும் இப்ப பறக்கிறேல்லையே..."

"பிளேன் அடிக்கேலையணை... காம்பில இருந்து மோட்டர் அடிச்சுத்தான் இந்த அண்ணாக்கள் செத்தவை..."

"மோட்டரோ... எப்ப அடிச்சவன்..."

"நேற்றுக்காலமை இடைக்காட்டிலை அடிச்சதல்லே..."

சிறுவனின் கேள்வி கூர்முள்ளாய் நெஞ்சுக்குள் குத்தியது.

கொண்டுவந்த காசுக்கு மீன் வாங்கிக்கொண்டு புறப்பட்டார். நெஞ்சுக்குள் ஏதோ கனப்பது போன்று இருந்தது...

முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு திண்ணையில் அமர்ந்துகொண்டார். உடல் வியர்த்துக் கொட்டியது.

"அப்பு விசயம் கேள்விப்பட்டனியே..."

"என்ன மோனை..."

"எங்கடை காத்திகேசற்றை கல்வீட்டுக்கெல்லே நேற்று செல் அடிச்சவங்களாம். ஆறு பெடியள் செத்ததுகளாம்..."

"......"

"ஆரோ... காசுக்கு ஆசைப்பட்டு பெடியளைக் காட்டிக் குடுத்திட்டாங்கள்..."

மூத்தவளின் அந்த வார்த்தை மீண்டும் அவரைத் தைத்தது!

"உவன் சோதியன்..."

"ஓ... சோதியன்... சோதிக்கென்ன..."

அவர் குரல் நடுங்கியது.

"சோதியனை பெடியள் பொயின்ரிலை பிடிச்சிருக்கிறாங்களாம்... என்ன நாசமோ தெரியேல்லை..."

சொல்லியபடி மூத்தவள் பையிலிருந்து மீனை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

சோதியின் சதை பிடித்த வளவளப்பான முகமும் செல் தாக்குதலில் சிதைந்த போராளிகளின் முகங்களும் மாறி மாறி அவர் மனக்கண்ணில் தோன்றின! முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு, போராளிகளின் சாவுக்காக அவர் குமுறிக் குமுறி அழுதார்.

வெளிச்சம்
ஆடி – ஆவணி 1995

ஆதிலட்சுமி சிவகுமார்

# ஏழுகை

ஜாம் போத்தல் விளக்கு மெல்லிய ஒளி சிந்தியவாறு தொங்கிக்கொண்டிருந்தது. வந்து குவிந்திருந்த குழுவினர்களில் எஞ்சியிருந்த தவராசா குடும்பமும் இன்றுமாலை புறப்பட்டுவிட்டது!

வீட்டில் பயங்கரமான அமைதி. வழமையாக நித்திரையாகும் வரை சுருட்டுப்பிடிக்கும் வைத்தியலிங்கம் கூட ஆட்ட அசைவுகள் ஏதுமின்றிச் சவம்போலக் கட்டிலில் கிடந்தார்... அவரின் உயிர்த்துடிப்பை உறுதி செய்வதுபோல வயிறு மட்டும் சீராக ஏறி இறங்கிக்கொண்டிருந்தது. கட்டிலுக்குக் கீழ் வெற்றிலைத் தட்டமும் தண்ணீர்ச் செம்பும் கிடந்தது. இப்போதெல்லாம்... ஆக்களைக் கண்டவுடன் அடித்து விழுந்து குழறவோ... ஒப்புவமை சொல்லி அழவோ கமலத்துக்கு சக்தியில்லை!

யாராவது வந்தால் கதைகதையாக ஈசனைப்பற்றிச் சொல்லிக் கண்ணீரை மட்டும் பெருக்குவாள். வருபவர்கள் சுவார்சியத்தோடு கேட்டுவிட்டு, தட்டத்திலிருக்கும் வெற்றிலை

பாக்கைச் சப்பி... முற்றத்திலேயே துப்பிவிட்டு... செம்புத் தண்ணீரில் வாயும் கொப்பளித்து விட்டுப்போவார்கள்! அதிலே அவளுக்கு ஓர் ஆறுதல்! மனைவி அழுவது வைத்திலிங்கத்துக்கு துயரமாக இருக்கும். ஆனால் அவளை "அழாதே..." என்று அவர் தடுக்க முற்பட்டதில்லை!

அவள் அழும்போது அவர் உள்ளே துடிப்பார். ஈசனை நெஞ்சிலும் தோளிலும் சுமந்த நாட்கள் உள்ளத்துக்குள்ளே உயிர்க்கும். ஆனால் அழமாட்டார்.

ஈசனின் செத்தவீட்டிற்கு கட்டிய தோரணங்கள் வேலிக்கரையில் காய்ந்த வெறும் சருகாகிக் கிடந்தன.

கட்டிலில் கிடந்தபடியே கண்களைத் திறந்து பார்த்தார்! சுவரில் ஈசனின் முழு உருவப்படம். முகத்தில் அதே குறும்புச் சிரிப்பு! சிறுவயதில் ஏதாவது குளப்படி செய்துவிட்டு... மாட்டுப்பட்டால் இப்படித்தான் சிரிப்பான்! அவனுடைய சிரிப்பைப் பார்த்தால் அடிக்கவே மனம் வராது.

'ஈசனை நீங்கள்தான் பழுதாக்கிறியள்... அவனைக் கண்டிக்கிறியளில்லை...' இப்படி கமலம் அவரைக் குற்றம் சாட்டுகின்ற வேளைகளில் அவர் பெரிதாகச் சிரிப்பார்!

"பிள்ளையள் எண்டால் சுறுசுறுப்பாக இருக்கவேணும்... அதுகளின்ரை சுறுசுறுப்பை குழப்படி எண்டு நினைச்சு நாங்கள் தண்டிச்சமெண்டால் அதுகளின்ரை திறமைகள்... ஆர்வங்களெல்லாம் அழிஞ்சிடும் கமலம்" என்றுசொல்லுவார்!

அவர் பதிலில் அவள் திருப்திப்படாவிட்டாலும்... பேசாமல் போவாள்...

அயல் சிறுவர்களோடு ஒப்பிடுகையில் ஈசன் விவேகமானவனாக இருந்தான். எந்த விடயத்தையும் நோண்டி நோண்டி அதன் ஆழ அகலங்களை அறிவதில் ஆர்வம் காட்டினான்!

'ஈசன்ர அப்பா...' சுட்டுவிரலால் அவரைக் காட்டினார்கள். அவ்வேளைகளில் பெற்றவளைவிட அவர்தான் பேருவகை கொண்டார்!

காலம் காற்றாக விரைந்தது!

ஒருநாள், இருள் முற்றாகப் பிரியாத பொழுதொன்றில்... கிளாலிக்கடலில் சடலங்கள் மிதந்தவந்து கரை ஒதுங்கின! தேசம் முழுவதையும் உலுப்பிய அந்தச் சம்பவம் அவனையும் உலுப்பியது! அவனுடைய விஞ்ஞான ஆசிரியர் நடேசானந்தாவின் உப்பிய உடலும் வந்தது!

மனிதர்கள்

——ஆதிலட்சுமி சிவகுமார்

கல்வி நிலையத்தில் நடேசானந்தனின் ஊதிப்பருத்த உடலுக்கு மாணவர்கள் திரண்டு அஞ்சலித்தார்கள்! வயிற்றில் வெட்டுக்காயம் இருந்தது!

ஈசனும் ஓடிஓடி அன்று முழுவதும் பாடுபட்டான். மறுநாள் அவனின் செல்லும் திசை வேறானது! கமலம் குத்தி முறிந்தாள்!

'எல்லாம் உங்களாலை' அடித்து விழுந்து புரண்டாள்! இப்போது போல அப்பபோதும் அவர் இருந்தார்!

மூன்று மாதங்களின் பின் அஜானுபாகுவாய் வந்தான் ஈசன். உடல் உறுதிப்பட்டிருந்தாலும்... முகத்தில் அதே குறும்பு ஒட்டியிருந்தது! அன்று என்ன தோற்றத்தில் வந்தானோ.... அதே தோற்றத்தில் இன்று சுவரில் திருவுருவப்படமாய்...

அவனின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டவர்கள் அவனைப்பற்றிக் கதைகதையாய்ச் சொன்னார்கள்! விதை குழியில் அவனை இறக்கி... மண்போடும்படி சொன்னபோது கூட அவர் கண்ணீர் சிந்தவில்லை! உள்ளே ஏதோ ஒன்று திரண்டு வந்து தொண்டைக் குழிக்குள் உடைந்தபோதும் அவர் அழவில்லை.! இறுகிப்போய் நின்றார்.

இப்போது; அவன் படத்தைப் பார்க்கும்போது... இமை மடல்கள் ஈரலித்தன! சால்வைத்துண்டால் ஒற்றிக்கொண்டார்! கமலம் நிலத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்! கிழித்துப்போட்ட நாராய்க்கிடக்கும் அவளின் தோற்றம் நெஞ்சை உலுக்கியது! அவளை மடியில் வைத்து... சிறு குழந்தையைப்போல் முதுகை வருடி... ஆறுதல் சொல்லவேண்டும் போலிருந்தது.

அவளுடனும்... அவருடனும் சந்ததி முற்றுப்பெற்றுவிடும்... சின்னப்புவுக்கும் பாக்கியத்துக்கும் அவர் ஒரே பிள்ளை. அவர்களின் வம்சத்தை அவர் துலங்கவைத்தார்! அவருக்கும் கமலத்துக்கும் ஈசன் ஒரே மகன். ஆனால்... அவருடைய வம்சம் இவ்வளவோடு வளர்ச்சியை நிறுத்திவிட்டது!

ஈசன் இறந்துவிட்டானே என்ற கவலையைவிட... தன் வம்சவிருத்தி நின்றுவிட்டதே என்ற ஆதங்கம்... இந்தக்கணம் அவருள் நுழைந்து, குடைந்தது!

"என்ர ஐயோ... என்ர குஞ்சு..." தூக்கத்தில் பிதற்றியபடி கமலம் புரண்டு நிமிர்ந்து சரிந்து மீண்டும் தூங்கினாள்! சால்வையை எடுத்து கழுத்து வியர்வையைத் துடைத்தார்!

நீண்ட நேரத்துக்குப்பிறகு மெதுவாக கண்கள் அயரத் தொடங்கியபோது... படலைக்குள் பேச்சுக்குரல் கேட்க காதுகளைக் கூர்மைப்படுத்தி அவதானித்தார்! எழுந்து முற்றத்துக்கு வந்தார். நடந்து படலையடிக்கு வந்து... "ஆரது..." குரலை உயர்த்திக் கேட்டார்!

"ஐயா... ஈசன்ர வீடு இதோ..."

"ஓம் தம்பி... அவர்..."

"தெரியும் ஐயா. அண்டைக்கு நாங்கள் வரேலாமல் போட்டுது அதுதான்..."

"ஆ... உள்ளுக்குள்ளை வாங்கோ தம்பி. சயிக்கிளையும் கொண்டு வாங்கோ..."

தட்டித்தடவி உள்ளே வந்தார்கள். நிலத்தில் சுருண்டு கிடக்கும் கமலத்தைப்பார்த்துவிட்டு... "இதிலை இருப்பம் ஐயா..." தயங்கி முற்றத்தில் கிடந்த வாங்கில் அமர்ந்தார்கள்!

கமலம் விழித்துவிட்டாள். கண்களைக் கசக்கிக் கசக்கி வந்தவர்களைப் பார்த்தாள்!

"கமலம்... இது தம்பியின்ர சினேகிதப் பிள்ளையள்... வந்திருக்கினம்..."

என்றார். கமலம் அரக்கி அவர்களின் காலடியில் இருந்து அழத் தொடங்கினாள்! இரண்டு இளைஞர்களும் தலை கவிழ்ந்திருந்தார்கள்! கமலம் அழுது ஓய அவர்கள் இருளை ஊடுருவி கண்களைத் துளாவிப் பார்த்தார்கள்.

"தம்பியவைக்கு தேத்தண்ணி போடு கமலம்..."

"வேண்டாமையா... நாங்கள் பேசில குடிச்சிட்டுத்தான் வாறம்..."

"இல்லைத்தம்பி... சுடுதண்ணி போத்திலுக்கை கிடக்குது..."

எழும்பி தள்ளாடியபடியே போனாள் கமலம்! குசினிக்குள் விளக்கு எரிந்தது!

"நல்ல துடிதுடிப்பான பிள்ளை... நிறையச் சாதிப்பானெண்டு நினைச்சம்... இப்பிடி நடக்குமெண்டு நினைக்கேல்லை..."

கனத்துத்தொங்கிய மௌனத்தை வைத்தியலிங்கம் உடைத்தார்!

"காயம் பெரிசில்லை... ஆனா இரத்தம் நல்லா போட்டுது... அதுதான்..." ஒருவன்.

"காயப்பட்டு விழுந்தவனிட்ட இருந்து றைபிளை எடுக்கேலாமல் போட்டுது... கடைசி நிமிசம் வரையும் இறுக்கிப்பிடிச்சிருந்தான்..."

இது மற்றவன்!

கமலம் தேத்தண்ணி கொண்டுவந்தாள். தேத்தண்ணியையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவள் முழங்கால்களில் தலையை வைத்து சுவரோடு சாய்ந்திருந்தாள். அவள் கண்களில் இப்போது கண்ணீர்! ஒருவன் எழுந்துபோய் ஈசனின் படத்துக்கு முன்னால் நின்றுபார்த்தான்.

"வேறை பிள்ளையள் இல்லையோ ஐயா..."

"இவர் ஒருவர்தான் தம்பி. அதுதான் இவளாலை தாங்கேலாமல் கிடக்கு..."

"நீங்கள் என்ன தொழில் ஐயா செய்யிறனீங்கள்"

"பலசரக்குக்கடை வைச்சிருக்கிறன்... அந்தக்கடைக்கும் அவன்ர பேர்தான் வைச்சது. ஈசன் ஸ்ரோர்ஸ் எண்டு..."

கமலம் நிலத்தில் சரிந்தாள்.

"சரி ஐயா... வரப்போறம்... போவமே..."

என்றான் மற்றவனிடம். அவன் இறங்கி முற்றத்துக்கு வந்து... நெஞ்சில் கட்டியிருந்த கோல்சரைச் சரிசெய்தான்.

"தம்பி நேரம் கிடைக்கிற நேரங்களில வந்து போங்கோ... எங்களுக்கும் ஆறுதலாய் இருக்கும்"

"ஓமய்யா... அம்மா... போட்டுவாறம்..."

சயிக்கிளை உருட்டி கேற்வரை நடந்தார்கள்.

“தம்பி பேரைச் சொல்லாமல் போறியள்... தெரிஞ்சால் நல்லது...”

மெதுவாய் கேட்டார்.

“என்ரை பேர் நிகிலஸ்... இவன் ஈசன்”

முன்னால் நின்றவனின் பிடரியைத் தொட்டுக் காட்டினான்.

“ஈசனோ...” வியப்போடு கேட்டார்!

“ஓமய்யா... ஈசன் வீரச்சாவடைஞ்ச அண்டுதான் இவன் எங்கட பேசுக்கு வந்தவன்... அதாலை இவனை ஈசனெண்டு சொல்லுறனாங்கள்...”

அவரால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை!

“ஐயா... போட்டுவாறமய்யா...”

ஒழுங்கைக்குள் கிடந்த கற்களையெல்லாம் நெரித்துக்கொண்டு அவர்களின் சயிக்கிள் விரைந்தது. கேற்றை இழுத்துப் பூட்டிவிட்டு... உள்ளே திரும்பினார். கட்டிலில் வந்து அமர்ந்தார்.

“என்ரை வம்சம் குறையா நிண்டுட்டுதெண்டு கவலைப்பட்டன்... என்ரை வம்சம் அழியேல்லை...” தனக்குத் தானே சொல்லிக்கொண்டு நிம்மதியாய் கட்டிலில் சரிந்தார். கண்களை உறக்கம் தழுவ... தூரத்தே சேவல் ஒன்று கூவியது!

வெளிச்சம்

கார்த்திகை 1995

# இப்போது அது வெறும் சடம்

பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. மேகத்தின் உச்சியில் பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்துகொண்டிருந்தன... அவற்றுக்கும் அவசரம்போலும்!

ஒழுங்கையில் சன நடமாட்டம் குறைந்துவிட்டது. எப்போதாவது ஒன்றிரண்டு சயிக்கிள்கள்... அவைகூட பயம் கலந்த அவசரத்துடன்தான் போவதாகத் தெரிந்தன...

பாக்கியம் முழங்கால்களைக் கட்டிப்பிடித்தபடி வீட்டின் வாசலில் குந்திக்கொண்டிருந்தாள்.

'அவர்களின்' உத்தரவின்பேரில் வேலி ஓரத்துக் குறோட்டன் செடிகள் எல்லாம் பிடுங்கி எறியப்பட்டு... வீட்டிலிருந்து பார்க்க ஒழுங்கை நீளமாகத் தெரிந்தது.

ஒழுங்கையில் ஒரு சயிக்கிள் மிதந்தது. அரைக் கால்ச்சட்டையுடன் பதினைந்து பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு பெடியன் சயிக்கிள்

கடகடக்க ஓடி மறைந்தான். அசப்பில் பார்த்தால்... மயூரனின் சாயல்.

மயூரன்!

நினைத்தவுடன் நெஞ்சத்தைக் கசைக்கிப் பிழிந்தது பாச உணர்வு; கண்கள் எப்போதும் போல வழிந்தன.

தலைப்புச் சீலையால் துடைக்கத்துடைக்க கண்ணீர் வழிந்தது.

மயூரன் – அவளுக்கு ஒரே மகன்.

இரண்டு பெண்களுக்கு நடுவே ஆசையாய் பெற்றெடுத்த பிள்ளை. நல்ல சிவப்பாய், நல்ல உயரமாய் இருப்பான் அப்பாவைப்போல. நன்றாகத்தான் படித்தான். ஓலெவலிலும் நியாயமான பலரால் பாராட்டப்பட்ட 'றிசேல்ட்' எடுத்திருந்தான்.

அதற்குள் 'சூரியக்கதிர்' விரட்டத்தொடங்கியது.

சாவகச்சேரி வந்து – அங்கிருந்தும் வெளிக்கிட்டு வள்ளமேறி வன்னிக்கு வந்தபோது உயிர் தப்பியது நிம்மதியாக இருந்தது பாக்கியத்துக்கு.

பலத்த துன்பங்களுடன் ஓராண்டு கழிந்தது.

ஊரிலிருந்து கடிதத்துக்குமேல் கடிதம் வந்தது. கடைசியாக ஆட்கள் இல்லாத வீடுகளை குண்டுவைக்கிறாங்கள் என்று கடிதம் வந்தது. கடிதத்தைப் படித்த நேரம் முதல் மனது பதறித்துடித்தது.

குளிக்க மனம் வரவில்லை. சமைக்க மனம் வரவில்லை. சாப்பிட மனம் வரவில்லை. பைத்தியம் பிடித்து விட்டவள்போலிருந்தாள்.

'உங்கையிருக்கிற சனமெல்லாம் வீடுவாசல்களை விட்டுட்டுத்தானே வந்திருக்குதுகள்..."

மூத்தவள் எரிச்சலோடு சொன்னாள்.

"வீடு வாசலுக்காகப் போய் அநியாயமாச் சாகிறதே..."

சின்னவள் மயூரியும் மூத்தவளை ஆதரித்துத்தான் சொன்னாள்.

"எட தம்பி... சித்தியவையளின்ரை கடிதத்தைப் படிச்சுப்பார்..."

கடிதத்தை மயூரனிடம் கொடுத்தாள் ஆதரவுதேடி.

அவன் கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அவளிடமே திருப்பி நீட்டினான்.

அவளுக்கு ஏமாற்றமாயிருந்தது. அதைப் பொருட்படுத்திக்கொள்ளாத பாவனையோடு,

"என்னடா தம்பி செய்வம்...? வீடுகளை உடைக்கிறாங்களாம்..."

மகனிடம் கேட்டாள் என்பதைவிட இரந்தாள்.

"என்னெண்டாலும் செய்யுங்கோ...?"

அவளுக்குத் தலை சுழல்வது போன்றிருந்தது. 'ஓ'வென்று பெருஞ் சத்தமிட்டு அழவேண்டும் போலிருந்தது.

பிள்ளைகள் யாரும் தன் மனதைப் புரிந்துகொள்ளவில்லையே என்கிற ஆதங்கத்தோடு அவளின் பொழுதுகள் கரைந்தன.

பத்து வருடங்களாய்... எல்லாச் சுகபோகங்களையும் துறந்து ஐரோப்பிய நாட்டுக் குளிரில் விறைத்து விறைத்து உழைத்து - புருசன் அனுப்பிய காசில் கட்டிய வீடு.

" இந்த வீடு வேண்டுமென்பதற்காக நான் எவ்வளவு சுகத்தை எவ்வளவு அன்பான அருகாமையை இழந்தன் எண்டு இதுகளுக்குத் தெரியுமே"

குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"என்ர வீடு அழிஞ்சு வெறும் கல்லாயும்... மண்ணாயும் போறதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டன்..."

அவளின் பார்வையே பைத்தியம் பிடித்ததுமாதிரி இருந்தது.

"அம்மா..."

அழுது சிவந்த கண்களைத் திறந்து நிமிர்ந்து பார்த்தாள். மூத்தவள் மைதிலி!

“அம்மா நான்... தம்பியையும் தங்கச்சியையும் பார்த்துக்கொள்ளுறன். நீங்கள் ஊருக்குப்போய் ஆரையும் பிடிச்சு வீட்டிலை இருத்திப்போட்டு சாமானுகள் விக்கக்கூடியதையும் வித்துப்போட்டு வாருங்கோ...”

மகளைக் கட்டி அணைத்துக் கண்ணீராய் உகுத்தாள் பாக்கியம். உச்சி குளிர்ந்தது.

கப்பலேறினாள்... கனவுகள் விரிந்தன.

வீட்டுவாசலில் வந்திறங்கியபோது கண்ணீர் சுரந்தது. அக்கம் பக்கம் ஓடி வந்து குசலம் விசாரித்தது... குதூகலித்தது. பிள்ளைகளை விசாரித்தார்கள்.

“கூட்டி வந்திருக்கலாம் பிரச்சினை இல்லை...” என்றார்கள்.

பிரிந்து தவித்த உறவுகளைப்பார்த்துப் புல்லரித்தது அவளுக்கு.

வளவைச் சுற்றிப்பார்த்தாள். இரவல் வீடுகளில் இருந்து பட்டகாயங்கள் மறந்தன.

தென்னை மரங்கள் வயதாகி – பழுத்துத் தெரிந்தன!

குப்பையும் கூழமும் இறைந்து வளவு பாழடைந்து கிடந்தது. வந்த களைகூட அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. கூலிக்கு ஆள் பிடித்து வளவைத் துப்பரவாக்க ஆரம்பித்தாள்.

கிணற்றடி வாழைகள் பொத்திதள்ளியபடி பரிதாபகரமாகக் காய்ந்து கிடந்தன. சில குட்டிகளைப் பெருக்கி நின்றன.

‘அவர்கள்’ இடையிடையே வந்தார்கள். வீட்டை எட்டிப்பார்த்து அவளையும் ஏதேதோ கேட்டார்கள். சிலர் சிநேகமாகச் சிரிப்பதாகவும் – சிலர் கடுகடுப்பாய் முறைப்பதாகவும் – இன்னுஞ் சிலர் ஏளனமாய்ப் பார்ப்பதாகவும் அவள் உணர்ந்து கொள்வாள்.

வேலி ஓரத்து மரங்களை வெட்டும்படியும் – அதற்குள் ஒளிந்து நின்று புலிகள் தம்மைத் தாக்கிவிடுவார்கள் என்றும் அவர்களில் ஒருவன் கட்டளையிட்டான்.

மரங்களை வெட்டி வேலியை வெளியாக்கினாள்.

கிணற்றை இறைப்பித்தாள். வீட்டை இரு பையன்களைப் பிடித்து

தேய்த்துக் கழுவுவித்தாள். எல்லா வேலைகளும் நிறைவுறும் தருவாயில் தான் மூத்தவள் மைதிலியின் கடிதம் வந்தது. மகளிடமிருந்து வரும் முதல் கடிதம். ஆவலோடு பிரித்தவள்,

“ஐயோ என்ர ராசா...”

என்று கத்தினாள். அக்கம் பக்கத்து உறவுகள் கூடின.

“அழாதை பாக்கியம்... உன்ர பெடியன் சொகுசா வளர்ந்தவன்... அவங்களோடை நிண்டுபிடிக்க மாட்டான்... வந்திடுவான்...”

ஆறுதல் வார்த்தைகள் அவளை வருடின.

கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டாள்.

ஏராளமான வீடுகள் ஆட்களின்றி இருப்பதால் வீட்டில் ஆட்களை இருத்துவதென்பது சிரமமாகப்பட்டது.

இப்போது நன்றாக இருட்டிவிட்டது.

“அம்மா... உள்ள வாங்கோ...”

என்று அன்போடு அதட்டி அழைக்க அருகில் மூத்தவளில்லை.

ஓடிவந்து மடியில் தலையை வைத்துக்கொண்டு நட்சத்திரங்களை எண்ணிப்பார்க்க சின்னவள் மயூரி இல்லை.

‘கூட்’ வாசலில் சயிக்கிளைக் கழற்றிக் கொட்டித் திருத்த மயூரன் இல்லை. வெறுமையும் தனிமையும் மொய்த்தன.

கண்ணீர் காய கதவடியில் அமர்ந்திருந்தாள்.

இருளை உற்றுப்பார்த்தாள். பூதாகாரமாய் உருவங்கள் தோன்றுமாற்போல அச்சம் எழுந்தது.

எழுந்து உள்ளே வந்து கதவுகளை இறுக்கிப்பூட்டினாள்.

இனி காலை விடிந்தபிறகுதான் கதவுகள் திறக்கும் என்னுமாப்போல் அறைந்து பூட்டினாள்.

`மனிதர்கள்

———ஆதிலட்சுமி சிவகுமார்

சுவர் ஓரமாகப் பாயை இழுத்துப்போட்டு விரித்தாள். தூக்கம் வர மறுத்தது. சுவரோடு சாய்ந்து அமர்ந்தாள். நினைவுகள் பிள்ளைகளையே சுற்றிச்சுற்றி வட்டமிட்டன.

'தனியாக இருக்கும் பெண் பிள்ளைகளிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை.' என்கின்ற நினைப்பு ஏக்கமாய் அழுத்துவது போலிருந்தது. கதவுகள் ஜன்னல்கள் எல்லாம் அழுத்தி மூடப்பட்டதால் சுவாசிப்பதற்கான காற்றின்றி மூச்சுத் திணறுவது போலிருந்தது.

வாசலில் கிடந்த நாய் எதையோ கண்டு மிரளும் பாவனையில் உறுமுவது தெளிவாக அவள் செவிகளில் விழுந்தது.

இதயத்துடிப்புகள் பலமாக அவளுக்குக் கேட்டன. வௌவால்கள் கூரையில் கிறீச்சிடுவது அவலமாய்ப்பட்டது. அறைக்குள் 'தொப்'பென்று ஏதோகுதிக்கும் சத்தம், அவள் கத்துவதற்கு வாயெடுக்கும் முன் 'மியாவ்' என்ற சத்தம் அமைதியாகிறது.


கணவனின் அன்பான வார்த்தைகளுக்காக... பிள்ளைகளின் பாசத்துக்காக மனம் ஏக்கமுற்றது.

சுவர் மூலைக்குள் மெல்ல மினுங்கிக்கொண்டிருந்த அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் வீட்டை உற்றுப்பார்த்தாள்.

அவளின் பத்துவருட சந்தோஷங்களையும்... அவளின் புருஷனுடைய உடல் உழைப்பையும்... பிள்ளைகள் மீதான அவள் பாசத்தையும் பறித்தெடுத்த அந்த வீடு இருளில் வெறும் சடமாய் நின்றுகொண்டிருந்தது.

வெளிச்சம்

மார்கழி 1998 தை 1999



# இலவம் பஞ்சுகள்

இரண்டு நாட்களுக்குப் பிறகு மழை வெளித்திருந்தது.

பெண் பிள்ளைகள் இருவரும் பள்ளிக்கூடம் போய்விட்டிருந்தார்கள். கந்தசஷ்டி விரத ஆரம்பநாள்.

மூத்தவனை இந்தியன் ஆமி பிடித்துக் கொண்டுபோன வருஷத்திலிருந்து அவள் இந்த விரதத்தைப் பிடிக்க ஆரம்பித்திருந்தாள்.

பிள்ளைகளுக்குச் சமைத்து வைத்துவிட்டு அவள் முருகன் கோயிலுக்குப் போகவேண்டும். கந்தசஷ்டி கவசப் புத்தகத்தைக் தூசிதட்டி மறக்காமல் நேற்றே எடுத்து வைத்திருந்தாள்.

அந்தப் புத்தகத்தைக் கொண்டுபோய் கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்து இரண்டு மூன்று தடவைகள் படித்துவிட்டு வந்தால்தான் அவள் மனம் பத்தியப்படும்.

சரியாக நாலு மணிக்கு பூசை தொடங்கும்

என்று கோயிலில் அறிவித்தல் எழுதி ஒட்டியிருந்தார்கள்.

பிள்ளைகள் இருவருக்கும் கோயில், விரதம், திருவிழா, என்று அத்த ஈடுபாடு இல்லை. பள்ளிக்கூடத்தால் வந்து சாப்பிட்டுவிட்டு ரீயூசன் வகுப்புகளுக்குப் போய்விடுவார்கள்.

தண்ணிக்குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றடிக்கு வந்தாள். கிணற்றடியில் இரண்டு மூன்று வாழைகள் மதாளித்து பொத்தி தள்ளி நின்றன.

வேலியில் நீளத்துக்கு நாட்டப்பட்டிருந்த பஞ்சு மரங்களும் சடைத்துப் பச்சையாய் நின்றன.

"என்ன மாதிரி காச்சுத் தொங்கின மரங்கள். எல்லாக் காயளும் வெடிச்சு வெடிச்சுப் பறந்திட்டுது..."

குடத்தைக் கழுவி தண்ணீரை நிரப்பினாள். குடம் நிறைந்த மிகுதித் தண்ணீர் வெளியே வழிந்தது.

குனிந்து குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டபோது, தகரப்படலை திறபடும் சத்தம் கேட்டது.

உள்ளே வந்தவனை அவளால் மட்டுக்கட்ட முடியவில்லை.

"ஆர்... குஞ்சனே..."

"ஓமம்மா..."

குடத்தை நிலத்தில் போடாத குறையாக இறக்கி வைத்துவிட்டு ஓடினாள்.

"வாராசா... உன்னைக் காணேல்லை எண்டு நான் என்ன பாடெல்லாம் பட்டன். சண்டையளும் அமளியா நடக்க... பயந்துகொண்டிருக்கிறன்..."

விருந்தாளி போல விறாந்தைத் திண்ணையில் அமர்ந்தவனை,

"ஏன் உதிலை?... உள்ளுக்கு வா...?" என்று இழுத்துப் போனாள்.

"அப்பா வட்டக்கச்சிக்கு மிசின் கொண்டு போனவர். இண்டைக்கு எப்பிடியும் வருவார். தங்கச்சிமார் பள்ளிக்கூடம் போட்டினம்... சோதினை நடக்குது.."

"குடிக்கிற தண்ணி தாங்கோம்மா"

"நல்ல கதை... கோப்பி ஊத்திறன்"

பரபரத்தாள்.

"காலமை என்ன சாப்பிட்டியோ?... இனித்தான் சமைக்கப்போறன். இவ்வளவு நாளும் வராதனி விரத நேரத்தில வந்திருக்கிறாய்..."

சுடச்சுட கோப்பியை அவனிடம் கொடுத்தாள்.

"கெதியில சமைச்சப்போடுவன். இரு... கறி என்ன வாங்குவிக்க...?"

"அவசரப்படாதேங்கோம்மா... ரெண்டு நாள் நிண்டுதான் போவன்..."

"அப்பச் சரி... கொடியிலை அப்பான்ர சறம் கிடக்கு எடுத்து உடுப்பை மாத்து..."

அவன் உடுப்பு மாத்திக்கொண்டு வருவதற்குள் அரிசி கழுவிப் போட்டுவிட்டாள்.

"எனக்கு மரக்கறிச் சாப்பாடு தானம்மா விருப்பம். நீங்கள் விரதமெல்லே..."

"ஓமடா... ஆறுநாளும் மிளகு தண்ணிதான்..."

"ஏனம்மா உப்பிடி விரதமெல்லாம் பிடிச்சு உடம்பை வருத்திறியள்...?"

அவன் கேள்விக்கு காது குடுக்காமல் பரபரத்தாள். இயல்பாக இருக்க முடியவில்லை.

"வெங்காயப் பெட்டியை இஞ்சாலை தாங்கோ... உரிச்சுத்தாறன்..."

"சீ... உனக்குக் கண்ணெரியும் பேசாம இரு... நானே உரிப்பன்..."

"நான் நல்லாச் சமைப்பனம்மா..."

அவள் எங்கையாவது கோயில் குளத்துக்கோ, உறவுக்காரர் வீட்டுக்கோ போய்விட்டால், சமைத்து வைத்துவிட்டுப் போகும் உணவைப் போட்டுச்

சாப்பிடத் தெரியாதவன், சமைப்பன் என்று சொல்கிறான். அவளுக்கு வியப்பாக இருந்தது.

வீட்டுக்கு யாராவது விருந்தாளிகள் வந்தால் அறைக்குள் போய் அசுமாத்தமில்லாமல் இருந்துவிடுவான். இப்போ வந்த பத்து நிமிஷத்தில் எப்படியெல்லாம் கதைக்கிறான் என்று ஆச்சரியமாக இருந்தது.

"சின்னவள் எப்படியம்மா வளந்திட்டாளே...?"

"ஆள் வளர்ந்ததை விட வாய்தான் வளர்ந்திட்டுது. பள்ளிக்கூடத்தால வந்தாப்பிறகு பாரன்..."

ரேடியோவைப் போட்டுப் பாடல் கேட்டான். பாடலோடு சேர்ந்து தானும் முணுமுணுத்தான்.

"காலமை என்ன தம்பி சாப்பிட்டனி?..."

"புக்கையும் சம்பலும்..."

விறாந்தைத் திண்ணையில் கைகளை தலைக்கு அண்ணயாக வைத்துக்கொண்டு கண்களை மூடிக்கிடந்தான்.

அவளுக்கு கண்களின் ஓரத்தில் ஈரம் கசிந்தது. மகிழ்ச்சியா, கவலையா, பரவசமா என்று புரியவில்லை. உள்ளே போய் தலகணி ஒன்றை எடுத்துவந்து ஓசைப்படாமல் அவன் தலைக்குக் கீழே வைத்தாள். கண்களை விழித்துப் பார்த்துவிட்டு திரும்பவும் மூடிக்கொண்டு கிடந்தான்..

தலையைத் தடவி நெற்றியில் முத்தமிட்டுவிட்டு நகர்ந்தாள்.

அடுப்பில் சட்டியை வைத்து அப்பளம் பொரித்தாள்.

\- \- \-

பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடம் விட்டு வந்தார்கள். விறாந்தையில் விருந்தாளியைப் பார்த்துத் தயங்கியவர்கள், வந்திருப்பது அண்ணன் என்றதும் பூரித்துப்போனார்கள்.

வீடு ஆரவாரப்பட்டது.

அவள் கந்தசஷ்டி விரதத்துக்காக கோயிலுக்குப் போனாள். மனம்

பூசையில் ஒன்றிக்கவில்லை.

அவனுக்கு இரவுச்சாப்பாடு என்ன செய்து கொடுக்கலாம் என்று மனம் அந்தரித்தது.

அவனுக்கு என்ன தீன்பண்டங்கள் செய்து கொடுக்கலாம் என்று மனம் கணக்குப்போட்டுப் பார்த்தது.

தன்னை மறந்து அவனின் நினைவுகளில் மூழ்கிக் கிடந்தவளை 'அரோகரா'ச் சத்தம் மீள்வித்தது!

மனதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுத் தோற்று கையாலாகாதவளாய் நின்றாள்.

பூசை முடிந்ததும் வரிசையில் நின்று அர்ச்சனை பிரசாதம் பெற்றுக்கொண்டு ஓடாத குறையாய் வீட்டுக்கு விரைந்தாள்.

அவன் குளித்துவிட்டு நின்றுகொண்டிருந்தான். தங்கைகள் அவனைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

"ரீ ஊத்தட்டேயடா தம்பி..."

"குடிச்சாச்சு..."

"அம்மா அண்ணாதான் ரீ போட்டு எனக்கும் அக்காவுக்கும் தந்தவர்..."

"வெட்கமாயில்லையே... ஆம்பிளப்பிள்ளையைக் கொண்டு ரீ ஊத்திக் குடிச்சனீங்களே..."

"அவர்தான் நான் ரீ ஊத்திறன் எண்டுசொல்லி ஊத்தினவர்..."

உள்ளே போய் உடுப்பு மாத்திக்கொண்டு விளக்குகளைத் துடைத்தாள்.

"தம்பி இரவைக்கு இடியப்பம் அவிக்கட்டே"

"சோறு இருந்தா குழைச்சுத் தாங்கோ... குழையல் சோறு சாப்பிட்டு கனநாள்..."

அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. வேதனையை விழுங்கிக்கொண்டு வேலைகளில் ஈடுபட்டாள்.

அண்ணனும் தங்கைகளுமாய் வீடு கலகலத்தது. சின்னத் தங்கையின் தொல்லையால் அவன் பாடலொன்று பாடினான். அவன் பாடுவதைக் கேட்க பெருமிதமாக இருந்தது.

இரண்டு தங்கைகளும் மாறி மாறி அவனைக் கேள்விகளால் துளைத்தெடுத்தார்கள்.

மழைத்துமிகள் ஒன்றிரண்டாய் விழத்தொடங்கிய போது நேரம் ஏழுமணியாகிவிட்டிருந்தது. படிப்பகத்துக்கு அண்மையிலிருந்து பிரச்சார மையத்தில் புரட்சிப் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

அவன் இப்போது என்ன வேலையாக நிற்கிறான் என்று அறிய வேண்டும் என மனது தவித்தது. அண்ணனதும் தங்கைகளதும் ஆரவாரங்களை உள்வாங்கியபடி இருந்தாள்.

ஒழுங்கைக்குள் மிசின் பெட்டிச் சத்தம் கேட்டது.

"தம்பி அப்பா வாறார் மோனை..."

ஆரவாரங்கள் அடங்க, மிசின் பெட்டி பின் வளவுக்குள் வந்து திரும்பி நின்றது. அவர் இறங்கி வந்து கிணற்றடியில் தண்ணீர் அள்ளி கைகால் கழுவும் அரவம் கேட்டது.

துவாயை உதறித் துடைத்தபடி உள்ளே வந்தார்.

உயரத்தில் கொளுவியிருந்த லாம்பின் வெளிச்சத்தில் மூன்றாவதாகத் தெரிந்த உருவத்தை அவர் உற்றுப்பார்ப்பது தெரிந்தது.

"தம்பி வந்து நிக்கிறான்..."

அவர் ஒன்றும் பேசாமல் குசினிக்குள் வந்தார்.

"எப்ப வந்தவன்?..."

"காலமை... பத்துமணிபோலை..."

"என்ன கறி... ஏதும் வாங்கிச் சமைச்சதே..."

"நான் விரதம் எண்டாக்கும் வேண்டாம் எண்டுட்டான்..."

"நீயும் உன்ர கண்டறியாத விரதமும்..."

இரைந்துகொண்டு போனார்.

---

அவள் எழும்பி கிணற்றடிக்கு வந்தபோது அவர் மாமரத்தடியில் சேவல் உரித்துக்கொண்டு நின்றார்.

அவன் பற்பொடியைக் கையில் வைத்து தொட்டுத்தொட்டு பல்லு மினிக்கிக்கொண்டு இருந்தான். பல்லு மினுக்கிய படியே மரங்களை ஒவ்வொன்றாக அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

"உந்த பஞ்சுமரமெல்லாம் போனமுறை நல்ல காயள் காச்சது. எல்லாம் வெடிச்சுப் பறந்திட்டுது தம்பி."

"இலவம் பஞ்சு வெடிச்சுப் பறக்கிறது இனத்தை விருத்தி செய்யிறதுக்குத் தானம்மா..."

அவள் முகம் கழுவிக்கொண்டு வந்தாள்.

அவர் மரத்தடியில் வைத்து கோழிக்கறி சமைத்தார். அவள் குசினிக்குள் வைத்து சோறும், மரக்கறிகளும் சமைத்தாள்.

மரத்தடியில் பாய்விரித்து அப்பாவும், பிள்ளைகளும் சாப்பிட்டார்கள். அப்பா தட்டில் போட்டுக் கொடுக்க அவன் சாப்பிட்டான்.

சாப்பிட்டு விட்டு அவளுக்கருகே வந்து அமர்ந்தான்.

"வடிவாய் சாப்பிட்டனியே..."

"ஊம்..."

"இப்ப என்ன வேலையில நிக்கிறாய்?"

"இவ்வளவு நாளும் செய்த வேலை முடியுது... இனி தூர இடத்துக்குப் போறம்... வரக் கொஞ்சக் காலம் ஆகும்..."

“எங்க நிண்டாலும் பரவாயில்லை... கவனமாய் நிண்டியெண்டால் சரி...”

அவன் மாமரத்தடியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“வெள்ளெனப் போகவேணும் அம்மா...”

“வந்தனி இன்னும் ரெண்டொருநாள் நிண்டியெண்டால் என்ன...”

அவன் எதுவும் கதைக்கவில்லை.

அவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனார்.

தங்கைகள் இருவரும் அவனைச் சூழ்ந்து அமர்ந்தார்கள்.

கோயில் பூசைக்கு நேரமாகிக் கொண்டு இருந்தது.

ஆயத்தம் எதுவுமின்றி இருந்தாள் அவள். அவளின் பெண்பிள்ளைகளும் பரீட்சை எழுதிவிட்டு வந்து ரியூசன் வகுப்பு எதற்கும் செல்லாமல் வீட்டில் இருந்தார்கள்.

அவன் விறாந்தைத் திண்ணையில் படுத்திருந்து பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். அவன் கொண்டுவந்த உடுப்புப்பை அவனுடைய தலைமாட்டில் கிடந்தது.

சிலமணி நேரத்தில் அவர் திரும்பி வந்தார்.

“தம்பி இந்தா அதிலை ஒரு சேட்டும் சாறமும் இருக்கு...”

அவன் சடாரென எழும்பி அவர் கொடுத்த பார்சலை வாங்கிக்கொண்டான்.

“கோயிலுக்குப் போகேல்லையே...”

“போவம்...”

மனதுக்குள் உற்சாகம் இல்லாமல் இருப்பதை அவள் உணர்ந்தாள். மனதுக்குள் என்னவென்று சொல்லத்தெரியாத உளைச்சல் எறபட்டது மாதிரித் தெரிந்தது. ஒருவேளை அவன் காலையில் போகப்போகிறான் என்கின்ற

பிரிவுணர்வுதான் இந்தச் சோர்வுக்குக் காரணமாயிருக்கலாம் என்று எண்ணினாள்.

அப்பாவும் பிள்ளைகளும் அரைவட்டமாய் அமர்ந்திருக்க புட்டுக்களியும் கப்பல் வாழைப்பழமும் பரிமாறினாள் அவள்.

அவனுக்கு இரண்டு புறமுமாக இரண்டு தங்கைகளும் அமர்ந்திருந்தார்கள்.

"அம்மா அண்ணாக்கும் எனக்கும் ஒரு தட்டில போடுங்கோ..."

வழமையான சின்னவளின் அடம்பிடிப்பு.

அவளுக்குள் கொஞ்சம் கோபமும் எட்டிப்பார்க்கும் போல இருந்தது.

எல்லோரும் சாப்பிட்டு முடிய அடுப்படி விளக்கை அணைத்து கதவையும் கட்டிவிட்டு வந்தாள். மனது பாரமாக கனத்தது. அந்தரத்தில் ஆடுவதுபோல இருந்தது.

முற்றத்தில் பாயொன்றை விரித்துப்போட்டு பிள்ளைகள் அமர்ந்திருக்க விறாந்தை வாசலில் கப்போடு அவள் சாய்ந்திருந்தாள்.

"அண்ணா உங்களுக்கு என்ன பிடிக்கும்?..."

"ம்... காற்று"

"ஏன் உங்களுக்கு காற்றைப் பிடிக்கும்?"

"காற்றிலை எத்தினையோ கதைகள் இருக்கு. அதால பிடிக்கும்..."

"வேற என்ன பிடிக்கும்?"

'கவிதை...'

"நீங்கள் கவிதை எழுதுவியளா?"

"ஓ... நிறைய எழுதி வைத்திருக்கிறன்..."

"எனக்கொரு கவிதை எழுதித்தருவியளோ அண்ணா..."

'இலவம் பஞ்சு வெடிக்கிறது
இனத்தைப் பெருக்குவதற்கு
கரிய புலிகள் வெடிக்கின்றன
இனத்தைக் காப்பதற்கு'

எழுதிக்கொடுத்தான்.

"நல்ல கவிதையண்ணா..."

இருளும் ஒளியும் கலந்த காலைப்பொழுது.

அவன் புறப்படுவதற்கு தயாராகியிருந்தான். அவனை வழியனுப்ப இசைவில்லாதது போல எல்லோரும் இருந்தார்கள். சின்னவள் திண்ணையில் இருந்து கேவிக்கேவி அழுதுகொண்டிருந்தாள். போகிற இடத்தில் காலைச் சாப்பாடு சாப்பிடலாம் என்று அவன் எவ்வளவோ தடுத்தும் அவள் சிற்றூண்டி ஆக்கியிருந்தாள்.

அந்த வீட்டில் இரண்டு நாட்களாக இருந்த குதுகலம் எல்லாம் வடிந்துவிட்ட மாதிரி இருந்தது. சிரிப்புச் சத்தங்களும் சுருண்டுவிட்டிருந்தன. அவர்களின் முகங்களில் துயரம் ஒட்டிக்கிடந்தது.

"நின்று பின்நேரமாக போகேலாதே தம்பி..."

"இல்லையம்மா... முக்கியமான வேலை கிடக்கு கட்டாயம் போகவேணும்..."

தலை வாரிக்கொண்டான். நிதானமாகச் சீப்பை அதற்குரிய இடத்தில் வைத்தான்.

கொண்டுவந்த பையை தோளில் கொளுவினான்.

இவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த அவளின் துயரம் உடைந்தது.

அவன் எரிமலை ஒன்றினது பேரமைதியோடும் பரந்த சமுத்திரமொன்றின் அளவுகானா ஆழத்துடனும் அவர்களிடமிருந்து விடைபெற்றான்.

'போட்டுவாறன்...'

அவள் ஓடிப்போய் இரண்டு கைகளையும் பிடித்து முத்தமிட்டாள்.

அவன் வாசலுக்கு வந்தான்.

காற்று உறவு சொல்லி உரிமையுடன் அவனில் ஒட்டிக்கொண்டது.

வெளிச்சம்

1999 மார்கழி–தை 2000

# நிலா

பிரகாசமான வெளிச்சத்தோடு வந்த வாகனம் ஒன்று இரைச்சலோடு அவனை விலத்திச் சென்றது. அது கிளப்பிவிட்ட புழுதியாலும் அதன் பிரகாசமான வெளிச்சத்தாலும் ஓரிரு நொடிகள் தடுமாறிக் காலைக் கீழே ஊன்றி அவன் நிதானமானான்.

எத்தனையோ தடவைகள் புதுக்குடியிருப்புக்குச் சலிக்காமல் சைக்கிள் ஓடியவனுக்கு இப்போது களைப்பின் நிமித்தம் சலிப்பாய் இருந்தது. ஒன்றிரண்டு தேநீர் கடைகள் மட்டும் திறந்திருந்தன. அவற்றிலும் கூட அவ்வளவாக ஆட்கள் இல்லை.

தகரப் படலையின் விளிம்பில் கட்டியிருந்த கயிற்றைத் தடவி அவிழ்த்தான். சடாரென்று கதவு திறந்தது. வீடு அவனுக்குச் சூனியமாகத் தெரிந்தது. அரிக்கன் லாம்பைக் கொளுத்தி அறை மூலைக்குள் வைத்துவிட்டு கட்டிலில் அமர்ந்தான். காற்றில்லாமல் ஒரே புழுக்கமாக இருந்தது.

வானத்தில அரைவட்டாமாகச் சந்திரன். அதனோடு சேர்ந்து குழுமிநின்று கண் சிமிட்டும் நட்சத்திரங்கள்.

“அப்பா... ஏனப்பா அம்புலி மாமா பிஞ்சுபோய் கிடக்குது?”

நிலாவின் குரல் அவனுக்குள் ஒலித்தது. ‘கடவுளே... என்ர நிலாக்குஞ்சுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது... சுகமாக வந்திரவேணும்...’ மனம் விம்மியது. ரெண்டு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்தான்.

“அப்பா... இந்த முறை புது வருஷத்துக்கு எனக்குப் புதுச் சப்பாத்து வாங்கித் தரவேணும்...”

நிலாவுக்காக அவன் புதுக்குடியிருப்புக் கடைகளெல்லாம் ஏறி இறங்கினான். கைச்செலவுக்கென்று வைத்திருந்த காசில் விலை விசாரித்து சப்பாத்து வாங்கிக்கொண்டு வந்தான்.

“இந்த விலைகுடுத்து ஏன் வாங்கினீங்கள்? பள்ளிக்கூடத்துக்குப் போறதெண்டாலும் பரவாயில்லை... இப்ப என்னத்துக்கு?”

மனைவி கடிந்தபோது சிரித்தான்.

“நான் உடம்பை வருத்தி உழைக்கிறதே என்ர நிலாக்குஞ்சுக்காகத் தானே... அவள் என்ன கேட்டாலும் வாங்கிக் குடுப்பன்...” என்றான் இடுக்காக. நிலாவின் கால்களில் சப்பாத்தைக் கொளுவிவிட்டான்.

“அப்பா இஞ்சே... அப்பா இஞ்சே...”

கால்களை மாறிமாறி தூக்கிக் காட்டியபடி நிலா நடந்தபோது அவன் பரவசப்பட்டுப்போனான். வேலையால் வீட்டுக்கு வந்திறங்கியவுடன்,

“கண்டறியாத சப்பாத்து ஒண்டை நீங்கள் வாங்கிக் குடுத்து குளிக்கிறதுக்குக் கூட அது சப்பாத்தைக் கழட்டுதில்லை...”

மனைவி எரிச்சல் காட்டியதைக் கூட அவன் ரசித்தான். இப்போது அம்புலன்ஸ் வண்டியில் நிலாவைத் தூக்கி ஏற்றிய காட்சி அவன் கண்களில் வந்தது.

“என்ர நிலாக்குஞ்சு... நீ திரும்பி வரும்வரை எப்படியம்மா இருக்கிறது...”

சின்னப்பிள்ளை போல அழுதான். நிலாவை அவன் பார்க்கப் போனபோது நிலாவின் முகம் மஞ்சள் அடித்தது. அவனைப்பார்த்ததும்...

"அப்பா..."

என்ற ஓசை வெளிப்படாத வெறும் உதட்டசைவு.

"அப்பா... நீங்களும் என்னோடை வாங்கோ..."

கையைப் பிடித்த அவள் கரத்தின் உணர்வில் அவன் தடுமாறிப்போனான்.

"அப்பா வேண்டாம் நிலா... அப்பா எங்களோட வந்தால் அப்பாவை ஆமி பிடிச்சப்போடுவான்... நாங்கள் மட்டும் போவம்..."

மனைவி கூறியபோது கையைமட்டும் உயர்த்தி 'டாட்டா' காட்டினாள். நிலாவின் கண்களில் நீர் நிரம்பியது.

நிலாவை ஏற்றிக்கொண்டு போன அந்த அம்புலன்ஸ் வண்டி இன்னமும் அவனுக்குள் சத்தமிட்டுக்கொண்டிருந்தது. நேரம் பார்த்தான். பன்னிரெண்டு முப்பத்தைந்து. கண்கள் எரிவதுபோல் இருந்தன.

"உள்ளுக்குக் கொண்டுபோயிட்டா... அங்க நல்ல மருந்து வசதியள் தானே? நிலாவுக்குச் சுகம் வந்திடும்... யோசிச்சுக்கொண்டிருக்காமல் வடிவாய் சாப்பிடுங்கோ... கெதியா வந்திடுவம்..."

மனைவியின் குரல் செவிகளுக்குள் திரும்பத் திரும்ப ஒலித்தது. சேட்டைக் கழற்றிக் கொளுவிவிட்டு வெளியே வந்தான். கால்முகம் கழுவிக்கொள்ள மனம் சம்மதிக்கவில்லை. நான்கு நாட்களாக ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக சைக்கிள் உழக்கியதில் இடுப்பு வலித்தது.

அரைவட்ட நிலவு மெல்ல மெல்ல சரிந்துகொண்டிருந்தது. நித்திரையழுத்தக் கண்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டுகின்ற கணங்களில் மனது 'நிலா நிலா' என்று ஓலமிட்டது.

ஊரைவிட்டு ஓடிவந்த போது நிலா ஒருவயதுக் குழந்தைதான். மழையில் நனைந்து... இருளில் தவித்து... வெயிலில் வாடிவதங்கி வந்தபோது— நிலாவை உயிரோடு கரைசேர்ப்போமா என்று பயப்பட்டான். பிறகு உறவினர் வீட்டில் வந்து சுதந்திரமாய் இருந்த நாட்களும் குழந்தைகளிடையே ஏற்பட்ட

விளையாட்டுச் சண்டை விகாரமாகி பெரியவர்களிடையே பிணக்கை ஏற்படுத்தியதும்... நிலாவுக்காகவென்று தூர இடத்தில் வீடு எடுத்துக் கொண்டதும் அவன் நினைவுகளில் இப்போது படர்ந்தன. அப்போது ஏற்படாத துயரம் இப்போது தேற்றுவாரற்ற நிலையில் அவனை வருத்தியதாக அவன் உணர்ந்தான்.

"உள்ளுக்குள் போறதெண்டால் கைச்செலவுக்குக் காசு வேணுமெல்லே... என்ன செய்யப்போகிறாய்?"

மனைவியிடம் இயலாமையோடு கேட்டான். அவள் தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி அவனிடம் தந்தாள்.

"இந்தாங்கோ... பிள்ளைதான் எங்களுக்கு முக்கியம். இதைக் கடையில குடுத்திட்டு காசு எடுப்பம்..."

அவன் தொண்டை அடைக்க அவளைப் பார்த்தான்.

"பொருளை எப்பவும் நாங்கள் தேடிக்கொள்ளலாம். எங்கட பிள்ளைக்கு ஒண்டும் நடந்திடக்கூடாது..."

அவள் கொடுத்த தைரியத்தில் அவன் நேராகக் கடைக்குப் போனான். அவள் கொடுத்த சங்கிலியை விற்றுப் பணத்தோடு வந்தான்.

"இதை உங்கட கைச்செலவுக்கு வைத்திருங்கோ... காசைப்பாக்காமல் நல்ல சாப்பாடாய் வாங்கிச் சாப்பிடுங்கோ... நிலாவுக்குச் சுகம் வந்திடும்..."

சிறு குழந்தையைப்போல அவன் தலையாட்டினான்.

எங்கோ தொலைவில் சேவல் ஒன்று சடசடத்து கூவியது. தலைமாட்டில் கிடந்த கை மணிக்கூட்டை எடுத்து நேரம் பார்த்தான். இரண்டு முப்பத்தைந்து. அவனுக்கு இன்னும் தூக்கம் வர மறத்தது. ஊரிலிருக்கும் அம்மாவின் நினைப்பு வந்தது. நேற்று ஆஸ்பத்திரியில் அம்மாவைப் போலதான் ஒரு பெண் கதறி அழுதுகொண்டிருந்தாள். அம்மாவையே போலத்தான் இருந்தாள்.

அந்தப் பெண்ணின் விமானத் தாக்குதலில் காயமுற்ற இருபத்தியாறு வயது மகனையும் அவசர சிகிச்சைக்காக வவுனியாவுக்கு அனுப்ப ஏற்பாடாகி இருந்தது. நெடுத்த வாட்டசாட்டமான இளைஞனவன். மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த அவளின் மகன் உயிர் தப்பிவிட வேண்டுமென்று அந்தத் தாய் அழுத காட்சி இன்னும் அவனை உலுப்பியது. அந்தத் தாயின்

தோற்றம் இன்னுமின்னும் அம்மாவை நினைவூட்டியது. 'சீ... அம்மாவை ஊருக்குப் போகவிடாமல் வைச்சிருந்திருக்கலாம்' என்று தன்னையே நொந்துகொண்டான்.

அம்மாவும் ஆரம்ப காலத்தில் இவனோடுதான் இருந்தாள். மருமகளிடமும் பேத்தியிடமும் கூட அம்மா பெரும் பாசத்தோடு இருந்தாள். நாளடைவில் அம்மாவின் பத்தாம்பசலிக் குணங்களும் அவன் மனைவியின் பகுத்தறிவுக் கருத்துக்களும் ஒத்துப்போக மறுத்தன.

நிலைமை மோசமாகி அவமானங்களை அறுவடை செய்து நித்திய துன்பத்துக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக அம்மாவை அவன் ஊருக்கு அனுப்பவேண்டியதாயிற்று. அம்மா அப்பாவின் ஓய்வூதியப் பணம் எடுப்பவள். எப்படியும் வாழ்ந்து கொள்ளுவாள் என்கின்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

ஒழுங்கையில் சைக்கிள் ஒன்று கடகடத்தது. பேச்சுக்குரல்களும் கேட்டன. வியாபாரத்துக்குப் போகும் வியாபாரிகளின் பேச்சுக்குரல்கள்தான் அவையென்பதை அனுமானித்துக் கொண்டான். அவனுக்கு முற்றாக தூக்கம் கலைந்துவிட்டிருந்தது.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபோது நிறைய உடுப்புக்கள் கொண்டுவந்திருந்தான். அவற்றை அலசி நன்கு காயவிடவேண்டுமென்று எண்ணிக்கொண்டான். நிலாவின் சின்னச் சின்ன சட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான்.

"நிலா வளர்ந்து என்ன செய்வியள்?..."

ஒருநாள் நிலாவிடம் கேட்டான்.

"சின்னத்தையைப்போல இயக்கத்துக்குப் போய் ஆமியைச் சுடுவன்..."

அவன் பெரிதாகச் சிரித்தான்.

"உங்களுக்கு எல்லாத்துக்கும் சிரிப்புத்தான்... நிலாக்குட்டி வளர்ந்து ரீச்சராக வரவேணும்..."

மனைவி சொன்னாள்.

"மாட்டன்..."

நிலா வெடுக்கென்று சொன்னபோது மீண்டும் அவன் சிரித்தான்.

"எங்கட நிலாக்குஞ்சு வீரமாத்தான் இருப்பாள்"

என்று பெருமிதப்பட்டாள்.

இப்போது நான்கு மணியாகி விட்டிருந்தது. மாறிமாறி சேவல்கள் கூவிக்கொண்டிருந்தன. மூலைக்குள் மினுங்கிக்கொண்டிருந்த லாம்பை நூத்து வளையில் அடித்திருந்த ஆணியில் கொளுவினான். கைகளை தலைக்குமேல் உயர்த்தி சோம்பல் முறித்தான்.

போன சனிக்கிழமை ஆஸ்பத்திரியால் வரும்போது குலத்தைக் கண்டான்.

"மச்சான் இந்தமுறை ஒருமாதிரி காய் வெட்டிப்போட்டாய் என்ன?"

என்று அவன் கேட்டான்.

"இல்லையடாப்பா பிள்ளை ஆஸ்பத்திரியில. அடுத்த ரேணுக்கு வருவன்..."

என்று சொன்னான்.

"அப்படியே...? சொறியடா மச்சான்... என்ன வருத்தம்"

"என்னெண்டு பிடிபடுதில்லை... ஆனா விடாத காச்சல்..."

"குழந்தைப் பிள்ளையள்... கவனமாப் பாக்கோணும்..."

என்று புத்தி சொல்லிவிட்டுப் போனான் குலம்.

எல்லைக்குப் போகும் சந்தர்ப்பங்களில் கூட்டாளியாகிவிட்ட குலத்திடம் அவனுக்கு நட்பு அதிகரித்தது.

நிலாவினதும் மனைவியினதும் உடுப்புக்களை அலசிக் காயவிட்டுவிட்டு ஒருமுறை குலத்தைப் போய் சந்தித்துவிட்டு வந்தால் மனம் ஆறும் என எண்ணினான். அந்த எண்ணத்தோடு சுறுசுறுப்பை வரவழைத்து எழும்பினான். வானம் மெல்ல வெளுக்க ஆரம்பித்து விட்டிருந்தது. சுருளியின் தேநீர் கடையில் தேநீர் கலக்கும் ஓசை தெளிவாகக் கேட்டது.

மனிதர்கள்

—ஆதிலட்சுமி சிவகுமார

அவன் முற்றத்துக்கு வந்தான். முற்றம் முழுவதும் குப்பை கூழங்கள் கிடந்தன. வீட்டின் பேரமைதி மனதுள் ஒரு அச்சத்தை உண்டாக்குவதுபோல் இருந்தது. விளக்குமாற்றை எடுத்துவந்து குப்பை கூழங்களை கூட்டி அள்ளலாம் என்று நினைத்து பின்பக்கம் வந்தான்.

வாசலில் ஓட்டோ வண்டியொன்று வேகம் குறைப்பதுபோல் இருந்தது. பயந்தடித்து வாசலுக்கு ஓடினான். அழுத முகத்தோடு இருந்த மனைவி இவனைக் கண்டதும் பெரிதாகக் கத்தினாள்.

“ஏ...என்ன...நடந்திட்டு...”

அவன் தடுமாறினான்.

“அண்ண... அவசர நோயாளியளோட போன அம்புலன்ஸை அவங்கள் உள்ள எடுக்கேல்ல திருப்பி விட்டுட்டாங்கள். உங்கட பிள்ள...”

ஓட்டோ சாரதி தலையைக் குனிந்துகொண்டான்.

“ஐயோ... என்ர நிலாக்குஞ்சுக்கு என்ன...? நிலா... நிலா...”

அவன் பரபரத்தான்.

“அண்ண உள்ளுக்க கொண்டுபோய் கிடத்துங்கோ...”

இப்போதுதான் அவனுக்கு நிலாவுக்கு என்ன நடந்தது என்று சரியாக விளங்கியது.

“நிலா...”

அவன் கத்திய சத்தம் பெரிதாக ஒலித்தது. அவன் மனைவி நிலத்தில் விழுந்து கதறிக்கொண்டிருந்தாள்.

வானொசை 10
2000

# தணலில் விழுகின்ற தளிர்

இன்று முழுவதும் மழை சிணுங்கிக் கொண்டிருந்தது. இப்போது மழை பெய்வதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. வானம் வெண்நீலமாய் பரந்து விரிந்து கிடந்தது. தூரத் தூரவாய் நிமிர்ந்து நின்ற மரங்கள் மழை நீரைச் சுமந்தபடி நின்றுகொண்டிருந்தன.

"ஏய் பாத்து... பாத்து..."

"ஏலு போ நேர நேர..."

சுருதி மாறாமல் காற்றில் ஏறிவந்த அந்தக் குரல் ஈர்த்தது. மழைநீரில் ஊறிக்கிடந்த தரைவெளியை இரண்டு காளைகள் உழவடித்துக் கொண்டிருந்தன. அந்தக் காளைகளை நெறிப்படுத்திக்கொண்டிருந்தவனின் குரல்தான் அது! நீள்வட்டமாய் அந்தக் காளைகள் சுற்றும்போது இரும்புக் கலப்பை மண்ணைக் கிளறிப்போடும் லாவகத்தில் என் மனம் லயித்தது.

"அக்கா..."

யாரோ கூப்பிடுவதாக உணர்வதற்குள் மீண்டும் அக்கா.

"ஆர் சறோவே உள்ள வாவன்..."

வந்தாள்.

முகம் உப்பி ஊதியிருந்தது. அவளைப் பார்த்தவுடனேயே எல்லாம் விளங்கியது. என்றாலும்

"என்ன சறோ முகமெல்லாம் வீங்கிக்கிடக்கு. ஏதும் வருத்தமே?"

அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் அழ ஆரம்பித்தாள்.

"ஏன் சறோ அழுகிறாய்? ஏதும் பிரச்சினையோ?"

அவள் கொஞ்ச நேரம் இடைவெளி விடாது அழுதாள்.

"நான் ஏதும் நஞ்சு குடிச்சுச் சாகப்போறன். என்ரை மூண்டு குஞ்சுகளும்தான் பாவம். என்னைப்போலை அதுகளும் பெட்டைக்குஞ்சுகளாய் போச்சுதுகள்"

"உந்த விசர்கதையை விட்டுப்போட்டு என்ன விசயமெண்டு சொல்லன்"

குரலில் கோபம் ஏற்றம் கொண்டது.

"நேற்று ஒரு வேலையும் கிடைக்கேல்லை. சமைக்கவுமில்லை. பிள்ளையளும் நானும் பட்டினி"

"வழமையான பிரச்சினைதான்"

நினைத்துக்கொண்டு பேசாமல் இருந்தேன்.

"எங்கோயோ சீட்டு விளையாடிவிட்டு வந்தவர் எனக்கு நல்ல அடி. பிள்ளையள் கத்திக்குளறின சத்தத்துக்கு முகாம் சனங்கள் எல்லாம் கூடி வேடிக்கை பார்த்ததுகள்."

அழத்தொடங்கினாள்.

"ஆள் இப்ப எங்கை?"

“எங்கையெண்டு தெரியாது”

“அப்ப என்ன செய்யப்போறாய்”

“நான் நஞ்சு குடிச்சுச் சாகப்போறன்... என்னாலை இனி அடிவாங்கி மானம்கெட்டு வாழேலாது”

“உந்த விசர்க்கதையை விட்டுப்போட்டு காவல்துறையிலை போய் என்றி போடன். திருந்தட்டும்”

பேசாமல் இருந்தாள். உடன்பாடில்லைப் போலும். நான் உழவடிக்கும் காளைகளின் நடையைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

“முடிஞ்சா எனக்கொரு அம்பது ரூபா காசு தாங்கோ... பிள்ளையளுக்கு ஏதும் சமைச்சுக் குடுக்க...”

சறோவின் மூன்று பெண் குழந்தைகளின் முகங்களும் வரிசையாய் ஞாபகத்தில் வந்தன. சில நிமிட நேர யோசனைக்குப் பிறகு எழுந்துபோய் தேநீர் ஊற்றிவந்து கொடுத்தேன். தேநீரைக் குடித்துவிட்டு முகத்தை வடிவாகத் துடைத்தாள்.

“இந்தா சறோ இந்தக் காசை நீ எனக்குத் திருப்பித்தரவேண்டாம். கெதியாய் ஏதும் வாங்கிக்கொண்டு போய் சமைச்சுக்குடு”

“போட்டுவாறனக்கா...”

முகம் மலர நடந்தாள்.

இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன!

மழை வெய்யில் கொளுத்தி எரித்துகொண்டிருந்தது! சறோ வேர்க்க விறுவிறுக்க வந்திருந்தாள்.

“என்னசறோ?”

“காலமை துவக்கம் திரிஞ்சுபோட்டு வாறன் ஒரு வேலையும் கிடைக்கேல்லை”

நல்லா மெலிந்து கறுத்துப் போயிருந்தாள். கண்களின் கீழ்

கருவளையங்கள் தெரிந்தன.

"இப்ப எப்பிடி சறோ? பிரச்சினையில்லாமல் இருக்கிறியளே?"

"ஏன் பிரச்சினையில்லை? இப்ப நாளாந்த அடியாப்போச்சு ... என்ன செய்ய பொம்பிளப்பிள்ளையாய் பிறந்திட்டன்."

"உழைக்கிறாள்... பிள்ளைகளைப் பராமரிக்கிறாள்... போதாதெண்டு அடியும் வாங்கிறாள்..."

"பிள்ளையள் பாத்துக்கொண்டிருக்குங்கள் போட்டு வரட்டேக்கா..."

"ஓ..."

அவள் முகத்தில் ஏதோ ஏமாற்றம். எழும்பிப் போனாள்.

"இஞ்ச வா சறோ..." வந்தாள்.

"இதிலை கொஞ்சக் கிழங்கு கிடக்கு. கொண்டுபோய் பிள்ளையளுக்கு அவிச்சுக்குடு"

வாங்கிக்கொண்டு போனாள். அவள் போவதைப் பார்க்க பாவமாக இருந்தது.

இப்போது இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. காளைகள் உழுத தரையில் பயிர்கள் பச்சை விரிப்பாய் காட்சி தந்துகொண்டிருந்தன. கிளிகளும் குருவிகளும் தூரத்து மரங்களில் இருந்து ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தன. அம்பகாமப் பகுதியிலிருந்து முன்னேற முயற்சித்த இராணுவம் தோல்வியுடன் திரும்பிவிட்டிருந்தது. இயலாமையின் வெளிப்பாடாய் எறிகணைகள் விழுந்துகொண்டிருந்தன. பொழுது நண்பகலை நெருங்கிக்கொண்டிருந்தது!

"அக்கா..."

"ஆர்?"

"நான்"

சறோவின் மூத்தவள் நின்றுகொண்டிருந்தாள்.

"என்ன பிள்ளை...?"

"அம்மா ஏதும் வேலையிருந்தால் செய்து குடுத்துப்போட்டு வரச்சொன்னவா..."

"ஏன்? பள்ளிக்கூடம் போகேல்லையே..."

"இல்லை..."

"ஏன் போகேல்லை...?"

"அம்மா நிக்கச் சொன்னவா..."

கைவிரல் நகத்தைக் கடித்தபடியே பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"சறோ எங்கை..."

"வீட்டிலை நிக்கிறா"

"ஏன் இண்டைக்கு ஒருடமும் வேலை இல்லையாமே?"

"அவவுக்கு ஏலாது..."

"என்ன மலேரியாக் காச்சலே"

"இல்ல..."

"அப்ப... என்ன வருத்தம்?"


"சத்தி..."

இதைச் சொல்லும்போது அந்தப் பத்து வயதுச் சிறுமியின் குரலில் அழுகை எட்டிப்பார்த்தது. துடிக்கும் உதடுகளை கடித்தபடி நிலத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

நாற்று
இதழ் - 13
2000

## மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்



# வெள்ளைத்துணி

இலேசாகத் தூறிய மழையில் தெருப்புழுதி அடங்கிவிட்டிருந்தது. இரையை விழுங்கிய சாரைப்பாம்பு மாதிரி அந்த மினிபஸ் நின்றது.

தேநீர்க்கடை, தையல்கடை, பழக்கடை இந்தக் கடைகளுக்கு குடைபிடிப்பது மாதிரி நிழல் பரப்பி நின்ற மருதமரங்கள்... இப்படித்தான் எங்கள் வீடு அமைந்திருந்த சூழல்.

நின்ற மினிபஸ் இரைந்துகொண்டிருந்தது.

"நிக்கிறாக்கள் பின்னுக்குப் போங்கோ..."

"அம்மா உதிலை இருக்கிறேல்லையணை... எழும்பிச் சீற்றிலை இரணை..."

"ஐயா... உந்த பாக்கைத் தாங்கோ மேலை போடுவம்... போட்டா உதிலை நாலுபேர் இருக்கலாம்"

"உந்தச் சீற்றிலை நாலுபேர் இருக்கலாம்

அக்கா கொஞ்சம் தள்ளி இருங்கோ...''

"பிள்ளையோடை நிக்கிற அம்மா உதிலை இருங்கோ...''

"றைற்...''

பஸ்ஸின் இரைச்சலையும் மீறி குரல் ஒன்று ஒலிக்க, மண்ணெண்ணைப் புகையை ஊதிக்கொண்டு பஸ் புறப்பட்டது.

மழை வெய்யில் சுள்ளென்று எரித்துக்கொண்டிருந்தது. பதினொரு மணிக்கு ஒருசில நிமிடங்கள் இருந்தன. பிள்ளைகள் பாடசாலை விட்டு வருவதற்கு நேரமிருந்தது. எல்லைக்குப்போன கணவர் திரும்பி வருவதற்கு இன்னமும் மூன்று நாட்கள் இருக்கின்றன!

"வீட்டுக்காரர்''

யாரோ கூப்பிடுவது போல இருந்தது.

"ஆரது?''

தகரப்படலைக்குக் கீழால் செருப்பணியாத இரண்டு கால்கள் தெரிந்தன.

"உள்ளுக்க வாங்கோ''

"நாய் கடிக்குமோ... பயமாக் கிடக்கு''

மாமரத்தின்கீழ் பக்கத்துவீட்டு நாய் சுருண்டபடி கிடந்தது.

"அது கடிக்காது வாங்கோ...''

தகரப்படலையைத் திறந்துகொண்டு தயங்கித் தயங்கி வந்த பெண்ணுக்கு ஒரு நாற்பது வயதிருக்கும்.

"என்ன?''

"எப்பன் தண்ணி தாங்கோ குளிசை போட...''

கொடுத்த தண்ணீர்ச்செம்பை இரண்டு கைகளாலும் வாங்கிக் கொண்டபோது கைகள் நடுங்கின.

“என்ன வருத்தம்?”

“மலேரியா எண்டு குளிசை தந்தவை...”

நான்கு குளோரோக்குயின் குளிசையைக் காட்டினாள்.

நான்கு குளிசைகளையும் போட்டு முடித்தபோது செம்புத் தண்ணீரும் முடிந்திருந்தது. அந்தப் பெண்ணின் முகத்தில் குளிசைகளின் களைப்பின் அளவு தெரிந்தது.

“தலை சுத்துறமாதிரிக் கிடக்குது... இதிலை இருக்கிறன்...”

திண்ணையில் உடகார்ந்தாள்.

“எந்த இடத்திலை இருக்கிறது”

“கொலனிக்குள்ளை”

“என்னத்திலை வந்தது”

“நடந்துதான்... இனிப் போகேக்குள்ள மிசின் பெட்டி ஏதும் வந்தா ஏறிப்போவம்...”

அவளைப்பார்க்க பாவமாக இருந்தது. காலைச்சாப்பாடாக வாங்கிய பாணில் இரண்டு துண்டுகளையும் கோப்பியையும் அவளிடம் நீட்டியபோது,

“என்ர குஞ்சுகள் மூண்டும் வீட்டிலை பட்டினியாக இருக்குங்கள். எனக்கு ஒண்டும் வேண்டாம்...”

நடுங்கி நடுங்கி ஒலித்த அவள் குரலில் தாய்மையின் பாசம் தெரிந்தது. அவள் கண்களை மெதுவாகச் செருகிக்கொண்டாள்.

கொண்டுவந்திருந்த கடதாசிப்பை பக்கத்தில் இருந்தது. முழங்கால்களை மடித்துக்கொண்டு அந்தப்பெண் படுத்திருப்பதைப் பார்க்கப் பாவமாகயிருந்தது.

இடப்பெயர்வுக்கு முன் அவள் நல்ல வசதியானவளாக வாழ்ந்திருக்கலாம். முகத்தில் ஒருவித இளைப்புத் தெரிந்தது.

வேலைகள் எதிலுமே மூழ்கமுடியாமல் மனம்

உழன்றுகொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் மூத்த பெண்பிள்ளை பாடசாலையால் வந்துவிட்டாள். வாசல் திண்ணையில் படுத்திருந்தவளைப் பார்த்திருப்பாள்.

"ஆரம்மா அது"

மிக அருகில் வந்து கேட்டாள். விளக்கம் சொன்னதும் "பாவமம்மா" என்றாள்.

அந்தப் பெண் கனவு கண்டவள்போல் எழுந்தாள்.

"எப்பன் சுடுதண்ணி தாங்கோ..."

"அம்மா... தேசிக்காய் கரைச்சுக் குடுங்கோம்மா..."

"வேண்டாம்... அங்கை என்ர குஞ்சுகள் மூண்டும் பசியோடை இருக்குங்கள்..." மறுத்தாள்.

சுடுதண்ணீரைக் கொடுத்தபோது மடமடவென்று குடித்தாள்.

"உங்கட அவர் என்ன செய்யிறார்..."

அந்தக் கேள்வியைக் கேட்காமலிருக்க முடியவில்லை. மூன்று குழந்தைகளைப் பட்டினியாகவும், மனைவியை நோயாளியாகவும் விட்டுவிட்டு அவன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்று அறியும் ஆவல் உந்தியதில் அந்தக் கேள்வி பிறந்தது.

"அவர் வேற கலியாணம் செய்திருக்கிறார்"

பதில் ஏதோ செய்தது.

அதன் பிறகு அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கையை பிய்த்துப்பிடுங்கும் எண்ணம் எழவில்லை.

"அம்மா... சோறும் கொஞ்சம் கட்டிக்குடுத்து அம்பது ரூபா காசும் குடுத்துவிடுங்கோ..."

இரக்கப்படுகின்ற எல்லாருக்குமே பண உதவி செய்யுமளவு வருமானம்

இல்லாது விட்டாலும் மனமிருந்தது! அந்த மனப்பாங்கு எங்கள் குடும்பத்தின் பலமா பலவீனமா என்கின்ற சர்ச்சைகூட ஏற்படுவதுண்டு. அதுவும் பணந்தட்டுப்பாடு ஏற்படுகின்ற வேளைகளில் இந்தச் சர்ச்சை ஏற்பட்டு, அமந்துவிடும்.

பிள்ளைகள் ஒரேபிடியாக மனிதாபிமானத்தின் பக்கம் நின்றுவிடுவார்கள். பலவீனம் என்கின்ற கட்சி தோற்றுவிடும்!

"அம்மா..."

அந்தப் பெண்தான் கூப்பிட்டாள். அடுப்படியை விட்டு முன் வாசலுக்கபோக,

"எனக்கொரு உதவி செய்யிறியளாம்மா..."

"என்ன உதவி...?"

அவள் கேட்பதற்குள்ளாக மனம் பலதையும் சிந்தித்தது. அதா...? இதா...? என்று.

"இந்தப் பையுக்கை வெள்ளைத்துணி ஒண்டு கிடக்கு... எடுத்துக்கொண்டு எனக்கேதும் உதவிசெய்யுங்கோ... வருத்தமில்லாட்டில் நான் ஏதும் கூலிவேலைக்குப் போயிடுவன்..."

"பிள்ளையிட்டை நாலைஞ்சு வெள்ளைச்சட்டை கிடக்குது... முன்னாலை ரெயிலர் பெடியன் இருக்கிறான். சிலவேளை வாங்குவான்..."

அவள் பேசாமல் இருந்தாள். குளிசைகளின் தாக்கம் அவளைப் பற்றியிருக்கவேண்டும்!

"உஞ்சூக்... உஞ்சூக்..."

பக்கத்துவீட்டுத் தேவா அண்ணை மிச்ச உணவு போடுவதற்காக நாயைக் கூப்பிட்டார்.

மாமரத்தின் கீழ் மண்ணைக் கிளறிவிட்டுப் படுத்திருந்த அவர்களுடைய நாய் எழுந்து ஓடியது.

"தையல்கடைக்காரனிட்டைக் கேட்டனான்... அந்தத்துணியிலை ரத்தக்கறை இருக்கெண்டு வேண்டாமென்றவன்..."

ரீயூசனுக்குப் போவதற்கு தலைவாரி விடுமாறு மகள் சீப்பைக் கொண்டுவந்து தந்தாள்.

"உங்கடை பிள்ளையளை இப்ப எங்க விட்டிட்டு வந்தனீங்கள்..."

"வீட்டிலை தனிய இருக்குதுகள்..."

"பக்கத்துவீட்டிலை ஒருதரும் இல்லையே..."

"அதுகளும் எங்களை மாதிரித்தான் கஷ்ரம்..."

அவள் பக்கத்திலிருந்த பையை எடுத்துப் பார்த்தபோது அதற்குள் ஒரு கசங்கிய வெள்ளைத்துணி இருந்தது.

விரித்தபோது – தெறித்துப்பறந்த இரண்டு மூன்று இரத்தக்கறைகள்.

"என்ர அம்மா... என்ர குஞ்சு..."

உசுப்பப்பட்டவளாக அவள் கத்தினாள்.

"என்ன? எ...என்ன...?"

மகள் கிணற்றடியிலிருந்து கழுவிய குறை முகத்தோடு ஓடிவந்தாள்.

"என்ர குஞ்சுவை ஒரு போட்டோகூட நான் பிடிக்கேல்லை... அவளின்ர நினைவா இந்தத் துணியைத்தானே வச்சிருந்தனான்..."

இப்போது அடங்கிய குரலில் அரற்றுவது போலச் சொன்னாள்!

ஒருவேளை இவள் புத்தி பேதலித்தவளாக இருக்குமோ? என்கின்ற எண்ணமும் வலுத்தது.

அவளையே பார்த்துக்கொண்டிருக்க...

"நான் சொல்லுறது உண்மை... என்ர பிள்ளை பள்ளிக்கூடத்தில வாங்கிக்கொண்டு வந்த துணி இது. இதை ஒரு சட்டையா என்ர பிள்ளைக்குக் குடுக்க என்னட்டைக் காசில்லை."

"அண்டைக்கு ஒருநாள் எங்கடை கொலனிக்குள்ளை குண்டு போட்டாங்கள். அப்ப நான் வேலைக்குப் போட்டன். சின்னப்பிள்ளையளை

பாக்கிறதுக்காக வீட்டிலை நிண்டு றொட்டி சுட்டுக்கொண்டிருந்த என்ர குஞ்சு அந்தக் குண்டிலை செத்துப்போச்சு... செத்துப்போச்சு...''

அவள் தலையில் அடித்து அரற்றினாள்.

''அந்தப்பிள்ளையின்ர இரத்தம் சிதறின அடையாளம் தான் இது... என்ர குஞ்சின்ர ஒரு போட்டோகூட என்னெட்டை இல்லை... இதை இந்த வெள்ளைத்துணியை ஞாபகமா வச்சிருந்தன் இப்ப என்ர மற்றப் பிள்ளையளின்ர பசியைத் தீர்க்க இதை விக்கக்கொண்டுவந்தன்...''

''அம்மா... அழாதேங்கோ...''

கண்கள் கலங்க மகள் ஓடிப்போய் அந்தப் பெண்ணின் இருகரங்களையும் பிடித்துக்கொண்டாள்.

வெள்ளைத்துணியை உதறி மடித்து அந்தப் பைக்குள் வைத்து அவளிடம் கொடுத்து அதனுடன் சிறிதளவு பணமும் வைக்கமாறு மகள் சொன்னாள்.

''அம்மா... உங்கட பிள்ளை எங்கட பள்ளிக்கூடத்திலை படிச்ச பிள்ளை தானம்மா... வாங்கோ... உங்களை சைக்கிளிலை ஏத்திக்கொண்டு போறன்...''

அந்தப் பையை நெஞ்சுடன் சேர்த்துப் பிடித்தபடி அந்தப் பெண் எழுந்து மகளின் சைக்கிளில் மெல்ல அமர்ந்தாள்.

அந்த வெள்ளைத்துணியில் இருந்த இரத்தத்துளிகள் இப்போது இதயத்துள் ஒட்டிக்கொண்டன!

எழு சிறுகதைகள்
பெப்ரவரி–2001

# மனிதர்கள்

'கொக்கரக்கோ ஓஒ...'

சேவல் ஒன்று படபட வென்று செட்டைகளை அடித்துவிட்டு கூவியது. கூரைக்குள்ளால் சூரியவெளிச்சம் பொட்டுப்பொட்டாய் தெரிந்தது.

வடிவு எழும்பி உட்கார்ந்து கலைந்து தொங்கிய தலை மயிர்களைக் கூட்டி முடிந்துகொண்டாள். அவளுடைய நான்கு பிள்ளைகளும் மூலைக்கு மூலை ஒவ்வொரு விதமாக தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

மூத்தவள் பன்னிரெண்டு வயதுச் சிறுமி சுகந்தி சட்டை விலகி தொடைகள் தெரியக் கிடந்தாள். அவளுடைய சட்டையை இழுத்து முழங்கால்கள் வரை மூடிவிட்டு வடிவு வெளியே வந்தாள்.

முற்றத்தில் நின்ற நித்திய கல்யாணி மரத்தின் கீழ் பின்னேரம் அள்ளி வைத்த வாளித்தண்ணீர் நிலத்தில் ஊற்றுண்டு கிடந்தது. வாளி பக்கவாட்டில்

விழுந்து கிடந்தது.

முகம் கழுவிக்கொள்ள தண்ணீர் தேவையாக இருந்தது. பக்கத்து வீட்டில்தான் தண்ணீர் அள்ளப் போகவேண்டும். விடியவெள்ளன போகமுடியாது.

'விடிய எழும்பி முழுவியளத்துக்கு வரக்கூடாது... கிணத்தடியில் வைத்து குளிக்கவோ உடுப்புத் தோய்க்கவோ கூடாது...' என்ற நிபந்தனைகளுடன்தான் பக்கத்து வீட்டு ஐயா இவர்களைத் தண்ணீர் அள்ள அனுமதித்திருந்தார்.

"சனியன் பிடிச்ச நாய் அள்ளிவைச்ச தண்ணிய தட்டி ஊத்திப்போட்டுது... இனி அந்த மனுசன் எழும்பி காட்டுக்குப் போய்வந்து... கால்முகம் கழுவி... சாமிக்கு பூ வைச்சப்பிறகுதானே தண்ணி அள்ளலாம்..."

அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

வாசலில் குந்தியிருந்து எட்டியெட்டி பார்த்தாள். ஐயாவின் சிலமன் ஏதும் தெரியவில்லை. ஐயாவின் மனைவி கோகிலம் அன்ரி வவுனியாவுக்கு வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளிடம் காசு வாங்கப் போயிருந்தா.

"அன்ரி நிண்டாலும் எப்பன் கெஞ்சி மண்டாடினா இரக்கப்பட்டு தண்ணி அள்ள விடுவா... இந்த மனுசன் ஆகக் கொழுப்புப் பிடிச்சது..."

அவளுடைய கடைக்குட்டி ஜீவா எழும்பி சிணுங்கிய படியே அவளிடம் வந்தான். அதைப்பார்க்க இன்னும் எரிச்சலாக வந்தது அவளுக்கு.

"என்னப்பா... ஏன் அழுகிறாய்..."

"தண்ணி..."

இரண்டு வயதான அந்தக் குழந்தைக்கு தேநீர் கேட்கும் பழக்கம் இல்லாமலிருந்தது.

"இந்தா..."

போத்தலிலிருந்த தண்ணீரை எடுத்துக் கொடுத்தாள்.

இப்போது சின்னவள் ஜெயந்தி எழும்பி கண்களைக் கசக்கிக்கொண்டு வந்தாள். சின்னவள் சோலியில்லாதவள். ஏவும் வேலையெல்லாம் செய்பவள்.

"இஞ்ச வா சின்னவள். தண்ணி அள்ளவேணும்... ஐயா எழும்பிட்டாரோண்டு பாத்துக்கொண்டுவா... உள்ள போயிடாத..."

கண்களைக் கசக்கி தலையாட்டிவிட்டு சின்னவள் போனாள்.

"அம்மா... ஐயா பூப்பிடுங்கிக்கொண்டு நிக்கிறாரெனை..?"

சின்னவள் தூக்கம் கலைந்து போக குதூகலத்துடன் ஓடிவந்தாள்.

வடிவு வாளியை எடுத்துக்கொண்டு போனாள். ஐயா சாமி கும்பிட்டுவிட்டு வந்தார்.

"தண்ணி அள்ளுறன் ஐயா...?"

"ராத்திரி பஸ்சில மனுசி வருமெண்டு றோட்டில நிண்டு பாத்தன். ஆமிக்காரன் நேற்று ஆக்கள இஞ்சால விடேலையாம்..."

அவர் முகத்தில் வழமையான கடுகடுப்பு இல்லை.

"ஏனாமையா விடேல்லை..."

"ஆருக்குத் தெரியும்... இப்ப வவுனியாவுக்குப் போய் வாறதெண்டா வெளிநாட்டுக்குப் போய் வாறமாதிரிப் போச்சு..."

அவள் தண்ணீர் வாளியை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தாள். பிள்ளைகள் ஆரவாரப்பட்டு முகம் கழுவினார்கள். கடைசியாக மூத்தவள் முகம் கழுவினாள். அடுப்பில் சருவப்பானையை வைத்து எரித்த படியே...

"சுதா பள்ளிக்கூடம் போகவேணுமெல்லே..." அருட்டினாள்

வாசலில் சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. குசினுக்குள் இருந்தபடியே வரிச்சு மட்டைகளுக்கூடாக வாசலைப் பார்த்தாள்.

பேரம்பலம் மாஸ்ரரின் மகன் திலீபன் நின்றுகொண்டிருந்தான்.

"என்ன தம்பி?..."

"அம்மா அரிசி ஊற வச்சிருக்கிறாவாம்... இப்ப வரட்டாம்..."

பாடசாலைச் சீருடையுடன் புத்தகத்தைச் சுமந்து நின்ற அவனை

அவளுடைய பிள்ளைகள் விநோதமாகப் பார்த்தார்கள். புதிய இரத்தம் பாய்ந்தமாதிரி வடிவு சுறுசுறுப்பானாள்.

"சுதா... மாஸ்ரர் வீட்ட அரிசி இடிக்கப் போறன்... பின்னேரம் காசு வரும் தரலாமாம் எண்டு சொல்லி துரையண்ணையிட்டை ஒரு றாத்தல் பாண் வாங்கிவா..."

"ஐயோ... முந்தநாளும் இப்பிடிச் சொல்லித்தான் ஒரு குப்பி மண்ணெண்ணை வாங்கிவந்தனான். இன்னும் காசு குடுக்கேல்ல. நான் போகமாட்டன்..."

பழுப்பேறிய வெள்ளைச் சட்டை போட்டு பாடசாலைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த மூத்தவள் மறுத்தாள்.

"மூந்தினி நீ இஞ்ச வாம்மா... என்ர குஞ்சு..."

"என்னம்மா?..."

"துரையண்ணையின்ர கடையில போய்..."

"ஐயோ... நான் போகமாட்டன்... கடனுக்கு இனிமேல் வரக்கூடாதெண்டு காதிலை முறுக்கிக் கலைச்சவர்..."

சின்னவள் சோலியில்லாதவள். ஏவும் வேலையெல்லாம் செய்பவள்.

"சின்னவள்...சின்னவள்..."

"என்ன?... காசில்லாமல் கடைக்குப் போறதெண்டா நான் வரமாட்டன்..."

குரல் மட்டும் கேட்டது.

வடிவுக்கு அழுகை வந்தது. அழுகையை மீறிக்கொண்டு ஆத்திரம் வந்தது.

"எல்லாரும் இப்ப கதைக்கப் பழகிவிட்டியள் என்ன...?'
நீளமான தடியொன்றை உருவி எடுத்தாள்.

"அம்மா அடியாதைங்கோ... உந்தத் தடி சரியா நோகுமென உதால அடியாதையுங்கோ..."

அவள் தடியை தூர எறிந்தாள். விக்கி விக்கி அழத்தொடங்கினாள். நான்கு பிள்ளைகளும் மூலைக்கு ஒருவராய் நின்று அழுதுகொண்டிருந்தார்கள். பாவமாக இருந்தது. வடிவு தன் அழுகையை அடக்கிக் கொண்டாள்.

"சுதா... நீ பள்ளிக்கூடத்துக்கப் போ... சின்னவள் நீ தம்பியையும் தங்கச்சியையும் பாத்துக்கொள்... அம்மா வரேக்க ஏதும் கொண்டு வருவன்... கிபிர் வந்துதெண்டா பயந்து குளறக்கூடாது... தம்பியைத் தூக்கிப்போடு..."

வடிவு தேநீரைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து தானும் குடித்தாள்.

"தம்பி... அழாமல் இருங்கோ... போட்டுவாறன்..."

கடைக்குட்டி ஜீவாவை முத்தமிட்டுவிட்டு புறப்பட்டாள்.

வழியில் அரசமரத்தின் கீழ் அந்தப் பிள்ளையார் கோயில் இருந்தது. வீட்டைவிட்டு எங்கே புறப்பட்டாலும் அந்தப் பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் வடிவு போவாள்.

சிறிய கோயில் மண்டபத்துக்குள் மூன்று ஆட்டுக்குட்டிகள் அசைபோட்டபடி கிடந்தன. அவளைக் கண்டதும் அவை மிரண்டோடின. அவை சிறுநீர் கழித்த அடையாளமும், புழுக்கைகளும் கிடந்தன. அவள் பிள்ளையாரைப் பார்த்தாள். மெல்லிய முறுவலோடு அவர் தன்னைப் பார்த்துக்கொண்டு இருப்பதாகப்பட்டது அவளுக்கு. விழுந்து அவரை வணங்கிவிட்டு அவரிடம் எதையும் யாசிக்காது விபூதியைத் தொட்டு பூசிக்கொண்டு நடந்தாள்.

"அன்ரி... அன்ரி..."

"நிக்கிறன்... உள்ள வா வடிவு..."

இரும்புக்கேற்றைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனாள். இருபது ஆண்டு காலப் பழமையுடன் நின்ற அந்த வீட்டிற்கு போகும்போதெல்லாம் ஏற்படும் பிரமிப்பு இப்போதும் ஏற்பட்டது.

குசினி முற்றத்தில உடைத்த புளியம், செத்தல் மிளகாயும் தறப்பாளில் பரவி காயவிடப்பட்டிருந்தது. அன்ரி முழுகி பெரிய குங்குமப் பொட்டு வைத்திருந்தா.

"வடிவு... அரிசி இடிக்க முதல் கொஞ்சச் சரக்கு அரைச்சுத்தா...

அம்மிக்கறி சாப்பிட ஆசையாய் கிடக்கெண்டு வாத்தியார் சொல்லிப்போட்டுப் போறார்...

பெரிய தட்டில் தனித்தனியாகக் கொடுத்த எல்லாச் சரக்குகளையும் வடிவு அரைத்தாள்.

அவர்களுடைய அல்சேசன் நாய் நாக்கை நீட்டியபடி கூட்டுக்குள் அங்கும் இங்கும் நடந்துகொண்டிருந்தது.

அன்ரி நீள ஜக் நிறையப் பால் கரைத்துக்கொண்டு போய் அதன் தட்டில் ஊற்றிவிட்டு வந்தா. அது நாக்கால் மெதுவாக நக்கிக்கொண்டிருந்தது.

வடிவு கிணற்றடியில் வைத்து அரிசியை அலசி அலசி கழுவிக் கொண்டிருந்தாள்.

கிணற்றடியில் நிரையக் கமுகு மரங்கள் நின்றன. கர்ப்பூரவள்ளி... இஞ்சி... மஞ்சள்...மிளகு... தக்காளி...என்று சிறிய சிறிய செடிகளும் நின்றன.

"வடிவு ஏதும் இரைஞ்சா எனக்கும் சொல்லு."

அன்ரிக்குக் கிபீர்ச் சத்தம் எண்டால் நடுங்கும். கிபீர் இரையும் சத்தம் கேட்டால் வாளித் தண்ணியையும் தூக்கிக்கொண்டு கக்கூசுக்கு ஓடுவா.

குசினியின் வடக்குப் புறமாக நின்ற பெரிய மாமரத்தின் கீழ் பாய் விரித்து அதன்மேல் உரலை நிறுத்தி வடிவு மாவிடிக்கத் தொடங்கினாள்.

அன்ரி சமைக்கத் தொடங்கினா.

"அப்ப உன்ர ஆக்கள் உன்ர குழந்தைகளுக்கு சிலவு சித்தாயம் ஒண்டும் தாறேல்லையே..."

அன்ரி இப்படித்தான் சமையலுக்கு நடுவே பொழுது போக்காக சில கேள்விகளும் கேட்பா.

"மூன்று பெட்டையும் ஒரு பெடியனுமெல்லே உனக்கு... அடுப்பும் நெருப்புமாப் போச்சு... கூடாது... அதுதான் உவ்வளவு கஷ்ரம்... ஒரு பெடிச்சிய இஞ்ச விடன்... கூடமாட நிக்கட்டும்..."

"என்ர தாய் தகப்பன் விட்ட பிழைய நானும் விடக்கூடாதன்ரி... என்ர

பிள்ளையள் படிக்க வேணும்... அதுகளின்ர நிழலிலதான் நான் ஆறவேணும்...'

அன்ரி ஒன்றும் சொல்லவில்லை.

"நான் தங்கட சொல்லக் கேட்காம கலியாணம் கட்டினதெண்டுதானே... என்ர ஆக்களெல்லாம் ஒதுக்கினவியள்... அவயளுக்கு முன்னாலை என்ர பிள்ளையளை நிமிந்து நிக்க வைக்கோணும்..."

உலக்கையை உரமாகப் போட்டாள்.

"நான் சொல்லச் சொல்லக் கேட்காம வீடு பாக்கப்போய் கடைசியா... உடுத்துக்கொண்டு போன சாறத்தையும்... எலும்புத்துண்டுகளையும் தானே காணத்தந்தியள்..."

கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"இந்தா வடிவு... இதைக் குடி..."

நீள ஜக்கில் அன்ரி பிளேனீர் கொண்டுவந்து வைத்தாள்.

"உனக்கு நான் இருக்கிறன் அக்கா... உழைச்சுத் தருவன்..."

என்றுசொல்லும் தம்பி ஜீவாவின் நினைவும் வந்தது.

சூரியக்கதிரில் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் வாழ்ந்து அங்கும் சத்ஜெய விரட்ட விசுவமடுவுக்கு இடம்பெயர்ந்து பிறகு...

தம்பி ஜீவா இயக்கத்துக்குப் போய்விட்டான்.

இடையிலே லீவில் வீட்டுக்கு வந்து போனான். நீண்டு நெடுத்துப் பார்வையாய் இருந்த அவனைப் பார்க்கின்ற போதெல்லாம் அவளுக்கு முள்ளந்தண்டு சிலிர்ப்பதாக அவள் உணர்வாள்.

"அம்மா... குட்டிமாமா வாறார்..."

அவனைக் கண்டதும் குழந்தைகள் குதூகலிக்கும். அழுக்காகவும் போதிய வளர்ச்சியின்றியும் இருக்கும் குழந்தைகளை மடியில் தூக்கிவைத்து அவன் கொஞ்சுவான்.

"எல்லாரும் நல்லாப் படிக்கவேணும்..."

புத்தி சொல்லுவான். ஒருமுறை உள்ளே நிற்பதாக கடிதம் கொடுத்துவிட்டிருந்தான்.

“அக்கா... உன்னை விட்டுவிட்டு இயக்கத்துக்குப் போய்விட்டேன் என்று மனம் வருந்தாதே. உனக்காகவும் உன் போன்றவர்களுக்காகவும் என் மருமக்களுக்காகவும், அவர்களைப் போன்றவர்களுக்காகவும் தான் நான் இயக்கத்தில் சேர்ந்தேன்.”

என்று இருந்தது கடிதம்.

பிறகு ஆனையிறவுப் பகுதியில் நடந்த மோதல் ஒன்றில் அவன் விதையாகிப் போனான். அவன் இறக்கும்போது கடைக்குட்டியை வயிற்றில் சுமந்திருந்தாள் வடிவு.

ஆண் குழந்தை பிறந்தபோது தம்பியின் நினைவாக ஜீவா என்றே பெயரிட்டாள்.

“வடிவு அங்காலை மிளகாயையும் ஒருக்காப் பாத்துக்கொள்... கோழியள் கொத்திக் கிழறிப்போடும்...”

கோழிகளையும் கலைச்சுக் கலைச்சு அவள் மா இடித்தாள்.

சுடுதண்ணீர் வைக்கவும், பலகாரம் சுடவும், மா வறுக்கவும் என்று வெளியே வைத்திருக்கும் அடுப்பை வடிவு மூட்டினாள்.

கேற்றைத் திறந்துகொண்டு பேரம்பலம் மாஸ்ரர் வந்தார். அவரைக் கண்ட அல்சேசன் நாய் வாலை ஆட்டியாட்டி செல்லமாய் குரைத்தது.

பேரம்பலம் மாஸ்ரர் அதிகம் யாருடனும் கதைப்பதை வடிவு கண்டதில்லை. அளவாகவும் அவதானமாகவும் தான் கதைப்பார். அவரைக் கண்டால் கைகூப்பிக் கும்பிட வேண்டும் போன்ற மனநிலை ஏற்படும் அவளுக்கு. அறிவும் நிதானமும் அவரிடம் நிரம்பியிருப்பதாக அவள் நம்பினாள்.

அன்ரி குசினிக்குள் மாஸ்ரருக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தா.

“அன்ரி தாச்சியைத் தாங்கோ...”

அன்ரி தாச்சியைக் கொண்டு வந்தா.

“வடிவு... காலமையான் புட்டுக் கொஞ்சம் கிடக்கு சாப்பிட்டுப்போட்டு

வறுக்கத் தொடங்கன்"

"வேண்டாம் அன்ரி வறுத்து முடிச்சிட்டுப்பாப்பம்..."

வடிவு மா வறுக்கத் தொடங்கினாள்.

'கெதியா வறுத்துப்போட்டுப் போனால் துரையண்ணையின்ர கடன் காசைக் குடுத்திட்டு அரிசி வாங்கிக்கொண்டு போய் சமைக்கலாம்.' மனம் அசைபோட்டது.

"சாப்பிடுறாயும் இல்லை. இந்தா இதைக் குடி..."

அன்ரி நீள ஜக்கில் பிளேன்ரீ கொண்டுவந்து வைத்தாள்.

காலையில் மேய்ச்சலுக்குப் போன மாடுகள் தெருவில் திரும்பிப் போய்க்கொண்டிருந்தன. வடிவு மிகுதி விறகுகளுக்கு தண்ணீர் ஊற்றி நூத்தாள்.

"வடிவு உந்த மிளகாய் பழங்களையும் ஒரு காலிச் சட்டியில அள்ளு..."

வடிவு வியர்வையில் நனைந்து போயிருந்தாள். பூமரங்களில் குருவிகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. பேரம்பலம் மாஸ்ரர் குட்டித் தூக்கம் முடித்துக்கொண்டு கிணற்றடிக்குப் போனார்.

திறந்திருந்த கதவு வழியாக சுவரில் கொளுவப்பட்டிருந்த காந்தி... விவேகானந்தர்... ராமகிருஷ்ணர்... பரமகம்ஷர்... யோகசுவாமிகள்... சாயிபாபா... எல்லோருடைய படங்களும் தெரிந்தன. அவை மிகவும் அழகாகவும் சாந்தமாகவும் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

"வடிவு புட்டைச் சாப்பிடுறீயே..."

"வேண்டாம் அன்ரி... பிள்ளையள் பாத்துக்கொண்டு இருக்குங்கள்... மினக்கெடாமல் போகவேணும்..."

"உனக்குக் காசு தரவேணும் வடிவு... இண்டைக்கு வெள்ளிக்கிழமையாக் கிடக்கு... வெள்ளன மூத்தவளை விடன் குடுத்துவிடுறன்..."

அன்ரி நீள ஜக்கை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். வடிவு றோட்டுக்கு வந்தாள். கைகால்களில் சோர்வு தெரிந்தது. வழியில் பிள்ளையார் கோயில். அவள் பிள்ளையாரைப் பார்த்தாள். அவர் அதே புன்முறுவலோடு

அமர்ந்திருந்தார். பிள்ளையார் கோயில் வளவுத் தென்னை மரங்களில் குரங்குகள் தொங்கி விளையாடிக் கொண்டிருந்தன.

அவள் வீட்டுக்கு வந்தாள்.

"அம்மா வாறாடா..."

சின்னவள் சொல்ல முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து அவளின் வெறுமையைக் கண்டு அப்பிடியே நின்றார்கள்.

வெளிச்சம்
பவள இதழ்
2001

# அவள் வகுத்த வழி

பாடசாலையிலிருந்து அவள் வீடு வந்தவுடன் அம்மா அவளிடம் அந்தக் கடிதத்தைத் தந்தாள்.

இவளுக்குப் பரபரப்பாயிருந்தது. தாறுமாறாக உறையைக் கிழித்து கடிதத்தைப் படித்தாள்.

'கலா... ஒரு மாதிரி எவ்வளவோ கஷ்ரங்களுக்கு மத்தியில் நான் ஜேர்மனிக்கு வந்து சேர்ந்துவிட்டன். பலர் சிறிலங்காவுக்கு திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர். விரைவில் உன்னைக் கூப்பிடுவேன்...'

அவளுக்கு மகிழ்ச்சி தாளமுடியவில்லை. கணவனைப் பிரிந்திருக்கும் துன்பமா... அல்லது அவன் ஜேர்மனிக்குள் இறங்கிவிட்டான் என்கின்ற மகிழ்வா என விளங்கிக்கொள்ள முடியாமல், உதடுகள் துடிக்க... விம்மி அழுதாள்...

"என்ன மோன... என்ன...?"

அம்மா பதறினாள். கடிதம் அவள் கண்ணீரில் நனைந்து விட்டிருந்தது.

"அவர் ஜேர்மனிக்குள் இறங்கிவிட்டாராம்..."

"அதுக்கேன் மோன அழுகிறாய்...? நல்ல விசயம்தானே..."

அவள் இன்னும் அழுதாள்.

ஒருவேளை கணவனின் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அழுகிறாளோ... என்று கணித்தவள் போல

"இனியென்ன கெதியில கூப்பிடுவார்தானே... அழாம கால் முகத்தைக் கழுவிப்போட்டு வந்து சாப்பிடு..."

அவள் இயல்பு நிலைக்கு வர நீண்ட நேரம் எடுத்தது... அந்தக் கடிதத்தை பலமுறை படித்துப்படித்து பரவசமுற்றாள்.

அவனும் அவளும் இரண்டு மூன்று வருடங்களாக காதலித்திருந்தார்கள். அவனுடைய வீட்டில் சிறிது அதிருப்தி இருந்தது. அவனை வெளிநாட்டுக்கு அனுப்ப அவன் பெற்றோர்கள் முயன்றார்கள்.

போவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அவனும், அவளும் திருமணப்பதிவு செய்துகொண்டார்கள். ஜேர்மனியில்தான் சம்பிரதாயபூர்வமான திருமணம் என்று அவன் சொல்லியிருந்தான். அவள் பாடசாலையொன்றில் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக இருந்தாள்.

சக ஆசிரியர்களும் சரி... மாணவர்களும் சரி... அவளிடம் அதீத அன்பு கொண்டிருந்தார்கள்.

மாணவர்கள், பெற்றோர்கள் அவளை நேசித்தார்கள்.

பாடசாலை விளையாட்டுப் போட்டி என்றால் என்ன? பரிசளிப்பு விழா என்றால் என்ன? அதிபர் அவளிடம் பொறுப்புத்தந்துவிடுவார். அவள் நன்றாகப் பாடுவாள். கவிதைகள் எழுதுவாள். மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவாள்...

பாடசாலையில் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொன்விழா கலை நிகழ்ச்சிக்கு கலாவைத்தான் அதிபர் பொறுப்பாக்கினார்.

"கலைவாணியெண்டு உமக்கு அம்மா அப்பா பெயர் வைச்சதால உம்மட்ட ஒரே கலை உணர்வாத்தான் இருக்கு...."

உதவி அதிபர் சிவகாந்தன் சொன்னர்.

கலகலப்பு... சுறுசுறுப்பு... கெட்டித்தனம்... பிரயாசை எல்லாம் அவளிடம் இருந்ததாக எல்லோரும் உணர்ந்தார்கள்.

0 0 0

சக ஆசிரியை ஒருவரின் மகளுக்குப் பிறந்தநாள். குதூகலமாகச் சென்று வந்தவளிடம் அம்மா கடிதத்தைத் தந்தாள். வழமையான பரபரப்பு...

"கலா... இப்ப கொஞ்சநாளா எனக்கு நிம்மதியில்லை. உன்னைப்பற்றி சில செய்திகள் கிடைத்தன. மற்றவை பிழையாகப் பார்க்கிற அளவுக்கு நீ நடக்காம இரு..."

அவளுக்குப் புருவங்கள் வலித்தன...

"என்னவாம் மோன... வேலை ஏதும் செய்கிறாராமே..." அவள் பெருமூச்சோடு அறைக்குள் போனாள்.

"பிள்ளை சாப்பிட வாவன்..."

"வேண்டாம் பசிக்கேல்லை..."

அம்மா போனாள். பத்து நிமிடங்கள் கழிந்தன.

"பிள்ளை சாப்பிட வாவன் மோனை..."

"எனக்குப் பசிக்கேல்லை... நீங்கள் சாப்பிடுங்கோ..."

"போன பெடியன் எப்பிடியும் உன்னைக் கூப்பிடும் தானே... ஒண்டுக்கும் யோசியாதை மோனை சாப்பிடு..."

அவளால் அன்று முழுவதும் உணவு உண்ண முடியாதிருந்தது.

'அவனுக்கு என்ன செய்தி கிடைத்ததாம்...' யோசித்து யோசித்து உழன்றாள். தலைவலி தாங்க முடியாது பனடோல் போட்டாள். 'என்ன செய்தி... என்ன செய்தி...' மனம் கேட்டுக்கேட்டுத் துவண்டது.

“கலா ரீச்சர்... உங்களுக்கு என்ன நடந்தது...”

அவளுடைய முகவாட்டம் எல்லோரையும் கேட்க வைத்தது.

“ஒண்டுமில்லை...”

பொய்யாய் சிரிக்க முயன்றாள்... இரவு முழுதும் விழித்திருந்து பக்கம் பக்கமாக அவனுக்கு கடிதம் எழுதி காலையில் தபாற் பெட்டிக்குள் போட்டுவிட்டுப் போனாள்...

இரண்டொரு நாட்களில் அதே கலகலப்பும், அதே சுறுசுறுப்பும் அவளாக வரவழைத்துக் கொண்டாள்...

நாட்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்தன...

0 0 0

மழை பொழிவதற்குத் தயாராக இருந்தது. அன்றைய மாலைப்பொழுது நூலகம் ஒன்றுக்குச் சென்று திரும்பியிருந்தாள் அவள். அவளின் மேசையில் கடிதம் இருந்தது.

வழமையான அவனுடைய கைபட எழுதிய முகவரி. அவள் உடைமாற்றி கால்முகம் கழுவிக்கொண்டு வந்து கடிதத்தைப் பிரித்தாள்.

‘கலா... நான் பைத்தியம் பிடித்து ஜேர்மன் தெருக்களில் அலைவதை நீ விரும்புகின்றாயா...? தயவுசெய்து அந்த அதிபருடன் சிரித்துச் சிரித்துக் கதைக்காதே... ஆண் ஆசிரியர்களுடன் நெருங்கிப் பழகாதே... நீ தினமும் ஊர் சுற்றி எங்கே திரிகிறாய்...?’

அவள் இதயத்துள் குருதி கொப்பளிப்பது போலிருந்தது.

“முட்டாள்...”

அவளையும் மீறி குரல் பெரிதாக ஒலித்தது.

“என்ன பிள்ளை...?”

“ஒண்டுமில்லை...”

கடிதத்தை பல துண்டுகளாகக் கிழித்து ஜன்னலூடாக வெளியே வீசினாள்.

பாடசாலையில் இருந்து கொண்டுவந்த பாடத்திட்டக் குறிப்புக் கொப்பிகளை பார்வையிட ஆரம்பித்தாள்.

அவள் பார்வையில் உறுதியிருந்தது. தன்னம்பிக்கை இருந்தது.

அவளை உற்றுப்பார்த்தபடி நின்ற அம்மா திரும்பி குசினிக்குள் நுழைந்துகொண்டாள்.

இரவு நெடுநேரம்வரை விழித்திருந்து பாடசாலைப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள்.

நாற்று
இதழ் -19
2002



# முரண்கள்

சில பதிவேடுகளும் குறிப்புப் புத்தகங்களும் அவருக்கு முன்னால் இருந்தன. அவர் தூரத்தே தெரிந்த தென்னந்தோப்பைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்திருப்பவர் போல் தெரிந்தார். சில நாட்களாய் எதிலும் ஒட்டிக்கொள்ள விரும்பாத மாதிரி அவர் மனம் அழுத்தமுற்றிருந்தது.

கிளிகளும் குருவிகளும் தென்னோலையில் இருப்பதும் பறப்பதுமாய் அமளிப்பட்டுக் கொண்டிருந்தன. வானத்தின் மென்நீலப் பின்னணியில் தென்னை மரங்களின் தலைகளைத் தடவும் சூரியனின் கதிர்கள் பளபளத்தன.

வாசலில் மோட்டார் சைக்கிளொன்று வந்து நிற்கும் சத்தம். அவர் யோசனையில் இருந்து விடுபட்டவராய் நிமிர்ந்தார். ஜன்னலூடாக அவன் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவன் வழக்கமாக வருகின்ற பழக்கமானவன்.

எழும்பிச் சேட்டை எடுத்துக் கொளுவினபடியே

"வாரும் தம்பி..."

என்றார். அவனோடு இன்னொருவனும் வந்திருந்தான்.

"வணக்கம் சேர்..."

"வணக்கம்..."

பரபரத்தார். அவரது மேசைக்கு முன்னாலிருந்த வாங்கில் இருவரும் அமர்ந்தார்கள். புதிதாக வந்திருந்தவன் அறையின் நான்கு பக்கங்களையும் கண்களால் துருவிப் பார்ப்பதை அவர் உணர்ந்தார்.

"உடம்பேதும் சரியில்லையோ சேர்..."

"... இல்லத்தம்பி... சாடையான அலுப்பு..."

சிறுபுன்னகையோடு கொண்டுவந்த புத்தகங்களையும் பைல்களையும் அவன் அவர் முன்னே மெதுவாக வைத்தான்.

"இந்தமுறை புத்தகங்கள் கிடைக்கப் பிந்திப்போச்சு சேர்... குறை நினைக்காமல் கொஞ்சம் நேரத்தோடை அலுவலை முடிச்சுத் தரவேணும்..."

அவர் தலையாட்டினார்.

"அப்ப வரப்போறம் சேர்..."

"இருங்கோ தம்பி ரீ குடிச்சிட்டு..."

"இல்ல சேர்... வேற அலுவலும் கிடக்கு... ஆறுதலா வாறம்..."

அவர்களுடன் அவரும் கேற்வரை வந்தார். புதிதாக வந்தவன் மோட்டார் சைக்கிள் ஸ்ராட் செய்தான். அது அனுங்கிவிட்டு மௌனமானது. திரும்பவும் இரண்டு முறை முயற்சித்தான். ஸ்ராட் வரவில்லை.

அவனின் சேட் முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டது. நெற்றியிலும் கன்னங்களிலும் வியர்வை உருண்டது.

"சூப்பியைக் காட்டு மச்சான்..."

அவன் சூப்பி என்று சொல்லப்படுகின்ற பெற்றோல் நிரம்பிய சிறிய

குப்பியை எடுத்து சிறிய குழாயினூடு பிதுக்கினான். மற்றவன் ஸ்ராட் செய்தான்.

புகையைக் கக்கிக்கொண்டு மோட்டார் சைக்கிள் உறுமியது.

"வாறம் சேர்..."

தலையசைத்தார். தெருப்புழுதியை வாரிக்கொண்டு போனார்கள். அவர் உள்ளே வந்து மேசையின் முன்னால் அமர்ந்தார். பைல்களைப் புரட்டிப் பார்த்தார். அவசரமாக செய்து கொடுக்கவேண்டிய வேலை.

நெற்றிப்பொட்டில் கையை வைத்துக்கொண்டு பார்வையை வெளிச்செலுத்தினார். ஜன்னலுக்கு நேரே வீதிக்கு எதிர்ப்புறமாய் கதிரின் தேநீர்க் கடையில் இரண்டு மூன்று இளைஞர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

கதிர் நிலத்தில் வைத்து பெற்றோல் மாக்ஸ் கொளுத்திக் கொண்டிருந்தான்.

அவர் மனைவி அறைக்குள் வந்து அரிக்கன் லாம்பைத் துடைத்துக் கொளுத்துவதற்காக எடுத்துக்கொண்டு போனாள். அவர் இன்னமும் வெளியே பார்த்தபடி இருந்தார்.

"அப்பா... அப்பா..."

அவரது ஏழு வயது மகன் கார்த்திக் ஓடி வந்தான்.

"இவரால தானே அப்பா ஆக்களுக்குக் காச்சல் வாறது...?"

அவனுடைய கையில் செத்த நுளம்பொன்று இருந்தது.

"நுளம்பால எப்பிடியப்பா மலேரியா வாறது...?"

அவருடைய மனநிலைக்கு சிறிதும் சம்மந்தமில்லாத கேள்வியது. ஆனால் சின்ன வயதின் ஆர்வமது. தேடலை அலட்சியம் செய்துவிடக் கூடாது என்கின்ற உணர்வும் எழுந்தது. மகனுக்கு நுளம்பிலிருந்து மலேரியாக் கிருமிகள் பரவும் விதத்தை விளங்கப்படுத்தினார்.

அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏனைய நுளம்புகளையும் துரத்தி அடிப்பதற்காக ஓடினான்.

மனைவி அவர் முன்னால் அரிக்கன் லாம்பையும் தேநீரையும்

வைத்துவிட்டுப் போனாள்.

பைல்களையும் பதிவேடுகளையும் தூக்கி வைத்துவிட்டு இளைஞர்கள் தந்த புத்தகங்களைப் புரட்டினார். சில வரலாறுகள் அதில் இருந்தன. ஆங்கில மொழி மூலமான அந்த வரலாறுகளை இளஞ் சந்ததியினருக்காக தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் பணி அவருக்குத் தரப்பட்டிருந்தது.

மூலத்தைச் சிதைக்காமலும், நல்ல முறையிலும் மொழிபெயர்க்கும் திறமை அவருக்கு இருந்தது. நீண்ட காலமாய் அவர்களுக்கு இப்பணியைச் செய்த போதும் விளம்பரங்கள் ஏதுமின்றி அவர் இருந்தார்.

புத்தகம் ஒன்றின் ஓரிரு பக்கங்களைப் புரட்டி மேலோட்டமாய் படித்துக்கொண்டிருந்த போது கதிரின் தேநீர் கடையில் இருந்து ரேப் றெக்கோடர் பாடத் தொடங்கியது. நிமிர்ந்து பார்த்தார்.

பெற்றோல் மாக்ஸ் வெளிச்சத்தில் நாலைந்து இளைஞர்கள் வாங்கில் அமர்ந்திருந்தார்கள். பழுத்த வாழைக்குலைகள் இரண்டு கயிற்றில் தொங்கிக்கொண்டிருந்தன.

தெருவைத்தாண்டி பாடல் ஒலியும் இளைஞர்களின் சிரிப்பொலியும் அவரைக் குழப்பின. தாய்மொழியைக் கொல்லும் அந்தச் சினிமாப் பாடலை அவரால் சகித்துக்கொள்ள முடியாமல் இருந்தது. அண்மைக்காலமாக இது ஓர் அவஸ்தையாக அவருக்குப் பட்டது.

காலை ஏழு முப்பதுக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு அலுவலகத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வீடு திரும்புகையில் தினமும் கதிரின் தேநீர்க்கடை அவருக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தது. திரும்பத் திரும்ப ஒரே பாடல்கள். அதுவும் அளவுக்கதிகமான ஒலி அதிர்வுடன்.

கதிருக்கு நாலு வார்த்தை சூடாகப் பேச வேண்டும் என்று சிலநேரங்களில் முயன்று பார்த்திருந்தார்.

பாடசாலை ஆசிரியையான அவரது மனைவி காலையில் அவசரமாக குசினிக்குள் வேலையாய் இருக்கும்போது கதிரின் கடையடிக்கு அவர் போவார்.

காலையில் அவனுக்கு பிஸ்னஸ் அமளியாக இருக்கும். தேநீர் கலக்குவதும் சிற்றுண்டிகளைப் பரிமாறுவதுமாய் அவன் ஆரவாரப்படுவான்.

அவரைக் கண்டதும் தன்வேலைகளை நிறுத்தி வணக்கம் சொல்லி ஸ்டூலை எடுத்துப் போடுவான். அதே அவசரத்துடன் தேநீர் கொடுப்பான்.

காலைப் பத்திரிகையை கூட அவனது கடையிலையே அவர் படித்துக்கொள்வார்.

சில்லறைகளை எடுத்து நீட்டினால் இருக்கட்டும் என்று வாங்க மறுத்துவிடுவான். அவருடைய அறிவுக்கும் வயதுக்கும் அவன் கொடுக்கும் மரியாதையாக இது இருக்கலாம் என எண்ணிக்கொள்வார்.

தேநீர் குடித்து பத்திரிகை படித்த பின்பும் சிறிது நேரம் ஸ்டூலில் அமர்ந்திருப்பார்.

பாடலைப்பற்றி சொல்லவா? என்று மனம் போராடிக் களைக்கும். எதுவுமே சொல்லாமல் வீட்டுக்கு வருவார்.

அவர் இப்போதும் கடையையே பார்த்துக்கொண்டிருந்தார். பாடல் அதிகமான ஒலியுடன் அதிர்ந்துகொண்டிருந்தது. தேநீர் பரிமாறும் மேசையில் தட்டித் தாளமிட்டு மகிழ்ந்துகொண்டிருந்தார்கள் இரு இளைஞர்கள்.

அவர் தவிர்க முடியாமல் இளமைப் பராயத்து மாலைப் பொழுதுகளை எண்ணிப் பார்த்தார். அவரது இளமைப் பராயத்து மாலைப்பொழுதுகள் திருமுறை வகுப்புக்களிலும் புராண இதிகாச சொற்பொழிவுகளிலுமே கரைந்திருந்தன.

திருமுறைப் பாடல்களை பண்ணிசையில் சொல்லித்தரும் தன் குருவை மனக்கண்ணில் நிறுத்திப் பார்த்தார்.

கை பிடியளவு குடுமியும் காதுகளில் கடுக்கன்களும், இடுப்பில் நான்கு முழ வேட்டியும் அணிந்திருக்கும் குருநாதர் அவர் முன் பிரசன்னமானார். அவருக்கு கல்வியூட்டியதற்குப் பரிகாரமாக குருநாதர் அவரிடம் ஒரு போதும் பணம் பெற்றுக்கொண்டதில்லை.

'கல்வியையும் கலையையும் வைத்து காசு பண்ணக்கூடாது' என்று அவர் அறிவுரை கூறுவார். அலுவலக வேலைகள் தவிர்ந்து பிரத்தியேகமாகச் செய்யும் கடமைக்கு அவர் ஒருபோதும் காசு வாங்கியது கிடையாது.

தன்னுடைய தொண்ணூற்று மூன்றாவது வயதில் குருநாதர் உயிர் நீந்தபொழுது அவருடைய பூதவுடலை அடக்கம் செய்யும் நிகழ்வில் கூட அவரால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

அவர் ஊரிலிருந்தபோது அவர் வீட்டுக்கு வரியுடை தரித்தவர்கள் வந்து செல்வதும் அவர்களின் வாகனங்கள் தேவை கருதி வீட்டுக்கு வந்து

போவதும் அவர் வரியுடை தரித்தவர்களூடாக அரிய பணி செய்வதை யாவரும் அறிவர் என்பதாலும் அவர் ஊருக்குப் போய்வர அச்சமுற்றிருந்தார்.

இப்பொழுது அவரின் காதுகளுக்கு மிக அருகே சில நுளம்புகள் பாடத் தொடங்கின. அவர் மேசை லாச்சிக்குள் இருந்து உடனடியாக நுளம்புத்திரியொன்று எடுத்துக் கொளுத்தினார்.

அவசரமாகச் செய்து கொடுக்கவேண்டிய வேலைகள் உறுத்தின. மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துவிட்டு கண்களில் பொருத்திக் கொண்டார்.

ஆங்கிலப் புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டினார். புத்தகத்துக்கான முன்னுரையைப் பார்த்தார். எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் முதலில் முன்னுரையைப் படிக்கும் பழக்கம் அவரிடம் இருந்தது.

முன்னுரையை அவர் படித்துக்கொண்டிருக்கும்போது கதிரின் தேநீர் கடையில் இருந்து ஒலிக்கும் பாடல் அவர் செவிகளில் நுழைந்தது.

அவருக்குள் இப்போது சினம் மூளத் தொடங்கியது. வேண்டுமென்றே கதிர் தன்னைக் குழப்புவதாக எண்ணும் குரூரம் அவருள் உருக்கொள்ளத் தொடங்கியது. கோபம் பாவத்தைத் தேடும் என்று குருநாதர் கற்பித்ததை நினைவூட்டி மனதைக் கட்டுப்படுத்த முயன்றார். கண்களை மூடிக்கொண்டு தியானித்தார்.

அவன் கல்வியறிவு நிரம்பாதவன்... தன் அறியாமையால் இந்தத் தவறைச் செய்கிறான். அவனுக்கு அதைப் புரியவைக்க வேண்டும். தன்னை ஒருமுகமாக்கினார்.

இப்போதே கடைக்குப்போய் கதிரை அழைத்து நிதானமான முறையில் அவனுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

புத்தகத்தை மூடி அரிக்கன் லாம்பைத் தனித்து வைத்தார். ரோச் லைற்றைக் கையில் எடுத்துக்கொண்டு கதவைப் பூட்டினார்.

மகனும் மனைவியும் தூங்கியிருக்க வேண்டும். ஏதுவித சிலமனையும் காணாததால் எண்ணிக்கொண்டார்.

முன் கதவை நீக்கி வாசலில் இறங்கினார். படியில் ஒரு உருவம் அமர்ந்திருப்பதாகத் தெரிந்தது. ரோச் லைற்றை அடித்துப் பார்த்தார். அவர்

மனைவி கால்களை நீட்டியபடி அமர்ந்திருக்க அவள் மடியில் அவர்களின் மகன் உறங்கியிருந்தான்.

“ஏன் உதில இருக்கிறீர்?... இருட்டில பாம்பு பூச்சி எதும் வந்தால்...”

ரோச் லைற்றை நிறுத்திவிட்டுக் கேட்டார்.

“கதிர் நல்ல பாட்டுக்கள் போடுறான்... அதுதான் இதில இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறன்...”

மனைவியின் பதில் அவருக்கு வியப்பாக இருந்ததா? வேதனையாக இருந்ததா? என்று அவருக்கே புரியாத நிலையில் அவர் படி இறங்காமல் அப்படியே நின்றுகொண்டிருந்தார்.

வெளிச்சம்
ஆடி, ஆவணி 2002

# இயல்பு நிலை திரும்பாதவர்கள்

நாளைக்குப் பௌர்ணமி தினம். நிலவு பளபளத்துக்கொண்டிருந்தது. சினிமாப் பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி நான் சைக்கிளை மிதித்துக்கொண்டிருந்தேன்.

எங்கேயோ இரவுச் செய்தி வானொலியில் கேட்டுக்கொண்டிருந்தது. தூரத்தே சிறியனின் சுவையகத்தில் மின்னொளி தெருவரை பளிச்சிட்டுக்கொண்டிருந்தது.

முன்பென்றால் இந்த நேரம் தெருவில் யாருமே நடமாட முடியாது. வீடுகளில் மின்னொளி பாவிக்க முடியாது. ஆயுதத்துடன் வீதிகளில் இராணுவத்தினர் நடமாடுவார்கள். தெருவைத் தேய்த்துக்கொண்டு இராணுவ வாகனங்கள் மட்டும் ஓடும். என்னை விலத்திக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் பறக்கின்றன. எதிரே ஒளியை

உமிழ்ந்துகொண்டு ஏதோ ஒரு வாகனம். இராணுவ சென்றிகள் கூட இப்போது இல்லை.

நான் வீட்டுக்குத் திரும்ப ஒரு நிமிடம் தாமதித்தாலும் முன்பு அம்மா பதறிப்போவாள். இப்படித்தான் முன்பு ஒருதடவை ஏதோ அவசரத்தில் அடையாள அட்டையை வீட்டில் விட்டுவிட்டுப் போய்விட்டேன். சந்தியில் இருந்த சென்றிப் பொயின்ரில்– இராணுவத்தினர் அடையாள அட்டையைக் கேட்டபோது நிலைமை பிசகியது.

உள்ளே அழைத்துப்போய், ஏராளமான கேள்விகள் கேட்டு, கன்னத்தில் இரண்டு போட்டு அனுப்பினார்கள். நிச்சயமாக என் கன்னத்தில் அறைந்தவனுக்கு என்னைவிட வயது குறைச்சலாகத்தான் இருக்கும். அக்கணம் ஆத்திரமும் அவமானமும் எழுந்தன. ஆயினும் இயலாமையுடன் வீடுவரத்தான் முடிந்தது.

எங்கள் வீட்டுக்கு அண்மையில் இருந்த இரு கடைகளும் திறந்திருந்தன. ஒன்று சின்னமணி அக்காவின் பலசரக்குக் கடை. மற்றது பிரசாத்தின் வீடியோக்கடை.

பின்னேரம் நானும் தேவகாந்தனும் சிற்றுண்டிச் சாலையில் தேநீர் குடித்தபடி தற்போதைய நிலைமைகள் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தோம்.

“மச்சான்... பாத்தியெடா... என்ன மாதிரி இயல்புநிலை திரும்பியிட்டுதெண்டு...?”

வானத்தில் தெரிந்த நிலவு அவன் முகத்தில் பளிச்சிட்டது.

“எதை வைச்சுக்கொண்டு அப்படிச் சொல்லுகிறாய் இப்ப...?”

கையில் இருந்த சிகரெட்டை ஒருதரம் உறுஞ்சினேன். சிகரெட் பிடிப்பது எங்கள் பரம்பரையில் இல்லை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக அந்தப் பழக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது. அதுவும் இங்கே சிற்றுண்டிச் சாலையில் மட்டுந்தான்.

“இரவில் சனம் திரியுது... வாகனங்கள் ஓடுது... கடையள் திறந்திருக்கு... சென்றிப் பொயின்ரில ஆமி நிக்கிறேல்ல... நிண்டாலும் ஐ.சி கேக்கிறேல்ல...”

நான் புன்னகைத்தேன்.

“ஏன் நான் சொல்லுறது பொய்யோ...?”

சின்னவிரல் நகத்தைக் கடித்தபடி அவனைப் பார்த்தேன்....

"சுத்திவளைப்பில்லை... விசாரணை இல்லை... கெடுபிடிகள் குறைவுதானே... இயல்பா இருக்கிறம்... நீ என்ன சொல்லுறாய்...?"

நான் எதுவும் சொல்ல விரும்பாதவனாய் எழுந்தேன். அவ்விடத்திலேயே பிரிந்தோம்.

கடந்த காலத்தின் சில வடுக்களை அசைபோட்டபடி போய்க் கொண்டிருந்தேன். வீட்டினுள் மின் விளக்கு எரிவது தெரிந்தது. அம்மாவும், தம்பியும், தங்கச்சியும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார்கள். அம்மா இப்போது நன்றாக சினிமாப் படம் பார்ப்பா.

எங்கள் வீட்டிற்கு எதிர் வீடு பரஞ்சோதி அக்காவினுடையது. ஒன்பது மணிக்குப் பிறகு அங்கே சனம் நிற்கும். அவ கொமினிக்கேசன் வைத்திருக்கிறா. வெளிநாட்டுக் கோல்கள் இரவில்தான் வரும். அதனால் அக்கம் பக்கத்துப் பெண்கள் இரவில் நடுச்சாமம் கழியும் வரை பரஞ்சோதி அக்காவீட்டில் கூடுவது வழக்கமாகியிருக்கிறது.

இராணுவத்தினரும் சில வேளைகளில் தம் குடும்பத்தினருக்கு கோல் எடுக்க பரஞ்சோதியக்கா வீட்டுக்கு வருவார்கள். ரெலிபோனில் கதைத்துவிட்டு கூடி நிற்கிற பெண்களுடன் பகிடி விட்டுச் சிரித்துவிட்டுப் போவார்களாம்.

இப்படி ஒருநாள் ரெலிபோன் கதைக்கவென்று வந்த இரண்டு ஆமிக்காரன்கள் கூறினார்களாம்...

"எங்களுக்குச் சண்டை பிடிக்க விருப்பமில்லை. ஒற்றுமையா வாழத்தான் விருப்பமெண்டு..."

"ஆருக்குத்தான் சண்டை பிடிக்க விருப்பம்... சண்டை வலிய வருகுது போராடுறம்..."

வீட்டு வாசலில் யாரோ குந்திக்கொண்டிருப்பது தெரிந்தது. வழமையாக வீடு திரும்பும் நேரத்தை விட இன்று சற்று அதிகமான நேரந்தான் கடந்துவிட்டது. ஏதாவது ஒரு காரணத்தை தேடிப்பிடித்து அம்மாவிடம் கூற முயன்றபடி வாசலில் இறங்கினேன்.

கூர்ந்து பார்த்த போது– இருளில் குந்தியிருந்தது அம்மாவல்ல! அது–அவன்.

மனிதர்கள்

—ஆதிலட்சுமி சிவகுமார்

அவனை எல்லோருக்கும் தெரியும். அவனுக்கு இருபது வயதிருக்கலாம். விலா எழும்புகள் வெளித்தெரிய... அரும்பு மீசை தாடியுடன் ஊரெங்கும் உலாவுபவன்.

இரண்டு கைகளின் விரல்களின் சுட்டு விரல்களும் அவனுடைய காதுத் துவாரங்களை அடைத்திருக்க அவன் நடப்பான்.

இப்போது அவனை எனக்கு அடையாளம் தெரிந்தது. அவன் எங்கள் மதிலோரமாய் காதுகளைப் பிடித்தபடியே பதுங்கியிருந்தான். அவன் மனநிலை குழம்பியவன்.

அவனைப் பார்த்ததும் என்றுமில்லாதளவு துயரம் நெஞ்சுக்குள் பெருகியது.

எங்கள் ஊரைச் சேர்ந்தவன்தான். அவனுடைய தகப்பன் தச்சு வேலை செய்பவர். இந்திய இராணுவம் குண்டுவைத்துத் தகர்த்த எங்கள் வீட்டின் கூரை வேலையை அவர்தான் மீண்டும் செய்துதந்தவர். அவருடன் சிறு பொடியனாய்– எடுபிடியாய் வந்ததைப் பார்த்தேன். பாடசாலையில் எங்கள் தம்பியின் வகுப்பில்தான் படித்துக்கொண்டிருந்தான்.

தொண்ணூற்று ஐந்தில் யாழ்ப்பாணம் முழுவதும் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்துக்கொண்டிருந்த நேரம்.

அவனுடைய வீட்டு முற்றத்தில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. தாயும் தங்கையும் அவ்விடத்திலேயே சிதறிச் செத்துவிட, இவனும், இவனுடைய இரண்டு தம்பிகளும், அப்பாவும் மட்டும் பலத்த காயங்களுடன் தப்பினார்கள். தகப்பனுக்கு காலொன்று துடையளவில் துண்டிக்கப்பட்டுவிட, இவன் உடற்காயங்கள் மாறியும் மனநிலை குழம்பிய நிலையில்!

இவனைக்கூட இங்கிருக்கும் இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. இரவில் நடமாடினான் என்று குற்றம் சாட்டி, பிடித்துக்கொண்டு போய் அடித்து துன்புறுத்தியபின் விடுவித்தனர்.

ஒரு இடத்தில் ஐந்து நிமிடங்கள் கூட இவனால் நிம்மதியாக இருக்க முடியாது. எறிகணை இரையும் சத்தம் எப்பொழுதும் இவனுக்குக் கேட்டுக்கொண்டிருக்கும் போல. யாராவது உணவு கொடுத்தால் கூட அதை அள்ளிச் சாப்பிடுவதற்கு கைகளை எடுக்கமாட்டான். காதுகளைப் பொத்திய படியே குனிந்து, நாய் சாப்பிடுவது போல வாயால் கௌவிச் சாப்பிடுவான். சாப்பிட்ட குறையில், காதுகளைக் கூர்மைப்படுத்தி எதையோ கிரகிப்பவன்

போலத் தோற்றம் காட்டிவிட்டு ஓடிவிடுவான்.

நிலவு ஒளியில் நான் அவனைப் பார்த்தேன்.

நான் வந்தது கூடத் தெரியாமல் சுவர் அருகே குந்தியிருந்தான்.

"சாப்பிட்டியா...,"

"......"

"சாப்பாடு வேணுமா...?"

"......"

அவன் இந்த உலகில் இல்லாதவனாய் தெரிந்தான்.

நான் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே போனேன். மனது மிகவும் சோர்ந்து போயிருந்தது. அம்மா குசினி லைற்றைப் போட்டாள்.

"எனக்கு சாப்பாடு வேண்டாமம்மா..."

"ஏன் தம்பி... நல்ல இடியப்பமும் பால் சொதியும் கிடக்கு... கொஞ்சமாச் சாப்பிடன்..."

"எனக்குப் பசிக்கேல்லை..."

உடைகளை மாற்றிக்கொண்டு படுக்கையில் சாய்ந்தேன். வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாய் போவது கேட்டது. யாரோ சினிமாப் பாடல் ஒன்றை பெரிதாகப் படித்தபடி சைக்கிளில் போய்க்கொண்டிருப்பதும் கேட்டது.

சிறியனின் சிற்றுண்டிச்சாலையில் கொத்துரொட்டி அடிக்கும் சத்தம் துல்லியமாகக் கேட்டது. அதையும் மீறி எங்கோ வெகு தொலைவில் நாயொன்று குரைத்தது. பெரும்பாலான நாய்களுக்கு இப்போது ஓய்வு. இல்லையென்றால் இரவுகள் அவற்றின் கச்சேரியாகத்தான் இருக்கும்.

அம்மாவும் ஒரு நாய் வைத்திருந்தாள். லக்கி என்று அதற்கு செல்லப் பெயர். அதுவும் இப்போது எங்காவது மூலைக்குள் வாலைச் சுருட்டிக்கொண்டு இயல்பாகத் தூங்குமென நினைத்துக்கொண்டேன்.

மனிதர்கள்

———ஆதிலட்சுமி சிவகுமார்

இயல்பு என்றதும்... தேவகாந்தன் சொன்னவைகள் நினைவில் வந்தன... கூடவே காதுகளைப் பொத்திக்கொண்டு திரியும் அவனும் நினைவுக்கு வந்தான்...

"இயல்புநிலை திரும்பலாம்... ஆனால் இவனும் இவனைப் போன்றவர்களும் இயல்புநிலை திரும்புவார்களா...?" என்கின்ற ஏக்கம் என்னுள் வியாபித்தது...

எத்தனை எத்தனை இயல்புகள் நிரந்தர இழப்புக்களாகிவிட்டன என்று எண்ணிப்பார்த்தேன்? ஏழு வருட கால நீட்சியில், படுகொலைகள் செய்யப்பட்ட ஆத்மாக்களும், இழக்கப்பட்ட உறுப்புக்களும், சிந்தப்பட்ட குருதியும், அழிக்கப்பட்ட சொத்துக்களும்... ஆறாமல் என்றுமே சுமந்து நிற்கும் ரணங்களும் ஒரு போதுமே இயல்பு நிலைக்கு மீண்டும் வரப்போவதில்லை என்பதை நான் உணர்ந்தவனாகினேன்.

வெள்ளிநாதம்

06.09.2002

# வீடுகள்

அவன் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த நாட்காட்டியைப் பார்த்தான். ஜனவரி–18... சிவப்பு நிறத்தில் பெரிதாக இருந்தது. சடாரென்று நெஞ்சுக்குள் சுருக்கென்று ஏதோ தைத்தது.

மெல்ல நடந்து வெளியில் வந்தான். அலுவலகத்தின் இடதுபுறமாக சடைத்து நின்ற மாமரத்தின் கீழ் இரண்டு பிளாஸ்ரிக் கதிரைகள் தெரிந்தன. நகர்ந்துபோய்க் கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே மழை ஓய்ந்து போனாலும், காற்றில் குளிர்மை இருந்தது. சேற்று மணமும் சேர்ந்து இருந்தது.

'பூத்தகொடி பூக்கள் இன்றித்தவிக்கின்றது...' யாரோ ஒருவன் இருளில் வீதியால் பாடிக்கொண்டு போனான்.

அவன் நெஞ்சில் கையை வைத்து பொக்கற்றைத் தடவிப்பார்த்தான். அவனுடைய

மனிதர்கள்

———ஆதிலட்சுமி சிவகுமார்

மனைவி மதி எழுதிய கடிதம் உள்ளே மடமடத்தது.

'நீங்கள் எப்பிடியும் பொங்கலுக்கு வீட்டை வருவீங்கள் என்று இரவிரவாக பார்த்துக்கொண்டிருந்தோம். ஏதோ வேலையாக்கும். அதுதான் நீங்கள் வரவில்லை. ஆனாலும், அடுப்பில் அரிசி போட்டுப் பொங்கி பிள்ளையளுக்குக் குடுத்தனான். நாங்கள் முற்றத்தில் பொங்காததால் நிறையப்பேர் புக்கை கொண்டுவந்து தந்தார்கள். நீங்கள் வந்தாலும் என்று நல்லதாய் கொஞ்சம் எடுத்து வைத்தனான்... நீங்கள் வரேல்லை...

மனைவியின் கடிதம் அவனுக்கு மனப்பாடமாய் இருந்தது. விடுமுறை நாளில்கூட வீட்டுக்கு வராமலிருப்பதை எந்தவிதமான கடுகடுப்புமின்றி ஏற்றுக்கொள்ளும் தன் மனைவியின் மனப் பக்குவம் அவன் அறிந்ததுதான். ஆனாலும் ஏதோ ஒரு குற்ற உணர்வு உறுத்தியது.

திருமணமான ஆறுவருடங்களிலும் அவள் ஒருபோதும் ஒன்றையும் தன்னிடம் யாசித்ததில்லை என்பதை அவன் நினைத்துக்கொண்டான். வேதனை கலந்த மகிழ்வாயிருந்தது.

அலுவலக விடுதியில் இப்போது இரவு உணவு நேரம். உணவுப் பாத்திரங்களும், உணவருந்துபவர்களினதும் கூச்சல்களும், சிரிப்பும் அலைமோதிக் கொண்டிருந்தன.

அவனுக்கு இந்தக் கூச்சல் கும்மாளங்களில் ஈடுபடும் மனநிலை இல்லை என்பதால் அவன் ஒதுங்கியிருந்தான். எல்லோரும் சாப்பிட்டுவிட்டுப் போனபின்னர் அவன் எழுந்துபோய்த் தனக்குரிய உணவை வாங்கிச் சாப்பிடுவான். உணவு பரிமாறும் ஐயா அவனுக்குரிய உணவை எப்போதும் எடுத்து வைத்திருப்பார்.

அவரைப் பார்த்தால் அவனுக்குச் செத்துப்போன அப்பா நினைவுவரும்.

அங்கு பணியாற்றுபவர்களில் அவன் மட்டுந்தான் திருமணமானவன் என்றில்லை. ஆனால் அவர்களுக்குக் குடும்பம் ஒரு சுமையாகத் தெரியவில்லை. சிலர் ஒவ்வொரு நாளும் காலையில் வேலைக்கு வந்து மாலையில் வீடு திரும்பிவிடுவார்கள்.

ஆனால் அவன் இருபத்திரெண்டு கிலோ மீற்றர் தூரம் தினமும் சயிக்கிள் ஓட முடியாதென்று விடுதியிலேயே தங்கிக்கொள்வான். அவனுடன் விடுதியில் இன்னும் பலர் இருக்கின்றார்கள்.

அவனுக்கு யாரோடும் ஒட்டுதலில்லை. அதேபோல் பகைமையும்

இல்லை. அவன் வயதொத்தவர்கள் என்று யாருமில்லை. அவனைவிட வயதில் இளையவர்களும், வயதில் மூத்தவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

'போனமாதம் அவன் விடுப்பில் வீட்டுக்குப் போயிருந்தான். கிறிஸ்மஸ் காலப்பகுதி என்பதால் ஊர் களைகட்டியிருந்தது. பல வருடங்களுக்குப்பிறகு பட்டாசுகளும் வெடித்தன.

அவனுடைய கடைசிப்பிள்ளை சூரியா வெடிச்சத்தத்தில் பயந்துபோய் அவனுடைய தோளைவிட்டு இறங்கவேயில்லை. அவர்களுடைய நாயும் வீட்டு மூலைக்குள் சுருண்டுவிட்டது.

"அப்பா... ஏன் ஆக்கள் பட்டாசு கொழுத்துறவை?..."

அவனுடைய மூத்தவள் கிரிஜா கேட்டாள்.

"தங்களின்ர மகிழ்ச்சியை மற்றவர்களுக்குத் தெரிவிக்கிறதுக்காக..."

"இப்படிக் காசைச் செலவழிச்சு மகிழ்ச்சியை மற்றவைக்கு தெரிவிக்க வேணுமோ?..."

எவ்வித தயக்கமுமில்லாமல் கேள்வி பிறந்தது. மகளின் கேள்வி அவனைத் திணறவைத்தது. அவளை அணைத்து முதுகில் தடவிவிட்டான். பதில் சொல்ல முடியாமலிருந்தது.

"உங்களுக்குப் பட்டாசு கொழுத்த விருப்பமோ?..." கேட்டான்.

"ஐயோ... வேண்டாமப்பா... உந்தச் சத்தமே எனக்கு விருப்பமில்லை..."

அவன் வழக்கத்துக்கு மாறாக இம்முறை நான்கு நாட்கள் விடுப்பில் நின்றான். அவன் கூடுதலாக வீட்டில் நின்றதால் குழந்தைகள் குதூகலமாய் இருந்தார்கள். மனைவியிடம் பணம் பற்றாக்குறையாக இருந்திருக்கவேண்டும். அவள் அந்த பற்றாக்குறையை வெளிபடுத்தாமல் நாட்களை அவதானமாக நகர்த்தினாள். அவனும் அவள் தன்னிடம் அதைச் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கவுமில்லை.

"ஒருவேளை எப்பாலும் லீவிலை வந்து நிக்கிறவரெட்டை ஏன் அதில்லை இதில்லை என்று புலம்புவான்?..." என்று அவள் நினைத்திருக்கலாம் என நினைத்துக்கொண்டான்.

மதியம் உணவு பரிமாறும்போது 'தவமக்காட்டை ரெண்டு கோழி

வேண்டி விட்டிருக்கிறன்... முட்டையிட்டா பிள்ளையளுக்குக் குடுக்கலாம் தானே...

அதுசரி என்று ஆமோதித்தான். 'ஏன் என்னுடைய அனுமதியின்றி வேண்டினாய்' என்று கண்டிக்கும் ரகமில்லை அவன். 'எதையும் அவனிடம் கேட்டுத்தான் செய்யவேண்டும்' என்ற ரகமில்லை அவளும். அவர்களுக்குள் அப்படியொரு பரஸ்பரம் இருந்தது. எத்தனையோ துன்பங்களிலிருந்து அந்தப் பரஸ்பரம் தான் அவர்களை மீட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் அவனுடைய அலுவலகம் அவனுடைய வீட்டிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில்தான் இருந்தது. பிறகு, போராளிகளால் மீட்கப்பட்ட கிளிநொச்சி நகருக்கு மாறிவிட்டது.

அவனும் யாழ்ப்பாண இடப்பெயர்வில் இங்கு வந்தவன்தான். இப்போது அவனுடைய அக்கா குடும்பம், மூத்தண்ணர் குடும்பம் என்று எல்லோரும் ஊருக்குப் போய்விட்டார்கள்.

"நீங்கள் ஊருக்குப் போகேல்லையோ?..."

"இல்லை..."

"உங்களுக்கு வன்னி நல்லா பிடிச்சுது போலை..."

அவன் சிறிதாய் புன்னகைப்பான் பதில் கூறாமல்.

ஊரில் ஒரேயொரு காணிதான் அவர்களுக்கிருந்தது. பெரியக்கா குடும்பம் அதில்தான் இருக்கிறது. அவனுடைய அக்காவுக்கும், அவனுடைய மனைவிக்கும் பெரியளவில் ஒத்துப்போகாதென்பது அவனுடைய நிலைப்பாடு. ஊரைவிட்டு ஒதுங்கிக்கொண்டான்.

இன்னும் சிறிது நேரத்தில் மின்பிறப்பாக்கியை நிறுத்திவிடுவார்கள். அவன் மெல்ல எழுந்து உணவருந்த கூடத்துக்குப் போனான்.

"வாரும் தம்பி..."

வாங்கைச் சிறிது பின்னால் தள்ளி சரிசெய்து அமர்ந்தான். ஐயா அவனுக்குப் புட்டும் மீன் குழம்பும் கொண்டுவந்து வைத்தார். அவன் புட்டைக் குழம்புவிட்டு குழைத்துச் சாப்பிடமுற்பட்டபோது மனைவியின் கடித வரிகள் தொண்டையில் சிக்கின.

எந்த வித உணர்வையும் வெளிப்படுத்தாது விரைவாக சாப்பிட்டு முடித்தான். உணவுத்தட்டைக் கழுவி மேசையில் வைத்துவிட்டு விடுதிக்கு வந்தான்.

சிவனேசன் உடுப்புத் தோய்த்துக் கொடியில் விரித்துக்கொண்டிருந்தான்.

இருளில் வரும் அவனைப் பார்த்து “யாரது...” என்றான்.

“அது நான்...”

“தேவண்ணையே...”

“ஓமோம்...”

“இருட்டிலை எங்கையண்ணை போட்டுவாறியள்? ...”

“சாப்பிட்டுட்டு வாறன்...”

மூலையில் செருப்புக்களைக் கழற்றிவிட்டு உள்ளே போனான். விலைகூடிய, அழகான செருப்புகளுக்கருகில் தனது செருப்புகள் தலைகுனிந்து இருப்பதாகப்பட்டது. தன் நினைப்புக்காகச் சிரித்துக்கொண்டு போனான்.

உள்ளே ஜீவரஞ்சன் காலுக்கு மேலே கால் போட்டுக்கொண்டு புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் காலை எடுத்துவிட்டு

“வாங்கோ அண்ணை” என்றான்.

பாயை உதறி மெதுவாய் சுவர்க்கரையில் விரித்தான். அவன் தலைக்கு மேலே மூலையில் நுளம்புச்சுருள் புகைந்து கொண்டிருந்தது.

“அண்ணை நித்திரை கொள்ளப்போறியளே? ...”

“ஓம்...”

கைகளைத் தலைக்குக்கீழே வைத்துக்கொண்டு கூரையைப் பார்த்தபடி படுத்திருந்தான். சிவனேசனும், ஜீவரஞ்சனும் அவனும்தான் இந்த அறையில் படுப்பார்கள். சிவனேசன் இப்போது சில மாதங்களுக்கு முன்னர்தான் பயிலுநராக

வேலையில் சேர்ந்திருக்கின்றான். ஜீவரஞ்சன் மல்லாவிப் பிரதேசத்தில் வேலைசெய்து இப்போது இங்கு வந்திருக்கிறான். அவனுடைய தங்கையொருத்தி ஆனையிறவு முற்றுகைச் சமரில் வீரச்சாவடைந்து மாவீரரானதாக எப்போதோ சொல்லியிருக்கிறான். கவிதைகள் எழுதுவதிலும், படிப்பதிலும் நல்ல ஆர்வமுள்ளவன். அவன் எழுதிய சில கவிதைகள் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன.

"பதினெட்டாம் திகதியே மதியிட்டை கைச் செலவுக்கு காசில்லை என்றால் என்னெண்டு மிச்ச நாட்களை நகர்த்திறது?..."

அவனுக்குள் பெருந் துன்பம் வருத்தியது.

அடுத்த சம்பளத்துக்கான நாட்களை விரல்விட்டு எண்ணிப்பார்த்தான். இன்னமும் பதினெட்டு நாட்கள் இருந்தன. இந்தப் பதினெட்டு நாட்களும் அவனைப் பொறுத்தவரை பாரமானவை.

சிவனேசன் ஈர உடம்பைத் துடைத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

"மச்சான் நாளைக்கு வீட்டை போற மாதிரி இருக்கோ?..."

"இல்லையடாப்பா... வீட்டை போறதை நினைக்க நடுங்குது..."

"ஏன்ராப்பா... அவனவன் வேலை நாளில கூட லீவை குடுத்திட்டு வீட்டை ஓடுறான்... நீ என்னெண்டா..."

ஜீவரஞ்சனுடையதும் சிவனேசனுடையதுமான உரையாடல் சுவாரசியமாக இருந்தது. அவன் காதுகளைக் கூர்மையாக்கினான்.

"நான் வேலையில் சேர்ந்த நாள் துவக்கம் அம்மா மனுசி எனக்குக் கலியாணம் பேசிக்கொண்டு திரியுதடா..."

"அது நியாயம் தானேடா..."

"நியாயம் தானடா... ஆனா... வேலை நிரந்தரமான வேலையில்லை.... அதோடை நான் எடுக்கிற சம்பளத்தில்தான் அம்மா, தம்பி, தங்கச்சியாக்களையும் பாக்கோணும்..."

"அப்ப என்ன செய்யப்போறாய்?..."

"தம்பி படிச்சு ஒரு நிலைக்கு வரட்டும்... தங்கச்சியும் A/L படிச்சு

முடிச்சு கொம்பியூட்டர் படிக்கிறாள்... அவளும் தன்ரை சொந்தக் காலிலை நிக்கட்டும்..."

"அதுவரைக்கும் நீ வீட்டை போகாமல் இருக்கப்போறியோ?..."

"இல்லையடாப்பா... அம்மா பேசிவைச்சிருக்கிற கலியாணத்தை தட்டிக்கழிக்க ஒரு காரணம்கிடைக்கும் வரை போமாட்டன்..."

சிறிது நேரம் இருவரும் எதுவும் பேசவில்லை.

கண்களை மூடிக்கொண்டிருந்த அவன் முளித்துப் பார்த்தான். மின்சாரம் நின்றுபோயிருந்தது.

வெளிச்சம்


தை - மாசி,2003

# மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்



# சமாதானத்தின் வலி



திண்ணையில் பாயை விரித்துப் படுத்துக்கொண்டான் கணேசு. நல்ல காற்று அவன்மேற்பட்டது. படுத்துக்கிடந்தபடியே வானத்தைப் பார்த்தான். பூப்பூவாய் சொரிந்து கிடக்கும் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டின. எண்ணிக்கையற்று நிறையவாய்... அதில் ஒரு நட்சத்திரம் சற்று வித்தியாசமாய், உற்றுப்பார்த்தான். அது அவனைப்பார்த்துச் சிரிப்பதுபோல் உணர்ந்தான். அதன் முகமும்... சிரிப்பும்... அவன் எங்கேயோ பார்த்தமாதிரி... மனதுக்குள் நெருக்கமாகியது.

"ஓ... அமுதன்...."

நினைவினுள் பொறி தட்டியது.

"நான் இனி இந்தப்பக்கம் வாறது குறைஞ்சிடும்... தூரப்போறன்..."

"தூரவெண்டால்... கன தூரமே..."

“ம்... உந்த வானத்தளவு தூரமெண்டு நினையுங்கோவன்... சிலவேளை வானத்திலை கூட இருக்கலாம்...”

சிரித்தபடி... கைகளைப் பற்றியபடி... மிகவும் இயல்பாகத்தான் சொன்னான்.

“அ...மு...த...ன்...”

ஒருதடவை அவன் பேரை உச்சரித்துப்பார்த்தான் கணேசு.

அமுதன் - இந்தக் குடும்பத்துக்கு எப்படி அறிமுகமானான் என்பது தெரியாது.

ஆனால்- இந்தக் குடும்பத்தில் ஒருவனாக இருந்தான்.

கணேசுவைவிட அவன் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மிக நெருக்கமானவனாயிருந்தான்.

அவனுடைய ஊர் தெரியாது. உறவுகளைப்பற்றித் தெரியாது.

என்ன கேட்டாலும் சிரிப்பான்... சிரிப்பதைத் தவிர சொற்கள் வெளிவராது

அபூர்வமாகத்தான் கதைப்பான். பிள்ளைகளுடன் நன்றாகக் கதைப்பான். அவர்களோடு ஒருவனாய் விளையாடுவான். இப்போது அவன் வருவதில்லை. எங்கு இருப்பானோ... ஆனால் - அந்த நட்சத்திரம் அவனை நினைவூட்டியது.

அவனைப்போல யாரையும் கண்டால்... மனைவி அவனைப்பற்றி நினைவுபடுத்துவாள்.

“ஏனப்பா இப்ப அந்த அமுதண்ணை வாறேல்லை... சமாதான காலந்தானே... வரலாம் தானே...”

என்பாள் மகள்... காலடியிற் கிடந்த நாய் உறுமியது. தலையைத் திருப்பிப் பார்த்தான். வேறு யாரோ வீட்டு நாயொன்று வேலிக்கரையால் போய்க்கொண்டிருந்தது.

அவனுடைய மனைவி குழந்தைகளையும் கொண்டு ஊருக்குப்போயிருந்தாள். ஊரில் அவளுடைய அக்காவின் மகளுக்குத் திருமணம். மணமகன் வெளிநாடொன்றில் இருந்து வருகிறான்.

கணேசுவும் போயிருக்கவேண்டும். ஆனால்... பசுமாடுகளையும்,

கோழிகளையும் விட்டு அவனால் போகமுடியாது.

கணேசு ஊரில் இருக்கும்போது – புடவைக்கடை ஒன்றில் காசாளராக இருந்தான். காலையில் ஏழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் – திரும்பி வீடுவர இரவு ஏழு மணியாகிவிடும்.

இடம்பெயர்ந்த பிறகு... சொந்தமாக ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்திருந்தான். வருமானம் போதவில்லை.

விட்டுவிட்டு முத்தையன் கட்டில் வெள்ளாமை செய்தான். அதுவும் தொடர்ச்சியாகச் செய்யமுடியாமலிருந்தது.

வட்டக்கச்சியிலிருந்து தேங்காய் வாங்கி... முழங்காவில் பகுதிக் கடைகளுக்கு விற்றான். அதுவும் உடம்புக்கு ஒத்துவரவில்லை.

இறுதியாகத்தான் வீட்டிலேயே ஏதாவது தொழில் செய்வது என்கின்ற நிலைப்பாட்டிற்கு வந்தான்.

வெள்ளாண்மையில் மிஞ்சிய காசு கொஞ்சம் இருந்தது. அதில் பசுமாடு வாங்கினான். கொஞ்சக் கோழிகளும் வாங்கினான். இரண்டும் அவனை ஏமாற்றவில்லை. நல்ல வருமானம். செலவுகள் எல்லாம் போக ஒவ்வொரு மாதமும் கையில் நாலாயிரம் மிஞ்சும்.

வவுனியாவுக்குப்போய் மோட்டார் சைக்கிள் ஒன்றுகூட வாங்கிவந்தான். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிறந்த மகன் பிரதீபனின் பலன்தான் வருமானத்தையும் நிலையான தொழிலையும் தந்திருப்பதாக மனைவி அடிக்கடி சொல்லிக்கொள்வள்.

அவள் இப்போது ஊருக்குப்போயிருப்பது இரண்டாவது தடவை. முதலொருமுறை வைத்திய ஆலோசனைக்காக பெரியாஸ்பத்திரிக்குப் போனபோது உறவினர்களையும் பார்த்து வந்திருந்தாள்.

அவளுடைய அண்னன் மாநகரசபை அலுவலராக இருப்பதால் அவர் வீட்டிலேயே நான்கு நாட்கள் தங்கிவந்தாள்.

இப்போது சுன்னாகத்திற்தான் அவளுடைய அக்கா மகளுக்குத் திருமணவீடு. அங்குதான் அவள் நிற்பாள்.

ஊர்க் கலியாணம் என்றால் மிகவும் களைகட்டியிருக்கும். இப்போது கிராமப்புறக் கொண்டாட்டங்களிலும் நகர்ப்புற நாகரிகங்கள் நுழைந்துவிட்டதை

எண்ணி அவன் மனம் வருத்தமுற்றது.

இந்த நாகரிக நுழைவுகளால் உறவுகள் அந்நியப்பட்டுப் போவதுதான் மிச்சம் என்பது அவனது நினைப்பாக இருந்தது.

"இப்ப வாழையிலைச் சாப்பாடெல்லாம் மறைஞ்சு... முள்ளுக் கரண்டிகளும் கத்தியளும்தான் மச்சான் எங்க பார்த்தாலும்..."

ஒருநாள் ஊர்பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தபோது கிருபா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

மனைவி வருவதற்கு இன்னமும் இரண்டு நாட்களாவது செல்லும். கணேசு இப்போ வரும்போதுதான் சந்திக்கடையில் இடியப்பம் சாப்பிட்டுவிட்டு வந்தான்.

வீடு கலகலப்பின்றி வெறிச்சோடிக்கிடப்பது அவனுக்கு மனவருத்தத்தைத் தந்தது.

விடிந்தவுடன் தொலைத்தொடர்பு நிலையத்தக்குப் போய்... பவானியையும் பிள்ளைகளையும் விசாரித்துப் பார்க்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

நுளம்புகள் காதருகே சங்கீதம் பாடின. ஊர்போன மனைவியினதும் குழந்தைகளினதும் நினைவுகளுடனேயே கணேசு ஒன்றித்திருந்தான்.

மூத்தவள் கார்த்திகாவுக்கு ஒன்பது வயது. அவள் பெரியவளானால் ஊரிற்தான் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் என்பது பவானியின் விருப்பம். அவனுக்கு அதில் விருப்பமில்லை. என்றாலும் – எந்த அபிப்பிராயமும் சொல்லாமலிருந்தான். ஊர்முழுதும் நிறைந்திருக்கும் இராணுவத்தினரும்... அவர்களுடைய காவல் நிலையங்களும், ஊரின் நாகரிக மோகமும் அவனுக்கு அசௌகரியமாகவேபட்டது.

சனிக்கிழமை காலை பத்துமணிக்கெல்லாம் பவானி வீட்டுக்கு வந்துவிட்டாள். கணேசு சந்தைக்குப் போய்விட்டு வந்தபோது முற்றத்தில் கொடிமுழுவதும் உடுப்புகள் உலர்ந்து கொண்டிருந்தன. பிள்ளைகளில் இருவர் நித்திரை. குசினிக்குள் அடுப்புப் புகைந்துகொண்டிருந்தது. பவானி கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும்... மூத்தவள் "அப்பா இஞ்சே... அப்பா இஞ்சே..." என்று கொண்டுவந்த பொருட்களையெல்லாம் காட்டினாள். ஒரு பை முழுவதும் மணிக்கடைச் சாமான்கள் இருந்தன.

வாசலில் குதியுயர்ந்த செருப்புக்கள் கிடந்தன.

பவானி வந்தாள்.

"காலமை என்னப்பா சாப்பிட்டனீங்கள்?..."

"பசிக்கேல்ல... இனித்தான் ஏதும் சாப்பிடவேணும்..."

"நான் இல்லாட்டி... மிச்சம் பிடிக்கிறதுக்காக பசிக்கேல்லை பசிக்கேல்லை எண்டு பட்டினி கிடப்பியள்..."

குசினிக்குள் போனாள்.

"உங்கட குணம் தெரிஞ்சுதான் வரேக்குள்ளையே பஸ்ஸால இறங்கின இடத்திலை பணிஸ் வாங்கியந்தனான்... இந்தாங்கோ..."

அவன் வாங்கி அதை அருகே வைத்தான்.

"ஊரிலை எல்லாம் அந்தமாதிரி இருக்குதுகளப்பா..."

"இவ்வளவுகாலமும் எவ்வளவு கஷ்ரத்துக்குள்ள இருந்த சனம்... நல்லாஇருக்கத்தானே வேணும்..."

"......"

"சின்னவன் அங்கை ஒரு குழப்படியும் செய்யேல்லையே...?"

"அங்கை எங்கை... பாட்டும்... படமும்... படப்பிடிப்பும்... அதுகளுக்கு குழப்படிசெய்ய நேரம் கிடந்தாலெல்லோ... சாப்பாடு தண்ணியே வில்லங்கப்பிடிச்சுத்தான் குடுக்கிறது. பிரதிக்குட்டிகூட கண்வெட்டாமல் படம் பாத்ததப்பா..."

மனைவியின் குரலில் என்றுமில்லாத உற்சாகம் புகுந்திருப்பதை அவன் அவதானித்துக்கொண்டான்.

"முட்டைக் கடையில் ஒன்பது ரூபாவுக்கு எடுக்கிறாங்களப்பா. நேற்றும் நாற்பது குடுத்தனான்..."

"......"

"இன்னுமொரு கூட்டைப் போடுவம் எண்டு யோசிக்கிறன்... சபாபதி கொஞ்சம் கல்லுக் கிடக்கு தரலாம் எண்டவன்..."

“உங்களுக்கு ஒரே கோழிப் பைத்தியம்தான்...”

“ஏன் பவானி... உந்தக் கோழியலாலை தானே இண்டைக்கு எங்கட சீவியம் போகுது...”

“போகுதுதான்...”

“என்ன ஒரு மாதிரி இழுக்கிறீர்...”

“நீங்கள் கோழி, மாடு எண்டு உயிரை விடுறியள்... ஊரில ஆனா ஆவன்னா தெரியாதவனெல்லாம் ராசா மாதிரி இருக்கிறாங்கள்...”

அவனுக்கு மனதில் வலி எடுத்தது.

“அக்கான்ர மருமோன் நோர்வேயில இருந்து வந்திருக்கிறான்... சதாசிவச் சித்தப்பான்ர மூத்தவன் ரொறன்ரோவில இருந்து வந்தவன்... நவாலி மாமியின்ர மாமா கட்டாறில இருந்து வந்திருக்கிறார். யோகேசுச் சித்தியின்ர சித்தப்பா ஜேர்மனியில இருந்து வந்தவர்... நல்ல காலம் நீங்கள் அங்க வந்திருந்தா தலையக் குனிஞ்சுகொண்டுதான் நிண்டிருக்கவேணும்...”

அவன் திடுக்கிட்டுப்போய் பவானியைப் பார்த்தான். அவள் கழுத்தில் யாரோ பரிசாகக் கொடுத்த தங்கச் சங்கிலி மின்னிக்கொண்டிருந்தது. ஏனோ அவனுக்கு அழுகை வரும்போல இருந்தது. பேசாமல் நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பவானி சுடச்சுட தேநீரைக் கொண்டுவந்து வைத்துவிட்டு அவனருகே நெருக்கமாக அமர்ந்தாள். அவளிலிருந்து வந்த நறுமணம் அவனை ஈர்த்தது. கைவிரல்களுக்கும் கால் விரல்களுக்கும் சாயமிட்டிருந்தாள்.

“என்னப்பா... குழம்பிப்போனீங்களே...”

அவனுடைய தலைமுடியை விரல்களால் நீவியபடி கேட்டாள்.

“எல்லோரும் ‘டிப்ரொப்பா’ வெளிநாட்டில இருந்து வந்து நிக்கிறாங்கள். நீங்கள் அங்க வந்தா என்ன வேலையெண்டு சொல்லுறது?...”

அவளுடைய பார்வைக்குள் இருக்கும் அறியாமை அவனுக்குப் புரிந்தது.

மௌனமாக தேநீரை எடுத்துக் குடித்தான்.

"சித்தப்பான்ர மூத்தவன் திரும்பிப் போகேக்கை ஆறேழு பேரைக் கூட்டிக்கொண்டு போய் கொழும்பில வச்சு கனடாக்கு ஏத்திப்போட்டுத்தான் போகப்போறானாம்..."

"......"

"உங்களுக்கு வெளியால போற நோக்கம் இல்லையோ எண்டு கேட்டவன்..."

"......"

"இஞ்ச ஒருவரியம் கஷ்ரப்பட்டு உழைக்கிறதை அங்கை மூண்டு மாதத்திலை உழைக்கலாமாம்..."

ஏழு வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனிக்குப் போகவென்று எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்ற செந்தில் கொள்கலனில் பாறினில் சடலமாக எடுக்கப்பட்டு... திருப்பி அனுப்பப்பட்டது நினைவில் வந்தது அவனுக்கு.

"திரும்பிப் போகேக்கை இஞ்சாலையும் ஒருக்கால் வந்திட்டுப் போறதெண்டுசொன்னவன்... வந்தால் என்ன செய்யிறது. வீடும் இப்பிடிச் சொட்டையும் சொறியுமாகக் கிடக்கு..."

"உன்ர பிழையுமில்லை... என்ர பிழையுமில்லை... இதெல்லாம் இந்தச் சமாதானத்தின்ரை பிழை..."

"நான் சொல்லுறது உங்களுக்குப் பிடிக்கேல்லையே..."

முகத்துக்கு நெருக்கமாகிக் கேட்டாள்.

"என்னாலை இந்த இடத்தைவிட்டு ஒரிடமும் போகேலாது..."

சடாரென்று எழுந்து படலைவரை நடந்தான். பவானியின் விசும்பல் ஒலி கேட்டது...

பத்து வருச வாழ்க்கையில் முதல் முதலாய் அழுகிறாள்.

அவள் கண்ணீர் அவனை இழுத்தது. கால்கள் மேற்கொண்டு நடக்க மறுத்தன. திரும்பிவந்து அவளின் தலையைத் தொட்டான். கண்களைத் துடைத்துக்கொண்டு பனிசை நீட்டினாள்.

“சாப்பிடுங்கோ...”

அவன் வாங்கிக்கொண்டு திண்ணையில் அமர்ந்தான். அவளும் அருகே அமர்ந்தாள்.

வெளிச்சம்

தை - பங்குனி 2003

# வேரின் கரம்

சடசடவென்று செட்டைகளை அடித்தபடி ஏதோ கூரைக்கு மேலால் பறந்து போனது. அது தூரப்போகும்வரை செட்டை அடிக்கும் சத்தம் கேட்டது. பின் தேய்ந்து அற்றுப்போனது.

"யோகு... எடமோன... எத்தின மணி இப்ப..."

வீடு முழுவதும் இருள் மூடிக்கிடந்தது.

"யோகா... எடயோகா... எத்தின மணி இப்ப..."

"ரெண்டு மணியெணை... தண்ணி ஏதும் குடிக்கப்போறியளே..."

யோகன் மனைவிதான் மூடிய அறைக்குள் இருந்து கேட்டாள்.

"ஒண்டும் வேண்டாம் பிள்ளை... முழிப்பு வந்திட்டுது... அதுதான் விடிஞ்சிட்டுதோ எண்டு

கேட்டனான்... நீ படு...”

வீடு அமைதியானது.

ஆச்சி கால்களை நீட்டி திண்ணையில் சரிந்தாள். கண்கள் மூடிக்கொள்ள மறுத்து அடம் பிடித்தன. கொஞ்ச நேரத்துக்குமுன் கனவில் வந்த முகத்தை நினைவுக்குக் கொண்டுவந்தாள்.

“எட தேவா... என்ர குஞ்சு...” விம்மினாள்.

“தாயைத் தின்னிப் பிள்ளை எண்டுபோட்டு... இடுப்பை விட்டு இறக்காமல் வளர்த்தன்... என்னை விட்டிட்டுப் போட்டியோ...” உள்ளூறப் புலம்பினாள்.

தேவன் வீரச்சாவாகி இரண்டு வருடங்கள் ஆனபிறகும் – அது நேற்று நடந்து முடிந்ததாகவே அவள் உணர்ந்தாள்.

கனகத்தின் மூத்தவள் தவம். தேவன் கைக்குழந்தையாக இருந்த போது, நெருப்புக் காச்சல் வந்து அவள் இறந்துபோனாள். தவத்தின் இரண்டு பிள்ளைகளும் கனகத்தின் மடியில்.

“கட்டையில போற நானிருக்க... என்ர குஞ்சுகளை ஒண்டொண்டாக் கொண்டுபோறியே...”

ஆற்ற முடியாத துயரம் பொங்குகின்ற வேளைகளில் ஆச்சி பெருங்குரலில் அழுவாள். கண்ணீரில் அவள் துயரம் வடியும்.

யோகனுடன் தான் ஆச்சியின் காலம். யாழ்ப்பாணத்திலிருந்து இரவோடிரவாக இடம் பெயர்ந்த பொழுது சைக்கிளின் பின் இருக்கையில் ஆச்சியை இருத்தி தேவன்தான் நாவற்குழி பிள்ளையார் கோயில் வரை உருட்டிக்கொண்டு வந்தான்.

“எட ராசா... இவ்வளவு கிழடு கட்டையளும் நடந்துதானே வருதுகள்... இறக்கிவிடன்... மெல்ல மெல்ல நடந்துவாறன்...”

“பேசாம இரண... நான் உருட்டுவன்...”

சயிக்கிள் முன் கைப்பிடிகளில் தட்டு முட்டுச் சாமான்கள் கொழுவியிருந்தன.

சனத்தோடு சனமாய் நகர்ந்து... நகர்ந்து... வள்ளமேறி.... ஒருவாறாய் கிளிநொச்சி உதயநகருக்கு வந்தார்கள்...

யாரோ உறவினர்களின் சிபார்சில் மனமிரங்கி தரப்பட்ட சிறிய குடிசை. அதில் இன்னுமொரு குடும்பமும் இருந்தது. அவர்கள் சங்கானையிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள்.

யோகன் பத்தாம் வகுப்புச் சோதினை எடுக்கவேண்டியவன். பள்ளிக்கூடம் போகாமல் விறகு வெட்டி விற்க ஆரம்பித்தான்.

"நீயும் படிப்பைக் குழப்பிப்போடாதை ராசா... நீ படிச்சுத் தலைநிமிருறதைப் பார்த்துட்டுத் தானடா நான் கண்மூடவேணும்..."

என்று அடிக்கடி ஆச்சி சொல்லிவைப்பாள். ஆனால், ஒருநாள் விடிய பள்ளிக்கூடத்துக்கெண்டு போன அவன் வீடு வரவேயில்லை.

"எல்லாக் குளங்களிலையும் தண்ணி ரொம்பி வழியுதாம். கூட்டாளியளோட எங்கையும் நீந்தப்போய்... ஏதும் பிசகாப் போச்சுதோ..."

ஆச்சி தவித்துத் துடித்தாள். சாப்பிடாமல் கிடந்தாள்.

"பேசாமச் சாப்பிடணை... போனவன் வருவான்தானே..."

"அவன் வந்தாலொழியச் சாப்பிடன்..."

ஆச்சி றோட்டுக்கும் வீட்டுக்கும் ஓடுப்பட்டுத் திரிந்தாள். அவளுடைய நிலைமையைப் பார்த்துவிட்டு யோகனும் தெரிந்த இடங்களில் விசாரித்துப் பார்த்தான்.

மூன்றாம் நாள் தேவன் போன இடம் அறிந்ததும் – ஆச்சி அமைதியாகிப் போனாள்.

யோகனுக்குத்தான் தாங்கமுடியவில்லை. திண்ணையிலிருந்து முகட்டைப் பார்த்து அழுது கொண்டிருந்தான்.

"ஏனடா இப்ப அழுறாய்...? அவன் நல்ல காரியமாகத்தானே போயிருக்கிறான்..."

"எழும்பி உலையை வைபிள்ளை... எனக்குப் பசிக்குது..."

எல்லோரையும் ஆச்சி இயல்பாக்கினாள்.

"நீ உவ்வளவு பாசமாய் வைச்சிருக்க... இப்பிடிச் செய்துபோட்டானே..."

"ஏன் என்ன செய்தவன்... நீங்கள் செய்ய ஏலாதெண்டதை அவன் செய்யப் போட்டான்..."

கேள்வி கேட்பவரின் உச்சியிலடித்து அவர் வயை மூடினாலும் ஆச்சிக்கு உள்ளூரத் தவிப்பாகத்தான் இருந்தது.

ஒருநாள் மதியம் தாண்டிய பகல்பொழுது. ஆச்சி ஒழுங்கையின் திருப்பத்திலிருக்கும் வெற்றிலைக் கடைக்குப் போயிருந்தாள்.

"ஆச்சி சைக்கிளிலை ஏறணை..."

யோகன் பரபரத்தான்.

"என்னடா மோனை...?"

"கதையை விடடுட்டு ஏறணை... வீட்டைபோக..."

ஆச்சிக்குத் தேகம் பதறியது. ஒருவேளை...

"ச்சீ... அவனுக்கு ஆயுள் கெட்டி... அப்பிடி அவனுக்கு ஏதும் எண்டா இந்தக் கட்டை உயிரோடை கிடவாது..."

மனப்போராட்டத்தோடு சயிக்கிளில் ஏறி வீட்டில் இறங்கினாள். முற்றத்தில் நின்றவனைக் கண்களை இடுக்கிப்பார்த்தாள். உயர்ந்த உருவம்... வட்டமான முகம்... அரும்பிய மீசை... சிரிக்கும் கண்கள்...

"என்ர ஐயா வந்திட்டியே..."

தேவனை இனங்கண்டு கொண்ட மகிழ்ச்சியில் அரற்றினாள்.

"சாப்பிட வா..."

இழுத்துக்கொண்டு போய் திண்ணையில் இருத்தினாள்.

"ஆச்சியின்ர புழுகத்தைப் பாருங்கோவன்..."

யோகனும் மனைவியும் சிரித்தார்கள்.

ஆச்சி அவனைத் தொட்டுப்பார்த்தாள். தடவிப்பார்த்தாள். பரவசப்பட்டுப்போய் கண் கலங்கினாள்.

"குண்டு குண்டாய் கொண்டுவந்து கொட்டினாங்கள்... எங்க ராசா நிண்டனி... எனக்கு உன்ர ஏக்கம் தான்..."

"......"

"சண்டையளுக்கெல்லாம் போனனியே...?"

"......"

"உந்தத் துவக்கு சரியான பாரமாக்கிடக்கு... தூக்கிக்கொண்டு திரிய கை உளையாதே...?"

"......"

"அப்புவும் முந்தி ஒரு இடியன் வைச்சிருந்தவர்... பிறகு ஆரோ கூட்டாளிக்கு குடுத்திட்டார்..."

ஆச்சி அன்பின் மிகுதியால் குழந்தையாகிக் குதூகலித்தாள்.

மறுநாள் காலை அவன் புறப்படுவதற்கு ஆயத்தமான போது ஆச்சி காற்றுப்போன பலூனாய் துவண்டுபோனாள்.

"போட்டுவாறன்..."

யாருடைய முகத்தையும் பாராமல் பொதுவாக அவன் சொல்லியபோது – ஆச்சி அவனுடைய கையைப் பிடித்து,

"இந்தா ஏதாலும் வாங்குவாய் வைச்சிரு..." என்று நூறு ரூபாய்த் தாளை அவன் கையில வைத்தாள்.

"வேண்டாமெணை... காசு ஒண்டும் வேணாம்..."

"முந்தியெண்டால் காசு வச்சிருக்க விடாய்... இப்ப... வேண்டாமோ... பிடியடா..."

ஆச்சி அவனை ஒழுங்கை வரை கொண்டுபோய் வழியனுப்பி விட்டு வந்தாள்.

ஒருநாள் நடுநிசி. குண்டுச் சத்தங்களும் ஷெல்ச்சத்தங்களும் அமளியாய்... ஆச்சிக்கு நித்திரை குழம்பி விட்டது. அனேகமாக எல்லா வீடுகளிலும் ஆரவாரம்...

"யோகு... எடயோகு... சத்தம் எந்தப்பக்கம் கேக்குதடா...

"ஆனையிறவுப் பக்கமாக் கேக்குதெணை..."

"என்ர குஞ்சு எங்க நிக்கிதோ..."

"உன்ர குஞ்சு மட்டுமேயணை... எத்தினையாயிரம் பேர் நிப்பாங்கள்... பேசாமயிரு..."

ஆச்சியும் எழும்பி வந்து முற்றத்தில் அமர்ந்துகொண்டாள். விடிய விடிய குண்டுச் சத்தங்கள் வெகு தொலைவுக்குப் போய்க்கொண்டிருந்தன. அந்த இரவுப் பொழுதில் தான் தேவனும் வீரச்சாவடைந்திருக்க வேண்டும். மறுநாள் இரவுதான் ஆச்சிக்குச் செய்தி வந்தது.

எத்தினை நாட்களாய்... எத்தினை மாதங்களாய்... அழுதாளென்று ஆச்சிக்குத் தெரியாது.

"ஆச்சி... நானிருக்கிறன்... எனக்காக அழாதையணை... எழும்பு..."

விம்மலும் கண்ணீருமாய் யோகன் நின்றபோது - ஆச்சி தன் கண்ணீரைக் கட்டாயப்படுத்தி அடக்கிக்கொண்டாள்.

ஆச்சியின் படுக்கைக்கு அருகே சுவரில் தேவனின் நெஞ்சளவுபடம். இரவு படுக்கப்போகும் பொழுதும் நித்திரையால் எழுந்தவுடனும் படத்தைக் கைகளால் தடவி கண்களில் ஒற்றிக்கொள்வாள்.

ஆச்சிக்கு இப்போது தூக்கம் அற்றுப் போயிருந்தது. தூரத்தில் எங்கேயோ சேவல் கூவுவது கேட்டது. கண்களை மூடிக் கிடந்தாள்.

"ஆச்சி... ஆச்சி..."

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள்.

"விடிஞ்சு போச்சணை... எழும்பன்..."

ஆச்சி எழும்ப நினைவுகளும் சட்டென்று விழித்துக்கொண்டு அவளை ஆட்டிப் படைத்தன...

"தேத்தண்ணியைக் கொண்டு வரட்டேயணை...?"

"இப்ப வேண்டாம் மோன... எட தம்பி... இப்ப எங்கையும் போறியே....?"

"ஏனணை...?"

"என்னை ஒருக்கால் சின்னவனிட்டைக் கூட்டிக்கொண்டு போகவேணும்..."

"இப்ப கிட்டடியில தானே போய்... விளக்கேத்திப்போட்டு வந்தனி... பிறகென்னத்துக்கு...?"

"என்ர பிள்ளைய இண்டைக்கொருக்கால் பார்க்க வேணும்போல கிடக்கு... கூட்டிப்போறியே..."

"கொஞ்சநஞ்சத் தூரமேயணை... றோட்டும் சரியில்லை..."

"வசுவில எண்டாலும் ஏத்திவிடுமோன... நான் அவனை ஒருக்கால் பார்க்கவேணுமையா..."

"ஆசையாக் கேக்கிறாவெல்லே... ஒருக்கால் கூட்டிப்போங்கோவன்..."

"சரி... வெளிக்கிடெணை... மழையும் வரும்போல கிடக்கு..."

யோகன் சைக்கிளை எடுத்து வெளியே விட்டுக் காற்று அடித்தான்.

ஆச்சி பரபரவென்று குளித்து வெளிக்கிட்டாள்.

"எனக்குத் தேத்தண்ணி ஒண்டும் ஊத்தாதை பிள்ளை... சின்னவனைப் போய் பாத்திட்டு வந்துதான் குடிப்பன்..."

ஆச்சியை ஏற்றிக்கொண்டு யோகன் புறப்பட்டான். காற்றுடன் அள்ளுப்பட்டு வந்த புழுதியில் குளித்தபடி அவன் சைக்கிளை மிதித்தான். ஆச்சி இரண்டு கைகளாலும் அவனை இறுக்கிக்கட்டிப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

"ஆச்சி தேத்தண்ணி ஏதும் வாங்கித் தரட்டேயணை...?"

"வேண்டாம்..."

நீண்ட நேர ஓட்டத்தின் பின் துயிலுமில்லத்துக்கு வந்தார்கள். ஆச்சி இறங்கி விறுவிறு என்று துயிலுமில்லத்துக்குள் போனாள். யோகன் சயிக்களை மரத்தின் கீழ் விட்டுப் பூட்டிவிட்டு பின்னேபோனான்...

தேவனின் காலடியில் கைகளால் விறாண்டி ஒரு சிறய கிடங்கை ஆச்சி உண்டாக்கினாள். மடியை அவிழ்த்து அதிலிருந்து சில்லறைக் காசுகளை எடுத்து கிடங்கில்போட்டு மூடினாள்.

"ஆச்சி... ஏனணை உதிலை காசு போட்டு மூடுறாய்...?"

"என்ர குஞ்சு ராத்திரிக் கனவில வந்து ஆச்சி பத்து ரூவா தாணை அஸ்கிறீம் குடிக்கப்போறன் எண்டு கேட்டது... அதுதான் கொண்டுவந்து குடுக்கிறன்..."

நெஞ்சின் அடி ஆழத்திலிருந்து புரண்டடித்து எழுந்ததுயரம் அவன் கணகளை நிறைத்தது.

"வா போவம்..."

ஆச்சி எல்லாக் கல்லறைகளையும் கடந்து முன்னே போய்க்கொண்டிருந்தாள்.

வெள்ளிநாதம்

04-10-04-2003

# துடிப்புகளில்லா ஓடங்கள்

காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்கத் திராணியற்றது போலத் தென்னைமரங்கள் ஓவென்று இரைந்துகொண்டிருந்தன. வயல் வெளிக்கு அப்பால் ஆற்றங்கரையில் நரிகள் ஊளையிட்டுக்கொண்டிருந்தன. மூலைக்குள் சிக்கன விளக்கின் மெல்லிய ஒளி ஊசலாடிக்கொண்டிருந்தது. அவளுக்குச் சரியான பயமாக இருந்தது. கவலையாகவும் இருந்தது. ஆறுமாத காலமாய் ஒவ்வொரு இரவும் அப்படித்தான் அவளுக்கு பயத்துடனும் கவலையுடனும் கழிந்துகொண்டிருந்தது. பக்கத்து வீடுகூட சற்றுத் தூரத்தான் இருந்தது. தென்னந்தோப்பின் ஊடாக நடக்கவேண்டும். முன் வளவுக்குள் இருந்தவர்கள் சொந்த ஊருக்குப் போய்விட்டதால் வீடு பாழடைந்து வெறிச்சோடி இருந்தது.

பாயின் ஓரத்தில் அவள் படுத்திருந்தாள். அருகில் நான்கு வயது மகன் அகிலனும், இரண்டரை வயது சுகிர்தாவும் அயர்ந்து தூக்கத்தில் இருந்தார்கள். இப்போதும் அவள் ஏழரைமாத கருவை சுமந்துகொண்டு தான் இருக்கிறாள்.

"எல்லாரும் ஊருக்குப் போறாங்கள்... நானும் ஒருக்காப்போய் நம்மட தாய் தகப்பனை... இனசனத்தைப் பாத்திட்டு வரலாமெண்டு யோசிக்கிறன் சித்திரா..."

"......"

"என்ன யோசிக்கிறாய் சித்திரா...? சொல்லன்..."

"தனியாவா போப்போறீங்கள்...?"

"ஏன்...? தனியப் போனா உன்னைக் கைவிட்டுட்டு அங்க நிண்டுடுவன் எண்டு பயப்படுறியா...?"

அவன் தமாசாகத்தான் கேட்டான்.

"அப்பிடியில்லை... குழந்தையள் ரெண்டும் சின்னதுகள்... இப்பவும் அம்பது நாளாச்சு... இந்த நேரத்திலை... நீங்களும் வெளிக்கிட்டா... கையிலையும் ஒருசதம் இல்லை..."

துயரில் தோய்ந்ததாய் அவள் குரல். அவன் அவளுக்கு நெருக்கமாக வந்து அமர்ந்தான்.

"இஞ்ச பார் சித்திரா... நான் ஊருக்குப் போனா... என்ர பங்குக் காணி இருக்கு... அதை வித்துக் காசா கொண்டு வரலாம்... உனக்கு ஒரு தோடு... சின்னதா ஒரு செயின்... சுகிர்தாவுக்குத் தோடு...ம்... இனி உண்டாகியிருக்கறதும் பொம்பிளப்பிள்ளையெண்டா... அதுக்கும்..."

"நீங்க போனா காசோடை வருவியள்... சரி... பயணம் போறதுக்கு காசுக்கு எங்கபோறது...? விடிஞ்சா பாணுக்குக் கூட காசில்லை..."

"நம்மட ராசகிளி அன்ரி இருக்கிறாவெல்லே... அவையிட்டை சீட்டுக்காசு இருக்கும்... ஆயிரம் ரூபா கேட்டுப்பார்... இண்டைக்கு ஆறாம் திகதி... வாற முதலாம் திகதி வட்டியோடை குடுப்பம்..."

அவன் அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகம் மிகவும் களைத்துப்போயிருப்பதாக அவளுக்குத் தெரிந்தது. நாலைந்து

நாட்களாக சரியான சாப்பாடும் இல்லாதிருந்தது.

"எங்கட கஷ்ரத்துக்குள்ள அது வேறை..."

வயிற்றைத் தொட்டு அவள் சலித்துக்கொண்டாள்.

"அப்படியெல்லாம் சொல்லாத... நான் ஒருக்கா ஊருக்கப் போயிட்டு வந்தா எங்கட கஷ்ரம் துலைஞ்சிடும்... எனக்கு நம்பிக்கையாயிருக்கு..."

அதன் பிறகு அவள் எதுவும் கதைக்கவில்லை.

அவளுக்கு இப்போது மிகவும் களைப்பாயிருந்தது. அவளைத் தெரிந்தவர்கள் அவளுக்காக இரக்கப்பட்டார்கள். அவன் போய் அறுபத்து மூன்று நாட்களுக்கு மேலாகிவிட்டது. குழந்தைகளுக்குச் சரியான பசி.

அவள் கிளினிக் போனபோது அவளுக்குப் போதிய சத்தில்லை என்று கூறி சத்தான குளிசைகளும், சத்துணவும் கொடுத்தார்கள். அவளால் சாப்பிட முடியாதிருந்தது.

சீட்டுக்கார இராசகிளி அக்காவுக்கு அவன்மீதிருந்த நம்பிக்கையில் வாங்கிக் கொடுத்த பணத்திற்கு மாறிமாறி தவணை சொல்லி ஏராளமாய் பேச்சும் வாங்கி முடிந்துவிட்டது.

"திருப்பித்தர வக்கில்லாதனி... ஏன் வாங்கினனி...?"

இராசகிளியக்காவின் வார்த்தைகள் குத்திக்குதறின.

"அவர் எப்பிடியும் வந்திடுவாரக்கா... வந்தவுடனை தாறன்..."

"ஓ... அவன் வருவான்... நீ பாத்துக்கொண்டிரு... அவன் அங்கபோய் இத்தறுதிக்கு வேற கலியாணம் முடிச்சிருப்பான்..."

அந்த வார்த்தைகள் அவள் நெஞ்சைப் பிளப்பது போலிருந்தன. அவள் அழுதுகொண்டு படுத்திருந்தாள்.

"ம்... போனவர்... போய் ரெண்டு மாசமாச்சு... ஒருவரிக் கடிதமாவது போட்டிருக்கலாம் தானே... அப்பிடி அங்க என்ன வெட்டிப்புடுங்கிற வேலையே..."

அவள் அசதியில் கண்ணயந்திருக்க வேண்டும். படலையடியில் யாரோ அழைப்பது கேட்டு எழுந்து வந்தாள்.

"அக்கா... இது... இந்திரகுமாரின்ர வீடே...."

"ஓமோம்... அவர் ஊருக்குப் போட்டார்..."

"சயிக்கிள் ஒண்டு வாங்கினவரக்கா... ரெண்டாயிரத்தி நானூறு ரூபாக்கு. இன்னும் காசு தரேல்லை..."

"எனக்கு அப்படியொண்டும் தெரியேல்லை..."

"நீங்கள் ஆர்..."

"நான் அவற்ற மனுசி..."

"அவர் வந்தாச் சொல்லுங்கோ... உடனை காசைக் கொண்டுவந்து தரட்டாம்.... இல்லாட்டி..."

அவளுக்கு தலை சுற்றவது மாதிரி இருந்தது. படலையடியில் அப்படியே உக்கார்ந்து கொண்டாள்.

அவள் இரண்டு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு நடந்தாள். தெருவில் புழுதி கிளப்பிக்கொண்டு வாகனங்கள் பறந்தன. அவனுடைய உறவினர்கள் யாரோ வள்ளிபுனத்தில் இருப்பதாகக் கூறிஇருக்கிறான். ஒருமுறை மாடு ஒன்று கொண்டுவருவதற்காக அந்த உறவுக்கார ஐயா அவர்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். அங்கு போய் அவனுடைய விலாசத்தை வாங்கி ஒரு கடிதம் போடலாம் என அவள் நினைத்துக் கொண்டு புறப்பட்டிருந்தாள்.

கிரவல் தெருவில் குறுனிக் கற்கள் கால்களில் அழுத்துவதால் குழந்தைகள் நடக்கக் கஷ்ரப்பட்டன.

"அம்மா... ஊக்குங்கோ..."

பெண் குழந்தை சிணுங்கிக்கொண்டு நின்றது.

அவளுக்கு அழுகையும் அவன்மீது ஆத்திரமுமாய் வந்தது, அடி எடுத்து வைக்க முடியாமல் தொடைகள் வலி எடுத்தன. அவள் மிகுந்த சிரமத்தோடு பாடசாலைக்கு முன்னால் இருந்த ஒழுங்கையில் இறங்கி நடக்கத் தொடங்கினாள். வீதி ஓரத்து வேலிகளில் பூவரசுகளும், ஆத்தி மரங்களும் குளிர்மைபரப்பின.

அந்த உறவினரின் வீட்டைக் கண்டுபிடித்தபோது நண்பகலாகி

விட்டிருந்தது. அவள் தயங்கித் தயங்கி உள்ளே போனபோது அவர்கள் அவளை அன்பாக அமரவைத்தார்கள். குழந்தைகளுக்கும் அவளுக்கும் உணவு கொடுத்தார்கள்.

அவர்களின் வீட்டில் துள்ளி ஓடும் பசுக் கன்றுடன் குழந்தைகள் விளையாடினார்கள்.

அவள் அவர்களிடம் அவன் ஊருக்குப் போனதைக்கூறி, அவனுடைய முகவரியைத் தருமாறு கேட்டாள். அந்த ஐயா நாடியைச் சொறிந்தபடி சில வினாடிகள் யோசித்தார்.

“பிள்ளையளையும் என்னையும் விட்டிட்டு அரை நிமிசம்கூட அவர் இருக்கமாட்டார்... போனவருக்கு என்ன நடந்துதோ...”

அவள் விம்மி விம்மி அழுதாள்.

“பிள்ளை... நான் உண்மையைச் சொல்லுறன்...”

அவள் அழுவதை நிறுத்தி ஐயாவின் முகத்தைப் பார்த்தாள்.

“உன்ர புருஷன் எங்கட ஊருமில்லை... எங்கட உறவுமில்லை... எங்கட வயலில வேலைக்கு வந்ததிலை சும்மா பழக்கம்தான்...”

எங்கோ உயரத்திலிருந்து தொப்பென்று தரையில் விழுந்து சிதறிப்போன மாதிரியான உணர்வு அவளை அழுத்தியது. அவள் அழக்கூட முடியாதவளாய் அதிர்ந்துபோய் அமர்ந்திருந்தாள். ஐயா சாப்பிட்டு முடித்து மீண்டும் வயலுக்குப் போய்விட்டார். ஐயாவின் மனைவி ஓய்வாக அமர்ந்திருந்தாள். ஏறிய நெற்றியில் விரலால் குங்குமம் தொட்டு பொட்டு வைத்திருந்தாள். சிடுசிடுப்பற்று அமைதியாகவும், அன்பாகவும் தெரியும் அந்த அம்மாவின் உபசரிப்பு அவளுக்கு இதமாயிருந்தது.

“பிள்ளை... இந்த நேரத்திலை கடுமையா யோசிக்கப்பிடாது... நீ ஒருக்கால் மதவடியிலை இருக்கிற சாத்திரியாரிட்டை போ... அவர் மைபோட்டுப் பார்த்து உண்மையைச் சொல்லுவார்... முந்தி எங்கட மூத்தவள் கலியாணத்துக்கெண்டு ஜேர்மனிக்குப் போய்... ஆறேழு மாதமாய் ஒரு தொடர்பும் இல்லை... அந்தச் சாத்திரியாரிட்டைதான் மைபோட்டுப் பாப்பிச்சனாங்கள்...”

“உண்மை சொன்னவரே...”

“ஓ... மூண்டு கிழமைக்குள்ள பதில் கிடைக்குமெண்டவர்...

பத்துநாளைக்குள்ளை பதில் வந்துட்டுது..."

"நிறையக் காசு கேப்பாரே அம்மா... என்னட்டை ஒண்டும் இல்லை..."

"காசெண்டு அவர் வாங்கிறேல்லை... ஏதாவது பொருளாக் கொண்டுபோய் தட்டிலை வைச்சால் சரி பிள்ளை..."

அவர்கள் வீட்டிலிருந்து அவள் புறப்பட்டபோது அம்மா அவளுக்கு ஒரு பையில் அரிசி தந்திருந்தா. நன்றியோடு அதை வாங்கிக்கொண்டு அவள் புறப்பட்டாள்.

வெயில் கொளுத்தி எரித்துக்கொண்டிருந்தது. நிலத்திலிருந்து கிளம்பிய சூடு காற்றுடன் கலந்து அனலாய் வீசியது. வழியில் வெறுமனே லான்மாஸ்ரர் ஒன்று வந்துகொண்டிருந்தது. அவளுக்கு இப்போது உணவருந்திய களை. கையைக்காட்டி லான்மாஸ்ரரை மறித்தாள்.

"எங்கையக்கா போறியள்...?"

இடம் சொன்னாள்.

"ஏறுங்கோ..."

குழந்தைகளை ஏற்றிவிட்டு தானும் ஏறி அமர்ந்துகொண்டாள். குழந்தைகள் பயத்தில் அவளை இறுகப் பற்றிக்கொண்டிருந்தன.

தென்னந்தோப்பினூடாக அவள் நடந்துகொண்டிருந்தாள். பெண் குழந்தை தோளில் உறங்கிவிட்டிருந்தது.

எதிரே சீட்டுக்காற இராசகிளியக்கா வந்துகொண்டிருந்தா. அவவைக் கண்டதும் அவளுக்கு தொண்டைத் தண்ணீர் வற்றிவிட்டமாதிரி இருந்தது.

"இஞ்சே சித்திரா... உன்னட்டத்தான் போட்டுவாறன்... புருஷன்காறனும் விட்டுட்டுப்போட்டான்... நீ எங்கை திரியிறாய்...?"

"அவற்றை சொந்தக்காரரிட்டை போட்டுவாறன்..."

"சொந்தக்காரரோ... அவயிட்டை வாங்கி என்ரை காசைத் தாவன்... சீட்டெடுத்த ஆக்களுக்கு நான் காசு குடுக்கிறேல்லையே..."

"எப்படியும் தருவன்... நாலஞ்சுநாள் பொறுங்கோ..."

"ம்... நீ தருவாய்..."

இராசகிளியக்கா விறுவிறென்று போனா. அவளுக்கு நடக்க முடியாமல் கால்கள் பின்னிக்கொண்டிருந்தன. குழந்தையை மறுதோளுக்கு மாற்றிக்கொண்டு நடந்தாள்.

இரவுமுழுதும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. நேரத்தோடு எழும்பி சாத்திரியார் வீட்டுக்குப் போகவேண்டும் என்கின்ற தவிப்பு அவளை உலுப்பிக்கொண்டிருந்தது.

அந்த ஐயா வீட்டில் அவள்மீது இரக்கப்பட்டு தந்திருந்த அரிசியை அவள் அப்படியே சாத்திரியாருக்கு காணிக்கை கொடுப்பதற்காக கட்டி வைத்திருந்தாள்.

எங்கோ தூரத்தில் சேவல் கூவியது. நேரம் பார்ப்பதற்கு அவளிடம் கடிகாரம் இல்லை. காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு ஏதாவது கோயில் மணி அடிக்கிறதா என்று பார்த்தாள். மூசி வீசும் காற்று எதையும் சுமந்துவருவதாயில்லை.

திடீரென்று அம்மாவின் நினைப்பு வந்தது. அம்மா ஒருபோதும் மணிக்கூடு பார்த்து எழும்புவதில்லை. ஆனால் நான்கு மணிக்கு சரியாக எழுந்துவிடுவாள்.

காதலித்தவனைக் கலியாணம் செய்ய நினைத்த ஒரு காரணத்துக்காக தன்னை ஒதுக்கி வைத்த அப்பாவையும் சகோதரர்களையும் அவள் வெறுத்தாள். அம்மா பாவம் என நினைத்துக் கொண்டாள்.

"இப்பதானே ராசாத்தி உனக்கு பதினேழு வயது... படிச்சு... ஒருவேலை தேடி... ஆறுதலாய் செய்யலாம்... இப்ப ஊர் சிரிக்கும்..."

அம்மாவின் அறிவுரை அவளுக்கு பொருத்தமானதாக அப்போது தெரியவில்லை.

பதினேழு வயதில் அவனுடன் ஓடிப்போய் இருபத்தியொரு வயதில் மூன்று குழந்தைகளுக்கு தாயாக நிற்கும் தன்னை நொந்துகொண்டாள். அவன் ஊரிலுள்ள அரைக்கும் ஆலையொன்றில் வேலை செய்துகொண்டிருந்தான். அவனுடைய கிராமத்தை ஒருநாளிரவு சுற்றிவளைத்த இராணுவத்தினர் பெரிது சிறிது பாராமல் எல்லோரையும் வெட்டியும், அடித்தும் படுகொலை செய்தபோது அவன்மட்டும் எப்படியோ தப்பி இங்கு ஓடிவந்ததாகச்

சொல்லியிருக்கிறான். அவன் கூறிய உருக்கமான கதைகள் பல அவன்மீது ஏற்பட்ட இரக்கமும் அன்பும் அவளை உறவுகளை வெறுத்தும் அவனை அடையச் செய்தன.

உறவுகள் ஊதாசீனம் செய்தபோதும், மூத்தவன் பிறந்த சில மாதங்களில் அவன் வேலையிழந்து... அதனால் வறுமைப்பட்டபோதும் இவன் இருக்கிறான் என்கின்ற தைரியத்தில் இருந்தவள், இப்போது எல்லாமான இவனே பிரிந்துவிட்டபோது துடித்துத் துவண்டுபோனாள். அவன் வருவான் என்ற நம்பிக்கையைவிட வந்துவிடவேண்டும் என்கிற ஏக்கமே அதிகமாயிருந்தது.

அவள் இப்போது நடந்துகொண்டிருந்தாள். மூத்தவனை நடத்திக்கொண்டு, இளையவளைத் தோளில் சுமந்துகொண்டு நடந்துகொண்டிருந்தாள். மழை வெள்ளம் ஓடும் வீதியாததால் மணல் நிறைந்திருந்தது. கால்கள் புதையப் புதைய அவள் நடந்துகொண்டிருந்தாள். சந்தியில் இருந்த தேநீர்க் கடையில் வெளிச்சம் தெரிந்தது. கடைக்கு முன்னால் புளியங்குளம் பஸ்ஸிற்காக இரண்டுபேர் பயணப்பைகளுடன் காத்திருப்பது தெரிந்தது. முகங்கள் சரியாகத் தெரியவில்லை.

பாலத்தைக் கடந்து ஒழுங்கையில் இறங்கி சந்தடியின்றி அந்த மை பார்க்கும் ஐயாவின் வீடுநோக்கி நடந்துகொண்டிருந்தாள். பனை மட்டைகளால் வேலி அடைக்கப்பட்டிருந்த வீட்டின் வளவுக்குள்ளிருந்து நாயொன்று ஓடிஓடிக் குரைத்தது. பயத்தில் மூத்தவன் நடக்கத் தயங்கினான். அவனைக் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தாள்.

ஒரு வீட்டு விறாந்தையில் பெற்றோல் மாக்ஸ் எரிந்துகொண்டிருந்தது. வெளிச்சம் வீதியிலும் படர்ந்திருந்தது. வேலியோரமாய் ஒரு இளைஞன் சைக்கிளில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான்.

“அண்ணை... மைபோட்டுப் பார்க்கிற வீடு...”

“இதுதான்... உள்ள போங்கோ...”

என்றான் அவன். அவள் தயங்கித் தயங்கி உள்ளே போனாள். விறாந்தையில் பத்துப் பெண்கள் வரையில் காத்திருந்தார்கள். வாழைக்குலை, பலாப்பழம், உரப்பை மூட்டை, மரக்கறிகள், தேங்காய்கள் என ஒவ்வொருவரும் கொண்டுவந்த காணிக்கைப் பொருட்கள் விறாந்தையில் பரப்பிக் கிடந்தன. அவளும் தன் அரிசிக் காணிக்கையை வைத்தாள்.

சுவரில் பதிக்கப்பட்டிருந்த மணிக்கூடு நேரம் நான்கு முப்பதைக் காட்டிக்கொண்டிருந்தது. உள்ளிருந்து சாம்பிராணிப்புகை வாசம் காற்றோடு

கலந்துவந்து நாசியில் நுழைந்தது. அவள் அங்கு கூடியிருந்த பெண்களில் ஒருத்தியாய் அமர்ந்துகொண்டாள். ஒவ்வொருவரது முகத்திலும் ஏதோவோர் துயரத்தின் அல்லது பிரச்சினையின் சாயல் வெளித்தெரிந்தது.


விடிவதற்குள் இன்னும் நிறையப் பெண்கள் தமது பிரச்சினைகளின் காரணம் அறிய அல்லது தமது துயரங்களுக்கு ஆறுதல்தேட இங்கு வந்து சேர்வார்கள் என அவர் பலரிடம் கதைத்ததில் தெரிந்துகொண்டாள்.

மூடிய திரைச்சீலைக்குப் பின்னால் இருந்து மை போடுபவர் முதலாவது ஆளை அழைத்தார். ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் தான் சுமந்துவந்த காணிக்கைப் பொருட்களுடன் உள்ளே நுழைந்தாள். சித்திரா உரைப்பையில் தான் சுமந்துவந்த அரிசியை தன்னருகில் இழுத்து தனது முறைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள்.

வெள்ளிநாதம்
13-09-06-2003



# புதிய ஊரின் பழைய மனிதன்



அந்த நீளமான பஸ் என்னை இறக்கி விட்டுப்போனது.

'ஊருக்குப் போகவேண்டும்' என்கிற மனதின் பிடிவாதம் இன்றுதான் நிறைவேறியிருக்கிறது.

'என்ர ஊர்' எனக்குப் பெருமித மாயிருந்தது. சந்தியில் துரையண்ணரின் கடை. இப்போது கடையை அவரது கடைசி மகன் தான் நடத்திக்கொண்டிருந்தான்.

பயணப்பையை வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டும். தூக்கிக்கொண்டு நடந்துபோக முடியாது போலிருந்தது.

"புது ஆக்களைக் கண்டவுடனை ஓட்டோக்காரங்கள் கன காசு கேட்கிறாங்கள்... ஏமாந்து போகாதேயுங்கோ..."

புறப்படும்போது மகள் சொன்ன வார்த்தைகள் ஒருதரம் மின்னி மறைந்தன.

ஒழுங்கைக்கு நேரெதிரே இராணுவக் காவலரண் ஒன்று தெரிந்தது. அதற்குள் ஒருவன் நீட்டிய துவக்குடன் இருந்ததும் தெரிந்தது. யாராவது தெரிந்தவர்கள் வந்தால் பயணப்பையைக் கொடுத்து அனுப்பிவிட்டு நடந்து போகலாம். பார்த்தேன். என்னைக் கடந்து போன எல்லா முகங்களும் எனக்குப் பரிச்சயமற்றவையாகவே தெரிந்தன.

நான் இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவன். முப்பது வருடங்களாய் இந்த ஊர்ப் பாடசாலையிலேயே ஆசிரியப்பணி புரிந்தவன்.

'எனக்கு அறிமுகமானவர்கள் எல்லோரும் எங்கே போய்விட்டார்கள்...?'

மனதுக்குள் சின்னக்கோபம் எட்டிப்பார்த்தது.

'ஆக ஒரு எட்டு வருசம் வன்னியிலை இருந்துபோட்டு வாறன்... இந்த எட்டு வரியத்துக்கை ஊர் என்னை மறந்துபோச்சோ...?' மெல்லியதாய் ஆதங்கம் எழுந்துபரவியது. காவலரணிலிருந்தவன் என்னையே பார்த்துக் கொண் டிருப்பதாகப்பட்டது.

ஒழுங்கைக்குள்ளிருந்து ஒரு சிறுவன் சயிக்கிளில் வந்தான்.

"தம்பி இஞ்ச ஒருக்கா நில்..."

அவன் நிற்கவில்லை. திரும்பித்திரும்பிப் பார்த்தபடியே போனான். பயணப்பையையும் இழுத்துக்கொண்டு கடையடிக்குப் போனேன்.

"தம்பி... அந்த ஐயாவுக்கு என்ன வேணும் எண்டு கேட்டுக்குடு..."

காசு மேசையில் இருந்தவன் சொன்னான். அவன் துரை அண்ணனின் கடைசி மகன்.

"தம்பி... நான் ஒரு ஆசிரியர் தம்பி... சிவனேசன் எண்டு ஓராள் கோயிலடியிலை இருக்கிறார்... அவர் என்ர மருமோன்... அங்க போகவந்தனான் இந்தப் பயணப்பை பாரமாக் கிடக்கு... இதிலை வைச்சிட்டு யோய்... பிறகு ஆரையும் விட்டு எடுக்கலாம்..."

"எங்கையிருந்தையா வாறியள்..."

"நான் தம்பி... புதுக்குடியிருப்பு... ரெண்டாம் வட்டாரம்..."

"இஞ்ச கடைக்குச் சனம் வாறது... பிறகு கரைச்சலாய் போமிடும்...

கோயிலடிதானே... மெல்ல மெல்ல கொண்டுபோங்கோ..."

மேசையில் இருந்தபடியே அவன் சொன்னான்.

"நல்லது தம்பி..."

ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் நடந்தேன். ஒழுங்கைக்குள் பெரும்பாலான முள்கிழுவை வேலிகள் சுற்றுமதிலாக உயர்ந்திருந்தன. சில வீடுகளில் பூட்டுக்கள் தொங்கின.

உள்ளேயிருந்து மக்காட் இல்லாத சயிக்கிளில் இரண்டு இராணுவத்தினர் வந்துகொண்டிருந்தனர். அவர்களின் முகங்களில் கடுகடுப்பு தெரிவதுபோலிருந்தது. அவர்கள் என்னை உற்றுப்பார்த்தபடி போனார்கள். நான் வயோதிபன் தானே... பார்க்கட்டும். தலைக்கு மேலே பனங்கூடலுக்கு நடுவே பிள்ளையார் கோயில் கோபுரம் தெரிந்தது.

என்னை விலத்திப்போன யாரையும் என்னால் அடையாளம் காண முடியவில்லை. யாரும் என்னை அடையாளம் காணுவதாயும் இல்லை. பரமலிங்கம் வீட்டுப் படலையடியில் நின்றேன். வீட்டுக்குள்ளிருந்து வானொலிப்பெட்டி பாடிக்கொண்டிருந்தது.

சிறு குடிசையாக இருந்த பரமலிங்கத்தின் இல்லிடம் வானளாவ எழுந்து நின்றுகொண்டிருந்தது. பரமலிங்கத்தின் மூன்று பெடியள் அரபு நாட்டில் நிற்பதாக நினைவுக்கு வந்தது.

பரமலிங்கத்துக்கு என்னைவிட நாலைஞ்சு வயதுதான் குறைச்சல். நினைத்தபடி நடக்கிறேன்.

பொன்னி ஆச்சிபோல ஒரு ஆள்... அது பொன்னி ஆச்சிதான் இந்த ஊரில் ஒரு பழைய முகத்தைக் கண்டதில் பெரும் ஆனந்தமாகவிருந்தது.

நெற்றிக்கு மேலே ஒற்றைக் கையை வைத்து கண்களை இடுக்கி ஆச்சி என்னைப் பார்த்தா.

"என்னணை பாக்கிறாய்...? என்னைத் தெரியேல்லையே..."

"புது ஆள்மாதிரி கிடக்கு... அறிஞ்ச குரல்மாதிரியும் தெரியுது... ம்..."

பொன்னி ஆச்சி சட்டென்று என்னை அடையாளம் காணாதது

எனக்கு ஆச்சரியமாகவும் அடிநெஞ்சு பிளக்கும் வேதனையாகவும் இருந்தது.

"எணை... நான்தான் நாகலிங்கச் சட்டம்பி... முப்பது வரியமா இருந்து இந்த ஊரிலை எத்தினை பேரைப் படிப்பிச்சனான்... அதுக்கிடையிலை என்னை மறந்துபோனியணை..."

"இல்லையடா மோன... வயது போட்டுது... கண்ணும் மங்கிப்போச்சுது... நான் உன்னை மறப்பனே... அதுசரி... இன்னும் அங்காலைதான் இருக்கிறியே... இஞ்ச வாவன்... அந்தக் காட்டுக்கை கிடந்து கிடந்து சாகவெல்லே போறாய்...?"

என்னிலும் இருபதுவயது அதிகமான பொன்னி ஆச்சி என்னைவிட இளமையாகத் தெரிந்தா.

"வரத்தானணை வேணும்... ஆனா... உங்கை இருக்கிற பேயளெல்லாத்தையும் ஓட்டின பிறகுதானணை வருவன்..."

என்றேன்.

"ஏன் அவங்கள் உன்னை என்ன செய்யிறாங்கள்... நாங்களும் ஆறேழுவரியமா இஞ்சை தானே இருக்கிறம்...?"

"எணை... அவங்கள் என்னையும் உன்னையும் ஒண்டும் செய்யமாட்டாங்கள்... இளம் பெடிபெட்டையளை விடுவாங்களே... இந்தச் செம்மணி வெளியிலை எத்தினை குஞ்சுகளைத் தாட்டவங்கள் எண்டு உனக்குத் தெரியாதே..."

பொன்னி ஆச்சி ஒன்றும் சொல்லவில்லை.

"பேரப்பொடியன் நேசறிக்குப் போனது... கூப்பிடப்போறன்... பிறகு வீட்டுக்குவாவன்.... என்றபடி நடந்தா.

நான் பயணப்பையை மறுகைக்கு மாற்றிக்கொண்டேன்.

ஒழுங்கைக்கு அருகான பனங்கூடலுக்குள் கங்கு மட்டைகள், காவோலைகள் இறைந்து கிடந்தன.

முன்பென்றால் சனங்கள் வேலி அடைக்கவும் அடுப்பு எரிக்கவும் என்று இவற்றை விட்டு வைக்காயினம். என்ர மனுசிகூட உயிரோடை இருக்கும் வரைக்கும் காவோலை எரிச்சுத்தான் தோசை, அப்பம் எண்டு விதம் விதமாச் சுடுவா. இப்ப சுற்றுமதிலும் காஸ் அடுப்பும் வந்திட்டுது.

ஊர்ச்சனம் ஏன் உதுகளைத் தேடுதுகள்...?

மருமகனின் வீடு தெரிந்தது. பக்கவாட்டில் பிள்ளையார் கோயிலும் தெரிந்தது.

பயணப்பையை வைத்துப்போட்டு, குளிச்சு ஒருக்கால் பிள்ளையாரைக் கும்பிட்டுப்போட்டுத்தான் தேத்தண்ணி குடிக்கவேணும். முந்தி திருவிழாக் காலத்திலை விடியவிடிய முல்லைச் சகோதரிகளின்ர பாட்டும், சின்னமணியின்ர வில்லுப்பாட்டும் நடக்கும். தீவட்டித் திருவிழா என்றும் ஒன்று நடக்கும். சுவாமிக்கு முன்னால ஆயிரக்கணக்கான தீவட்டிக்காரர் நடக்க பின்னால சுவாமி ஊர்வலம் வரும். இப்ப அவங்களுக்குப் பயந்து திருவிழாவை வேளைக்கு முடிச்சுப்போடுறாங்களாம். சிரிப்பு வந்தது.

வீடும் வந்துவிட்டது.

கேற்றடியில் நின்று பார்த்தேன். மருமகன் வேலைக்குப் போயிருக்கவேண்டும். முன்கதவு பூட்டியிருந்தது. இராணுவ ஜீப் வண்டி இரைந்தபடி என்னைக் கடந்தது. எல்லோர் கரங்களிலும் துப்பாக்கி ஆயத்த நிலையில் இருந்தது.

“பிள்ளை... பிள்ளை...”

பின்பக்கத்திலிருந்து முகந்தெரியாத இளம்பெண் ஒருத்தி வந்தாள்.

“ஆரைத் தேடுறியள்...”

“சிவனேசன் எங்க போட்டான்...”

“வேலைக்குப் போட்டார்... பின்னேரம்தான் வருவார்... நீங்கள் ஆர்...”

“நான் அவற்றை மாமா... பெஞ்சாதிக்காறி எங்க...?”

“அவ பள்ளிக்கூடம் போட்டா... ரெண்டரைக்கு வருவா...”

“பிள்ளையள் ஆரோடை...?”

“ஜினேசை அக்கா ஸ்கூலுக்கு கூட்டிப்போறவ... சிந்துவை நான் பாக்கிறனான்...”

“அட ரெண்டு பிள்ளையளே... அதுசரி... நீர் ஆர்பிள்ளை...?”

“நான் இஞ்சைதான் சிந்துவைப் பார்க்க நிக்கிறன்...”

“நல்லது பிள்ளை... நான் ஒருக்கா... குளிச்சுப்போட்டு கோயிலுக்குப் போட்டுவாறன்...”

கிணற்றடிக்குப் போனேன். கிணற்றுக்கு மேலே சீமெந்துப் பிளாற் போடப்பட்டு மூடப்பட்டிருந்தது. காலங்காலமாய் நாங்கள் பயன்படுத்திய துலாக்கொடி, வாளி ஒன்றையும் காணவில்லை.

அருகே தண்ணீர்த் தொட்டியில் நீர் நிறைந்திருந்தது.

குளித்துவிட்டு வேட்டியை மாற்றிக்கொண்டு கோயிலடிக்கு நடந்தேன். கோயிலடி வாசலில் யாரோ அறிமுகமற்ற பெண் கும்பிட்டுக்கொண்டிருந்தார். தெற்கு வீதியில் சுந்தரேசன் ஐயர் வீட்டுக்கு அருகில் புதிதாய் மணிக்கடை ஒன்று தெரிந்தது. இராணுவத்தினர் சிலர் கடையடியில் நின்று ஏதோ பார்த்துக்கொண்டிருந்தனர். வாசலில் விழுந்து வணங்கிவிட்டு நிமிர்ந்தபோது – ஆடம்பரமான மரக்கதவுக்குள் பிள்ளையார் பூட்டப்பட்டிருந்தார். கதவில் தொங்கிய பெரிய இரும்புப் பூட்டு நெஞ்சுக்குள் கனப்பதுபோல இருந்தது.

16.07.2003

புலிகளின்குரல்

# வெகுமதி

மதியம் ஒரு மணி நாற்பத்தைந்து நிமிடம். புதுக்குடியிருப்பில் இருந்து அவளைச் சுமந்துவந்த பஸ் அவளை இறக்கிவிட்டு தெருப்புழுதியை வாரிக்கொண்டு போனது. அவள் மணல் ஒழுங்கையினூடே நடக்கத்தொடங்கினாள். போட்டிருந்த செருப்புக்களையும் மீறி வெயில் கால்களை எரித்தது. தாகம் மேலிட்டது.

சந்தியில் கடை வைத்திருக்கும் மகனுக்கு மதியச்சாப்பாடு கொண்டு கார்திகேசு ஐயா எதிரே நடந்துகொண்டிருந்தார்.

"எங்க மோனை போட்டுவாறாய்...?"

"புதுக்குடியிருப்புக்கு ஐயா..."

"இண்டைக்கு நாளைக்கெண்டு மழை ஏமாத்துது... வெயில் தாங்கேலாம சனம் சாகப்போகுது..."

"ம்... மழை மட்டுமே ஏமாத்துது... மனுசரே மனுசரை ஏமாத்தினம்...'

அவள் கூறியது அவருக்குக்கேட்டிருக்க நியாயமில்லை. அவர் அவளை விலத்திப் போய்க்கொண்டிருந்தார்.

எதிர்க்காற்று குடையை அவளிடமிருந்து பறித்தெடுக்கப் போர்தொடுத்தது. இயன்றவரை முயன்று முடியாமல்போக, அவள் குடையை மடக்கிச் சுருக்கிக்கொண்டாள்.

வாசல்படியில் அம்மா குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். அம்மாவைக் கடந்து அவள் உள்ளேபோய் தொப்பென்று நிலத்தில் அமர்ந்தாள். மூத்தவள் சிந்து பாயில் தலகணியை அணைத்தபடி நித்திரையாயிருந்தாள்.

அவள் எதுவும் பேசாமல் சுவரிலிருந்த திருமணப்போட்டோவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளாக எதையும் சொல்லட்டும் என்று காத்திருந்த அம்மா பொறுமை இழந்துபோய்,

“அவையள் என்ன சொன்னவை பிள்ளை...?” என்று கேட்டாள்.

“அவையள் என்னத்தைச் சொல்லுறது...? ஆளைப் பிடிச்சு வைச்சிருக்கினம்... எவ்வளவோ புத்திமதி சொல்லிச்சினம்... குனிஞ்ச தலை நிமிராம இருந்தார்...”

அம்மா மௌனமாக இருந்தாள்.

“நீ என்ன சொன்னனி...?”

“பிள்ளையளையும் என்னையும் விட்டிட்டு எப்பிடி உங்களாலை இருக்கமுடியுது...? பிள்ளையள் அப்பா... அப்பா... எண்டு அழுகுதுகள்... நான் உங்களோடை சண்டை பிடிச்சனானா...? எண்டு கேட்டன்... வாங்கோ வீட்டை போவம் எண்டன்... அசையாம இருக்கிறார்...”

தாயின் கண்களில் இருந்து கண்ணீர் பொலுபொலுவென விழுந்தது. அவள் எழுந்து உள்ளே போனாள். அறைக்குள்ளும் அவளும் அவனும் எடுத்துக்கொண்ட திருமணப்போட்டோ. மணக்கோலத்தில் பெரிய மீசையுடன் பற்கள் தெரியச் சிரித்தபடி அவன். அவளுக்கு உயிரைப் பிழிவதாய் இருந்தது இப்போது.

அவன் சந்திக்குச் சற்றுத் தொலைவிலிருந்த மினி திரையரங்கில் காசாளராக வேலை செய்துகொண்டிருந்தான்.

அவளுடைய சிநேகிதி பாமினியின் பதினெட்டாவது பிறந்தநாளுக்கு

மிக நெருங்கிய சினேகிதிகள் ஆறுபேரை படம் பார்க்க அழைத்துச்சென்றாள்.

அப்பொழுதுதான் அவனை அறிமுகம் ஏற்பட்டது. அந்த அறிமுகம் வளர்ந்துகொண்டிருந்தது. அவனுடைய பெற்றோர் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்தார்கள். அவன் அங்கு செல்லப் பயந்து உறவினர்களுடன் தங்கியிருந்தான். ஏலெவல் வர்த்தகப்பிரிவில் படித்துக்கொண்டிருந்தவன், வீட்டுக்காரரின் தொடர்பு முற்றாக அற்றுப்போக திரையரங்கில் வேலைக்குச் சேர்ந்தான்.

அவனுடைய அறிமுகம் வளரவளர அவளுக்கும் படிப்பில் நாட்டம் அருகிக்கொண்டு வந்தது. அவனுக்கும் அவளுக்குமிடையேயான காதல் ஊரெங்கும் பற்றியெரிந்து அம்மாவிடம் வந்தபோது அம்மா துடித்துப்போனாள்.

அப்பா இறந்து முழுதாக ஒருவருடம் நிறைவுறாத நேரத்தில் அவளின் காதல் அம்மாவுக்குப் பேரிடியாகிப்போனது.

“அப்பாவும் எங்களை விட்டிட்டுப் போயிட்டார்.... நீதானே குடும்பத்தில மூத்தனி... நீ ஒழுங்கா இருந்தாத்தானே அதப்பாத்து தம்பி தங்கச்சியளும் ஒழுங்கா இருக்குங்கள்...”

அம்மாவைப்பொறுத்தளவில் காதலிப்பது என்பது ஒழுக்கக்கேடான விடயம். அப்படித்தான் அம்மா வளர்ந்திருந்தாள்.

“மற்றப் பொடியள் மாதிரியில்லையெணை அவர்... நல்லவர்... எங்கட குடும்பநிலைமையெல்லாம் தெரியும்... அவருக்கும் இஞ்ச ஒருத்தரும் இல்லை... மனிசருக்கு மனிசர் அன்பாயிருக்கிறது பிழையே...” அவள் அம்மாவுக்கும் குழையடித்தாள்.

அவன் ஒருநாள் வீட்டுக்கு வந்தான். அப்பாவின் ஆண்டுத்திவசம் நெருங்குவதால் உறவுகள் திக்குத்திக்காக சிதறிப்போன நிலையில் அம்மாவுக்கும் ஒரு கையுதவி அவசியமாயிருந்தது. அவன் ஓடிஆடி அப்பாவின் ஆண்டுத்திவசத்தை முன்னின்று நடத்தினான். காலந்தோறும் அந்தக் குடும்பத்துடனேயே வாழ்பவன்போல. அம்மாவுக்கு அவனுடைய சுறுசுறுப்பும், நிதானமும் பிடித்துப்போயிற்று. தம்பி தங்கைகள் அவனுடன் ஒட்டிக்கொண்டார்கள்.

சாப்பிட வந்தவர்கள் அவனைக் கேள்விக்குறியுடன் பார்த்தபொழுது... ‘என்ர மருமகன்... மைதிலையைக் கட்டப்போறார்... என்று நெற்றிக்கு நேரே பதிலளித்தாள் அம்மா.

“இப்ப கலியாணத்துக்கு என்ன அவசரம்... மைதிலிக்கு பதினேழு வயதுதானே... ஆகச் சின்ன வயதிலை கலியாணம் கட்டுறது கூடாதெண்டெல்லே டொக்டர்மார் சொல்லுகினம்...?”

முரசுமோட்டை அன்ரி அம்மாவிடம் கேட்டா.

“பெடியன் வீட்டை நெடுகலும் வந்துபோறான்... இப்பிடியே விடுறது நல்லதில்லை... அயலட்டை சனமும் நாலு கதைகதைக்கப்பாக்கும்... நானும் ஆம்பிள்ளைத்துணை இல்லாதனான்...”

அவனுக்கு யாரும் இங்கு இல்லாததனால் மிகவும் எளிமையாகத் திருமணம் நடந்தது. நாலைந்து சினேகிதர்கள் மட்டும் வந்திருந்தார்கள். அவன் அவளின்மேல் உயிராகயிருந்தான்.

“இந்த அநாதைக்கு... அன்பெண்டா என்னவென்று உணரவைச்சது நீ ஒருத்திதான் மைதிலி...” என உருகுவான். தினமும் மாலைப்பொழுதுகளில் கோயில், குளமென்று கூட்டிச்செல்வான். அவனே ஒரு குழந்தையாகிக் குதூகலிப்பான். அவளை அவன் பிரிந்திருக்கும் நேரமென்றால் திரையரங்கில் பணிசெய்யும் நேரம் மட்டுமாகத்தான் இருந்தது.

“நீ எப்பவும் இப்பிடியே சந்தோசமாக இருக்கவேணும் மைதிலி...” இது அவன் அடிக்கடி சொல்லும் வார்த்தைகளாயின.

“நாங்கள் போன பிறப்பில செய்த புண்ணியத்தால தான் இப்ப இப்பிடி ஒரு பெடியனை ஆண்டவன் எங்களுக்குப் பரிசளித்திருக்கிறார்” அம்மா அவளையும் அவனையும் பார்த்து பரவசப்பட்டுப்போவாள்.

திருமணமாகி வருடம் ஒன்று பூர்த்தியாவதற்குள் அவள் முதலாவது பெண்குழந்தையைப் பெற்றுக்கொண்டாள். அவன் குழந்தையைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தான்.

‘குட்டி மைதிலி... குட்டி மைதிலி...’ என்று கொஞ்சினான். குழந்தைக்காக கடையிலிருந்த பொருட்களையெல்லாம் வாங்கிக்குவித்தான். அவனுடைய அன்பில் அவளும் குழந்தையும் திளைத்துப்போனார்கள்.

மிக விரைவில் அவள் இரண்டாவது குழந்தைக்கும் தாயாகிப்போனாள். இருபது வயதில் இரண்டு குழந்தைகள். சினேகிதிகள் அவளைக் கேலி பண்ணினார்கள்.

குடும்பம் பெரிதாகி விட்டதால் திரையரங்கு வேலை மட்டும்

வருமானத்துக்குப் போதாமல்போக, பகலில் வேறு வேலைகளுக்கும் அவன் போகத்தொடங்கினான். பாடுபட்டு உடம்பை வருத்தி அவளுக்கும் குழந்தைகளுக்குமாக உழைத்தான்.

கால ஓட்டத்தில்... சமாதான சூழல்... அவனுக்குள் ஒளிந்திருந்த தாய்ப்பாசம் எட்டிப்பார்க்கத் தொடங்கியது. ஊரிலிருக்கும் அம்மாவுக்கும் கடிதம் போட்டான். கடிதம் அனுப்பிய ஒன்பதாவது நாள் ஒரு மதியப்பொழுது அம்மா உறவினரின் செத்தவீடு ஒன்றுக்காக கந்தபுரம் போயிருந்தாள். மைதிலி மகனுக்கு குளிக்க ஊற்றிவிட்டு ஈரம் உலர்த்திக்கொண்டிருந்தாள்.

படலையைத் திறந்து உள்ளே வந்தவர்களை அவனுடைய தாயும், தங்கையுமென ஊகித்துக்கொண்டவள் 'வாங்கோ... என்று உற்சாகத்துடன் வரவேற்றாள்.

அவசர அவசரமாக மீண்டும் அரிசிபோட்டு வடிச்சு உணவுகொடுத்தாள்.

"அவருக்கு நெடுக உங்கட நினைப்புத்தான் மாமி... மாமா சுகமா இருக்கிறாரே... குட்டித்தம்பி வளந்திட்டானோ..." அன்பாக அரவணைத்தாள்.

"நீங்கள் வாறதெண்டு தெரிஞ்சிருந்தா அவரே முகமாலைக்கு வந்து கூட்டிவந்திருப்பார்... இந்த வெயிலுக்கை அலைஞ்சுபோனியள்..."

"மாமி இஞ்ச பாருங்கோ... மூத்தவள் சரியா உங்கள மாதிரித்தான்... அப்பாவில சரியான பாசம்... அழக்குள்ளையும் அம்மா எண்டு அழுறேல்லை... அப்பா எண்டுதான் அழுறது..."

மாலையில் அவன் களைத்துப்போய் வீடு வந்தான். வாசலில் புதிய செருப்புகளைக் கண்டு யாரோ வந்திருக்கிறார்கள் என்று தயங்கியவன், வந்திருப்பது அம்மாவும் தங்கையும் என்றவுடன் வானத்தில் பறந்தான்.

தாய் அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

"உன்ர வயசுக்காறப் பெடியளெல்லாம் உல்லாசமாகத் திரிய... நீமட்டும் ஏன்ராசா... சுமை சுமக்கிறாய்...?"

என்று கொதித்தாள். கணவனுக்கும், மாமிக்கும், மைத்துனிக்குமாக அவள் மாலைத் தேநீர் தயாரித்துக் கொடுத்தாள்.

"நீ இப்படிப் போயிட்டாய்... வயசுக்குவந்த ரெண்டு தங்கச்சிகளையும் நானென்ன செய்ய...?"

அவனுடைய தாய் மீண்டும் மீண்டும் அழுதாள்.

மறுநாள் காலையில் அவர்கள் புறப்பட்டார்கள். அவனுடைய தங்கைக்கு அவள் புதிய சட்டை வாங்கிக்கொடுத்தாள். தேசிக்காய், கொய்யாப்பழம் என்று பிடுங்கிக் கொடுத்தாள். செவ்வந்தி நாற்றுக்கள் கொடுத்தாள்.

“மாமி மாமாவைக் கேட்டதாச் சொல்லுங்கோ... கெதியில நாங்களும் ஊருக்கு வருவம்...”

என்று மனநிறைவோடு வழியனுப்பினாள். அவன் அவர்களை பஸ் ஏற்றிவிட்டுவந்து வேலைக்குப்போனான்.

இப்பொழுது சில நாட்களாய் அவன் முன்பு மாதிரி இல்லை. வலிமைமிக்க தாயின் கண்ணீர் அவனை வாட்டுவதாக அவள் நினைத்துக்கொண்டாள்.

சரியாக அவன் உணவு உட்கொள்ளுவதில்லை. உறங்குவது அதைவிடக் குறைவாக இருந்தது. வேலைக்குப் போவதுகூட அரிதாக இருந்தது. திரையரங்கில் போகாத நாட்களுக்குக் காசு கழித்துவிட்டு சம்பளம் கொடுத்ததில் மிகவும் குறைந்தளவு பணமே அவன் கொண்டுவந்தான். அதுகூட சட்டைப்பையில்தான் இருந்தது.

அவனை நினைக்க அவளுக்கு அழுகை வந்தது.

“ஏன் பிள்ளை... உனக்கும் அவருக்கும் ஏதும் பிரச்சினையே...?” அம்மா கூடக் கேட்டாள்.

“ஏன் ஒரு மாதிரி திரியிறியள்...? எனக்குச் சொல்லக்கூடாத அப்பிடி என்ன பிரச்சினை உங்களுக்கு...? சொல்லுங்கோ... சொல்லுங்கோ...” அவள் அழுதபடி கேட்டாள்.

அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய தாடைகள் மெலிந்து ஒட்டியிருந்தன. தோள்பட்டையில் குழிகள் விழுந்திருந்தன. மீசை அலங்கோலமாய் வளர்ந்திருந்தது. ஓவென்று கதறவேண்டும்போல இருந்தது அவளுக்கு.

“சொல்லுங்கோ... என்ன பிரச்சினை உங்களுக்கு...?”

மீண்டும் அவள் கேட்டாள்.

"அப்பாவுக்கு ஏலாது... அம்மா பாவம்... ரெண்டு குமர்ப்பிள்ளையளை வைச்சுக்கொண்டு கண்ணீர் விடுறா... உழைச்சுக்குடுக்கவேண்டிய நான்... ஒண்டுமில்லாம கலியாணம் செய்து என்ர சுயநலத்தோடை... எப்பிடி நிம்மதியா வாழுறது...?"

அவள் அவனுடைய அந்தப் பதிலில் அதிர்ந்துபோனாள்.

அவன் சயிக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே போனான். அவள் அப்படியே அமர்ந்திருந்தாள்.

போனவன் நாலைந்து மாதங்களாகியும் வரவில்லை. அவனை ஊரில் தாய்வீட்டில் கண்டதாக உறவினர் ஒருவர் கூற... அவள் அவனைத்தேடி குழந்தைகளுடன் ஊருக்குப்போனாள்.

"அவனோ... அவன் இஞ்ச வரேல்லையே..."

படலையடியில் வைத்தே அவனுடைய தாய் அவளைத் திருப்பி அனுப்பினாள். பசியுடனும் கவலையுடனும் திரும்பினாள். அவதூறான வார்த்தைகளையும் ஆறாத காயங்களையும் சுமந்துகொண்டு அவள் வீட்டுக்கு வந்தாள்.

"எவ்வளவு அன்பாயும் பாசமாயும் இருந்தவர்... எப்படி மனம் மாறிப்போனார்...?"

அவளுக்குள் பெருத்த வியப்பாயிருந்தது.

கடைக்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு கார்த்திகேசு ஐயா வீட்டுக்கு வந்திருந்தார்.

"மோன... உவன் பெடியன்ர விஷயத்தை கடையடியிலை கேள்விப்பட்டனான்..."

ஊர் முழுதும் தமது குடும்பப்பிரச்சினை பரவிவிட்டதை அவரின் கதை மூலம் அவள் உணர்ந்துகொண்டாள். அவளுக்கு கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது. வசந்தகாலத்து மலராய் மணம் வீசிக்கொண்டிருந்த தன் வாழ்வில் இப்படியானதோர் பிரளயம் ஏற்பட்டதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. சுவரில் தொங்கிக்கொண்டிருந்த திருமணப்புகைப்படத்தை அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுடன் வாழ்ந்த வாழ்க்கையின் பசுமையான நினைவுகள் அவளைச் சுட்டு எரிப்பனவாய் அவள் உணர்ந்தாள்.

"இப்ப அவன் என்ன சொல்லுறான் பிள்ளை...?"

"காவல்துறையில அறிவிச்சிருக்கு ஐயா... அவை ஏதும் நடவடிக்கை எடுப்பினம் தானே..."

அம்மாதான் அவருக்குப்பதில் சொன்னாள்.

"நான் ஒண்டு சொல்லுறன் பிள்ளை... குடும்பத்திலை இவ்வளவு அன்பா இருந்தவன் இப்படி மாறிப்போனான் என்றால்... இதிலை ஒரு சங்கதி இருக்குது பிள்ளை...?"

"....."

"ஆரோ இதுகளைப் பிரிச்சவைக்க மருந்தோ, மந்திரமோ செய்திருக்கினம்... இல்லாட்டி... ம்... அவன் எவ்வளவு நல்ல பிள்ளை"

"ஓமய்யா... நானும் அப்படித்தான் நினைக்கிறன்... ஊரில இருந்து தாய்க்காறி வந்துட்டுப்போன பிறகுதான் ஆள் இப்படி மாறிப்போனது..."

"பாத்தியே... நீ அங்கை இஞ்சையெண்டு பிள்ளையை அலைய விடாமல் உதுக்கு ஏதும் அலுவலைப்பார்... மருந்தாலை மாறின மனதை மருந்தாலைதானே மாத்தவேணும்..."

"சமாதானம் வந்திட்டுது... அவற்ற ஆட்களிட்டப் போய்வரலாம்... எல்லாரும் சந்தோஷமா வாழலாம் எண்டு நினைச்சன்... ஆனா எனக்குக் கிடைச்ச வெகுமதி பிரிவுதானே..."

அவள் உள்ளே குமுறினாள். தலையைப் பிடித்துக்கொண்டு அழுகையை அடக்க முயன்றாள்.

ஏணைக்குள் உறங்கிக்கொண்டிருந்த கைக்குழந்தை வீறிட்டு அழுதது. அவள் எழுந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு பாலூட்டுவதற்காக உள்ளே போனாள்.

உள்ளேயும் திருமணக்கோலத்தில் அவன் அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் புகைப்படம் தெரிந்தது.

வெள்ளிநாதம்
01-07-08-2003

# அகதி

வாகனம் சீரான வேகத்தோடு கண்டி வீதியூடாக ஓடிக்கொண்டிருந்தது. சாரதிக்கு அருகிலிருந்த ஆசனத்தில் அத்தான் அமர்ந்திருந்தார். அக்கா ஜன்னலோரமாய் மடியில் குழந்தையுடன் தூங்கி வழிந்துகொண்டிருந்தாள்.

இவன் அம்மாவுக்கு அருகில அமர்ந்திருந்தான். அம்மாவைப் பார்க்க இவனுக்குப் பாவமாக இருந்தது. அம்மா குடும்பத்துக்காகவே உழைத்து உழைத்துத் தேய்ந்தவள்.

"அம்மா... ரீ ஏதும் குடிக்கப்போறியளே..."

குனிந்து அம்மாவின் காதுகளில் கேட்டான்.

"வேண்டாம்... வீட்டைபோய் பல்லு மினுக்கி... சாமி கும்பிட்டுத்தான் தம்பி குடிப்பன்..." என்றாள் அம்மா.

"இன்னும் நீங்கள் உப்பிடித்தான் இருக்கிறியளே..."

"நாங்கள் பட்டகஷ்ரத்துக்கு... கடவுள் எங்களை இப்ப இப்பிடி இருக்கவிட்டிருக்கிறார்.. நன்றி மறக்கலாமே..."

அவன் ஏதும் சொல்லாமல் அமர்ந்திருந்தான்.

வாகனத்துள் தமிழீழம் பற்றிய பாடல் ஒன்று ஒலித்துக்கொண்டிருந்தது. அற்புதமான அந்த பாடல் வரிகளிலும்... இசையிலும் இவன் ஆழ்ந்திருந்தான்.

பதினாறு வருடங்களின் பிறகு... பிறந்த இடத்திற்கு வருவதிலும்... உறவுகளைக் காண்பதிலும் இவனுக்கு மகிழ்வாயிருந்தது. அந்நிய நாட்டிலிருந்த பதினாறு வருடங்களும் உடலாலும் உள்ளத்தாலும் அனுபவித்த சித்திரவதைகளை நினைத்துப்பார்க்க விரும்பாதவனாக இருந்தான்.

ஆரம்பத்தில் இவனுக்கு வெளிநாடு செல்வதில் விருப்பமில்லாத மனநிலை இருந்தது. உயர்தர கணிதப்பிரிவில் படித்துக்கொண்டிருந்தான். எப்படியும் பல்கலைக்கழக அனுமதி பெற்று விட வேண்டும் என்றுதான் படித்துக்கொடிருந்தான்.

ஆனால் ஊரை மொய்த்துக்கொண்டிருந்த இந்திய இராணுவம் ஊரைச் சுற்றிவளைத்தது. இளைஞர்களைப் பிடித்து சிறைவைத்து அடித்ததில் இவனும் அவமானப்பட்டுப் போனான். மீண்டும் மீண்டும் இவனைப் பிடித்து துன்புறுத்தலாம் என வீட்டில் பயந்தார்கள்.

ஊரைவிட்டு வெளிநாடு போனவர்களில் இவனும் ஒருவனானான். வெளிநாட்டுப்பயணம் மிகுந்த துயரமாய் அமைந்தது.

இருபத்தி நான்குபேர் கொள்கலன்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டுத்தான் ஜேர்மன் எல்லைகடத்தப்பட்டார்கள். இவர்களில் பதின்மூன்று பேர்தான் உயிரோடு பிரான்ஸ்சை அடைந்தார்கள். அங்கும் அனுபவித்த மனவேதனைகளை இவனால் மறக்க முடியாதவை. இரண்டு வருடங்கள் பிரான்சில் நின்று படாதபாடெல்லாம் பட்டு யாரோ ஒரு தூரத்து உறவினரின் உதவியோடு கனடாவிற்குப் போனான். அங்குதான் இவன் தனக்கு நிகழ்ந்த மனத்துயரங்களையெல்லாம் நினைத்து நினைத்து அழுதிருக்கிறான்.

"மச்சான் உதுகளையெல்லாம் மனசில் வைச்சிருக்கப்படாது. காசு உழைக்கத்தானே வந்தனாங்கள்.. எப்பிடியும் காசை உழைக்கப்பார்க்கவேணும்."

அவனுடன் அறையில் தங்கியிருந்த சிறி சொன்னான். சிறியின் கருத்தோடு இவனும் உடன்பட்டுப்போனான்

காலம் இவனையும் மாற்றியது. உழைப்பு குறிக்கோளானது. வீட்டுக்கு பணம் அனுப்பத்தொடங்கினான்.

ஏற்கனவே பெரியக்காவிற்கு திருநெல்வேலியில் கலியாணம் நடந்து விட்டிருந்தது. அத்தான் சங்கக்கடை மனேஜராக இருக்கிறார். இவன் நான்கு வருடங்களில் சின்னக்காவிற்கும் திருமணம் நடக்க உதவினான்.

இப்போது சின்னக்காவின் குடும்பம் லண்டனில் இருக்கிறது. மீண்டும் மீண்டும் இயந்திரமாக உழைத்தான். இவன் உழைத்த பணத்தில் தம்பியும் தங்கையும் படித்து பல்கலைக்கழகம் போனார்கள். இதனிடையே அப்பா நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தார். சுயநினைவிழந்த நிலையில் அப்பா இவனுடைய பெயரையே உச்சரித்துக் கொண்டிருப்பதாக வவுனியாவிலிருந்து தாசன்மாமா அறிவித்தார். இவன் அப்பாவைக் கடசியாய் ஒருதரம் பார்க்க வேண்டும் என்று துடித்தான். இஞ்ச வரவேண்டாம் நிலமை நல்லாயில்லை என்று அம்மா அறிவித்தாள். அதற்குள் அப்பாவின் செத்தவீடு நடந்த வீடியோக்கொப்பி அவனைவந்தடைந்தது.

ஒரு நாள் வேலைக்குப் போகாமல் நின்று வீடியோக் கொப்பியைப் பார்த்துப் பார்த்து அழுதான். ஆறுதல் கூறுவதற்குக்கூட யாருமில்லாமல் அழுதான். காலம் ஓடியது.

மேலும் இரண்டு வருடங்கள் உருண்டன.

தங்கை பல்கலைக்கழகப்பட்டதாரி என்பதால் அவளைத் திருமணம் செய்யவுள்ள இளைஞன் நிறைய பணம் கேட்பதாக அம்மா எழுதினாள்.

தூக்கத்தைக் குறைத்து, உணவைக் குறைத்து, கொண்டாட்டங்களைக் குறைத்து சேமித்து தங்கையின் திருமணத்துக்கும் பணம் அனுப்பினான்.

இப்போது எல்லாச்சுமையும் இறங்கியபோது இவனுக்கு வயது முப்பத்து நான்கு.

"தம்பி... உனக்கு வயசு வந்திட்டுது.. உனக்கும் இஞ்ச ஒரு நல்ல பொம்பிளையைப் பாக்கட்டே...''

அம்மா ஒருதரம் ரெலிபோனில் கதைத்தபோது கேட்டாள் "அடுத்த வரிசம் உங்க வாறதுக்கு இருக்கிறனம்மா.. வரேக்கை யோசிப்பம்'' என்று கூறினான்.

தனக்கென்று ஒரு குடும்பம் தன்னுடைய இன்ப துன்பங்களைப்

பகிர்ந்து கொள்ள ஒரு துணை... குதூகலிக்க குழந்தைகள்... வாழ ஒரு வீடு எல்லாம் தனக்கும் தேவை என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

கனடாவில் சில குடும்பங்கள் பொருளாதார ரீதியாகப்படும் இன்னல்களைப் பார்த்தும் இவன் அமைதியாகிவிடுவான்.

இவனோடு ஒன்றாக இருந்த சிறி கூட திருமணம் செய்து வேறு இடம் போய் விட்டான்.

"மச்சான் நீங்கள் என்னமாதிரி.."

சிறி ஒரு நாள் கேட்டான்.

"நிறைய உழைச்சுக்கொண்டு ஊருக்குப் போய் அங்கை செட்டிலாகிவிடவேணும்..." சிரிப்போடு இவன் சொன்னான்.

"இப்பவே கிழவனாப் போனாய்.. இன்னும் உழைச்சுக்கொண்டிருந்தால் குடுகுடு கிழவனாய் போயிடுவாய்..."

அவன் முதுகில் தட்டிச் சிரித்துச் சொன்னான்.

வீடு குடிபுகுதல், அக்காவின் மகளின் சாமத்தியச்சடங்கு, தம்பியின் கீ பேத்தடே, தங்கையின் குழந்தையின் பிறந்தநாள் என எல்லாக் கொண்டாட்டங்களினதும் வீடியோக் கொப்பிகள் அவனை வந்தடைந்தன. கூடவே ஒருமுறை, தங்களைக் கஷ்டம் என ஒதுக்கிய உறவினர்கள் இப்போதிருக்கும் வசதிகளைப் பார்த்து தங்களுடன் உறவாடுவதாகவும் அம்மா கடிதம் எழுதியிருந்தாள்.

வாகனம் திடீரென்று நின்றது.

அவன் தன் பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டான்.

சோதனை நிலையம்.

"இறங்குங்கோ... பதிஞ்சிட்டுப்போவம்..."

அவர்கள் இறங்கி சோதனை நிலையத்தில் அலுவல்களை முடித்துக்கொண்டார்கள்.

"நான் வெளிநாட்டுக்குப் போகேக்குள்ள... ஆனையிறவில இந்தியன்

ஆமி சோதிச்சு விட்டவன்... இப்ப எங்கட பெடியள்... நினைக்க எவ்வளவு பெருமையாக் கிடக்கு...'

கூறியபடியே இவன் வாகனத்துக்குள் ஏறினான்...

சிறிது தூரத்தில்... இராணுவ சோதனை நிலையம்...

அவர்களும் பெயர் முகவரி பதிந்து பொருட்களைச் சோதித்து – பின் போக அனுமதித்தார்கள்.

அடியோடு அறுக்கப்பட்ட தென்னை மரங்களையும், உடைத்து நொருக்கப்பட்ட வீடுகளையும் பார்த்து மனம் வருந்தியபடி இருந்தான் இவன். வீதி முழுவதும் ஆயுதம் தாங்கிநிற்கும் இராணுவத்தினரையும் இவன் பார்த்தான். இராணுவத்தினரின் முகங்களில் கடுமை இருப்பதை இவன் உணர்ந்துகொண்டான்.

பயணத்தின் இடையில் செம்மணிவெளி புதர் மண்டித்தெரிந்தது.

"இதுக்குள்ளை எத்தினை பெடிபெட்டையளை அடிச்சுத் தாட்டாங்கள்..."

அம்மா சொன்னாள்.

அவனுக்குள் விபரிக்கமுடியாத உணர்வொன்று கிளர்ந்தது.

மீண்டும் சிறிது நேரப் பயணம். ஊர் அண்மித்துக் கொண்டிருந்தது. வழியில்காணும் முகங்களை இவனால் அடையாளம் காணமுடியாதிருந்தது. ஒழுங்கையால் திரும்பி சிறிது தூரத்தில் வாகனம் நின்றது.

"இறங்கு தம்பி..."

என்றாள் அம்மா.

அத்தான் முன் கதவைத் திறந்து இறங்கினார்.

அக்கா இறங்கி ஹான்ட் பாக்கிலிருந்து திறப்பெடுத்து கேற்றைத் திறந்தாள்.

வீட்டு முற்றத்தில் பெரிய பலாமரம் நிறையக் காய்களுடன் நின்றது. வீட்டைப்பார்க்க அவனுக்குப் பிரமிப்பாய் இருந்தது.

"தங்கச்சி எங்கை...?"

சுற்றும் முற்றும் பார்த்துக் கேட்டான்.

"இது அக்காவின்ர வீடு... தங்கச்சிக்கு வேற வீடு கட்டிக்குடுத்தது..."

என்றாள் அம்மா...

"அப்ப சின்னக்கா..."

"சின்னக்காவின்ர புருஷன்ர தாய் தனிய... அந்தாள் தாயை விட்டிட்டு வராது... அவையளுக்கு அவையளின்ர இடத்திலை வீடு கட்டிக்குடுத்தது..."

அக்கா சொன்னாள்...

வீட்டுக்குள்ளே அவன் போனான். வீடு பளபளப்பாய் இருந்தது. புதிதாக பெயின்ற் அடித்திருக்கவேண்டும்.

"தம்பி... இந்தா... நீ போகும் வரையும் இந்த றூமைப் பயன்படுத்தலாம்..."

என்றபடி, அக்கா கதவைத்திறந்து லைற்றைப் போட்டாள்.

கட்டில், மேசை, கொம்பியூட்டருடன் கூடிய அழகான அறை. கனடாவில்கூட இப்படியான அறையில் அவன் இருந்ததில்லை என நினைவு வந்தது.

அம்மா கடைசியாய் உள்ளே வந்தாள்.

"அம்மா எதம்மா என்ர வீடு...?"

ஆதங்கத்தோடு அம்மாவைக் கேட்டான். அவனுடைய கேள்வி அவளுக்கு என்ன உணர்வை ஏற்படுத்தியதோ... எதுவும் சொல்லாமல் நின்றாள்.

அவன் எதிரே கண்ணாடி ஜன்னலில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்தான்.

வெளிநாட்டில் மட்டுமில்ல... உன்ர குடும்பத்தில கூட நீ அகதிதான்.

அந்த நிழலுருவம் இவனுக்கு சொல்லவது மாதிரி இருந்தது.

- புலிகளின் குரல்
29.08.2003



# ஒரு புரிதலின் பின்

எங்கோ தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. அரவிந்தன் ஜீன்ஸ் சேட்டுடன் மல்லாந்து... ஒரு கையை நெஞ்சிலும் மறுகையை தலைக்குக் கீழும் வைத்தபடி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். மெல்லிய மின் விளக்கின் ஒளியில் சிவந்த அவன் முகத்தில் இப்போதும் ஒட்டியிருந்தது குழந்தைத்தனம். குனிந்து அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்த அன்னமுத்து அவனின் தூக்கம் கலைந்து விடாதிருக்க மெதுவாக கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தாள்.

நடு அறைக்குள் சின்னவளும் அவள் கணவரும் குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். குசினிக்குள் போய்... கிணற்றடிக்குப் போகும் வாசல் கதவின் தாழ்ப்பாளை அகற்றியபோது, சின்னவளின் குழந்தைகளைப்போல் ஓடிவந்து அவளுடன் அப்பிக்கொண்டது குளிர்காற்று...

இரவுமுழுவதும் பனி கொடுகவைத்தது.

கட்டிலில் படுத்திருந்த அரவிந்தனை போர்வையால் மூடிவிட்டாள் அவள்.

“அங்கை இதைவிடச் சரியான குளிர்... எங்களுக்குப் பழக்கமாப்போச்சுது...”

போர்வையைச் சுருட்டி மறுகரையில் வைத்தான் அவன். அவன் பதினேழு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஊரிற் காலடி எடுத்து வைத்திருக்கிறான்.

கனடாவுக்கு அவன் போகும் போது... அரும்புமீசையும்... ஒல்லியான உடல் அமைப்பும் கொண்டிருந்தான்.

இப்போது சினிமாப்படங்களில் வரும் சில கதாநாயகர்களைப்போல, அடர்த்தியான மீசையும், கட்டான உடலுமாயிருக்கிறான். மகனின் கம்பீரமான தோற்றத்தை நினைக்க அவளுக்குப் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்தது.

அவன் வந்து இறங்கியதும் உறவினர்கள் நலன் விசாரிக்கவென்று வந்து மொய்த்தார்கள்.

விரிந்த அவன் மார்பையும் நிமிர்ந்த அவன் தோற்றத்தையும் உறவினர்கள் கண்ணூறுபடுத்தி விடுவார்கள் என்ற பயம் அவளுக்கு. பிள்ளையார் கோயிலின் அதிகாலைப் பூசை ஆரம்பமணி அடித்தது. அன்னமுத்து அவசரமாய் பல் விளக்கி கால் முகம் கழுவினாள். சுவாமி அறைக்குள் போய் விபூதியைத் தொட்டுப் பூசிக் கொள்ளும் போது... சில நாட்களுக்கு முன்னர்தான் வீட்டுக்கு அடித்த வர்ணப்பூச்சின் மணம் நாசிக்குள் நுழைந்தது.

வீட்டை அவள் கண்கள் ஒருமுறை துளாவின.

இந்த வீடு... கனடாவிலிருந்து அரவிந்தன் அவ்வப்போது அனுப்பிய பணத்திற்கட்டியது. மூத்தவள் கலாவுக்கு இந்த வீடு சீதனம். மூத்தவள் கணவன் குழந்தைகளுடன் நோர்வேயில், கழுத்தில் ஏதோ ஊர்வதுபோலிருந்தது. கையால் தடவிப் பார்த்தாள். அரவிந்தன் காரால் இறங்கியவுடன் அவள் கழுத்தில் போட்டுவிட்ட நாலரைப்பவுண் சங்கிலி.

சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கண்ணாடியில் பார்த்தாள். மின்வெளிச்சத்தில் பளபளத்தது அது. ‘என்ர பிள்ளை எனக்கெண்டு ஆசையாய்க் கொண்டுவந்தது...’ சேலையின் சட்டைக்குள் விட்டுக்கொண்டாள் அந்தச் சங்கிலியை. குசினிக்குள் போய் கேத்திலைக் கழுவி தண்ணீர் நிரப்பி அடுப்பில் வைத்து மூட்டினாள். பனிக்குளிருக்கு அடுப்புச் சூடு இதமாயிருந்தது. உள்ளே சின்னவளின் கைக்குழந்தை சிணுங்குவது கேட்டது.

“அம்மா...”

"ஓம் பிள்ளை..."

"துஷிக்குப் பால் கரைச்சுத்தாங்கோ..."

"இந்தச் சூடு காணும்..."

சூப்பிப் போத்தலைக் கழுவி... பாலைக்கரைத்து அதில் ஊற்றினாள்.

"இந்தா பிள்ளை..."

சின்னவள் இரவு உடுப்போடு எழுந்து வந்து சூப்பியை வாங்கிக்கொண்டு போனாள். குழந்தையின் அழுகை நின்றுபோனது. அன்னமுத்து குசினிக்குள்ளிருந்த கதிரையில் அமர்ந்தாள். அது பழைய கதிரை. அதனால் தான் அதுவும் குசினிக்குள்ளிருந்தது.

"புள்ளையப்பாக்க அந்தாளுக்குத்தான் குடுத்து வைக்கேல்லை..."

அவள் கண்கள் ஈரலித்தன.

அவளுடைய கணவன் துரைசிங்கம் ஊர்ப் பாடசாலையில் இரவுநேரக் காவலாளியாக நீண்ட காலம் வேலை செய்தவர். ஆறு வருஷங்களாக சலரோகத்தால் பாதிக்கப்பட்டு... மூன்று மாதங்கள் பெரியாஸ்பத்திரியில் ஒரேகிடையாகக் கிடந்து இறந்துபோனார்.

"குடிக்காம இருந்திருந்தா... மனுசன் இன்னும் கொஞ்சக்காலம் இருந்திருக்கும்... அதுக்கு விதி இல்லாமல் போச்சு..."

அவள் நெஞ்சுக்குள் துயரம் கொப்பளித்தது. கண்கள் கலங்கின.

"மனுசன் சாகிற நேரம்... வீடு கூட இப்படியில்லை... வெறும் ஓலைக்கொட்டில்... நிலமெல்லாம் புழுதியடிச்சுப்போய் கடைசியாய்... ஒரு சொட்டு பால் பருக்கக் கூட அருகில் ஆளில்லாம..."

அவள் சீலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"அம்மா... என்ன செய்யிறியள்...?"

சின்னவள் படுக்கையால் எழும்பி வந்தாள்.

"கொண்ணை எழும்புறதுக்கிடையில் ஏதும் சாப்பாடு செய்யவேணும்

பிள்ளை. என்ன செய்யிறது...?"

"ம்... குழல் புட்டு அவிப்பமே... அங்க வெளிநாட்டில உதெல்லாம் சாப்பிட்டிருக்க மாட்டினம்..."

"அப்ப நான் மாவைக் குழைக்கிறன்... நீ கெதியாய் முகத்தைக் கழுவிப்போட்டு வா..."

"உடைக்கில் முட்டுக்காய் தேங்காயை உடையுங்கோ... அதுதான் புட்டுக்கு ருசியாய் இருக்கும்..."

அன்னமுத்து உடைத்துவைத்த தேங்காயை சின்னவள் திருவினாள்... கிழக்கிலிருந்து பெரும் ஆரவாரத்துடன் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பனிப்புகையைக் கிழித்து ஒளிக்கதிர்கள் ஊடுருவி வீட்டினுள் நுழைந்துகொண்டிருந்தன.

ஒழுங்கையால் பாடசாலைப் பிள்ளைகள் சிறுசிறு குழுவாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வழமையாக தினமும் எட்டு மணிப் பூசைக்கு பூப்பிடுங்கவரும் வீரசிங்கம் பனிக்குளிரில் நடுங்கி பூப்பறித்துக் கொண்டிருந்தான். அறைக்கதவை மெல்ல நீக்கி அன்னமுத்து எட்டிப்பார்த்தாள். இன்னமும் அப்படியே மல்லாந்து நெஞ்சில் ஒரு கையையும் தலையின் கீழ் ஒரு கையையும் வைத்து அரவிந்தன் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய தலை கட்டிலின் மேற்புற விளிம்பிலும்... கால்கள் அடிப்புற விளிம்பிலும் முட்டிக்கொண்டிருந்தன...

"இவன்தான் சரியாத் தேப்பன்மாதிரி... நல்ல உசரம்... தலைமயிரும் நல்ல கருமை..."

அவளுக்கு பதினேழு வருடங்களாக காணாத மகனையிட்டு பெருமை பொங்கிக்கொண்டிருந்தது.

"எட்டுமணியாகுது... பிள்ள... இவன்... தம்பி... இன்னமும் எழும்பாமக் கிடக்கிறான்..."

"எணயம்மா... இப்ப அங்க இரவெண... அதுதான் அவன் இன்னமும் எழும்பேல்ல..."

அன்னமுத்து விறாந்தைக்குள் வந்து வெற்றிலைத் தட்டத்தை எடுத்து ஒருவாய் வெற்றிலை போட்டுக்கொண்டாள்.

அரவிந்தன் கொண்டுவந்த பயணப்பெட்டிகள் சுவரோரமாய் வரிசையாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பூட்டுக்களும் தொங்கிக்கொண்டிருந்தன.

"சின்னவள்..."

"என்னணை..."

"உவ்வளவு பாரங்களையும்... தம்பி என்னெண்டு பிள்ளை கொண்டு வந்து சேத்தவன்..."

"அவன் தூக்கிச் சுமக்கத் தேவையில்லையணை... பிளேனிலை போட்டுவிட்டா... எயாப்போட்டில வந்திறங்கும்... பிறகு இஞ்சாலவானிலை போட்டுக்கொண்டு வந்தது..."

"அப்பிள்ள... ஆமியள் ஒரு தொந்தரவும் தரயில்லையே..."

"வெளிநாட்டு பாஸ்போட்டை காட்ட விட்டிட்டான்..."

"அம்மா..."

அரவிந்தன் ஓடிவந்து அன்னமுத்துவின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கொஞ்சினான். அவளுக்கு மனதுக்குள் கூச்சமாயிருந்தது.

"கால் முகத்தைக் கழுவன் தம்பி... தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறன்..."

"எனக்குத் தேத்தண்ணி வேண்டாமம்மா... ஜூஸ் இருந்தா ஒரு கிளாஸ் தாங்கோ... அதுபோதும்..."

"விடிய வெள்ளன... அந்தக் கறுமாதிய ஏனடாமோன... சுடச்சுடத் தேத்தண்ணி குடி..."

அவன் சிரித்தபடி மீண்டும் அறைக்குள் போனான்.

"பிள்ள சாப்பாடுகள் எல்லாத்தையும் மேசையில எடுத்துவை. தம்பி முகங்கழுவப் போட்டான்..."

மளமளவென்று குசினிக்குள்ளிருந்த உணவுகள் மேசைக்கு வந்தன. குழல்புட்டு, முட்டைப்பொரியல், வெந்தயக்குழம்பு, உள்ளி மிளகுச் சொதி, கப்பல் வாழைப்பழம்...

தொலைக்காட்சி நாடகத் தொடர்களில் வரும் சாப்பாட்டு மேசைபோல் இந்த மேசையும் அழகாக இருந்தது.

'அரவிந்தன் எழும்பியாச்சோ...''

கேட்டபடி சின்னவளின் கணவன்.

''ஓம்...''

இப்போது சின்னவளின் மூத்தவன் நான்கு வயது நிரம்பிய சசி... சிணுங்கிக்கொண்டு வந்தான்...

''இஞ்ச வா தம்பி... அம்மா இஞ்ச நிக்கிறன்...''

குசினிக்குள்ளிருந்து வந்தது சின்னவளின் குரல்...

''அம்...மாஆ...'' அவனின் அழுகை கூடியது.

''மாமா... உங்களைக் கக்காப்பிள்ளை எண்டு சொல்லப்போறார்... அழாதேங்கோ...''

குழந்தைக்கு நேற்றுப்பார்த்த அரவிந்தனின் முகம் நினைவில் வந்திருக்கவேண்டும். அரவிந்தனின் அறையைத் திரும்பிப்பார்த்தது.

அரவிந்தன் குழந்தைக்கு நிறைய விளையாட்டுப் பொருட்கள் கொண்டுவந்திருந்தான்.

அவை எல்லாமே பற்றியில் இயங்குபவை. அவை இயங்கத்தொடங்கியதும் குழந்தைகள் வீரிட்டு அழுதன... அவற்றில் ஒளிர்ந்த வர்ண விளக்குகளைப் பார்த்துக் கண்களைப் பொத்தின.

''அங்க... இவங்கட வயசுப்பிள்ளையெல்லாம் கொம்பியூட்டரில கேம்ஸ் விளையாடுதுகள்...''

என்றான் அரவிந்தன்.

''இஞ்ச நாங்கள் உயிரோட இருக்கிறதே போதுமெண்டு இருந்தம்... இப்ப சமாதானம் வந்தாப்பிறகுதானே இப்பிடி இருக்கிறம்...''

பதில் சொன்னவள் சின்னவள்.

"பிள்ளை குடிக்கிறதுக்கு தண்ணி எடுத்துவைக்க மறந்துபோனாய்..."

சாப்பாட்டு மேசையை ஒருதரம் பார்த்துவிட்டு... அன்னமுத்து மகளிடம் சொன்னாள்...

இப்போது சின்னவளின் கணவனும் குளித்துவிட்டு... சுவாமிப் படங்களுக்கு வைக்க கைநிறையப் பூக்களுடன் உள்ளே வந்தான்.

"ப்பா... ப்பா..."

குழந்தை அவனுடைய கால்களைக் கட்டிக்கொண்டது.

அன்னமுத்து குழந்தையைத் தூக்கிக்கொள்ள அவன் உள்ளே போனான். இப்போது அரவிந்தன் ஈரத்தலையைத் துடைத்துக்கொண்டு விறாந்தைக்கு வந்தான்.

நேரம் ஒன்பது மணியைக் கடந்துவிட்டிருந்தது. ஒழுங்கைக்குள் மீனவியாபாரியின் ஊதுகுழல் ஒலித்தபடி நகர்ந்தது. அரவிந்தன் மேசையிலிருந்த சாப்பாடுகளை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்துக்கொண்டிருந்தான். சேட் போடாத அவன் மார்பில் தங்கச் சங்கிலி ஒன்று பளபளத்தது.

"ஏய்... என்ன இதெல்லாம்..."

சின்னவளிடம் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"காலைச்சாப்பாடு... உங்களுக்குத்தானண்ணை..."

"ஐச... எனக்கு இதெல்லாம் வேண்டாம்..."

"அப்ப என்ன வேணும்...?"

"ஒரு கிளாஸ் ஒறேஞ்ச் ஜூஸ் மட்டும் தா... அது போதும்..."

அம்மாவுக்கு மனம் சுருங்கிப்போனது.

"என்னதம்பி... எவ்வளவு காலத்துக்குப்பிறகு ஊருக்கு வந்திருக்கிறாய்... அங்கை நெடுகக் கடைச் சாப்பாடு தானே திண்டிருப்பாய்... இஞ்ச வடிவாச் சாப்பிடன்..."

வார்த்தைகளால் மகனை வருடினாள் அன்னமுத்து.

“அம்மா நான் அங்க போன நாளையில இருந்து இங்க திரும்பி வந்து இறங்கின நாள் வரைக்கும் காலைச்சாப்பாடெண்டா எனக்கு ஜூஸ்தான்”

“ஏன் தம்பி...?”

மகனின் முகத்தை வருத்தத்தோடு பார்த்தாள்.

“எங்களுக்கு அங்கை நேரமே கிடைக்காதம்மா... அதோடை காசும் வீண்தானே... அந்தக் காசை மிச்சம் பிடிச்சா... இஞ்ச அனுப்பிப்போடலாம்... அங்க நிறையப்பேர் இப்படித்தானம்மா... நான் மட்டுமில்ல...”

அன்னம்மாவுக்கு தலை சுற்றிக்கொண்டு வந்தது. மகனை இறுகப் பிடித்துக்கொண்டாள். கண்களில் மழை பொழிந்தது.

வெள்ளிநாதம்
12-18-03-2004

G2 Mee Nilar
XB1 - G2
Govt. Senior Staff H / Scheme
54 Edmonton Road
Colombo -05

# பிரச்சினை இல்லாதவர்களின் பிரச்சினைகள்...

பிரதான வீதியிலிருந்து பிரிந்து இடதுபுறமாய் செல்லும் ஒழுங்கைக்குள்தான் வீடு. அண்ணாந்து பார்க்க முருகன் கோயில்கோபுரம் பளபளத்தது. மனதுக்குள் பழைய நினைவுகள் வலியாய் எழுந்தன. பள்ளிக்கூடம் போகும்போது இந்தக் கோபுரத்துச் சிற்பங்களைப் பார்ப்பதற்கு நிறைய நேரம் செலவிடுவோம்... முருகனின் ஆண்டிக்கோலத்தைப்பார்த்து வாய்பொத்திச் சிரிப்போம்...

"அம்மா... அங்கையம்மா... மயில் நிக்குது..."

நீளமான தோகையோடு ஆண்மயில்... அருகருகாக இரண்டு பெண் மயில்கள்... முன் கோயில் வீதியில் காவடிகட்டும் வேலைகள் நடக்கும்.

எல்லா இடங்களில் இருந்தும் திருவிழாக் காலங்களில் காவடிகளை வாடகைக்கு அமர்த்த இங்குதான் வருவார்கள்.

எனக்குக்கூட சின்ன வயதில் காவடி நேர்த்திவைத்து நிறைவேற்றியதாக அம்மா சொன்னா. காவடிகள்தான் எங்களூர் சிறப்பு. இப்போது காவடிகட்டும் தொழில் புரிந்தவர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள் என்று கேள்வி. தொழிலும் அருகி விட்டிருந்தது. ஒழுங்கையில் பூவரசு வேலிகளைக்காணவில்லை. மதில்கள் நிமிர்ந்து நின்றன...

கட்டுக்கிணற்றடி கண்களிற்பட்டது. மனது ஒருமுறை விரிந்தது. "அந்தா வீடு தெரியுது..." பரவசத்தோடு காட்டினேன்.

கட்டுக்கிணறு பாசிபிடித்துப்போயிருந்தது. ஐம்பது வருசப் பழமைவாய்ந்த கிணறு. ஊரில் கட்டப்பட்ட முதலாவது கிணறும் இதுதான். இருபத்தைந்து குடும்பங்கள் வரையில் இந்தக் கிணற்றுக்குப் பங்காளிகள்... கிணற்றின் அருகே வைரவர். வெள்ளிக் கிழமைகளில் பஜனை படிப்பது இங்குதான். வைரவர் சூலத்துக்கு யாரோ செவ்வரத்தம் பூக்களை செருகிவிட்டிருந்தார்கள். கீழே கொஞ்சம் சில்லறைக் காசுகளும் கிடந்தன.

வீடுவந்துவிட்டது. இதுதான் வீடு என்று நிதானிப்பதற்கிடையில் நீளமான நாக்குத் தொங்க... நாயொன்று எட்டிப்பார்த்தது.

"அத்தை..." மகன் பெரிதாகக் கூப்பிட்டான்.

"வாங்கோ... வாங்கோ..."

சமையலில் ஈடுபட்டிருக்கவேண்டும். கையைச் சேலைத்தலைப்பில் துடைத்தபடியே மச்சாள் ஓடிவந்தா. என் கணவரின் அக்கா.

"இவன் சரியா தேப்பனைப்போலத்தான் என்ன...?"

அவனை அணைத்தபடி உள்ளே போனா... ஒன்றரை வயதுக்குப்பிறகு இப்போதான் பார்க்கிறா.

"சரியான வெய்யில்... களைச்சுப்போயிருப்பியள்... இருங்கோ..."

குசினிக்குள்ளிருந்த குளிரூட்டியைத் திறந்து சோடாவை எடுத்து கிளாஸில் ஊற்றினா...

"எடுத்துக் குடிதம்பி..."

மற்றையகிளாசை என்னிடம் நீட்டினா. சில்லிட்டது.

“நல்லா மெலிஞ்சு போனீங்கள் மச்சாள்...”

“வாறவையெல்லோரும் உப்பிடித்தான் சொல்லுகினம்... ஆனா எனக்கென்ன குறை...?”

“ராசாத்தி கடிதம் போடுறவளே...”

“இப்ப கடிதம் போடுறது குறைவு... கிழமேலை ஒரு நாளைக்கு ரெலிபோன் எடுப்பாள்...”

மேசையில் கையடக்கத் தொலைபேசி இருந்தது.

‘தம்பி... உடுப்பை மாத்து... மச்சாள் நீங்களும் கைகாலைக் கழு வினீங்களெண்டா... சாப்பிடலாம்... சமையல் முடிஞ்சுது...’

“இப்பவோ...”

“ஏன் ஒருமணியாச்சுத்தானே... சாப்பிடலாம் எழும்புங்கோ...”

வீட்டுடன் இணைந்து புதிதாக குளியலறை, கழிப்பறை கட்டியிருந்தார்கள்... குளியலறைத் தண்ணீர் நேராக தேசிமரமொன்றுக்குப் போய்க்கொண்டிருந்தது.

வெளியே ஈவிரக்கமற்று எறித்துக்கொண்டிருந்த வெய்யிலுக்கு தொட்டியில் இருந்த குளிர்நீர் இதமாக இருந்தது.

குளித்துவிட்டு வருவதற்கிடையில் மேசையில் உணவு தயாராய் இருந்தது. எல்லாம் மரக்கறிச் சமையல்தான்.

“பார்த்தீபன் மத்தியானச் சாப்பாட்டுக்கு இஞ்சதான் வாறவன்... கைக்குழந்தையோடை மதிக்குச் சமைக்கிறது கரைச்சல்தானே...”

பார்த்தீபன் மச்சாளின் மூத்தவன்.

“குழந்தை எத்தனை மாதம்...?”

“உடும்பு பிடிக்கிறான்...”

“அம்மா ஆமிக்காரங்கள் வாறாங்கள்...”

கேற்றடியில் நின்றவன் ஓடிவந்தான். அவனுக்கு மூச்சிரைத்தது.

“நீ ஓடாதை... அவங்கள் தங்கடபாட்டிலை போவான்கள்...”

நாலைந்து சைக்கிள்களில் இராணுவத்தினர் போனார்கள்...

“உவங்களாலை ஒரு பிரச்சினையுமில்லையே...”

“ச்சீ... உவங்கள் எங்கட கண்ணாடித்துரையற்றை வீட்டிலை இருக்கிறாங்கள்...”

“சனத்துக்குப் பிரச்சினை இல்லையே...”

“அவங்களுக்கு எங்கட மொழி விளங்காது... எங்களுக்கு அவங்கட மொழி விளங்காது... தங்கடபாட்டிலை திரிவாங்கள்...”

“உவங்கள் உப்பிடி வகைதொகையா ஆயுதங்களோட நிக்கிறாங்கள்... ஒரு சிக்கல் எண்டால் விட்டுவைப்பாங்களோ...”

“நீங்கள் புதிசா அவங்களைப் பார்க்கிறதாலை பயப்பிடுறியள்... நீங்கள் நினைக்கிற மாதிரி ஒரு பிரச்சினையுமில்லை...”

மாலையில் குளித்துவிட்டு முருகன் கோயிலுக்குப் போனோம். தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் என்று எல்லோரும் சுகநலம் விசாரித்தார்கள்...

சிலர் மகனைப்பார்த்து வியந்தார்கள். ‘ஏன் அவர் வரவில்லை?’ என்று ஆதங்கப்பட்டார்கள். முருகனின் ஒவ்வொரு வாசலிலும் பூசை நடந்தது. புதிது புதிதாய் பல முகங்கள் பூசைக்கு வந்தன. விக்கினேஸ்வரக்குருக்கள் முதுமையால் ஒதுங்கிவிட அவரது அக்காள் மகன் இப்போது கோயில் பொறுப்பை ஏற்றுள்ளதாகச் சொன்னார்கள்.

விக்னேஸ்வரக் குருக்கள்தான் எனக்கு ஏடு தொடக்கியவர். அவர் அரிசியில் ‘அ’ எழுதச்சொல்ல மறுத்துவிட்டு ஓடிப்போய் வீதிமணலில் ‘அ’ எழுதியதாக அம்மா சொல்லுவா.

பிரசாதம் வாங்கிக்கொண்டு வந்தபோது – வாசலில் மணியாச்சி அமர்ந்திருந்தா. அவவிடமும் சுகம் விசாரித்துக்கொண்டு புறப்பட்டோம். ஊரில் நடக்கையில் மனது ஆகாயத்தில் மிதந்தது. புளியடியில் சில பெடியன்கள்

விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

நாங்கள் சிறிசுகளாயிருந்தபோது புளியடிக்கு யாரும் வருவதில்லை. புளியடியில் ஒரு பெண் தூக்குப்போட்டு இறந்ததாகவும் இரவுவேளைகளில் அழுகைச்சத்தம் கேட்பதாகவும் ஊர் ஒதுங்கியது. பின்னர் புளியடியில்... இளைஞர்கள் காவல்போட்டார்கள். காலம் மாறிப்போனது. பேய்க்கதை மறந்துபோனது.

நாங்கள் வந்திருப்பதால் பார்த்தீபன் மனைவி குழந்தையுடன் வந்திருந்தான். பார்த்தீபனின் மனைவிக்கு எங்களைத் தெரியாது. கண்டவுடன் அறிமுகமாகிக் கொண்டாள். குழந்தையும் அழாமல் எங்களுடன் ஒட்டிக்கொண்டது.

மாமரத்தின் கீழ் கதிரையைப் போட்டு அமர்ந்தோம். மாமரம் நிறையக் காய்த்திருந்தது.

"மச்சாள்... முந்தி இந்த மாமரத்திலை மாங்காய் பிடுங்க ஏறி... விழுந்து... அண்ணைக்கு மண்டை உடைஞ்சது... கேள்விப்பட்டனிங்களே..."

"ஓ... நெடுகச்சொல்லறவர்..."

மச்சாளின் குரலில் கொஞ்சம் சோகம் தெரிந்தது. அண்ணையின் இறப்பு எல்லோருக்கும் சோகம்தான். அண்ணை சரியான பயந்தவர். சூரியக்கதிர் சண்டை நேரம் செல்களின் அதிர்வில் அவருக்கு நெஞ்சுவலி கூடியது.

அப்போது எல்லோரும் வடமராட்சியில் இருந்தோம். மந்திகை ஆஸ்பத்திரியில் அண்ணனை அனுமதித்திருந்தார்கள். பிறகு அங்கும் பிரச்சினை. சாவகச்சேரிக்கு வந்தோம். அங்கேயும் தெரிந்த ஒருவரின் வீட்டில் ஒதுங்கினோம்...

பிரச்சினை எங்களை விடுவதாயில்லை. மட்டுவில் பகுதியில் செல்கள் விழுந்தன. நாங்கள் வன்னிக்கு வந்தோம். அண்ணர் குடும்பம் வன்னிக்குவர மறுத்தது. அண்ணர் அரச உத்தியோகம். அவர் மறுத்துவிட்டார்.

சில மாதங்களில் அண்ணர் இறந்துவிட்டதாக அறிந்தோம். அண்ணர் குடும்பத்தில் மூத்தவர். எங்களுக்காக பல கஷ்ரங்களை அனுபவித்தவர்... ஆனால் அவருடைய சாவில் எங்களுக்குப் பங்குகொள்ள முடியாமற்போய்விட்டது.

ஏ. ஒன்பது பாதை திறந்தவுடன் எங்களைத்தேடி முதல் வந்தது அண்ணனின் மூத்தவன் பார்த்தீபன்தான். தானாடாவிட்டாலும் தசையாடும்

என்றதை மெய்ப்பித்தான்...

மாலைப்பொழுது மங்கிவிட்டது. மாமரக்காற்று உடலை வருடிக்கொண்டிருந்தது. பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் இருவரும் சேர்ந்து வீடு கலகலப்பாகியது. இனிய உறவுகளின் சங்கமமாய் சிரிப்புகளும் பேச்சுகளும் வலம்வந்தன.

வீட்டுக்குள் தொலைக்காட்சி ஒளிர்ந்தது. ஆனால் யாரும் அதைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பார்த்தீபன் வெளிநாட்டுக்குப் போகவெனப் புறப்பட்டு... இடைநடுவில் திரும்பிவந்து... கொழும்பில் துன்பப்பட்டு... ஊர்வந்த கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான்... மச்சாள் குசினிக்குள் ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தார்.

"முந்தியப்போலை இல்லை... சமையல் இப்ப இஞ்ச வலு சுகம்..."

என்றா மச்சாள். மச்சாளுக்கும் சக்கரைவியாதி ஆரம்பகட்டத்தில் இருப்பதாக மருத்துவர் கூறினாராம்.

"உதொரு வியாதியே இல்லமாமி... சாப்பாட்டில கட்டுப்பாடாய் இருந்தால் சரி..."

என்றான் பார்த்தீபன். அவன் சொல்வதும் சரிபோலத்தான் பட்டது எனக்கு.

பார்த்தீபனின் கை மணிக்கூடு எட்டு மணி என்பதை நினைவூட்டியது. புளியடிப்பக்கமாய் நாய்கள் குரைத்தன...

மச்சாள் குசினிக்குள்ளிருந்து வந்தா.

"இஞ்ச... உந்த வெளிலைற்றை நூத்துப்போட்டு எல்லாரும் உள்ள வந்திருந்து கதையுங்கோ..."

மச்சாளின் குரலில் பதட்டம் இருப்பதுமாதிரி... ஒரு உணர்வு...

"ஏன் மச்சாள் பயமோ...? அவங்கள் வருவாங்களே..."

"ச்சீ... பயமெண்டில்லை... எண்டாலும் ஏன் சோலியை... கனபேர் இருந்து அமளிப்பட ஏதாலும் நினைக்கிறாங்களோ... வாங்க உள்ளுக்கு..."

மச்சாள் வெளி லைற்றை அணைத்தா.

“இந்த அம்மாவுக்கு எப்பவும் பயம்”

பார்த்தீபன் சொல்லிக்கொண்டு உள்ளே வந்தான்.

‘இஞ்ச பிரச்சினையே இல்லை’ என்று வாய்க்கொரு தடவை சொல்லிக்கொண்டிருக்கும் இவர்களின் அடி மனங்களில் உறைந்து கிடக்கும் பிரச்சினைகளை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எழுந்து உள்ளே போனபோது தொலைக்காட்சியில் அரைகுறை ஆடைகளுடன் குழு நடனமாடும் காட்சியொன்று ஒளிர்ந்துகொண்டிருந்தது.

வெள்ளிநாதம்
11-17-06-2004

# புதிய மனுசி

நிலவின் ஒளியில் கூரைத்தகரங்கள் பளபளத்ததன.

அவள் தன் உள்ளங்கைகளை தடவிப்பார்த்தாள். கரகரப்பாய் காய்த்தபடி கைகள். தன் கைகளால் மண்வெட்டியும் பிக்கானும் பிடித்து அவள் உழைத்த உழைப்பின் அறுவடைதான் இந்தத் தகரங்கள் என நினைத்துப் பெருமைப்படுபவளாய்... அவள் முகம்...

“இந்தப் பிஞ்சுகள் ரெண்டும்... மழையிலையும்... குளிரிலையும் விறைக்கக்கூடாது...”

குழந்தைகளைத் திரும்பிப்பார்த்தாள்... பாயைவிட்டு விலகிப்போய் ஓரமாய் தூங்கிக் கொண்டிருந்தார்கள்... மூத்தவள் ஐஸ்வர்யா அச்சில் வார்த்தமாதிரி தகப்பனையே போன்று, அகலியா கொஞ்சம் கறுப்பு. ஆனால் இவளைப்போல சுருள் சுருளாய் நீளமான தலைமுடி.

“மூத்த பிள்ளை சரியாய் தேப்பனையே

மாதிரி... நல்லநேரம் பொம்பிளப்பிள்ளையாய் போச்சு... இல்லாட்டி... தேப்பனை முடிச்சுப்போடும்...''

ஐஸ்வர்யா பிறந்திருந்த போது உறவினர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன விதியோ... அவன் இல்லாமல்தான் போய்விட்டான்.

மனது கனத்தது.

மற்றைய நாட்களில் என்றால் கூலிவேலைக்குப்போய்விட்டு வரும் அவள் பாயிற் சரிந்தவுடனேயே தூங்கிப்போவாள். இன்றைக்கு அவளால் முடியாமலிருந்தது. ஆறுவருடங்களாய் ஒதுக்கித்தள்ளிவிட்டு வேகமாய் முன்னேறிய துன்பங்கள் எல்லாமாக ஒன்றுதிரண்டு தன்னைத் துன்புறுத்துவதாக அவள் உணர்ந்தாள்.

அழக்கூடாது என்கிற வைராக்கியத்தோடு இறுகிப்போயிருந்த அவளின் விழிகள் ஈரலித்தன.

அவள் தான் வைராக்கியமானவள் என்னபதைப் பல தடவைகள் உணர்த்தியவள்... அவள் அவனைக் காதலித்தபோது... உற்றம் சுற்றம் ஒன்றாகி அவர்களின் உறவை எதிர்த்தபோது – அந்த எதிர்ப்புக்களையெல்லாம் உதறி அவனையே திருமணம் செய்துகொண்டது முதல் வைராக்கியம்.

அவள் வீட்டில் நான்காவது பெண்பிள்ளை. மூத்தவர்கள் மூவரும் திருமணவாய்ப்பின்றி முதிர்ந்துகொண்டிருந்தார்கள். அவனுடைய வீட்டில் மூன்று பெண்கள், இரண்டு ஆண்களில் இவன் இளையவன். இருவரும் தாமாகவே தம் வாழ்வைத் தீர்மானித்துக் கொண்டார்கள். மூத்தவள் ஐஸ்வர்யா பிறந்து... அகலிகாவும் பிறந்து... அகலிகா ஆறுமாதக் குழந்தையாய் இருந்தபோதுதான் அந்தப் புயல் மையங்கொண்டது.

'சத்ஜெய...' கிளிநொச்சி மீதான பெரும் படையெடுப்பு...

ஒரு மையிருட்டுப் படர்ந்திருந்த சாமபொழுதில்... ஊரோடு சேர்ந்து இடம்பெயர்ந்து... ஸ்கந்தபுரத்தில் ஒதுங்கினார்கள்...

முருகன் கோயில்... இரண்டாம் பாடசாலை... அகதிக்குடியிருப்பு என்று நாட்கள் நகர்வடைந்தன.

ஒரு அதிகாலைப்பொழுது, அவன் காலை நீட்டி கப்போடு சாய்ந்து அமர்ந்திருந்தான். அவன் முகம் ஒட்டி உலர்ந்து... உதடுகளும் காய்ந்து தெரிந்தன. கன்னங்களில் வளர்ந்து சுருண்டிருந்த உரோமங்கள்... அவள்கூட

மெலிந்துபோய்விட்டாள். சரியாகச் சாப்பிடமுடியாமலிருந்தது. பிள்ளைகளுக்கு மட்டும் ஒருநேரச் சாப்பாடு எப்பிடியோ கொடுத்துக்கொண்டியிருந்தார்கள்.

அவன் வேலைசெய்த மில் முதலாளி வீட்டுக்கு வந்திருந்தார்.

“மிசின் பெட்டி ஒண்டு ஒழுங்கு செய்திருக்கிறன் ராசன்... ஒருக்கா அங்க உள்ள சாமானுகளை ஏத்தவேணும்...”

“ரவுண் முழுக்க ஆமி நிக்கிறானெண்டு கதைக்கினம்...”

“உதெல்லாம் கட்டுக்கதை... ரவுனுக்கை பெடியள்தான் நிக்கிறான்கள்... நேற்றும் முருகேசற்ரை வீட்டுச் சாமான்கள் ஏத்தி வந்தவையாம்...”

மரத்தின் கீழ் அடுப்பெரித்துக்கொண்டிருந்த அவளுக்கு உரையாடல் கேட்டது.

“என்ன கமலி... மனுஷன் விட்டுட்டுப் போகாது போல...”

அவளிடம் வந்து அவளுக்கு மட்டும் கேட்கக்கூடியதாகக் கேட்டான்.

“அந்த மனுஷனும் எங்கட கலியாணத்துக்கு உதவினது... ஏதோ யோசிச்சுச் செய்யுங்கோவன்...”

அவன் மரக்கொப்பில் கொழுவியிருந்த சேட்டை எடுத்து உதறிப் போட்டான். ஓலைத்தட்டியில் செருகிக்கிடந்த சீப்பை எடுத்து தலை வாரினான்.

“பாணும் சம்பலும் கிடக்கு... தரட்டே...”

“இல்ல... அந்தாள் பாத்துக்கொண்டிருக்குது... போட்டுவாறன்...”

கால்களுக்குச் செருப்புக்கூட இல்லாமல்தான் போனான்.

அன்று முழுவதும் அவன் வரவில்லை. அவள் பதறிப்போய் அவனைத் தெரிந்த எல்லோரிடமும் விசாரித்தாள். அவனுக்கு என்ன நடந்தென்று தெரியாமலே போய்விட்டது.

பிள்ளைகளை அணைத்துக்கொண்டு இரவுபகலாய் அழுதாள்.

உறவினர்கள் யாரும் ஏனென்று கேட்கவில்லை.

அவனுடைய அண்ணன் வீடு கொஞ்சத் தூரத்தில் இருந்தது. அவள் இரண்டு குழந்தைகளையும் கொண்டு ஒருநாள் அங்கு போனாள்... உதவிக்காக அல்ல. அவனைப்பற்றி ஏதாவது அறிந்தீர்களா என்று அறிவதற்காக...

அவர்களும் இடபெயர்ந்துதான் இருந்தார்கள்.

"ஆமி நிக்கிறானெண்டு தெரிஞ்சுகொண்டும்... கூலிக்காக அவனை அனுப்பிச் சாகடிச்சனி... பிறகேன் இஞ்ச வந்தனி...? போய் எங்கையெண்டாலும் எச்சில் இலை பொறுக்கு...?"

அந்த வார்த்தைகளின் கூர் அவள் இதயத்தைக் குத்திக் கிழித்தது. அவனின் அண்ணன்தான் சொன்னான். தன்னுடைய தம்பி இறந்துவிட்டானே என்கிற ஆதங்கத்தில் அந்த வார்த்தைகள் அவசரத்தில் பிறந்திருக்கலாம் என அவள் சமாதானம் கொள்ள முயன்றாலும்... மனது பட்டகாயத்திலிருந்து மீள மறுத்தது.

"என்ர இந்தக் கையால எச்சில் இலை பொறுக்கமாட்டன்... என்ன கடினமான வேலையெண்டாலும் செய்து... என்ர பிள்ளைகளைப் பார்ப்பன்..."

வைராக்கியத்தோடு திரும்பி நடந்தாள்.

அகதிக் குடியிருப்பில் பல பெண்கள் கூலிவேலைக்குப் போனார்கள். அவர்களுடன் அவளும் போனாள்... சிறிதளவு கூலிதான். சமாளித்துக்கொண்டாள். கைகளிலும் கால்களிலும் புதிய பலம் புகுந்தது. மண்வெட்டி பிடித்தாள். மண் சுமந்தாள்... கல் அரிந்தாள்...

நான்கு வருடங்கள் அவளின் உறுதியோடு கழிந்தன.

மீண்டும் சொந்த இடத்துக்கு வரக்கூடிய வாய்ப்பு... தெருவுக்குத் தெரு, சந்திக்குச் சந்தி... குருதி சிந்தி.... உயிரை விதைத்து... வணக்கத்துக்குரியவர்கள் இடங்களை மீட்டுத்தந்தார்கள்... மீட்ட இடங்களில் பல மனிதர்களின் எச்சசொச்சங்கள்...

எலும்புக்கூடுகளில் அவனும் இருக்கலாம் என்று எண்ணி... காவல் நிலையங்களில் எலும்புக்கூடுகளைப் பார்த்துவந்தாள். அவனின் இருப்புக்கு உறுதியில்லை. அவள் தான் தனித்துப்போனதை உள்ளூர உணர்ந்து கொண்டுவிட்டாள். அவன் போகும்போது ஆறுமாதக் குழந்தையாகவிருந்த அகலிகாவுக்கு இப்போது ஆறுவயது. ஆண்டு ஒன்றில் படிக்கிறாள். ஐஸ்வர்யா

உருவத்தில் மட்டுமன்றி சில செயற்பாடுகளிலும் தகப்பனைப்போலவே இருந்தாள்...

அவள் சொந்த இடத்துக்குத் திரும்பினாள். காணிக்குரிய வேலிகளை ஒழுங்காக அமைத்துக்கொண்டாள். அவளின் கைகளிலும் கால்களிலும் போதியளவு பலமிருந்தது. காணியைத் துப்புரவுசெய்து சிறிய கொட்டில் அமைத்தாள்.

அருகே அவனுடைய அண்ணனுடைய வீடு.

வாழ்ந்து காட்டவேண்டும் என்ற வைராக்கியம் அவளுக்குள் நிலையாய் இருந்தது. பகலில் கூலி வேலைக்குப் போனாள்... இரவில் காணிக்குள் நின்று உழைத்தாள்.

கடைக்கார மூத்தியண்ணர் வீட்டில்தான் தண்ணீர் அள்ளுவாள். கூலி வேலையால் வந்தவுடன் பிளாஸ்ரிக் குடங்களை எடுத்துப்போய் தண்ணீர் சுமந்து வருவாள்.

ஒருநாள்... ஏதோ அலுப்பில் தண்ணீர் எடுக்கவில்லை. விடிய எழுந்ததும் குடத்தோடு மூத்தியண்ணர் வீட்டுக்குக் போனாள். மூத்தியண்ணை ஏதோ அலுவலாக வெளியேபோக சயிக்கிளை உருட்டிக்கொண்டு படலையடிக்கு வந்தவர்... அவளைக் கண்டதும் முகம் மாறிப்போனார்... படலைக்கு அருகில் சயிக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே போனார்.

அவள் நேராக கிணற்றடிக்குப்போய் தண்ணீர் அள்ளினாள்.

"இஞ்ச கமலி..."

அவள் திரும்பிப்பார்த்தாள். மூர்த்தியண்ணரின் மனைவி.

"என்னக்கா...?"

"மனுசன் ஆரையோ சந்திக்கவெண்டு போக வந்தது... உன்னைக் கண்டவுடனை திரும்பி வந்திட்டுது... நீ புருஷன் இல்லாதனி... இனிமேல் விடிய வெள்ளணை முளுவியளத்துக்கு இஞ்சை வராதை... பின்னேரத்திலை வந்து... தண்ணி அள்ளிக்கொண்டு போயிடு..."

அவள் ஒருகணம் ஆடிப்போனாள். அவன் இறந்துவிடவில்லை. இறந்துபோனதாக எந்தத் தடயமும் இல்லை. பொருட்களை ஏற்றப்போன இடத்திலை பிடிபட்டு... எங்காவது உயிருடன் இருப்பான். என்றோ ஒருநாள்

அவன் வருவான் என்றே அவள் காத்திருந்தாள். அவன் இறந்ததாக யாரும் உறுதி செய்யாதபோது இவர்கள் தன்னை விதவையாகப் பார்க்கிறார்களே என்று அவள் மனது அழுதது.

ஆனால்... அவள் கைகளுக்கும் கால்களுக்கும் வலுவிருந்தது. வீட்டின் வடகிழக்கு மூலையில் நிலையம் பார்த்து கிணறு வெட்டத் தொடங்கினாள். பகலில் கூலிவேலை... இரவில் கிணறு வெட்டினாள். நிலவும் நட்சத்திரங்களும் அவளுக்குத் துணையாய் நின்றன.

மூன்று மாதகால அயராத உழைப்பு. கிணற்றில் ஐந்து அடி மட்டத்துக்குத் தண்ணீர்...

"ஏன் இப்ப தண்ணி அள்ள வாறேல்லை..."

அவள் அவர்களுக்கு தன் புன்னகையை மட்டுமே பதிலாய்க் காட்டினாள்...

அவளுக்குள் நம்பிக்கைகள் முளைத்தன. வீடிருக்கும் காணிக்குள்ளேயே தோட்டம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்பது மட்டும் அவள் மனதில் குறியாயிருந்தது.

இதுவரை பட்ட நோவுகளும், காயங்களும், அவமானங்களும் அவளை வருத்தமுறச் செய்தாலும்... அவற்றை அவள் பொருட்படுத்தவில்லை.

ஐஸ்வர்யாவுக்கு இப்போது வயது எட்டு. மூன்றாவது வகுப்பில் படிக்கும் அவளுக்கு தைமாதம்தான் சிறிய தோடு வாங்கிப்போட முடிந்தது.

அவனுடைய அடையாள அட்டை இருந்தது. அதைக்கொடுத்து பெரிதாக்கி படம் வைக்குமாறு சிலர் கூறினார்கள். அவள் மறுத்துவிட்டாள்.

"அவர் எங்கையெண்டாலும் உயிரோடை இருப்பார்... எப்பெண்டாலும் ஒரு நாள் வருவார்..."

கடின உழைப்பால் அவளின் உடல் முதிர்ச்சியடைந்திருந்தது. முன் நெற்றியில் கொஞ்சம் நரை முடி, கால்களில் சேற்று மண்ணின் படிவு, காய்த்துப்போன கைகள்...

அவளுக்குத் தன்னைப்பற்றி எதுவித கவலையுமில்லை. ஐஸ்வர்யா

இல்ல விளையாட்டுப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்று வந்தபோது – பெருமையோடு அவளைக் கட்டியணைத்து மகிழ்ந்தாள்.

பிள்ளைகள் அப்பாவுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளும் பக்குவத்தை அவள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தினாள். அவளைப் பொறுத்தவரைக்கும் அவளுடைய வாழ்க்கையில் பிசிறில்லை. கடந்தமுறை பெய்த சிறுமாரிக்கு கூரை ஒழுகியது.

இரண்டு வாரங்கள் அவளின் கைகளும் கால்களும் மிளகாய் தோட்டத்தில் இயந்திரமாகின...

வீட்டின் பழைய ஓலைகளைப் பிடுங்கிவிட்டு புதிய தகரங்களை அவள் போடுவித்தாள்... பிள்ளைகள் நிம்மதியாய் வாழவேண்டும் என்பதற்காய் அவளின் வியர்வை வீட்டுக்கூரையாய்... குழந்தைகள் மகிழ்ந்தார்கள்.

காலையில் எழுந்து அவள் கிணற்றடியில் பல் விளக்கிக் கொண்டிருந்தாள். பிள்ளைகளுக்கும் வாளிகளில் தண்ணீர் நிரப்பவேண்டும்.

அடுத்தவீடு அவனுடைய அண்ணன் வீடு. நிறைய வாழை நட்டிருந்தார்கள். வளவு சோலையாயிருந்தது. பேச்சுக்குரல்கள் கேட்டன. அண்ணன்காரனும் மனைவியும்,

"கமலி வீட்டுக்கு புதுசா கூரை போட்டிருக்கிறாள்... இவ்வளவு காசு எப்பிடி உவளுக்குக் கிடைக்குது..."

"உதுகூட விளங்கேல்லையே உனக்கு...? மிளகாய் தோட்டக்காரன்தான் அள்ளி அள்ளிக் குடுக்கிறான்... இவளும் அவன் காணாமற்போயிட்டானெண்ட கவலையில்லாமல் தோட்டக்காரனோட இருக்கிறாள்..."

அவள் ஒருகணம் ஆடிப்போனாள்.

"என்ர உடம்பை வருத்தி... என்ர வியர்வையை ஊத்தி நான் உழைச்ச உழைப்புத்தான் இது..."

அவள் இரு கைகளாலும் தலையைப்பிடித்துக்கொண்டு கீழே இருந்தாள்.

உதவி கேட்டபோது உதவாமல் அவமானப்படுத்தியவர்கள் – தான் கடினப்பட்டு உழைத்து உயர்ந்தபோது பாராட்டவும் முடியாமல் – நயவஞ்சகத்தனமாய் பேசுவது அவளுக்கு வேதனையளித்தது.

ஆனால்... இரவு முழுவதும் ரணமாய் வலித்த அந்தச் சொற்கள் பொழுது புலர்ந்தபோது... அவளை வருத்தவில்லை. வழமை போன்று அவளுக்குள்ளிருந்த வைராக்கியம் அவளை உஷாராக்க... அவள் புது மனுஷியாய்... காய்த்துப்போன கைகளை வீசிநடந்தாள்.

வெளிச்சம்
ஆனி - ஆவணி 2004



# உயிருள்ள சாட்சியங்கள்

"தம்பி... உதிலை நான் இறக்கம்..."

வேகமாக ஓடிக்கொண்டிருந்த பேருந்துக்குள்ளிருந்து திலகவதி கத்தினாள். சத்தமாய் பாடிக்கொண்டிருந்த பாட்டின் இரைச்சலில் அவளின் குரல் ஓட்டுநருக்குக் கேட்டிருக்கவில்லைபோலும்.

நிறுத்தத்துக்கான மணியை யாரோ அடித்திருக்கவேண்டும். அந்த ஒலி கேட்டுத்தான் பேருந்து நின்றது.

"இறங்கிறதெண்டால் மணி அடிக்கவேணும்... இல்லாட்டிச் சொல்லவேணும்... பேசாம இருந்துபோட்டு... இடம் வந்தவுடனை கத்தினால் சரியோ..."

நடத்துநர் புறுபுறுத்தான்.

பேருந்துப் பயணங்கள் திலகவதிக்கு பெரிதாகப் பிடிப்பதில்லை எரிச்சல் வந்தது. கம்பியில்

பிடித்துக்கொண்டு படிகளில் மெதுவாக காலைவைத்து இறங்கினாள்.

"இந்தாணை பை. கவனமாய்பிடி..."

வாங்கிக் கொண்டாள். பேருந்து பெரு இரைச்சலோடு புறப்பட்டது.

திலகவதிக்கு தான் போகவேண்டிய இடம் தெரியும். முன்னரும் ஒருதடவை வந்திருக்கிறாள்.

ஒழுங்கைக்கு முன்னால் அந்தக் கடை இப்போதும் இருந்தது. கடையின் முன்னால் போடப்பட்டிருந்த வாங்கிலில் இருந்து யாரோ பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார்கள். முகம் பத்திரிகைக்குள் மறைந்திருந்தது. மேலே முழுவதுமாகப் பழுத்திருந்த வாழைக்குலையொன்று தொங்கிக்கொண்டிருந்தது.

"ஒருகை வெத்திலை வாங்கிக்கொண்டு போவம்"

தெருவைக் கடந்து கடையடிக்குப்போனாள்.

"என்னம்மா வேணும்...?"

"ஒரு வெத்திலைக்கூறு தாமோனை..."

கை வெத்திலையை மடித்துக்கொண்டிருக்க...

"எங்கையிருந்தம்மா வாறியள்..."

"முழங்காவிலிலை இருந்து..."

"சொந்த இடமோ..."

"இல்லை... சொந்த இடம் சங்கானை... இடம்பெயர்ந்து முழங்காவிலிலை இருக்கிறம்..."

"ஏனம்மா ஊருக்குப் போகேல்லையே..."

"அங்கை அவங்கள் இருக்கிறாங்கள். ரெண்டு குமருகளையும் கொண்டுபோய் வைச்சுக்கொண்டு அங்க இருக்கலாமே..."

"ஏனம்மா நிறையச் சனம் அங்கை இருக்குதுகள் தானே..."

"இருக்கிறவயள் இருக்கட்டும்... எனக்கென்ன...? நீ வெத்திலையைத் தா..."

திலகவதி வெத்திலையை வாங்கிக்கொண்டு பத்து ரூபாவை நீட்டினாள்.

"சில்லறையில்லை... என்னெண்டுதாறது மிச்சத்துக்கு...?"

"ஒண்டும் வேண்டாம்... இந்தா..."

ஐந்துரூபாய்க் குத்தியைக் கொடுத்து... பத்து ரூபாவை திரும்ப வாங்கிக்கொண்டாள்.

தெருவைக் கடக்கவேண்டும். வலப்புறத்திலிருந்து உழவு இயந்திரமொன்று வந்துகொண்டிருந்தது. அதில் ஆண்களும் பெண்களுமாய் ஆறேழு பேர் அமர்ந்திருந்தார்கள். உழவியந்திரம் தன்னைக் கடந்துபோன பிறகு அவள் மறுகரைக்குப்போனாள்.

ஒழுங்கை புதுப்பொலிவுடனிருந்தது. மண்போட்டு உயர்த்திஇருந்தார்கள். போனதடவை வந்தபோது குன்றும் குழியுமாக நடப்பதற்கே சிரமமாயிருந்தது.

சிறுவன் ஒருவன் பெரிய சைக்கிள் ஒன்றில் மிகவும் சிரமப்பட்டு மிதித்துக்கொண்டு வந்தான். ஓரமாக ஒதுங்கிநின்று அவன் போனதும் நடந்தாள். பை கனத்தது. மறுகைக்கு மாற்றிக்கொண்டாள். ஒழுங்கை ஓரமாக பூவரசுகள் சடைத்து நின்று நிழல் தந்தன. இந்தத் தடவை வேலிகள் முள்ளுக்கம்பி போட்டு அடைக்கப்பட்டிருந்தன.

அவள் மனம் சிலிர்த்துக்கொண்டது. அவள் கலாவைப் பார்க்கப் போகிறாள். ஞாயிறு அல்லது திங்கட்கிழமையில் தான் கலா அவளை வரச்சொல்லி அறிவித்திருந்தாள்.

ஆரம்பத்தில் மூன்று வருடங்கள் கலாவைப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் மதியம் கடந்த பொழுதில் கலா வீட்டிற்கு வந்தாள். இரண்டு நாட்கள் நின்றாள். நீண்ட காலத்துக்குப் பிறகு வந்தவளுக்கு இராசவள்ளிக் கிழங்கில் கூழ் மட்டும் காச்சிக்கொடுக்க முடிந்தது. வெள்ளிக் கிழமை என்பதால் பாவாடை சட்டைபோட்டு கோயிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் வந்தாள்.

"மொட்டையக்கா... மொட்டையக்கா..." என்று அயல் சிறுவர்கள் கலாவைப் பழித்து சந்தோசப்பட்டார்கள்.

கலா போய் ஆறேழு மாதங்களுக்குப் பிறகு... ஒருநாள் கலாவை போராளிகளின் மருத்துவ நிலையம் ஒன்றில் போய்ப்பார்த்தாள். அடிவயிற்றிலிருந்து ஓவென்று பொங்கி வந்தது அழுகை.

“ஏனம்மா... அழுறியள்...? இஞ்ச பாருங்கோ... இவ்வளவு பிள்ளையளும் ஏதோ ஒரு காயத்தோடை... அழாதேங்கோ...”

திலகவதி கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

காலவெளி நீண்டது.

“கலா... இனி என்ன பிள்ளை செய்யப்போறாய்...? வீட்டவாவன்”

‘இனித்தானம்மா என்னால நிறையச் செய்யமுடியும். அண்ணை எங்களைச் சந்திக்கேக்கை... உங்களை நான் ஏலாத ஆக்களாய் பாக்கேலை... சாதாரணமா... என்னைப்போலதான் உங்களையும் பாக்கிறன்... எண்டு சொன்னவர்...”

கலா மறுத்துவிட்டாள்.

கலாவின் நிலைக்காக திலகவதி பரிதாபப்பட்டாள்.

மற்றைப்பிள்ளைகள் இல்லாத நேரத்தில் கலாவை எண்ணி அழுவாள் திலகவதி. தினமும் கலாவுக்காக கோயிலுக்குப்போவாள்.

கலா இப்போது படித்துக்கொண்டிருப்பதாக எழுதியிருந்தாள். அவளுடைய எழுத்துக்கூட முத்துமுத்தாக இருந்தது. பொறுப்பாளரிடம் ஏதோ பரிசு வாங்கும்போது எடுத்த படமும் ஒன்று அனுப்பியிருந்தாள்.

கலாவுக்கு பனங்காய் பணியாரம் என்றால் நல்ல விருப்பம். சின்னவயதில் எப்போதும் பனை வளவில்தான் நிற்பாள்.

இப்போது இருக்கும் வளவிலும் நாலைந்து பனைகள் நின்றன. கருங்குத்திப் பனை மரத்திலிருந்து விழுந்த பனம் பழங்கள் இரண்டுதான் கலாவிடம் போகவேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டிவிட்டன. கருங்குத்திப்பனையின் பழங்கள் நல்ல இனிப்பானவை.

கலாவின் இடம்...

திரும்பியவுடன் பெரிதாய் ஒரு குடிசைபோல...

"கலாவைப் பாக்கவேணும் தம்பி..."

"கலா ஆரம்மா உங்களுக்கு...?"

"என்ர மூத்த பிள்ளை தம்பி..."

"இப்பிடி இருங்கோ... சொல்லிவிடுறம்... ஆள் வருவா..."

திலகவதி தன் காலடியில் பையை வைத்துவிட்டு அமர்ந்தாள். பெரிய ஆலமரத்திலிருந்து குருவிகள் கீச்சிட்டுக்கொண்டிருந்தன. ஆலமரத்தின் கிளைகளில் இருந்து பல விழுதுகள் தரையைத் தொடுவதற்கு எத்தனித்துக்கொண்டிருந்தன.

வெளியே இருந்து இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். மேசையில் இருந்த் கொப்பியில் ஏதோ எழுதிவிட்டு உள்ளே போனார்கள். திலகவதி அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"தனியவாவம்மா வந்தனீங்கள்...?"

"ஓம் தம்பி..."

"அறிவிச்சுக்கிடக்கு... ஆள் இப்ப வருவா... இருங்கோ..."

"அதுக்கென்ன... ஆறுதலா வரட்டும் தம்பி..."

"எங்கையிருந்தம்மா வாறியள்...?"

"முழங்காவிலிலையிருந்து...?"

"முழங்காவிலோ.. முழங்காவிலில எவடம்...?"

"பிள்ளையார் கோயில்... கூட்டுறவுச் சங்கமெல்லாம் இருக்கு... அவடம் தான்..."

"எனக்குத் தெரியுமம்மா... அங்கை நான் பரப்புரைக் காலத்திலை... பகலவன் அண்ணையோடை நிண்டனான்..."

"முழங்காவில் உங்கடை சொந்த இடமோ..."

"நாங்கள் மட்டுவில்... வீட்டாக்களும் அங்கைதான் இருக்கினம்..."

திலகவதி அவனுடைய கால்களை தற்செயலாய்ப் பார்த்தாள். இடதுகால் பொய்க்கால். நெஞ்சுக்கூட்டுக்கள் ஏதோ அறுந்து விழுந்தமாதிரியான உணர்வு ஏற்பட்டது.

உள்ளே போகவந்த ஒருவனிடம் "விபுலன்... அம்மாக்கு ரீ அனுப்பிவிடச்சொல்லு..." என்றான்.

சுவர்களில் கறையான் புற்றுக்கள் இருந்தன... மூலைக்குள் பானையில் குடிதண்ணீர் வைத்திருந்தார்கள். ஒருவன் சுடச்சுட தேநீரோடு வந்தான்.

"கலாக்கான்ர அம்மா... வணக்கம் அம்மா..."

"வணக்கம்..."

அவன் திரும்பிப்போனான். இப்போது கலாவை இன்னொரு பெண்போராளி அழைத்துவந்தாள்.

"அம்மா வந்து கனநேரமே...?"

"கொஞ்ச நேரம் தான் பிள்ளையள்..."

கலாவை அழைத்து வந்தவள் வாங்கிலில் இருத்தினாள்.

"அம்மா... உங்களோடை தம்பி வந்திருக்கிறானா..."

"இல்லைப் பிள்ளை... அவனுக்கு தவணைச் சோதினை வருகுது... அதாலை பள்ளிக்குப் போட்டான்..."

கலா அம்மாவின் கைகளைப் பிடித்து தன்கைகளால் தடவிப்பார்த்தாள். அம்மாவுக்கு அடிவயிற்றிலிருந்து அதே அழுகை பொங்கி வந்தது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

"நல்லா மெலிஞ்சிட்டியளம்மா... சாப்பிடேல்லையே..."

இன்னும் நாலைந்து பிள்ளைகள் வந்தார்கள்.

"கலாக்கான்ர அம்மா... சுகமாய் இருக்கிறீங்களோ..."

"ஏனம்மா இன்னும் ரீ குடிக்காமல்... ஆறிப்போச்சு... குடியுங்கோ..."

"நிமலண்ணா... இது கலாக்கான்ர அம்மா இல்ல... என்ர அம்மா தெரியுமோ...?"

"அம்மா எங்களுக்கு என்ன கொண்டுவந்தனீங்கள்... ஏதோ பலகார வாசம் அடிக்குது..."

உரிமையோடு கேட்ட கேள்விகளால் திலகவதி சிலிர்த்துப் போனாள். அவர்களின் அன்பில் திலகவதியின் உயிர் திக்குமுக்காடியது.

"அம்மா... ஏன் இதிலை இருந்தனீங்கள்... உள்ள வாங்கோ... கைகால் எல்லாம் கழுவிட்டு சாப்பிட்டுத்தான் போகவேணும்..."

"என்ன போறதோ... அம்மாவை போக விடமாட்டம்... கொஞ்ச நாளைக்கு எங்களோடை நிண்டுட்டுத்தான் போகவேணும்..."

ஒருத்தி செல்லமாய் சிணுங்கிக்கொண்டு சொன்னாள்.

"வாங்கோம்மா என்னோடை... உள்ளுக்குப்போவம்... பலகாரப்பையை மறந்துபோகாமல் எடுத்துக்கொண்டு வாங்கோ..."

திலகவதியை பல்லக்கில் தூக்காத குறையாய் கூட்டிக்கொண்டு போனார்கள்.

"இந்தத் தேசத்திலை... நாங்கள் அனுபவிக்கிற துன்பங்கள் எல்லாத்திலையும் இருந்து எங்கள மீட்கிறது இந்தக் குஞ்சுகள் தான்... இந்த மண்ணில சிங்களவன் எப்பிடியெல்லாம் கொடுமை செய்தான் எண்டதுக்கு இதுகள்தான் உயிரோடை உலவுற சாட்சியங்கள்..."

"என்னம்மா யோசிச்சுக்கொண்டு வாறியள்...?"

"ஒண்டுமில்லைப் பிள்ளையள்..."

திலகவதி அவர்களோடு வீச்சாக நடந்துகொண்டிருந்தாள் உள்ளே.

வெள்ளிநாதம்
12-18-11-2004

# உதிராத சருகுகள்

வானத்தில் கருமுகில்கள் கூட்டம் கூட்டமாய் நகர்ந்து கொண்டிருந்தன. மழையும் மெதுவாகத் தூறிக்கொண்டிருந்தது. மூன்றடி ஒழுங்கைக்குள் ஒற்றையடிப்பாதை தவிர இருமருங்கிலும் புற்கள் மூடியிருந்தன. புஸ்பராசா வீட்டு மதில்கரை ஓரங்கள் மட்டும் புற்கள் செதுக்கப்பட்டு அழகாகத்தெரிந்தது.

மழை பெரிதாகப் பெய்வதற்குள் வீட்டுக்குத் திரும்பிவிடவேண்டும் என்ற நினைப்போடு முத்துராசா சயிக்கிளை இறுக்கிமிதித்தான். பிரதான சாலையில் ஏறியதும்... வாகனப் போக்குவரத்துகள் அதிகமாயின. பாடசாலைப் பிள்ளைகளும் கூட்டம் கூட்டமாய் போய்க்கொண்டிருந்தார்கள்...

"நல்ல மரக்கறியப்பாத்து வேண்டிக்கொண்டு வாங்கோப்பா... இவ்வளவுநாளும் இருந்துபோட்டு... தம்பியும் விரதநாளில் வந்திருக்கிறான்..."

மனைவி கூறிவிட்ட வார்த்தைகள் திரும்ப ஞாபகத்திற்கு வந்தன. சயிக்கிளை பாதுகாப்புக்கொட்டிலுக்குள் நிறுத்திவிட்டு மரக்கறிவாங்கும் பையை சயிக்கிளில் இருந்து கழற்றிக்கொண்டு திரும்பினான் முத்துராசா.

"முத்து..."

திரும்பிப்பார்த்தான். நாகராசா நின்றான்.

"விடிய வெள்ளண எங்கையடா இந்தப்பக்கம்..."

"தம்பி லீவிலை வந்து நிக்கிறானடா அதுதான் நல்ல மரக்கறியா ஏதும் பாப்பமெண்டு..."

"என்னடா... லீவிலை வந்து நிக்கிறவனுக்கு மரக்கறியோ சாப்பாடு..."

"மனுசியும் மூத்தவளும் கவுரிவிரதமெடா... அதுகளினரை விரதத்தை நாங்கள் ஏன் குழப்புவான்...?"

"அதுவும் சரிதான்... அதோடை எங்கட வைரவநாதனெல்லே இத்தாலியிலை இருந்து வந்திருக்கிறான்... உனக்குத் தெரியுமோ..."

"தெரியாது... எப்ப வந்தவன்..."

"மூண்டாந்திகதி வந்ததெண்டு சொன்னவன்... ரெண்டு கிழமை நிற்பான்போலை... உன்னையும் எப்படியிருக்கிறதெண்டு விசாரிச்சவன்..."

நெஞ்சுக்குள் ஏதோ பாரம் ஏறினமாதிரி இருந்தது.

"வேற என்ன...? வரட்டே..."

நாகராசா சயிக்கிள் பாதுகாப்பிடத்துக்குப் போனான். சந்தைக்குள் மரக்கறிகளை இப்பொழுதுதான் வெளியே எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தார்கள். வழமையாக அந்த அம்மம்மாவிடம் தான் முத்துராசா மரக்கறிவாங்குவான். அவவின் கணவர் யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சில் இறந்துவிட்டார். இடம்பெயர்ந்து பல துன்பங்களுக்கு மத்தியில் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்யும் அவளிடம்தான் முத்துராசா வாடிக்கையாக வாங்குவான். சிலவேளைகளில் கையில் காசு தட்டுப்பாடாய் இருக்கிற பொழுதுகளிலும் கடனாக மரக்கறிகள் வாங்குவான். முத்துராசாவின் மனைவி மாமிசம் உண்பதில்லை. பிள்ளைகளுக்கும் அவனுக்கும் மட்டும் சமைத்துத்தருவாள்.

கலியாணம் செய்த புதிதில் இறைச்சி அது இது என்று சாப்பிடாமல் விட்டாலும் சிறிய மீன், முட்டை என்று சாப்பிட்டுவந்தாள். மூத்தவன் வீட்டை விட்டுப்போனபிறகு அதையும் அவள் சாப்பிடுவதில்லை.

"நீ சாப்பிடாட்டி பிறகென்னத்துக்கு எனக்கு...?"

அவனும் மறுத்துப்பார்த்தான்.

"நீங்கள் உடம்பை முறிச்சு வேலை செய்யிறனீங்கள்... இதையும் விட்டா பிறகென்ன...?"

அதற்குப்பிறகு அவன் எதுவும் சொல்வதில்லை. கொடுப்பதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவான்... ஆனாலும் சாப்பிடுகிற வேளைகளில் உள்ளே ஏதோ உணர்வு மாறும்.

பிரதான வீதியில் ஏற முயன்ற பாரஊர்தி ஒன்று எழுப்பிய அவல ஒலியில்... நடுங்கிப்போய் முத்துராசாவின் சிந்தனைகள் அறுபட்டன. பாரஊர்தி அவனை விலத்திக்கொண்டு விரைந்தது.

இப்போது அவன் மனதை இத்தாலியிலிருந்து வந்திருக்கும் வைரவநாதனின் நினைவுகள் ஆக்கிரமித்தன.

வைரவநாதனும், முத்துராசாவும், நாகராசாவும் ஒன்றாகப்படித்தவர்கள். முத்துராசாவுக்கும், நாகராசாவுக்கும் குடும்பத்தில் வறுமை கோலோச்சியது.

நாகராசா ஒன்பதாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக்கொண்டு வயலுக்குள் இறங்கிவிட்டான். முத்துராசா இன்னும் கொஞ்சம் சிரமப்பட்டு பல்லைக்கடித்து க.பொ.த.உயர்தரம் வரை படிப்பை இழுத்துப்பார்த்தான். அதற்குமேல் முடியாதென்று தோன்றியது... குமாரசுவாமி என்கிற பிரபல கட்டிட ஒப்பந்தக்காரருடன் நாட்கூலியில் சேர்ந்துகொண்டான்.

வைரவநாதன் க.பொ.த. உயர்தரச் சோதினையை மூன்றுதரமும் எடுத்துவிட்டு... இரண்டு வருடங்கள் சவுதியில்போய் நின்றான். அங்கிருந்து வந்தபிறகுதான் திருமணம் செய்தான். திருமணம் செய்த இடமும் பெரும் வசதியான இடமென்று சொல்லிவிடமுடியாது. இவனுடைய கையை அவர்களும் எதிர்பார்த்தார்கள்.

தெரிந்தவர்கள், நண்பர்கள், பழக்கமானவர்கள் என்று எல்லோரிடமும் கடன்பட்டான். பொய்கள் தாராளமாய் பிறந்தன. வாங்கிய கடன்களின் வட்டி சுமையானது.

எப்படியோ வைரவநாதன் கொழும்புக்குப்போய் யாரையோ பிடித்து இத்தாலிக்குப் போய்விட்டான். அவனுடைய நான்கு பிள்ளைகளும்... மனைவியும்

இரண்டு வருடங்கள் சொல்லொணாத் துன்பப்பட்டார்கள். பிறகு வைரவநாதன் காசனுப்பத் தொடங்கிவிட்டான். மளமளவென்று கடன்கள் அழிந்தன. வீடு உயர்ந்தது. வீட்டைச்சுற்றி மதில் எழுந்தது.

மூத்த பெண் பெரியவளானாள். ஊர் முழுவதையும் அழைத்து விருந்து போட்டு பெரிதாக சாமத்தியவீடு செய்தார்கள். முத்துராசாவும் வேலையால் வந்து குளித்து, மகளையும் கூட்டிக்கொண்டுபோய் சாப்பிட்டுவிட்டு வந்தான். மூன்றுநாட்களாக போன எல்லோரையும் வீடியோ படம் பிடித்தார்களாம்.

இப்போது பதின்னான்கு வருடங்கள் கழித்து வைரவநாதன் ஊருக்கு வந்திருக்கிறான் பெரும் தனவந்தனாக.

ஊரில் பிள்ளையார் கோயில் கோபுரத்தை இடித்து புதிதாக உயர்த்திக்கட்டுகிறார்கள். திருப்பணிகள் இன்னமும் முடியவில்லை. இந்த கட்டிட நிதிக்கு வைரவநாதன் இரண்டு லட்சம் கொடுத்திருக்கிறானாம்.

பதினநான்கு வருடங்களுக்குப்பிறகு ஊருக்கு வந்திருக்கிறவன் அதுவும் ஊரிலே பெரிய பணக்காரன் தன்னை விசாரித்ததாக நாகராசா சொன்னதை நம்பமுடியாமலிருந்தது முத்துராசாவுக்கு. முத்துராசாவின் மனைவி கோயிலில் வைரவநாதனின் மனைவியைக் காண்பதாகக் கூறுவதுண்டு. ஆனால் கதை பேச்சு என்று ஒன்றுமில்லை. சிலவேளைகளில் முத்துராசாவும் வழிதெருவில் அவளைக் கண்டிருக்கிறான். அவள் சிரித்ததில்லை. ஒருவேளை புருசன் ஊரில் இல்லாதபோது அவனுடைய நண்பர்களைப்பார்த்து ஏன் சிரிக்கவேண்டும். முத்துராசாவின் மனதில் வைரவநாதனைப் பார்க்கவேண்டுமென்ற உந்துதல் இருந்தாலும்... அன்றாட வேலைநெருக்கடிகள் அதற்கு இடம்தரவில்லை. மூத்தவளுக்குத் திருமணம் பேசி வந்தது. ஒன்றுவிட்ட சகோதரியின் மகன்தான். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கும் 'ஏதோ முடிஞ்சளவு கொஞ்சமெண்டாலும்' கூட கொடுக்க வசதியில்லாமல் இருந்தது.

அடுத்தவனுக்கு வவுனியா கல்வியற் கல்லூரியில் படிக்க அனுமதி கிடைத்தது. அவனுடைய படிப்புச் செலவிற்கு என்ன செய்யலாம் என்று மனம் துடித்துக்கொண்டிருந்தது.

கடைக்குட்டி சோபிதா ஒன்பதாமாண்டு படித்துக்கொண்டிருந்தாள். அவளையும் எப்படியாவது படிப்பித்துவிடவேண்டுமென்ற ஆசை இருந்தது.

சனிக்கிழமை தலைமுடி அளவுக்குமிஞ்சி வளர்ந்து விட்டதாகவும்... அதை எப்படியாவது ஒழுங்காக்குமாறும் முத்துராசாவை மனைவி- சில நாட்களாய் நச்சரித்துக்கொண்டிருந்தாள். இன்றைக்கு தலைமுடியை வெட்டிய

பிறகே என்னவேலையென்றாலும் செய்வது என முத்துராசா முடிவெடுத்து... புறப்பட்டான். கடையில் அவ்வளவாக ஆட்களில்லை.

யாரோ ஒரு வயதானவருக்கு முடிவெட்டி முடிந்திருந்தது. அவர் பணம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

"அண்ணை வாங்கோ..."

இப்போது முத்துராசாவின் முடி வெட்டப்பட்டுக்கொண்டிருந்தது. முடி வெட்டிக்கொண்டிருந்த போதுதான் வடிவாகத் தன் முகத்தை கண்ணாடியில் பார்த்தான் முத்துராசா... சொக்கைகள் இரண்டும் உள்ளிறங்கி தலையிலும் நரை அதிகரித்திருந்தது. கண்களும் சாடையாக உள்ளே போனமாதிரி...

சம்பந்தமில்லாமல் மனைவியின் நினைப்பு வந்தது. மனைவி பேரழகி என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் மிகுந்த சகிப்புத்தன்மை உள்ளவள் என்ற ரீதியில் அவள் உயர்ந்தவள் என நினைத்துக்கொண்டான்.

முத்துராசா காசைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். சயிக்கிளை எடுத்து ஏறமுயன்றபோது அருகே யாரோ நடந்து வருவது தெரிந்தது. திரும்பிப்பார்த்தான். சட்டென்று அடையாளம் தெரிந்தது.

"வைரவநாதன்..."

தன்னையுமறியாமல் முத்துராசாவின் குரல் உயர்ந்தது.

"ஓ... நீ... முத்தெல்லே..."

இரண்டு கைகளையும் பற்றி இழுத்து... கட்டி அணைத்தான்.

"எப்படி இருக்கிறாய்...?"

"எனக்கென்னடா... நான் நல்லாத்தான் இருக்கிறன்..."

"வீட்டைவாவன்..."

"இப்பிடிச்சும்மா வரக்கூடாது... பிறகொருநாளைக்கு வாறன்... உன்னைக் கண்டவுடனை நிறையக் கதைக்கவேணும்போல கிடக்கு..."

கண்களில் சிவப்புத்தெரிந்தது.

"எங்கேயோ குடித்துவிட்டு வந்திருக்கிறானோ..."

ஊடுருவிப்பார்த்தான். பார்வையை அவன் புரிந்துகொண்டானோ என்னவோ.

"என்னடாப்பா அப்படிப்பார்க்கிறாய்... கோயிலடியால போவம்... மடத்தில இருந்து கொஞ்சநேரம் கதைச்சிட்டுபோவம்..."

இருவரும் மௌனமாக நடந்துகொண்டிருந்தார்கள்.

"இப்ப என்னவேலை செய்யிறாய்...?"

"எங்கடை ஆக்களோடைதான்... இப்ப சண்டையில்லைத்தானே... படம் நடிக்கிறன்... நாடகம் நடிக்கிறன்... பாடுறன்... ஏதோ முடிஞ்ச எல்லாம் செய்யிறன்..."

உதடுகள் சொல்லிக்கொண்டாலும்... மனம் சுவர் கரைந்த வீட்டையும்... கிழிந்த சட்டையைத் தைத்து அணிந்திருக்கும் மனைவியையும் சடாரென்று ஒருகணம் நினைத்தது.

"நீ குடுத்து வைச்சனியெடாப்பா..."

"எங்கடை நாடகங்கள்... கூத்துக்கள் எல்லாம் பார்க்கிறனியோ அங்க... வீடியோவில வெளிநாடுகளுக்கெல்லாம் வாறது..."

அவன் தலையைக் குனிந்துகொண்டு தலையை ஆட்டினான். அவனிடமிருந்து பெருமூச்சொன்று விடுதலை பெற்றது.

மடத்தடி வெறிச்சோடிக் கிடந்தது. பெரிய வேப்பமரத்திலிருந்து நிறையப் பச்சை இலைகள் உதிர்ந்து விழுந்து கிடந்தன.

வைரவநாதனும் முத்துராசாவும் முதல்படியிலேயே அமர்ந்து கொண்டார்கள். குரங்குகள் சில நான்கு கால்களில் நடந்து போய்க்கொண்டிருந்தன.

"நான் உண்மையைச் சொல்ல விரும்புறன்..."

"இவன் என்னத்தைச் சொல்ல விரும்புறான்... ம்..."

மௌனமாய் சில கணங்கள் கழிந்தன.

"அங்கை எங்கட வாழ்க்கை எப்பபடியிருக்குமெண்டு நீ அறிய விரும்புவாயெண்டு நினைக்கிறன்..."

"......"

"வேலை... வேலை... வேலை... இதத்தவிர சத்தியமா எனக்கொண்டும் தெரியாது..."

காற்று குளிர்மையாய் வீசியது. மரத்திலிருந்து இலைகள் உதிர்ந்து நான்கு திசைகளும் பரவின. மழை எந்தக் கணத்திலும் கொட்டலாம். எங்கோ பார்த்துக்கொண்டிருந்த முத்துராசா வைரவநாதனைப் பார்த்தான். மெல்லிய மஞ்சள் நிறம்... கருகருவென்ற முடியும் மீசையும், கைவிரல்கள் இரண்டில் பெட்டி மோதிரங்கள்... தொப்பை விழுந்த உடம்பு...

"உண்மையா முத்து... விடிய எழும்பினா ரயிலைப்பிடிச்சு வேலைக்கு ஓடோணும்... வேலையில் இறங்கினா எதுவும் நினைக்கவராது... சமைச்சு சாப்பிட்டுப்போட்டு... மிச்சத்தை பிறிச்சுக்குள்ள தள்ளிப்போட்டு... படுப்பன். பிறகு விடிய..."

நிறுத்திவிட்டு முத்துராசாவைப் பார்த்தான்.

"......"

"இப்படி ஓடிஓடித்தான்ராப்பா வீட்டுக்குக் காசு அனுப்புறம்..."

அவனின் கண்களில் நீர் நிறைந்தது. முத்துராசா அவனின் முதுகில் தட்டினான்.

"நீங்கள் எங்களை ஏற்றுக்கொள்ளுவியளோ எண்ட குற்ற உணர்விலை... குனிஞ்சு கொண்டுதான் வந்தனான்... ஆனா... எங்களிலை நீங்கள் காட்டுற கரிசனை..."

தலையை ஆட்டி பற்களை உதடுகளால் கடித்தான். அவன் தொடர்ந்து வார்த்தைகளற்றுச் சிரமப்படுவது புரிந்தது. அது இவனுக்குள் ஒருவித உற்சாகத்தைத் தந்தமாதிரி இருந்தது.

"எழும்பு மச்சான் வீட்டை போவம்..."

இருவரும் எழுந்தார்கள். மழைத்தூறல் விழ ஆரம்பித்தது. அதைப் பொருட்படுத்தாமல் இருவரும் நடக்கத்தொடங்கினார்கள்.

எரிமலை
ஏப்ரல் 2005

# அப்பா

சூரியன் கீழிறங்கிக்கொண்டிருந்த ஒரு மாலைப்பொழுது. மஞ்சள் வெயில் முற்றமெங்கும் பரந்திருந்தது.

அப்பா திண்ணையில் சுருண்டபடி படுத்திருந்தார். அவர் தோட்டம் கொத்தும் அந்த முதலை மார்க் மண்வெட்டி திண்ணைக்கு அருகில் கிடந்தது. அதில் அப்பியிருந்த மண்கூட சரியாகத் துடைக்கப்படவில்லை. எட்டி அப்பாவைப் பார்த்தேன். ஆழமாய் தூங்கிக்கொண்டிருந்தார்; அவரது மூச்சு சீராக இயங்கிக்கொண்டிருந்தது.

மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனேன்.

"அம்மா..."

அம்மா வந்தாள்.

"அப்பாவுக்கு என்ன வருத்தமே..."

“இல்லை... தேகம் உளையுதெண்டு படுத்திருக்கிறார்... எழும்பச் சுகம் வந்திடும்...”

அம்மாவின்ர பதிலில் எனக்கு நம்பிக்கையில்லை. அப்பா இப்படிப் படுப்பவரல்ல.

“ஒருக்காப் பரமலிங்கத்தாரிட்டை காட்டுவமே...”

“மல்லித்தண்ணி குடுத்தனான்... பரியாரியாரிட்டைக் காட்டுற அளவுக்கு ஒண்டுமில்லத் தம்பி...”

என்றாள் அம்மா.

அப்பா சும்மா இருக்கமாட்டார். காலநேரம் பார்க்காமல் எப்பவும் தோட்டத்துக்கை மண்வெட்டியோடை நிற்பார். எங்கடை குடும்பத்திலை ஒருத்தர்கூட வெளிநாட்டுக்குப் போகேல்ல. ஆனா... எங்கள சகல வசதிகளோடையும் வாழவைச்சது அப்பாவின்ர கடும் உழைப்புத்தான்...

பெரியக்காவுக்கு எண்பத்தி மூண்டில மூண்டு பரப்புக் காணிக்குள்ள ரெண்டறை வீடு கட்டி கலியாணமும் செய்து வைச்சது அவற்றை கெட்டித்தனமும் உழைப்புத்தான்.

சின்னக்காவுக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர் வீடு வேண்டாமெண்டிட்டினம். காசும் நகையும் குடுத்து கலியாணம் கட்டி வைச்சார். அண்ணன் தானே ஒரு பொம்பிளையை விரும்பினார். அப்பா அதுக்கும் தடைவிதிக்கவில்லை. வடிவா விசாரிச்சுப் பார்த்துப்போட்டு செய்துவைச்சார். அண்ணி வீட்டில இருந்து சீதனம் பேச எண்டு வந்தினம்.

“எங்களுக்கு நீங்கள் இனாம் சீனாமெண்டு ஒண்டும் தரவேண்டாம். உங்கட பிள்ளைக்கு என்ன குடுக்க விரும்பிறியளோ அதைக் குடுங்கோ” எண்டு ஒரே கதையாய்ச் சொல்லிப்போட்டார்.

“செல்வச்சந்நிதி முருகன் கோயிலிலை தான் தாலிகட்ட வேணும்” எண்டு கேட்டினம்.

“அது உங்கட விருப்பத்தையும் வசதியையும் பொறுத்தது” எண்டார்.

“என்ன... அவங்கள் கேட்கிற எல்லாத்துக்கும் தலையாட்டுகிறதோ...” எண்டு அம்மா கொஞ்சம் குழம்பினா.

"இஞ்சவா... எப்ப எங்கட வீட்டுக்கு அத எடுக்கிறதெண்டு தீர்மானிச்சனோ... அந்த நிமிசத்திலை இருந்து அது என்ர பிள்ளை தான்..." எண்டு சொல்லிப்போட்டார் அப்பா.

அம்மா அடுத்த கதை கதைக்கேல்லை.

அப்பான்ரை நேர்மையும் கெட்டித்தனமும் தான் எனக்குப் பிடிக்கும்.

அப்பா குடிப்பார். ஆனா நித்திய குடிகாரனில்லை. எப்பாலும் இருந்து விட்டு ஒருநாள். அதைக்கூட எங்களுக்கு வித்தியாசப்படுத்திக் காட்டமாட்டார்.

அப்பா பள்ளிக்கூடம் சென்று நிறையப்படிக்கவில்லை. ஆனால் எல்லாத்துறைகளிலும் எல்லாம் அறிந்திருந்தார். நிறைய வாசிப்பார். எல்லா ரேடியோச் செய்திகளையும் கேட்பார். கோயில்களிலை, படிச்சவைகூட புத்தகம் பார்த்துத்தான் தேவாரம் படிப்பினம். ஆனா அப்பா கண்களை மூடிக்கொண்டு... ஒரு எழுத்துக்கூடப் பிசிறாமல் எல்லாத் தேவாரங்களையும் இராகத்தோடு பாடுவார்.

ஊரிலை நிறைய சங்கங்களும், மன்றங்களும் இருக்கும். அப்பா ஒன்றிலும் பதவிக்கு போகமாட்டார். ஆனால், பதவியில இருக்கிறவை பிரச்சினையளை வந்து அப்பாவோடை ஆராய்ந்து கொள்ளுவினம்.

ஒருநாளும் அப்பாவுக்கு கோபம் வாறேல்ல. என்ர இருபத்தொம்பது வயது காலத்திலை அப்பாவுக்கு கோபம் வந்ததெண்டால் ஒருக்கால்தான். சின்னச் சித்தப்பா ஒருநாள் மாட்டுக்கு அடிச்சவர். அந்த மாடு ஒவ்வொரு நாளும் அவர் வைக்கிற தவிட்டுத் தண்ணியைக் குடிக்காமல் தட்டி ஊத்திப்போடும். அவ்வளவு முரடு அது.

ஒருநாள் சின்னச்சித்தப்பாவுக்குச் சரியான கோபம் வந்திட்டுது. மாட்டை மரத்தோடை கட்டிவைச்சுப்போட்டு... பச்சைமட்டை வெட்டி அடிஅடியெண்டு அடிச்சார். அக்கம் பக்கத்துச் சனமெல்லாம் நிண்டு வேடிக்கைபாக்குது... பிடிப்பாரில்லை.

அப்பதான் அப்பா தோட்டத்தாலை மண்வெட்டியோடை வந்தவர். நடக்கிறதைப் பார்த்தவுடனை அப்பாவுக்கு ஆத்திரம் சிரசுக்கேறி விட்டது. விறுவிறெண்டு போய்... கீழே கிடந்த தடி ஒன்றை எடுத்து, விட்டார் சின்னச்சித்தப்பாவுக்கு நாலைஞ்சு அடி. ஆள் நிலைகுலைஞ்சு போச்சு.

"வாயில்லாச் சீவனைப் போட்டு அடிக்கிறியேடா மாடு..." அப்பா

தடியை எறிந்துவிட்டு வந்தார்.

ஒருத்தரும் மூச்சுக்கூட விடவில்லை. அந்தச் சுற்றுவட்டாரத்திலேயே ரெண்டு நாட்கள் அசாதாரண சூழ்நிலை நிலவியது. மூன்றாம் நாள் சின்னச்சித்தப்பா வீட்டுக்கு வந்தார். ஒண்டுமே நடக்காதமாதிரி... ஒண்டையுமே மனதிலை வைச்சுக்கொள்ளாத மாதிரி...

"இஞ்சையப்பா... சின்னத்தம்பியன் வந்திருக்கிறான்... தேத்தண்ணி கொண்டுவாவன்..."

என்றார் அப்பா. அம்மா தேநீர் கொண்டுவந்து கொடுத்தா. சித்தப்பா குடித்துவிட்டுப் போனார். அவ்வளவுதான். அப்பாவின் நினைவுகளே மனதில் ஓடிக்கொண்டிருந்தன. அப்பாவை முதலில் பார்ப்பவர்கள்... கொஞ்சம் பழகிய பிறகு முதலில் தாம் வைத்திருந்த அப்பாவைப்பற்றிய அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளுவினம். அப்பா அப்பிடித்தான்.

வெளியே கொஞ்சம் இருட்டிவிட்டிருந்தது. எழுந்துவந்து வெளியே பார்த்தேன். அப்பா இன்னமும் எழும்பவில்லை. மனம் பதைத்தது.

மெல்ல நெற்றியில் கைவைத்துப் பார்த்தேன். காய்ச்சலில்லை. மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தார்.

"என்னப்பா செய்யுது?..."

"ஒண்டுமில்லை" தலைமட்டும் ஆடியது.

"பரமலிங்கத்தாரைக் கூட்டியரட்டே..."

அவசரமாய் வேண்டாமெண்டு தலையாட்டினார்.

"என்னடா தம்பி... எப்பனெண்டவுடனை குழம்பியடிக்கிறாய்... அவருக்கு ஒண்டுமில்லை... பேசாம இரு..."

நான் பேசாமலிருந்தேன். கால் முகம் கழுவிக்கொண்டு வாசிகசாலைக்குப் போனேன்... நிறைய ஆட்களாயிருந்தது... அப்பிடியே கோயிலடிக்குப் போனேன்.

கோயில் வீதி பாலாறாய்த் தெரிந்தது. அவ்வளவு நிலவு வெளிச்சம். வயதான நாலைந்துபேர் மண்டபத்தில் அமர்ந்திருந்து கதைத்துக் கொண்டிருந்தாரகள். குரல்கள் பெரிதாகக்கேட்டன. குரல்களை வ்வைச்சு கதைப்பவர்கள் யார்யாரென விளங்கியது.

இளவட்டங்கள் அதிலில்லை.

அக்கா வீட்டை போவமா என்று மனம் எண்ணியது. உள்மனம் மறுத்தது. பேசாமல் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வீட்டுக்கே போனேன். நிலவொளியில் திண்ணை வெறுமையாயிருந்தது.

அப்பா விறாந்தைக்குள் பாயில் படுத்திருந்தார்.

"அப்பா சாப்பிட்டவரே..."

"ஓம் தம்பி... இடியப்பம் அவிச்சு... சொதியும் வைச்சுக்குடுத்தனான்..."

நான் அறைக்குள் போனேன்.

"நீயும் வந்து சாப்பிடன் தம்பி.."

மனதில் ஏதோ கனமேறியிருப்பதாய் உணரமுடிந்தது.

"ஏன் தம்பி ஒரு மாதிரியிருக்கிறாய்..."

"ஒண்டுமில்லை..."

"சொதி கொஞ்சம் விடட்டே..."

"காணும்..."

சாப்பிட்டுவிட்டு கைகழுவிய போது மோட்டார் சைக்கிள் வெளிச்சம் வளவுக்குள் வந்தது.

"ஆர் தம்பி? ..."

"சின்னக்காவின்ரை அத்தான் போல..."

அவர்தான் வந்தார். தனியாகத் தான் வந்தார்.

"தேத்தண்ணி ஊத்தட்டோ? ..." அம்மா கேட்க...

"வேண்டாம்... சாப்பிடவேணும்... கடையடிக்கு வந்தனான்..."

என்றார். அவர் சிறிதுநேரம் இருந்தார்.

"அப்பா ஏன் நேரத்துக்குப் படுத்திட்டார்?... ஏதும் சுகமில்லையோ?..."

"வருத்தம் ஒண்டுமில்ல... சும்மா தேகம் உளையுதெண்டு படுத்திருக்கிறார்..."

அம்மா சாதாரணமாகச் சொன்னாள்.

றேடியோவில் செய்திகேட்டு முடிய அத்தானும் புறப்பட்டார். நான் கேற்றைப் பூட்டிவிட்டு வந்து உள்ளே கட்டிலில் படுத்தேன். அப்பாவும் இயல்பாகத் தூங்கிக்கொண்டிருந்தார். அப்பா பாவம் நானறிஞ்ச காலம் தொட்டு மண்வெட்டியோடை தான் அவருக்குச் சீவியம்...

மனம் கலங்கியது. இப்பத்தான் எனக்கு வேலை கிடைச்சிருக்கு. அப்பாவ கண்கலங்காம பார்க்க வேணும். எத்தினைதரம் அண்ணனும் நானும் அப்பாக்குச் சொன்னம்... இனிக்காணும் வீட்டில சும்மா இருங்கோ எண்டு... அவர் கேட்டாத்தானே...

மனம் அந்தரித்தது.

ஜன்னலுக்குள்ளால் உள்ளே நுழைந்த நிலவின் ஒளி அறை முழுவதும் பரவிக்கிடந்தது. வேலியில் படர்ந்திருந்த மல்லிகைச் செடியில் பூத்த பூக்களின் வாசம் கமகமத்தது. குளிர் காற்றும் சேர்ந்து தூக்கத்தை விரட்டியது.

மெல்ல எழுந்து வெளியே வந்தேன்.

விறாந்தையில் அப்பா தூங்கிக்கொண்டிருந்தார். அவரின் தலைமாட்டில் நுளம்புத்திரி புகைந்து கொண்டிருந்தது. சீராக மூச்சுவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்.

அம்மா சற்றுத்தள்ளி வெறும் பாயில் உறங்கிக்கொண்டிருந்தார். வாசலில் அம்மாவின் செல்லநாய் சுருண்டு கிடந்தது.

பேசாமல் வந்து மீண்டும் கட்டிலில் சரிந்தேன். நேரே கீதோபதேசத் தோற்றக்காட்சியும் வசனங்களும் சுவரில் தொங்கின. எங்கோ சேவலொன்று சிறகடித்துக் கூவியது.

நேரத்தைப் பார்த்தேன் சரியாக ஒரு மணி. எப்படியாவது தூங்க வேண்டுமென்று கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்க முயற்சித்தேன்.

தூங்கினால் தான் காலையில் வேலைக்குப் போகமுடியும்.

அப்பா ஒரு முறை என்னை தன்னுடைய சைக்கிளில் கீரிமலைக்குக் கூட்டிக்கொண்டு போனவர்... கேணியில் இருவரும் குளித்தோம். அப்பா எனக்கு தன்னுடைய துவாயால் தலைதுடைத்துவிட்டார். அப்பா எங்களுக்காகவே வாழ்ந்தவர்... வேறு உலகம் அவருக்கு இல்லை. நினைவுகள் சுழன்று சுழன்று மேலெழுந்தன...

அப்பா பிறந்த சில மாதங்களில் அவருடைய தகப்பன் பிரிந்துபோய் விட்டாராம். அப்பாவின் பதின்மூன்றாவது வயதில் தாயும் இறந்துபோனாவாம்.

பெரியப்பாவும், அப்பாவும் தான். பெரியப்பா திருமணமே செய்து கொள்ளவில்லை. சின்னச்சித்தப்பாவின் அம்மா தான் இவர்களையும் வளர்த்தாவாம்.

அப்பா அவவை 'குஞ்சியாச்சி' என்று பிரியமாய் கூப்பிடுவார்.

அப்பாவுக்கு ஒரு காலத்தில் அரசியலிலும் ஈடுபாடு இருந்தது. செல்வநாயகத்தாரின் கட்சிக்காக அருமையாகப் பாடுபட்டாராம். அவர் இறந்துபோக அரசியலில் அப்பாவுக்கு ஈடுபாடில்லாமல் போய்விட்டது. அப்பா காலத்தில் வீட்டுச்சுவரில் ஒட்டிய உதயசூரியன் படம் சின்னக்காவின் திருமணத்திற்கு வெள்ளையடித்த போதுதான் உரித்து எறிந்தோம்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் தமிழாராட்சி மாநாட்டில் ஏற்பட்ட படுகொலைகள் நடந்தபோது – அப்பாவும் மயிரிழையில்தான் உயிர் தப்பினாராம். அந்த மயிர்க்கூச்செறியும் சம்பவத்தை அப்பா அடிக்கடி ஞாபகப்படுத்துவார்.

அப்பாவுக்கு கடவுள் நம்பிக்கை இருந்தது. ஆனால் ஒருநாளும் அவர் விரதம் இருந்தது கிடையாது. திருவிழாக்கால வியாபாரங்களிலும் பங்கெடுப்பதில்லை. வெள்ளிக்கிழமைகளில் மட்டும் அமைதியாக கோயிலுக்குப் போய்விட்டுவருவார்.

அப்பாவுக்கு கிரிக்கெட் விளையாட்டிலும் ஆர்வம். வீட்டில் ஓய்வாக இருந்து கிரிக்கெட் விளையாட்டை தொலைக்காட்சியில் ரசிக்காவிட்டாலும் பத்திரிகைகளில் அது சம்மந்தமாக செய்திகளைத் தேடித்தேடிப்படிப்பார். கோடைகாலத்தில் தண்ணீர் வற்றிய எங்கள் ஊர் குளம்தான் சிறுவர்களின் விளையாட்டு மைதானம். அதில் கிரிக்கெட் விளையாடும் பன்னிரெண்டு பதின்மூன்று வயது சிறுவர்களைப் பார்த்து அப்பா பரவசப்படுவார். அவருக்கு இந்த உலகில் மிகவும் பிரியத்துக்குரியது குழந்தைகளின் மழலைதான் என்று நான் நினைக்கிறன். இரண்டு அக்காக்களின் நான்கு குழந்தைகளிலும் அப்பா நிறைய அன்பு கொண்டிருந்தார்....

அப்பா பத்திரிகைகளை விரும்பிப் படிப்பதுபோல நூல்களை விரும்பிப் படித்ததை நான் பார்க்கவில்லை. ஒருவேளை எல்லா நேரமும் தோட்டத்தில் நிற்பதாலாக இருக்கலாம்.

அப்பாவுக்கு இப்போது எழுபத்து இரண்டு வயது.

தலைநரைத்து... தாடி நரைத்துக் கொஞ்சம் ஒடுங்கிப்போனார்.

தோலில் சுருக்கம் விழுந்துவிட்டது

சிந்தனைகள் தொடராய் மூடிய கண்களுள் நிறைந்தன.

“தம்பி... தம்பி...”

அம்மா அவசரமாய் கதவைத் தட்டினா.

“என்ன...?”

“அப்பா பேசாமல் கிடக்கிறார்... எழும்புதம்பி...”

திடீரெண்டு உடம்பு முழுவதும் அதிர்ந்தது. அவசரமாய் எழுந்தேன். அப்பாவிடம் விரைந்தேன்.

“அப்பா... அப்பா...”

எதுவித அசுமாத்தமும் இல்லை.

“பரமலிங்கத்தை ஒருக்காக் கூட்டிக்கொண்டு வாதம்பி...”

நான் அவசரப்பட்டு சயிக்கிளை எடுத்துக்கொண்டு ஓடினேன். என்னுடைய சயிக்கிளின் கடகடப்பில் சில நாய்கள் அரண்டு குரைக்கத்தொடங்கின. பதட்டத்தில் தெரு தெரியவில்லை. போகின்ற போக்கில் சித்தப்பாவீட்டுப் படலையடியில் நின்றேன். பால் கறப்பதற்காக சித்தப்பா வேளையோடு எழுந்துவிடுவார். படலையைத் தள்ளிக்கொண்டு போனேன்.

“ஆரது...?”

சித்தப்பா கிணற்றடியில் நின்றார்.

“சித்தப்பா... அப்பா எழுப்ப எழுப்ப பேசாமல் கிடக்கிறார்... நான்

பரமலிங்கத்தாரிட்டை போறன்... நீங்கள் ஒருக்கால் வீட்டை போங்கோ.... அம்மா தனிய...''

''கெதியாய் போ... நான் உடன போறன்...''

நான் மீண்டும் சயிக்கிளில் பறந்தேன்.

பரமலிங்கத்தார் வீட்டுக் கேற் பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த கடைக்குள் வெளிச்சம் தெரிந்தது.

பரமலிங்கத்தாரின் வளவுக்குள் ஏராளமான மூலிகைகள். யாராவது களவாக மூலிகைகளை பிடுங்கக்கூடாது என்பதற்காக அவர் ரெண்டு நாய் வளர்த்து வருகிறார். அதுகளை இரவில் அவிழ்த்துத்தான் விடுவார். அந்த நாய்களின் நினைப்பு வந்ததும் கேற்றடியில் தயங்கினேன். பிறகு மனதை திடப்படுத்திக் கொண்டுபோனேன்.

''ஐயா... ஐயா...''

இரண்டு சத்தம் வைத்தபிறகு முன் கதவைத்திறந்து உதவியாள் எட்டிப்பார்த்தான்.

''நான் பெரியவளவு ஏகாம்பரத்தின்ர மகன்... ஐயாவுக்கு சரியா ஏலாமக்கிடக்கு... உடனை பரியாரியாரைக் கூட்டிக்கொண்டு போகவேணும்...''

உதவியாள் உள்ளே போனார்.

''போங்கோ... ஐயா வாறாராம்...''

திரும்பி வந்துகொண்டிருந்தபோது விடிந்துவிட்டது. தேநீர்க் கடைகள் களைகட்டிவிட்டன.

வீட்டுக்கதவு திறந்திருந்தது. சித்தப்பா வாசலில் என்னை எதிர்பார்த்தவாறுதான் நின்றுகொண்டிருந்தார் என்பது தெரிந்தது.

நான் சயிக்கிளை நிறுத்தியதும் என் தோள்களைப் பற்றினார்.

''நீ மனம் தளரக்கூடாது சத்தியன்... அப்பா போய்விட்டார்... நடக்கவேண்டிய காரியங்களை நீதான் தளராம நிண்டு செய்யவேணும்... அக்காவைக்கும் செய்தி அனுப்பியாச்சு...''

சித்தப்பாவின் கைகளை உதறிவிட்டு உள்ளே போனேன். அப்பாவை கட்டிலில் நீளமாய் வளர்த்தியிருந்தார்கள். தலைமாட்டில் குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. என் கண்கள் பனிக்க தொண்டைக்குள் ஏதோ சிக்கியது.

ஒன்றிரெண்டாய் அயல் சனங்கள் எங்கள் முற்றத்தில் கூடத்தொடங்கினார்கள். அம்மாவின் அழுகுரல் ஈனமாய் ஒலிக்கத்தொடங்கியது. அம்மாவின் கண்ணீர் என் கண்களையும் பனிக்கச்செய்தது. அம்மாவின் முதல் அழுகை இதுதான்.

நான் வெளியே வந்தேன். அப்பாவின் மண்வெட்டி அநாதரவாய்... அதை எடுத்து மண்ணைத் தட்டிவிட்டு பாதுகாப்பாய் வைத்தேன்.

வெள்ளிநாதம்
28-04-2004



# அகதியின் பயணம்

கண்வெட்டாமல் அவன் இருட்டையே பார்த்தபடி படுத்துக்கிடந்தான். நேரம் என்னவென்று கூட உத்தேசிக்க முடியவில்லை. பக்கத்துக் குடிசையில் ஒரு குழந்தையின் அழுகுரல் ஒரு குட்டிப்பூனை கத்துவது போல ஈனஸ்வரமாய்க் கேட்டது.

'அந்தக் குழந்தை ஏன் அழுகின்றது' என நினைத்தான். குழந்தை பசியில் அழலாம். அதன் தாய் பாலூட்ட முடியாமல் இருக்கலாம். காய்ந்த பாண் துண்டையும் சீனியில்லாத வெறும் தேநீரையும் உணவாக அந்தத் தாய் உட்கொண்டிருக்கலாம். எப்படி அழுகின்ற குழந்தைக்கு அவள் பாலூட்டமுடியும்.

அவனுடைய குழந்தைகள் இரண்டும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தன. அவனுடைய மனைவி ஜானகி இன்னும் இரண்டு மாதங்களில் இன்னொரு குழந்தையைப் பிரசவிக்கப் போகிறாள்.

அவனைப் பொறுத்தவரையும் அவளுடைய இந்தப் பிரசவம் மகிழ்ச்சியானதல்ல என்று

உணர்ந்தான். சீரான இருப்பிடமில்லை. சத்தான உணவில்லை. நோய்த்தடுப்பு மருந்துகளில்லை. ஒழுங்கான மலசலகூடமில்லை. இந்த இலட்சணத்தில் இந்தப் பிரசவம் தேவைதானா என்று தன்னையே கடிந்து கொண்டான்.

ஜானகியும் மூன்றுமாதம் வரை இதை இல்லாமற் செய்வதற்கு பல முயற்சிகள் செய்து தோற்றாள்.

'சரி ஏதோ வாறது வரட்டும்' என்று விட்டாயிற்று. சில வேளைகளில் இயலாமையில் அவள் எரிந்து விழுவாள். சில வேளைகளில் தேம்பித் தேம்பி அழுவாள். இன்னும் சில வேளைகளில் எதுவுமே பேசாமல் மௌனமாய்த் திரிவாள்.

சில நாட்களாய் வேலைகூட ஒழுங்காக இல்லாமலிருந்தது அவனுக்கு. பல நாட்கள் காலையில் போய்... மாலையில் வெறுங்கையோடு வந்து மூலைக்குள் முடங்கியபோது மனம் குறுகுறுக்கும். காலை முதல் அவன் ஒரு இடமும் போகவில்லை. மதியம் போல் வாசலில் நாய் குரைக்க... எட்டிப்பார்த்தான். காந்தியண்ணை நின்றுகொண்டிருந்தார்.

"வாங்கோ அண்ணை..." என்றான்.

"நான் இருக்கிறதுக் வரேல்லை... உனக்கு கொஞ்சம் தள்ளி உதிலைகோயிலடியிலதான் ஒரு தெரிஞ்ச வீட்டில இருக்கிறம்.... கடையில கடன் வாங்கினவனெல்லாம் அவரவர போயிட்டாங்கள்... ஆக்கள் எங்கையெண்டும் தெரியாது... உன்ரை கணக்கும் ஒரு ஆயிரத்தி முன்னூற்றிச் சொச்சம் கிடக்கு... எப்ப தாறாய்...?"

"..............."

"கடையிலை கிடந்ததுகளைச் சும்மா சும்மா தூக்கிக் குடுத்துப்போட்டு இப்ப வீடு வீடா அலைய வேண்டிக் கிடக்கு... எப்ப தாறாய் காசு..."

"ரெண்டு மூண்டு நாளிலை தாறன்..."

"சொல்லிப்போட்டன்... எனக்கு நடை பழக்கக் கூடாது... சொன்ன தவணைக்கு தந்திடவேணும்..."

சொல்லிவிட்டு திண்ணையில் இருந்த ஜானகியைப் பார்த்தார்.

"மனுசியும் விஷேசம் போல... உதுக்குமட்டும் குறைவிடாயள்..."

புறுபுறுத்துக்கொண்டு போனார்.

"இண்டைக்குச் சாப்பிடுறதுக்கு ஒண்டுமில்லை... என்னெண்டு இரண்டொரு நாளில தரலாம் எண்டு சொல்லுவியள்?..." ஜானகி பார்த்தாள்.

"நாங்கள் கேட்கக் கேட்க ஒரு மறுப்புமில்லாமல் தந்த மனுசன்... என்ன பாடுபட்டும் குடுக்கத்தானே வேணும்..."

"அதுதான் என்னெண்டு குடுப்பியள் எண்டு கேக்கிறன்?..."

"எப்பிடியாவது குடுக்கத்தானே வேணும்..."

பின்பக்கமாக கைகளை ஊன்றி இளைத்தாள் அவள். அவள் நெற்றியிலும்... நெற்றிப் பக்கங்களிலும் வியர்வை பூத்திருந்தது. இரண்டு கால் பாதங்களும் வீங்கியிருந்தன.

அவனுக்குள் துயரம் பொங்கியது.

பிற்பகல் வரை அவன் அப்படியே மூலைக்குள் படுத்துக் கிடந்தான். நித்திரையில்லை. வெறுமனே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான்.

ஜானகிக்கு கிளினிக்கில் கொடுத்த 'திரிபோஷா'மாவை அவள் சுடுதண்ணீர் விட்டுக் குழைத்து உருட்டி குழந்தைகளுக்குக் கொடுத்தாள். அவனுக்கும் ஒரு உருண்டையைக் கொண்டுவந்து நீட்டினாள். அவன் மறுக்கவில்லை. வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் சுருண்டான்.

ஏழு மணியிருக்கும் சோறு அடுப்பில் கொதிக்கும் வாசனை மூக்கில் நுழைந்தது.

"ஜானகி... என்ன... சமைக்கிறியே..."

"ஓம்... சுமதியக்கா ரெண்டு சுண்டு அரிசியும் கிழங்கும் தந்தவ... அதுகளிட்டையும் எத்தினை நாள் கடமைப்பட்டாச்சு..." வார்த்தைகள் சுட அவன் மனது வலித்தது.

சுவர் மூலைக்குள் ரயர்த்துண்டொன்றைக் கொழுத்திப்போட்டு விட்டு அந்த வெளிச்சத்தில் ஜானகி உணவு பரிமாறினாள்.

"நீதான் வடிவாச் சாப்பிடவேணும்... சாப்பிடு..."

தன் தட்டிலிருந்து கொஞ்சச் சோற்றை அள்ளி அவள் தட்டில் போட்டான். அவள் மறுக்கவில்லை.

குழந்தைகளும் ஊதி ஊதி சோற்றை உண்டன. ரயர் துண்டு எரிந்த மணம் குமட்டியது. அவன் கையைத் துடைத்துவிட்டு திண்ணையில் இருந்தான். அவள் பாத்திரங்களைத் தூக்கி ஒதுக்கி வைத்துவிட்டு வந்தாள்.

"கால் வீங்கிறது கூடாது... கொஞ்சத்தூரம் இப்படியே நடந்திட்டுவாவன்..."

"ஐயோ அம்மாளாச்சி... என்னால ஏலாது..."

திண்ணையில் அமர்ந்தாள். அவள் மூச்சிழுக்கும் ஒலி, அவனுக்குக் கேட்டது. 'இனிமேல் இப்படி ஒரு பாவத்தைப் பண்ணக்கூடாது... மனதுக்குள் சொல்லிக்கொண்டான்....

"காந்தியண்ணைக்கு எப்பிடி காசு குடுக்கிறது?..."

"நீ ஒண்டுக்கும் யோசிக்காதயம்மா... நான் எப்பிடியும் குடுப்பன்..."

இருட்டில் அவள் கண்களில் நீர் துளிர்த்திருப்பது அவனுக்குத் தெரிந்தது அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டான்.

"எங்களுக்கு மட்டுமே இந்த கஷ்ரம்... ஊரெல்லாம் தான் கஷ்ரப்படுகிது... எப்படியும் கொஞ்ச நாளையிலை எங்கட ஊர் மீண்டிடும்... நாங்கள் போகலாம்..."

"......"

"தலைவருக்கு சனம்படுற கஷ்ரமெல்லாம் தெரியும்... அவங்களை கன நாளைக்கு விட்டுவைக்க மாட்டார்..."

"எனக்கு நித்திரை வருகுது... பாயைப்போடுங்கோ..."

அவன் எழுந்துபோய் யுனிசெப் கொடுத்த அந்த நீலப்பாயை விரித்தான். வெறுந்தரையில் தூங்கிக் கிடந்த குழந்தைகளை பாயில் தூக்கிக் கிடத்தினான். போர்வையால் மூடிவிட்டான்.

"ஜானகி..."

அவள் எழுந்தாள். இருளில் அவள் தடக்குப்படாமல் பார்த்துக் கூட்டி

வந்து படுக்கவிட்டான்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் உடனேயே தூங்கிவிட்டாள். ஜானகி அவனுடைய மாமா மகள். சிறுவயதில் மாமி இறந்துவிட்டா. அண்ணன்கள் இரண்டுபேரும் தங்கை ஒன்றும். அண்ணன் ஒருவன் ஜேர்மனியில். ஜானகி இவனை விரும்பியபோது அவள் வீட்டில் பூகம்பம் வெடித்தது. ஜானகிக்கு வெளிநாட்டில் திருமணம் பேசினார்கள்.

இவன் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான்.

'ஓடுகாலி' என்று அவர்களும் கைவிட்டுவிட்டார்கள். ஜானகியும் அவர்களிடம் வலிந்து போவதை விரும்பவில்லை. இவன் அவள்மேல் உயிரையே வைத்திருந்தான்.

"என்ர ராசாத்தி..."

அவள் நெற்றியில் முத்தமிட்டான் மெதுவாய். அவள் தலையை அசைத்தாள். இடது கையால் அவனைத் தொட்டு "காந்தியண்ணைக்கு என்னெண்டு காசு குடுப்பியள்..." தூக்கத்திலும் கேட்டாள். அவள் குரல் நெஞ்சின் ஆழத்தை உலுப்பியது.

"அதைப்பற்றி நீ யோசிக்காதை... எப்படியும் நான் குடுப்பன்..."

அவள் தூங்கிப்போனாள் மெல்லிய குறட்டை ஒலி கேட்டது.

"சிவமண்ணை உருத்திரபுரத்துக்கை ஒரு வீட்டுச் சாமான் ஏற்ற வேணுமாம்... வாறியளே... விடியப் போவம்..."

"அங்கையோ..."

"பயப்பிடாதேங்கோண்ணை... அங்கை ஆமியில்லை... போனா கடகடவெண்டு சாமானை ஏத்திக்கொண்டு வாறதுதானே..."

"மனுசி சுகமில்லாமல் இருக்கிறாளடா... ம்..."

"என்ர பாடும் அப்படித்தானண்ணை... வாங்கோ... போனா கையில கொஞ்சம் புழங்கும்..."

"சரி... போகேக்கை கூப்பிடு வாறன்..."

காலையில் அவன் வந்தான்.

"எங்க போறியள்?..."

"தடுக்காத ரெண்டுபேரும் ஒரு வேலைக்குப் போறம்... பின்னேரம்தான் வருவம்..."

"தூரவோ..."

"கிட்டடிதான்... விறகொண்டும் கொத்தாதை... தண்ணி நிரப்பி வைச்சிருக்கு குளி... உடுப்புகளை நான் வந்து தோய்க்கிறன்..."

சொல்லிச் சொல்லி வாசலுக்குப் போனான்.

"போட்டுவாறன்... பிள்ளையள் கவனம்..."

உருத்திரபுரம் பத்தாம் வாய்க்காலடி வெறிச்சோடிக் கிடந்தது.

"உனக்கு இடம் தெரியுமேயடா..."

"ஓமண்ணை பேசாமல் வாங்கோ..."

பற்றைகளை மெதுவாக விலக்கி நடந்துகொண்டிருந்தார்கள். இன்னும் இருவர் அவர்களோடு நடந்தார்கள்.

"இது கார்த்திகேசு மாஸ்ரற்றை வீடு... இந்த வீட்டில இருந்து இன்னும் ஒரு நூறுயார் தானண்ணை"

அமைதி பயமுறுத்தியது.

"எனக்கு நடைபழக்கக்கூடாது... சொன்ன தவணைக்கு தந்திடவேணும்"

"என்னெண்டு காந்தியண்ணைக்கு காசு குடுப்பியள்..."

காந்தியண்ணையினதும்... ஜானகியினதும் குரல்கள் மாறி மாறி காதுகளில் ஒலித்தன.

"அந்தா... அதுதான் வீடு... முழுத்தளபாடங்களையும்... ஏத்தவேணும்..."

கூட்டிவந்தவன் பரபரத்தான்.

மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

வீட்டு முற்றத்தில் மாஞ்சருகுகள் நிறைந்து கிடந்தன. மாமரத்திலிருந்த இரண்டு குருவிகள் கீச்சிட்டபடி பறந்தன. பக்கத்து வளவில் எதோ செத்துப்போயிருக்க வேணும் துர்நாற்றம் காற்றில் கலந்திருந்தது.

"தம்பியவை பயப்பிடக்கூடாது... சந்தியில ரைக்ரர் வந்து நிற்கும். மளமளவெண்டு எல்லாத்தையும் தூக்கி ஏத்தவேணும்... பின்னாலை தேங்காய்கள் விழுந்து கிடந்தா... அதுகளையும் பொறுக்கி ஒரு உரபாக்கில கட்டவேணும். விளங்குதோ..."

கூட வந்தவர்கள் தலையாட்ட இவன் தாடையைச் சொறிந்தபடி வீட்டை அண்ணார்ந்து பிரமிப்புடன் பார்த்தான். ஐம்பதுவருஷப் பழமைநிறைந்த நாச்சார் வீடு.

ஜன்னல் கதவுகளெல்லாம் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியனவாய் இருந்தன. ஒருபக்கச் சுவரில் மெல்லிய வெடிப்புத் தெரிந்தது. வாழைகள் சில தண்ணீர் இல்லாமல் எரிந்துகிடந்தன. வாழைகளுக்கு அருகே கொடியில் பழைய உடுப்பு ஒன்று கிடந்தது.

"படீர்... பட்பட்..... பட்... பட்..."

கூட வந்தவர்களில் ஒருவன் நிலத்தில் விழுந்து துடித்தான். தொடைப்பகுதிகிழிந்து இரத்தம் பீறிட்டது.

"ஆமியண்ண... ஓடுங்கோ..."

ஓடினார்கள் இருவர். இவனும் ஓடினான். பாதை பிடிபடவில்லை. தாறுமாறாய் ஓடினான்.

"பட்பட்... படீர்... பட்பட்..."

முதுகில் ஏதோ அடித்தமாதிரி இருந்தது. தலை சுற்றியது. முதுகிலிருந்து கால்வழியாக இரத்தம் பாய்ந்தது...

"ஜா...ஜான...ஜானகி..."

அவன் சுருண்டு விழுந்தான். மயங்கிக்கொண்டிருந்த பொழுதில் புரியாத மொழிப்பேச்சுக்கள் மிக அருகில் கேட்டன...

வெள்ளிநாதம்

31-06-01-2005



- பன்முகத்திறனும், அற்புதமான படைப்பாற்றலும் கொண்ட கலை இலக்கியவாதி.
- தமிழ் மொழிப் பற்றும், இனப்பற்றும், தாயகப் பற்றும் கொண்ட தமிழ்த் தேசியவாதி.
- கொண்ட கொள்கையில் இலட்சியப் பிடிப்பும், சத்திய ஆவேசமும் கொண்ட இவரது எழுத்துக்களில் சிறுமை கண்டு பொங்கும் இவரின் ஆத்மாவை தரிசிக்கமுடியும்.
- சிந்தனையில் தெளிவும், பரபரப்பற்ற செயற்திறனும் மென்மையான குணாம்சமும் கொண்ட இவரை கவிஞராக, சிறுகதை எழுத்தாளராக, நாவலாசிரியராக, விமர்சகராக, நாடகாசிரியராக, பெண்ணிய சிந்தனையாளராக தமிழீழதேசம் இனங்கண்டு அங்கீகரித்து கௌரவித்துள்ளது.
- ஏற்கனவே 1990இல் வெளியான 'புயலை எதிர்க்கும் பூக்கள்' என்ற நூலும், 2000இல் வெளியான 'என்கவிதை' என்ற நூலும் இவரது ஆக்க இலக்கிய ஆளுமைக்கு அர்த்தம் சேர்க்கும் படைப்புகளாகும்.
- எந்தவொரு விடயத்தையும் இலக்கியப் படைப்பாக்கும்போது ஒவ்வொரு படைப்பாளியும் அந்த விடயம் குறித்த தெளிவும், ஞானமும் கொண்டவராக மட்டுமல்லாது கலைத்துவப் பார்வை கொண்டவராகவும் இருந்தால் மட்டுமே அது மண்சார்ந்த மக்கள் இலக்கியமாக வாழும் என்ற கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டு தனது படைப்புகளை உருவாக்கும் ஆதிலட்சுமியின் ஆக்கங்கள் யாவும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் தன்மை கொண்டவையாகவும் உள்ளமையே அரவது வெற்றிக்கு காரணம்.
- மண்ணையும் மக்களையும் நேசிக்கும் - மானுட விடுதலைக்கு குரல் கொடுக்கும் பாரதி பாடிய புதுமைப்பெண்ணாக தன் படைப்புகள் மூலம் மட்டுமல்லாது வாழ்வின் மூலமும் தன்னை அடையாளப்படுத்தி நிற்கும் ஆதிலட்சுமியிடமிருந்து தமிழ்- மற்றும் தமிழீழ இலக்கிய உலகம் நிறையவே எதிர்பார்க்கிறது.

-ராதேயன்.